


கம்பனில் புதிய பரிமாணங்கள்

கபிலன் பதிப்பகம்

கம்பனில் புதிய பரிமாணங்கள்

(காரைக்குடி கம்பன் கழகம் நடத்திய
கம்பராமாயண உலகத் தமிழ் ஆய்வுக் கருத்தரங்கக் கட்டுரைகளின்
தொகுப்பு நூல் 2021)

பதிப்பாசிரியர்கள்

கம்பன் அடிகுடி பழ. பழனியப்பன்
முனைவர் மு. பழனியப்பன்
முனைவர் சொ. சேதுபதி
முனைவர் சே. செந்தமிழ்ப்பாவை
முனைவர் மா. சிதம்பரம்
முனைவர் இரா. கீதா
முனைவர் ஸ்டீபன் மிக்கேல்
முனைவர் சொ. அருணன்

சாயி 1ஈ, செட்டிநாடு அடுக்ககம்,
5, வள்ளுவர் தெரு, சுப்பிரமணியபுரம் வடக்கு,
காரைக்குடி - 630 002.

கபிலன் பதிப்பகம்

321, மூன்றாவது முதன்மைச்சாலை,
மகாவீர் நகர், இலாசுப்பேட்டை,
புதுச்சேரி - 605 008

கம்பனில் புதிய பரிமாணங்கள்

<u>*பதிப்பாசிரியர்கள்*</u>

கம்பன் அடிசூடி பழ. பழனியப்பன்

முனைவர் மு. பழனியப்பன்

முனைவர் சொ. சேதுபதி

முனைவர் சே. செந்தமிழ்ப்பாவை

முனைவர் மா. சிதம்பரம்

முனைவர் இரா. கீதா

முனைவர் ஸ்டீபன் மிக்கேல்

முனைவர் சொ. அருணன்

பக்கங்கள் - *240*

விலை ரூ.*300/-*

முதற்பதிப்பு *-2021*

அச்சு

சூர்யா பிரிண்ட் சொலூசன்ஸ் (பி)லிட்

சிவகாசி

வெளியீடு

கபிலன் பதிப்பகம்

879, கபிலரகம், பாரிவள்ளல் தெரு,

கிருங்காக்கோட்டை - 630502 சிவகங்கை மாவட்டம்.

பேச: 9442379558

arunankapilan@gmail.com

ISBN 978-93-84428-40-2

9 789384 428402

நூன்முகம்

காரைக்குடி கம்பன் கழகத்தின் சார்பில் அவ்வப்போது உலகு தழுவிய கருத்தரங்குகளை நடத்தி வருகிறோம். கருத்தரங்குகளை நடத்துவதோடு அல்லாமல் அவற்றை நூல்களாக வெளியிட்டும் காரைக்குடி கம்பன் கழகம் ஆவணப்படுத்தி வருகிறது. இதுவரை நான்கு கருத்தரங்குகளை நடத்தி, ஆறு கருத்தரங்கக் கோவைகளையும் வெளியிட்டுள்ளோம். கம்பராமாயணம் குறித்து இரண்டு பன்னாட்டுக் கருத்தரங்குகளையும் அந்தமானில் **கம்பனில் இயற்கை** என்ற பொருண்மையில் ஒரு பன்னாட்டுக் கருத்தரங்கத்தையும், **செந்தமிழ் வளர்த்த செட்டிநாடு** என்ற பொருண்மையில் கோட்டையூர் கவிதாயினி வள்ளி முத்தையா அவர்களின் இல்லத்தில் ஒரு கருத்தரங்கத்தையும் நடத்தி மகிழ்ந்தோம். அவ்வரிசையில் **கம்பனில் புதிய பரிமாணங்கள்** என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கத்தினை நிகழ்த்த 2019ஆம் ஆண்டு எண்ணம் கொண்டோம்.

தற்போது அந்தக் கருத்தரங்க எண்ணம் வெற்றி பெற்று கம்ப வண்ணமாக - கருத்தரங்கக் கோவையாக உங்கள் கைகளில் மிளிர்கிறது. இருபத்தெட்டுக் கட்டுரைகளில் ஆய்வாளர்கள் கம்பனின் கைவண்ணப் புதுமையைக் காட்டியுள்ளார்கள் அந்தமானில் இருந்தும் சிங்கப்பூரில் இருந்தும் கட்டுரையாளர்கள் கலந்துகொண்டு இக்கருத்தரங்கைப் பன்னாட்டுக் கருத்தரங்கமாக உயர்த்தி இருக்கிறார்கள். தொடர்ந்து கம்பனில் சிந்திக்கவும் பெற்றுக்கொள்ளவும் நிறையக் கருத்துகள் உள்ளன என்பதை இந்தக் கட்டுரைத்தொகுப்பு எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

கருத்தரங்கம் நடைபெறவும் இத்தொகுப்பு வெளிவரவும் உதவிய காரைக்குடி கம்பன் கழகத்தின் அனைத்து அன்பர்களுக்கும் எங்களுடைய நன்றி. எப்பொழுதும் போல கபிலன் பதிப்பகத்தார் இந்த நூல் வெளிவர உதவி செய்து உள்ளார்கள் அவர்களுக்கும் நன்றி. கருத்தரங்கத் தொகுப்பில் நுழைந்து கம்பன் அமுதத்தைப் பருகுங்கள்.

03.03.2021 அன்பும் பணிவும் உள்ள

காரைக்குடி **கம்பன் கழகத்தார்**

பரிமாணங்கள்

கம்பன் பரிமாறும் பரா அமுது

கம்பன் அடிசூடி பழ. பழனியப்பன்
தலைவர், கம்பன் கழகம், காரைக்குடி.

கம்பன் படைத்த இராமாவதாரம் ஒரு கவி அமுதக் கடல்; அது எல்லோருக்கும் எப்போதும் இனிய விருந்தளித்திடும் ஆரா அமுது. அமுதம், ஆரா அமுதம் எனும் எல்லாவற்றினும் மேலானது பரா அமுது என்பார் திருவாசகத்தில் மாணிக்கவாசகப் பெருமான். அங்கிருந்து அத்தொடராம் பரா அமுதை மோந்து கொண்டு வந்து நமக்கு கம்பன் பரிமாறும் விருந்தே இராமாவதாரம். எல்லைகள் நீத்த, என்றும் அழியாத, இனிமை பயக்கும் பரா அமுது என்று பொருள் தரும் தொடர்தான் பரா அமுது. கம்பன் படைத்த புதிய பரிமாணங்களில் இதுவும் அனுபவித்து உணர வேண்டிய ஒன்றாகும்.அதனால் தான் கம்பன் காவியம் இத்தனை நூற்றாண்டுகள் கடந்தும் நிலைத்து நிற்கின்றதோ?

'சுவர்க்க நீக்கம்' *(Paradise Lost)* என்ற உலகம் இன்றளவும் வியந்து போற்றும் இலக்கியத்தைப் பாடிய மில்டன் *(Milton)* உலகம் விரும்பினாலும் சாக அடிக்க முடியாத ஓர் இலக்கியத்தைப் படைக்கப் போகிறேன் என்று கூறித்தான் அவ்விலக்கியத்தைப் படைத்தான் என்று ஒரு வழக்காறு உண்டு. கம்பனும் அப்படித்தான்; வெளிப்படையாகக் கூறாமலேயே சாகா வரம் பெற்ற ஒரு காப்பியமாக இராமாவதாரத்தைப் படைத்திருக்க வேண்டும். அவன் அப்படிச் சொல்லாவிட்டாலும் அந்த எண்ணத்தை உள்ளடக்கிய என்றும் இறவா இலக்கியமாக இராமாவதாரத்தைப் படைத்திருக்கின்றான் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. இல்லாவிட்டால் இத்தனை நூற்றாண்டுகள் கழிந்தும் கம்பனின் காப்பியம் இன்றும் பெரிதும் பேசப் பெறும், போற்றப் பெறும் காப்பியமாக நின்று நிலைத்திருக்க வாய்ப்பே இல்லை. காலங் கடந்தும் இக்காப்பியத்தை நாம் ஏற்றிப் போற்றுவதனாலே தான் கம்பன் கவிச்சக்கரவர்த்தியாக மிளிர்கின்றான்!

கம்பன் இராமாவதாரமாகிய பாற்கடலை ஓர் பூனை நக்கிக் குடிக்க முயன்றதைப் போலே, அதனைக் காப்பியமாகப் பாடுவதற்காக குடிக்க முயன்ற அளவு குடித்து அதனின்று அதன் சாரத்தை பிழிந்து எடுத்து, வடிகட்டி நமக்குப் பரா அமுதமாகப் பரிமாறும் விந்தையை, விதத்தை உங்களோடு பகிர்ந்து கொள்வதே இதனை எழுதத் தூண்டியது.

கம்பனுடைய காவியத்தை அலசி ஆய்ந்து செய்த ஆய்வு நூல்களாகவும், ரசனைச் சுவை பிலிற்றும் நூல்களாவும் பல அறிஞர்கள் படைத்துள்ளனர். இங்கே நாம் கம்பனுடைய காவிய விமரிசனமோ,ஆய்வோ செய்யப் போவதில்லை.கம்பன் மிக்க பரிவோடே நமக்குப் பரிமாறி நிறை மிகு தமிழில் வடித்துத் தரும் சுவை நிறை சொல்லாக்கங்களை மெல்ல மெல்ல அசை போட்டுச் சுவைத்து, மென்று மென்று தின்று ரசித்து ருசிக்கும் வண்ணம் உங்களிடத்தே பகிர்ந்து கொள்ள உள்ளேன். அவ்வளவே!

பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களில் கம்பன் கையாண்ட சொற்கள் லெட்சக் கணக்கானவையாகும் எனினும், அவன் ஆயிரம் பாடல்களுக்கு ஐந்து அல்லது ஆறு புதிய சொற்களையோ, தொடர்களையோ அல்லது நின்று நிதானித்து மென்று சுவைத்தால் புத்தம் புதிய பொருளைப் புகட்டிடும் விதத்தில் சொற்களைக் கையாண்டிருப்பது தெற்றெனப் புலப்படும்.அதற்குச் சான்றாக 'பரா அமுது' எனும் இந்தத் தொடரையே எடுத்துச் சுவைத்தால் அவன் செய்யும் வித்தையை வியந்தோதத் தோன்றும்.

இந்தத் தொடரைக் கம்பன் எங்கே எடுத்தாளுகின்றான்? கைகேயி தயரதன் ஆணையாக இராமனிடம் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் சென்று வர வேண்டுமென்றதும், உடனே கானகம் புறப்பட்ட இராமனுடன் இலக்குவனும், சீதையும் உடன் புறப்படுகின்றனர்.நகரை விட்டு நீங்கியதும், கங்கை ஆற்றங்கரையை முதலில் அடைகின்றனர். அங்கே இருந்த முனிவர்கள் இராமனைக் கண்டதும் அடைந்த அளவிட முடியாத ஆனந்தத்தை சொல்லில் வடித்துக் காட்ட முயன்ற கம்பன்தம் பாடலில் இச்சொல்லைப் பயன்படுத்துகின்றான்.

அது நாள்வரை இறையை எப்போதும் அகக் கண்ணாலேயே கண்டு களித்து வந்த முனிவர்கள் இப்போது தம் கண்ணெதிரில் இராமபிரானாக மானிட வடிவில் தம் புறக் கண்களாலும் கண்டு களித்த விதத்தை கம்பன் நயம்பட அயோத்தியா காண்ட கங்கைப் படலத்தில் விவரிக்கின்றான்:

பெண்ணின் நோக்கும் சுவையை, பிறர் பிறர்க்கு
எண்ணி நோக்கி இயம்ப அரும் இன்பத்தை,
பண்ணின் நோக்கும் பரா அமுதை, பசுங்
கண்ணின் நோக்கினர் உள்ளம் களிக்கின்றார் (1936)

இல்லறத்தார் அனுபவிக்கும் அக(காம) இன்பமும், முனிவர்கள் அறிவால் துய்க்கும் ஆனந்தமும் உள்ளத்தால் உணர்வதற்கு உரியதே அன்றி, ஒருவர் பிறர்க்கு எண்ணத்தாலோ, பார்வையாலோ, சொற்களாலோ எடுத்துச் சொல்ல இயலாத இன்பமே போல முனிவர்கள் தம் ஊனக் கண்களால் இராமனைக் கண்டதும் உள்ளத்தில் களிப்பு மேலிட ஆனந்தம் அடைந்தனர் என்பதுதான் பாடலின் கருத்து. ஆனால் அதைக் கம்பன் எனும் கவிச்சக்கரவர்த்தி சொல்கின்ற விதமே அலாதி ! எளிமையாகச் சொல்லிப் புரியவைக்க வேண்டுமெனில், இல்லறத்தார் காம சுகத்தை அனுபவித்தடைந்த இன்பத்தைப் போல, முனிவர்கள் இறைவனை இசை, தியானத்தின் மூலம் துய்த்து இன்பமடைந்தனர்; இன்பம் அடைகிற திறத்தில் மட்டும் தான் ஒப்புமையே தவிர, இரண்டும் இன்பத்திற்கு ஒப்புமை ஆகாது.ஒன்று பேரின்பம்; மற்றொன்று சிற்றின்பம். அதுதான் ' எண்ணி, நோக்கி, இயம்ப அரும் இன்பம்' என்பான் கம்பன். எண்ணத்தால், சொல்லால்,செய்கையால் சொல்லிக் காட்ட முடியாத பேரின்பம் அது.

இதை மிக நாசூக்காக திருமூலர் சொல்வதை கம்பன் கற்றிருக்க வேண்டும்!:

மகட்குத் தாய் தன் மணாளனோடு ஆடிய
சுகத்தைச் சொல் என்றால் சொல்லுமாறு எங்ஙனே? (2944)

ஒரு தாய் தன் மகளுக்கு எல்லாவற்றையும் சொல்லிக் காட்டி அறிவு புகட்டி வளர்க்க முடியும்; தன் கணவனோடு

அனுபவித்த இன்பத்தை, தான் பெற்ற மகளிடமே கூட சொல்லிக் காட்ட முடியாதே.அப்படியிருக்க முனிவர்கள் அடைந்த பேரின்பம் இயம்ப அரும் இன்பம் மட்டுமன்று; எனவே தான் 'எண்ணி, நோக்கி, இயம்ப அரும் இன்பம்' என்றான்.பண்ணினால் பாடிப் பாடிப் பரவி அடையக்கூடிய மேலான அமுதமே 'பரா அமுது' என்று இந்த இடத்தில் மாணிக்கவாசகரைப் பொருத்திக் காட்டுவான்.அமுதம் என்பது அழியாத இன்பம் அளிக்கக்கூடியது;அதனால்தானே தேவர்கள் பாற்கடலைக் கடைந்த போது அசுரர்களும் அதில் வரும் அமுதத்தைப் பங்கிட்டுக் கொள்ள முயன்றனர்.

ஆரா அமுதம் என்பது அதனினும் ஒரு படி மேலே; என்றும் தெவிட்டாத இன்பம் அளிக்கக் கூடியது. எவ்வளவு அருந்தினாலும் திகட்டாத இன்பத்தை அளிக்க வல்லது. ஆழ்வார்களிடம் மிகச் சரளமாக இத் தொடர் புழங்கியதையும் கம்பன் அறிவான். 'குடந்தை கிடந்த ஆராவமுது' என்பார் நம்மாழ்வார். அமுதமும், ஆராவமுதும் முறையே அழிவின்மையையும், தெவிட்டாத் தன்மையையும் தந்தாலும் அதனினும் மிக உயர்ந்த ஒன்றே 'பரா அமுது' ஆகும். திருவாசகத்தே மாணிக்க வாசகப் பெருமான் 'திருப்படை ஆட்சியில் நவின்றேத்தும் 'பரா அமுது' எல்லையற்ற இன்பத்தை அளிக்கவல்லதாகும். என்னதான் அழிவற்ற, தெவிட்டாத தன்மையுடையதாயினும் அமுதமும், ஆராவமுதமும் தருவதைவிட அளவிட்டுக் கூற இயலாத எல்லையற்ற ஆனந்தத்தை பரா அமுது தரக் கூடியதாகும் என்பது இறை இன்ப அனுபவ வெள்ளத்தில் அழுந்தி அழுந்தி எழுந்த , குருந்த மரத்தடியில் பரம்பொருளே குருவாய், தானே வந்து தலையளித்திட்டு அந்தமிலாத அகண்டமும் தன்னுள் அகப்படுமாறு ஆட்கொள்ளப் பெற்ற மாணிக்க வாசகரின் ஆனந்த அனுபவத்தில் முகிழ்த்த சொல் 'பரா அமுது' ஆகும். இதோ,

> என்றுமென் அன்பு நிறைந்த பராவமுது எய்துவ தாகாதே (49:2)
> பாவனையாய கருத்தினில் வந்த பரா அமுதாகாதே' (49:3)

கம்பன் அந்தப் பரா அமுதை சிக்கெனப் பற்றிக் கொண்டான்; 'எண்ணி, நோக்கி, இயம்ப அரும் இன்பத்தை,

பண்ணின் நோக்கும் பரா அமுதத்தை பசுங் கண்ணின் நோக்கினர்; உள்ளம் களிக்கின்றார்' என்று வனத்தில் வசித்த முனிவர்கள் இராமபிரானைக் கண்டதும் அடைந்த இன்பத்திற்கு அடைமொழியாய் இடுவான். புறக் கண்களுக்கு வசப் படாத , பண்ணினால் பரவி ஏத்தினால் அகக் கண்களுக்கு மட்டுமே புலப்படும் அந்த இறை இப்போது தம் ஊனக் கண்களுக்கும் புலப்படுமாறு எதிரே வந்ததும் தமக்கு அக்காட்சி அழிவற்ற நிலையையும், தெவிட்டாமையையும் நல்கியதோடு எல்லையற்ற, எல்லைக்குட்படாத ஆனந்தத்தையும் பரா அமுதமுமாய் அளித்த பெருங்கருணையை சொல்லில் வடிக்க கம்பன் முயன்றதன் விளைவே இச்சொல்லாட்சி. பரம் எனில் மேலொன்றும் இலாதது என்பதாகும். அதன் தொடர்பாய் எழுந்த சொற்கள்தாம் பரம் பொருள், பராபரன் என்பன. அப்படி இங்கே மேலொரு பொருளும்,இன்பமும் அற்ற நிலையை அளித்துவிட்டது பரா அமுது. ஆம்! இறை இராமன் வடிவில் வந்து தமக்குக்கு காட்சி நல்கியது என்ற நிலைமையில் எல்லையற்ற அனுபவ ஆனந்தத்தை அடையச் செய்தது. திருவையாறு தியாகராசர் இராம நாமத்தைக் கோடி முறை தியானித்து தியானித்துச் செபித்துப் பாடிப் பரவியதன் விளைவினால்தான் இராமபிரான் அவருக்குக் காட்சி நல்கினான் என்பது வழக்காறு . அதே போன்று முனிவர்கள் எல்லையற்ற பரம்பொருளை பாடிப் பாடி தியானித்ததன் விளைவாய் இராமபிரான் நேரில் வந்ததைக் கம்பன் எல்லையற்ற இன்பமருளக் கூடிய பராஅமுதாய் வந்ததாய்க் கையாளும் கலையே கலையாய் கம்பன் படைக்கும் புதியதோர் பரிமாணங்களில் ஒன்று.

அஃதே போன்று எல்லையற்ற ஆனந்தம் அளிக்கும் சில சொற்களை, சொல்லாட்சிகளை கம்பன் கையாள்வதில் வல்லமை படைத்திருந்ததை இனிக் காண்போம். தன்னிடம் அடைக்கலம் நாடி வந்த வீடணனைச் சகோதரனாக ஏற்கும் போது கம்பன் பெய்யும் சொல்லாட்சி இலக்கியங்களில் அவனுக்கு முன்னும், பின்னும் கையாளப் பெற்றிராத ஒன்றாகும். இதோ அப்பாடல்:

அகன் அமர் காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அரும் கானம் தந்து, புதல்வரால் பொலிந்தான் நுந்தை'

முன்பே கங்கைக் கரை வேடனாம் குகனைச் சகோதரனாக ஏற்றதனால் இராம, இலக்குவ, பரத, சத்துருக்கனர் என்றிருந்த தயரத புத்திரர் நால்வர் ஐவரானார்கள்; பின்பு கிஷ்கிந்தையில் சுக்ரீவனை சகோதரனாக ஏற்றதனால் ஐவர் அறுவர் ஆனார்கள். இப்போது வீடணனை ஏற்றதனால் அவனையும் சேர்த்து தயரத புத்திரர்கள் எழுவர் ஆனார்கள். இதைச் சொல்ல வந்த கம்பன் தயரதன் தன்னை கானகத்திற்கு அனுப்பியதனால் தனக்கு மூன்று உடன் பிறவாச் சகோதரர்கள் கிடைத்தார்கள் என்பதைக் குறிப்பிட்டதை 'புதல்வரால் பொலிந்தான்' தயரதன் என்று இராமன் குதூகலிப்பதை மிக நயம்பட 'நுந்தை' என்ற சொல் ஒன்றைப் பெய்து குறிப்பிடுவது கம்பன் படைக்கும் புதிய பரிமாணம். தயரதன் முதலில் இராமனுடைய தந்தை. அப்படியிருக்க இராமன் 'எந்தை' என்று தயரதனைக் குறித்திருந்தால் அது முறையுமாகும்; உண்மையுமாகும். ஆனால் எந்தை என்று தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ளாது வீடணனை முன்னிலைப்படுத்தி 'நம் தந்தை' என்றிருந்தால் அதுவும் நயமாகும்; இராமனின் பெருந்தன்மையைக் காட்டுவதாகும், இல்லையா? அதனினும் ஒருபடி மேலே போய் இராமன் 'நுந்தை' என்று தயரதனை வீடணனின் தந்தை என்றே குறிப்பது மிக உயர்ந்த ஒரு உளப்பாங்கைக் காட்டிடும் சொல்லாட்சியதாகும். இராமனின் உலகம் தழுவிய சகோதரத்துவத்தை *(Universal Brotherhood)* விண்டு காட்டிடுமன்றோ?

இதே போல யாரும் பயன்படுத்தாத ஒரு தொடரை கம்பன் யுத்த காண்டத்தில் மாயா சனகப் படலத்தே பயன் கொள்கின்றான். இராவணன் சீதையின் முன் நிலத்தில் விழுந்து வணங்கி "அடியேன் நும் அடைக்கலம்" என்ன, அப்போது மகோதரன் மாயா சனகனை அங்கு கொண்டு வர, மாயா சனகன் சீதையிடம் இராவணன் கருத்திற்கு இணங்குமாறு வேண்டுகிறான். அந்த நேரத்தில் கும்பகருணன் இறந்தமையை இராவணனிடம் அறிவிக்கின்றனர். இராவணன் தம்பி இழந்த துக்கம் மேலிட அழுது அரற்றுகிறான் அதைக் கண்ட சீதை மகிழ்ச்சி அடைகிறாள். ஆனால் அதனை வெளிக்காட்ட இயலாது தவிக்கின்றாள். அதைக் கம்பன் பதிவு செய்கிறான்

இப்படி:

> தொண்டைக் கனிவாய் துடிப்ப, மயிர் பொடிப்ப,
> கெண்டைத் தடங்கண்ணாள் உள்ளே கிளுகிளுத்தாள் (7718)

தொடர்ந்து கம்பன் சீதையின் இந்த இக்கட்டான மகிழ்ச்சியை சொல்ல இயலாது கையை விரித்து 'திருமடந்தை சேடி ஆம் பாங்கினாள் உற்றதனை யாரே பகர்கிற்பார்?' என்பான். கம்பன் இதற்கு 'கிளுகிளுத்தாள்' என்ற இரட்டைக் கிளவித் தொடரை பயன்படுத்துகின்றான். 'கிளு' என்றால் அதற்கு தனியே பொருள் கிடையாது. இது அடி, அடி என்பது போன்ற அடுக்குத் தொடர் அன்று. சரசரவென்று அப்பூச்சி போனது என்னும்போது 'சர' என்ற ஒற்றைச் சொல்லுக்குப் பொருள் இல்லாதது போல் இங்கும் கிளு எனில் பொருள் தராது.ஆனால் 'கிளுகிளுப்பு' பொருள் உடையது. மகிழ்ச்சியைக் குறிக்கும் இந்த இரட்டைக் கிளவி. ஆனால் உள்ளே கிளுகிளுத்தாள் என்பதனால் உள்ளத்திற்குள்ளே, மனதிற்குள்ளேயே அந்த மகிழ்ச்சியை உணர்ந்தாள்; அனுபவித்தாள்; என்னதான் எதிரியாக இருந்தாலும் பிறனுடைய துக்கத்தில் மகிழ்ச்சி அடைந்து அதை வெளிக்காட்டிக் கொள்வது தகாதது; பெருமையான குலப் பெண்டிர் செயலுமன்று. சீதை போன்ற கற்புக்கரசியாம் பீடுடைய ஒரு பெண்மணி வெளிக் காட்ட இயலக் கூடியதன்று; வெளிக் காட்டுவது நாகரிகமும் அன்று; அங்கே கம்பன் சொல்வான்: கனிவாய் துடிக்கிறது வெளிப்படுத்த; உடலில் உரோமாஞ்சலி ஏற்படுகின்றது. ஆனாலும் பெருமை உடைய பெண்ணாம் சீதை அந்த மகிழ்ச்சியை உள்ளத்திற்குள்ளே போட்டு அமுக்கிவிடுகின்றாள். அதைத்தான் 'உள்ளே கிளுகிளுத்தாள்' என்று பதிவிடுகிறான். கிளுகிளுப்பு என்ற பதமே உடல் மொழியாய் வெளிப் படுத்துவது ஆகாது; ஆனாலும் கம்பன் அந்த நேரத்து சீதையின் மன நிலையையும், உள்ளக் களிப்பையும் எப்படியாவது சொல்லவேண்டுமென்பதால் 'கிளுகிளுத்தாள்' என்ற இரட்டைக் கிளவியைப் போட்டு நம்மையும் உள்ளத்திற்குள்ளே உணர்ந்து அனுபவிக்க வைக்கின்றான். இப்படிச் செய்ய கம்பனால் தான் முடியும் என்பதில் தான் கம்பனின் புதிய பரிமாணம் படைக்கவல்ல புலமை நயமும் புலப்படுகின்றது.!

இப்படி எத்தனை எத்தனையோ சொல்லாட்சிகளையும், கம்பன் புதிதாய் புதிதாய் உபயோகிக்கும் சொல்லாக்கங்களையும் சொல்லிக் கொண்டே போகலாம் கம்பனின் மேதாவிலாசத்தையும் கவிப் புலமையையும் காட்ட; அவை விரிக்கிற் பெருகும் என்பதனால் அவற்றில் சிலவற்றை மட்டும் அடையாளம் காட்டும் முகத்தான் சுட்டிக் காட்டலாம் என இனிச் சுருங்கச் சொல்லி விளக்க முயன்றுள்ளேன்.! "அணுவினைச் சத கூறிட்ட கோண்" என்று இரணியன் வதைப் படலத்தில் பிரகலாதன் கூற்றாய் அணுவைப் பிளக்க அன்றே அறிந்திருந்தனர் என்று அறிவியல் அறிவைக் கோடி காட்டிடுவான்., அதிலும் நூறில் ஒரு பகுதிக்கு கோண் எனப் பெயர் உண்டு என்பான். ஆக்கல், காத்தல், அழித்தல் என எல்லோரும் பதிவிடுவதை 'தாமுள ஆக்கல்' என இல்லது தோன்றாது, உள்ளதுதான் தானாகவே முகிழ்த்து உண்டாகின்றது என சைவ சித்தாந்தம் பேசுவான். 'அழித்தல்' என்பதை 'நீக்கல்' என ஒரு புதுப் பிரயோகம் செய்வான். அழிப்பது வேறு; நீக்குவது வேறு. அழிக்கப்பட்டது மீண்டும் உயிர் பெறாது; ஆனால் நீக்கப் பெற்றது பிறிதோர் இடத்தே தோன்ற முடியும்; தோன்றும் என்பதைக் காட்டவே 'நீக்கல்' என்று வேறு யாரும் இலக்கியங்களில் கையாளாத ஒரு சொல்லைப் பெய்தும் சித்தாந்தம் காட்டுவான்.

Oxymorons என ஆங்கிலத்தில் ஒரு வழக்கு உள்ளது . எதிர் எதிரான பொருளுடைய இரு வேறு சொற்களை இணைத்துக் கூறுதல் "முரண் தொடை" என்பர். *'victorious defeat', 'pain and pleasure', 'hasten slowly', 'open secret', 'small crowd', 'original copies', 'fully empty'*;அப்படி கம்பன் அயோத்தியா காண்டத்தே கைகேயி வரம் கேட்டதும் அவளை 'சிறந்த தியாள்' என்று பதிவான்! தீமையே தீயது. அதில் சிறந்த தீமை என்று வேறு உண்டா, என்ன? தீயதின் உச்சத்தில் நின்று கைகேயி வென்று காட்டியதன் கொடுமையை, பிறிதோர் இடத்தே சொல்வது போல் 'தன் மனத்தே நினைந்து செய்யும் கொடுமையாள்' என்பது போல், தீயவளிலும் சிறப்பாகத் தன் மங்கல நாண் இழக்க நேரிட்டாலும் பரவாயில்லை என்று அறிந்தே தீமையை நிலை நிறுவியதைக் காட்ட 'சிறந்த தீயாள்' என்ற பதப்பிரயோகம் செய்வான்.

இப்படி இன்னும் எத்தனை எத்தனையோ! சீதையை இராவணன் 'அமுதால் செய்த நஞ்சு' எனப் பேசச் செய்வான். பாலகாண்டத்தே 'மண்டல்' என்ற கிராமப்புற வழக்கை விலை மாதர் நிலைக்கு உவமை காட்டி கோசல நாட்டு ஆற்றுப் படலத்தே ஏற்படும் வெள்ளப் பெருக்கு 'மலையில் உள்ள எல்லாம் கொண்டு மண்டலால் விலையின் மாதரை ஒத்தது அவ்வாரியே' என்று காட்டுவான். 'காதைகள் சொரிவன செவி நுகர் கனிகள்' என்று யாரும் கூறாத ஒரு தொடராய் செவி நுகர் கனி என்று பெய்து புதுமை செய்வான்!

கம்பன் என்ன சொல்கிறான் என்பதைவிட எப்படிச் சொல்கிறான் என்பதே பொலிந்து தோன்றுமாப் போலே அவன் சொற்களையும் தொடர்களையும் ஆக்கம் செய்து நம்மை மனங் களிக்க வைப்பதில் வல்லவன். இல்லாவிட்டால் இத்தனை நூற்றாண்டுகளுக்குப் பிறகும் அவன் காவியம் நின்று நிலைத்து இன்பம் பிலிற்றுமா? அவன் கடந்த காலத்தினன் அல்லன்; காலங் கடந்தவன் ஆவான் ! இதைத்தான் கம்பனை ஆங்கில ஆக்கம் செய்து மேம்படுத்திய கம்ப ரசிகர் திலகமாம் நீதிபதி மகராஜன் அவர்கள் குறிப்பிடுவார்கள்; *'Kamban can never become out of date because he speaks to us and the whole world with the voice of tomorrow'*. அப்படி பரா அமுதமாய் எல்லையற்ற ஆனந்தத்தை நமக்கு இன்றும் வழங்கிக் கொண்டு இருப்பதனாலன்றோ அவன் கவிச் சக்கரவர்த்தியாய் மிளிர்கின்றான்.

கம்பன் கூறும் கற்பு நிலை

முனைவர் கா.காமாட்சி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
சீதாலட்சுமி இராமசுவாமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 02.

கற்றோர் உள்ளத்தைக் கவரும் வகையிலே காவியம் புனைந்த புலவர்களில் தலைசிறந்தவன் கம்பன். கம்பன் காலத்தில் தான் தமிழ் மொழி வளர்ச்சியடைந்தது. தமிழ் வளர்ச்சிக்காக தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துக்கொண்ட மாபெரும் கலைஞன். இவரது கவிதைகளில் கற்பனைகள், கருத்துகள், உவமைகள், சொல்நயம், பொருள்நயங்கள் அனைத்தும் காணக்கிடக்கின்றன. கம்பர் கூறும் கற்பு நெறி குறித்து இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

கற்பு நெறி

கற்பு என்பது ஒழுக்கம். ஒருவனும் ஒருத்தியும் மணந்து வாழும் வாழ்க்கையே கற்பாகும். கற்பின் இலக்கணத்தை,

'பொற்பமை சிறப்பிற் கற்பெனப் படுவது
மகிழ்வும் ஊடலும் ஊடலுணர்தலும்
பிரிவும் பிறவும் மருளிய தாகும்'

என அகப்பொருள் இலக்கணம் உரைக்கிறது. தன்னை வாழ்க்கை துணைவியாகப் பெற்ற ஒருவனையன்றி வேறு ஆடவனை மனத்தாலும் நினையா மாண்பே கற்பாகும். கற்பைப் பற்றி,

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள? கற்பெனும்
திண்மை யுண்டாகப் பெறின்'

என்ற குறளால் அறியமுடிகிறது. சாத்தனாரும்,

'மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவல் இன்றெனின் இன்றால்'

என்றுரைக்கின்றார். நோன்பும், கற்பும் வாழ்க்கையில் வேண்டும் முக்கிய இரண்டு தவங்களாகும். நோன்பு என்பது இன்பம் நீக்குதலையும், உடல் வருத்தி உள்ளம் வருந்துதலையும்

செய்யவல்லது. கற்பு என்பது மாண்பமைந்த உலகம் காக்கும் மேன்மையது. இன்பம் நுகரும் இனிய வாழ்வைக் குறிக்கோளாகக் கொண்டது

நல்லறமாகப் போற்றப்படும் இல்லற வாழ்க்கைக்குப் 'பெண்ணே' ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் மணிவிளக்காகக் கருதப்படுகிறாள். இதனை, 'மனைக்கு விளக்காகிய வாணுதல் கணவன்' என்று புறநானூறும், முல்லை நிலத் தலைவனின் புகழ்மிக்க வீட்டிற்குப் புதல்வனைப் பெற்ற மனைவி தகழியில் ஏற்றப்பட்ட ஒளி விளக்குப் போன்று விளக்காகத் திகழ்கின்றாள் என்று ஐங்குறுநூறும் புகழ்கின்றது.

'கற்பெனப்படுவது கற்பினை வழுவாது
தற்கொண்டானையும் தன்னையும் பேணி
இல்லறத்து ஒழுகும் இல்லறக் கிழத்தி
நல்லறத்தவர் மதி நன்மாண்பதனொடு
மகிழ்ச்சியும், ஊடலும், ஊடலுணர்தலும்,
மகிழ்ச்சியில் பிரிவுடன் பிறவும் இயன்ற
மகிழ்ச்சியின் எய்தி இல் பொருந்துவதாகும்'

(மாறனகப்பொருள் நூ: 225)

இந்நூற்பா கற்பு நெறி என்பதைப் பெண்ணுக்கு மட்டும் ஆக்கி நிற்கிறது.

சீதையின் கற்பு நெறி

'கற்பு' பெண்ணின் உயிரைக் காட்டிலும் உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. கம்பர் தன் காவியத்தில் கற்பினைப் பல கோணங்களில் படைத்துக் காட்டுகின்றார். வைணவக் காப்பியமான கம்பராமாயணத்தில் தேவர், மனிதர், அரக்கர் என்னும் மூவினத்திலும் படைக்கப்பட்டுள்ள விதத்தை ஆரண்ய காண்டத்தில், குலமகளிரைப் பற்றிக் குறிப்பிடும் இடங்களில் பண்டைய புலவர்கள் கற்புடைமையை விதந்து கூறுவதனை அறியமுடிகிறது. அத்திரி முனிவரின் தண்டகவனத்தைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது 'கற்பின் அனுசூயை' (2520:2) என்று அனுசூயையின் கற்புடைமையைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

சீதையைப் பற்றிக் கூறுமிடத்து, 'மறுஇல் கற்பினள் (3357:4), படர் கற்பினாள் (3436:3), கற்பினாள்(3453:2), நிலம் பொறை இலது என நிமிர்ந்த கற்பினாள்(3642:1) என்று சீதையைப் பற்றிக் கூறுமிடங்களில், கற்புடைமையையும் இணைத்துக் காணுகின்றார். மேலும் சீதையை இராமன் நினைவு கூர்கையில், கற்பினோர்க்கு அருங்கலம் என்று கருதுகின்றான்.

பொற்பினுக்கு அணியினை புகழின் சேக்கையை
கற்பினுக்கு அரசியை கண்ணின் நோக்கினான் (3344:3-4)

என்ற வரிகளில் சீதையைக் கற்புக்கரசியாகக் காட்டுகின்றார். இராவணன் சீதையைத் தூக்கிச் சென்ற பிறகு சீதையை எங்குத் தேடியும் காணாமல் வருந்துகின்ற இராமனின் நிலையை,

வெள்ளம் சிலம்பு பாற்கடலின் விரும்பும் துயிலை வெறுத்து அளியும்
கள்ளும் சிலம்பும் பூங்கோதை கற்பின் கடலில் படிவாற்கு
புள்ளும் சிலம்பும் பொழில் சிலம்பும் புனலும் சிலம்பும் புனைகோலம்
உள்ளும் சிலம்பும் சிலம்பாவேல் உயிர்உண்டாகும் வகை உண்டோ
(3568)

என்று குறிப்பிடும் கம்பர் சீதையின் கற்புத் தன்மையைக் கடலாக எடுத்துரைக்கின்றார். கம்பன் கோசல நாட்டின் வளத்தையும், மக்களின் வாழ்க்கை முறையையும், பாலகாண்டத்தில் நாட்டுப்படலத்தில் கூறுமிடத்து, ஆடவர், மகளிர் பண்பு பற்றிப் பேசும்போது கோசலநாட்டு மக்களின் நல்ல குணங்களால் அவர்களின் அழகு நிலை பெற்றன. பொய்மை தவறாத அவர்களின் ஒழுக்கத்தால் நியாயங்கள் நிலைபெற்றன. தருமங்கள் பெண்களின் அன்பினால் நிலை பெற்றன. அப் பெண்களின் கற்பினால் பருவமழை தவறாது நிலை பெற்றன என்றுரைக்கின்றார்.

பொற்பி னின்றன பொலிவு பொய்யிலா
நிற்பி னின்றன நீதி மாதரார்
அற்பி னின்றன வறங்க ளன்னவர்
கற்பி னின்றன கால மாரியே (௯௦)

என வள்ளுவன் வழி நின்று,

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

எனக் கற்பை உரைக்கின்றார். இயற்கையையும் கட்டி ஆளும் திறத்தவளாகப் பெண் திகழவேண்டுமென்று பெண்ணுக்கு ஏற்றம் தருவது போல, கற்பின் சிறப்பைப் பாராட்டுகிறார்.

பரதன் காட்டில் சித்திர கூடத்தில் தங்கியிருந்த இராமனைக் காண தாயாரோடும் சேனைகளோடும் செல்கின்றான். அங்கு இராமனைக் கண்டு நாட்டை ஆளும்படி வேண்டுகின்றான். அப்போது பரதன் முறைமையினின்றும் தவறிய அரசியல் மிகக் கொடுமையானது. மூத்தவர்க்குரியது அரசு எனவே இராமனே நாட்டை ஆளவேண்டும் என்கிறான். தன் வாதத்தை வலியுறுத்த கற்புநெறியை விட்டு விலகிய மாதர்களின் குணமும், பொறுமைக் குணத்திலிருந்து விலகிய தவவொழுக்கமும் கருணையை விட்டு விலகிய தருமமும் கொடுமையானது. ஆனால் அவற்றைக் காட்டிலும் மிகக் கொடுமையானது.

நிறையின் நீங்கிய மகளிர் நீர்மையும்
பொறையின் நீங்கிய தவமும் பொங்கருள்
துறையின் நீங்கிய அறமுந் தொல்லை யோர்
முறையின் நீங்கிய அரசின் முந்துமோ? (2474)

என்ற பாடலில் கற்பு நெறியை விட்டு விலகிய மாதர் குணம் கொடுமையானது என்றுரைப்பதன் மூலம் அக்காலச் சமுதாயத்தின் பெண்களது கற்பு நெறி வலியுறுத்தப்படுகிறது.

சூர்ப்பணகையின் கற்பு நிலை

இராவணனால் சூர்ப்பணகையின் உறுப்புகள் அறுபட்ட கோலத்தைக் கண்டு இலங்கை வாழ் அரக்கர்கள் அந்நிலைக்குரிய காரணத்தை ஊகித்துப் பேசுமிடத்து 'புகழ் பெற்ற உயர் குடியில் பிறந்த பெண்களுக்கு கற்பழிதல் என்பது எண்ணிப் பார்க்க முடியாத செயல். சூர்ப்பணகை ஒருகால் கற்பிழந்திருப்பாளோ? அது கண்டு கரன் கோபித்து அவளை வெறுத்து இவள் அழகைக் குலைத்திட இவ்வாறு அவள் அங்கங்களை அறுத்திருப்பான்' எனப் பேசுவதாகக் குறிப்பிடுகின்றார். சூர்ப்பணகை அரக்கர் குலத்தைச் சார்ந்தவளாயிருப்பினும்

கம்பன் அக்குலப் பெண்ணிற்கும் கற்பின் இன்றியமையாமையை வலியுறுத்தியிருப்பதனை

சொற் பிறந்தார்க்கிது துணிய ஒண்ணுமோ
இற்பிறந்தார் தமக்கு இயைவ செய்திலள்
கற்புஇறந் தாளெனக் கரன்கொலா மிவள்
பொற்பறை யாக்கினன் போல்என் றார்சிலர் (3098)

என்ற பாடலால் உணரமுடிகிறது.

கற்பு குறித்து அனுமனின் கருத்து

இலங்கையில் எங்கும் சீதை காணப்படாமையால் அனுமன் பலவாறு சிந்திக்கின்றான். 'கொன்றானோ கற்பழியா குலமகளை' என்று இராவணன் கொன்றுவிட்டானோ என்றெண்ணுகின்றான். சீதையை நினைக்கும்போது அனுமனுக்குக் கற்புதான் நினைவிற்கு வருகிறது. சீதையை அசோகவனத்தில் அரக்கியர் நடுவில் காணுகின்றான் அனுமன். இவள் சீதைதான் என்று துணிந்து , மகிழ்ந்து தன் மனத்துள்,

சீதாப்பிராட்டி தான் தனியே அரக்கரிடையில் அகப்பட்டதனால் ஒருகால் அவள் கற்பு தவறிப் போயிருக்குமானால், அப்போது இராமனது சினக் கடல் பொங்கி உலகத்தையெல்லாம் அழித்தொழித்துவிடுமே என்றும் இப்போது அவ்வாறு ஐயப்படுவதற்குக் காரணம் எதுவுமில்லையென்று தெளிவாக விளங்குகின்றமையால் இனி உலகம் எந்தக் குறையுமின்றி வாழும் என நினைக்கின்றான்.

அனுமன் சீதையைக் கண்டு அவள் கொடுத்த சூடாமணியைப் பெற்று இராமனிடத்து வருகின்றான். அனுமனைக் கண்ட அளவிலேயே நிகழ்ந்த செய்திகளைக் குறிப்பால் உணர்ந்து கொண்ட இராமன் அவள் கற்பும் நன்று' என்று தெரிந்து கொள்கிறான். அனுமன் வந்து இராமனிடம்

கண்டனன் கற்பினுக் கணியை (6031)

என்று கற்பிற்கு முதலிடம் கொடுத்துச் சொல்வதனால் அறியமுடிகிறது. இங்கும் சீதையின் கற்பே மிகவும் வலியுறுத்தப்படுகிறது. கற்போடியைந்த வாழ்க்கை, மகளிர்

மாண்பினைச் சிறப்பிக்கும். அரும்பெரும் செயல் அறிந்து இன்புறும் அற்புதக் கற்பு, தமிழ் மகளிரின் கற்பு என்பதனைக் கம்பன் தன் காவியத்தில் மிக அழகாக எடுத்துரைத்துள்ளார்.

இன்றைய சூழலின் தேவைக்கு கம்பர்

தி. நா. கிருஷ்ணமூர்த்தி
தலைமைப் பொறியாளர்
அந்தமான் துறைமுகம், போர்ட் பிளேயர்
அந்தமான் நிகோபார் தீவுகள்.

முன்னுரை:

கம்பன் தனது காப்பியத்தினை வடிவமைக்கும் போது இவ்வளவு நூற்றாண்டுகள் கடந்தும் அது நிற்கப் போவதை நினைத்து எழுதி இருக்க வாய்ப்பில்லை என்பது எனது தாழ்மையான கருத்து. கம்பனது நோக்கமும் அதுவாக இல்லை என்பதும் தெரிகின்றது. 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற உயரிய கருத்தினைத் (பலதாரமணம் அனுமதிக்கப்பட்ட சூழலிலேயே) தருவது, சைவ வைணவ மோதல்களைத் தடுப்பது, வடமொழி இலக்கியத்தை தீந்தமிழில் தருவது என்ற நோக்கங்களால் படைக்கப்பட்ட கம்ப காப்பியம், உலகளாவிய அளவில் மக்களால் விரும்பப்பட காரணமாய் இருப்பது அதன் வரிகள் இன்றளவும் ரசிக்க மட்டுமல்ல, இன்றைய சூழலில் நடைமுறைக்கு எடுத்துக்கொள்ள, அதுவும் இலக்கிய இன்பத்தின் நயத்துடன் சேர்ந்து அமையப் பெற்றுள்ளது என்பதாலும் கூடத்தான்.

மன அழுத்தம் குறைத்திட கம்பன் வழி:

இன்றைய பரபரப்பான சூழலில் மன அழுத்தம் என்பது சிறார்கள் துவங்கி முதியவர்கள் வரையிலும் பரவிவிட்ட ஒரு மனோவியாதியாய் ஆகி விட்டது. ஒருவருக்கு அப்படிப்பட்ட மன அழுத்தம் இருக்கின்றதோ இல்லையோ, அப்படி ஒன்று இருப்பதாய் அடிக்கடி பேசிக் கொண்டிருப்பதையும் காண முடிகின்றது. அப்படி பலர் நம்புகின்ற காரணத்தினால் மன அழுத்தம் குறைக்கும் பொருட்டு நடத்தப்படும் பயிற்சிகளுக்கும் மிக அதீத மரியாதையும் இருந்து கொண்டே வருகின்றது. கம்பன் வரிகளில் மன அழுத்தம் குறைந்திட வழி சொல்லும் வகை இன்றளவும் கம்பனுக்கு தனது செல்வாக்கினை ஏறுமுகமாய் வைத்துள்ளது.

கம்பன் வரிகளில் மன அழுத்தம் குறைந்திட:

அனுமன் சீதையினை முதன் முதலில் சந்தித்த காட்சியினை சற்றே மனக் கண்ணில் ஏற்றிக் கொள்க. சற்றேறக்குறைய இன்றைய மக்கள் மத்தியில் இருக்கும் மன அழுத்தம் போன்ற ஒரு சூழல் சீதையிடம் இருப்பதாய்க் கருதலாம். விரக்தியின் உச்சத்தில் சீதை தன் உயிரை மாய்த்துக் கொள்ள நினைக்கும் தருவாயில், அனுமன் அந்த இடரிலிருந்து சீதையினை மீட்டுக் கொண்டு வருவதை கம்பன் வரியில் காண்பது இன்றைய சூழலுக்கும் உகந்ததாய் இருப்பதைக் காணலாம். 'அடைந்தனென் அடியனேன், இராமன் ஆணையால்....' என்று தொடங்கி பேசத்துவங்கிய அந்த சொல்லின்செல்வன் நாவன்மை கண்டு, சீதாப் பிராட்டியாரே, 'அரக்கனே ஆக; வேறு ஓர் அமரனே ஆக; அன்றி குரங்கு இனத்து ஒருவனே தான் ஆகுக; கொடுமை ஆக; இரக்கமே ஆக; வந்து, இங்கு, எம்பிரான் நாமம் சொல்லி, உருக்கினன் உணர்வை; தந்தான் உயிர்' என்று சொல்ல வைத்த திறம் இன்றும் நாம் எப்படி பிறருடன் ஆபத்துக் காலங்களில்., நோயுற்றவரோடு பேசும் போது, நொந்து போன நேரத்தில் பேச வேண்டுமென்பதை கம்பன் அன்று சொன்னது இன்றும் ஏற்கும் வகையில் தான் இருக்கிறது.

பூலியன் அல்ஜீப்ரா வகையில் அமைந்த கம்பன் பாடல்:

இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் கண்டு அறியப்பட்ட கணிதஅறிவியல் தொழில்நுட்பம் தான் இந்த பூலியன் அல்ஜீப்ரா வகைக் கணிதச் சமன்பாடுகள். ஆனால் அதே பாணியில் சொற்களை வைத்து பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே கம்பன் பாடல் அமையப் பெற்றதினை இன்று நோக்கும் போதும் பிரமிப்பு உண்டாகும். கணிதச் சமன்பாடு $A(B+C) = AB + AC$ என்கின்றது. இதில் A என்பது, B மற்றும் C யுடன் சேர்ந்து வரும் என்பதை நாம் நவீன கணிதம் என நினைத்துப் படித்து வருகின்றோம். ஆனால் கிட்கிந்தை காண்டத்தில் வரும் கார்காலப் படலத்தில் வரும் மூள் அமர் தொலைவுற (பகைவர் மேல் மாறுபாட்டால் மூண்டபோர் முடிவுற்ற அளவில்) என்பதினை, அதனைத் தொடர்ந்து வரும் மூன்று செயல்களோடு சேர்த்துப் பார்ப்பது பூலியன் கணிதத்தினைக்

கம்பன் முன்பே செய்தது போல் தெரியும். போர் முடிந்த அளவில் (முரசு ஒலி அடங்கும் + அம்பு மழை ஒயும் + வாட்கள் உறையிலடப்பெறும்). கம்பன் வரிகள் இதோ:

மூள் அமர் தொலைவுற, முரசு அவிந்தபோல்,
கோள் அமை கண முகில் குமுறல் ஓவின;
நீள் அடு கணை எனத் துளியும் நீங்கின;
வாள் உறை உற்றென மறைந்த, மின் எலாம். (4253)

கம்பர் அலசும் சுவாட் முறை:

நிர்வாகத்தின் முடிவுகள் எடுக்கும் போது நவீன முறையில் அதனை சுவாட் *SWOT* முறையில் அணுகி, அலசி தேவையான முடிவுகளை எடுப்பர். கம்பர் பாடலில் அதே முறை கையாளப்பட்டுள்ளது என்றால் நம்ப இயலாதல்லவா? வாருங்கள் அனுமனின் பிரச்சினைக்கு இலங்கை வேந்தன், அரண்மனையில் கட்டப்பட்ட நிலையில் எப்படி நினைக்கிறார்? என்பது சுவாட் முறையில் கம்பர் அணுகியதை நாமும் நோக்குவோம்.

கைதி போன்ற சூழலில் தூது போன இடம் அது. சேதி சொல்ல வந்தவன் இராவணனைக் கொல்லத் தேதி குறிக்கும் இடம்தான் அது. தன்னைக் கொல்வது இந்த இலங்கை மன்னனால் இயலாது. *(Strength)*. அதேபோல், அவ்வேந்தனை தம்மாலும் கூட ஒன்றும் செய்ய முடியாது. *(Weakness)*. அப்படியே இருவரும் போரிட்டாலும் கூட, அது நீண்டு கொண்டே இருக்கும் *(Threat)*. அந்த மாதிரியான ஒரு சூழல் தேவையா தமக்கு..? அதற்கெனச் சரியான வேளை வரும் வரைக்கும் காத்திருக்க வேண்டும். *(Opportunities)* இப்படி சுவாட் *SWOT* முறையில் யோசித்து கம்பர் அனுமன் மூலமாய் அதனைத் தெரிவிக்கின்றார்.

என்னையும் வெலற்கு அரிது இவனுக்கு ஈண்டு இவன்
தன்னையும் வெலற்கு அரிது எனக்கு தாக்கினால்
அன்னவே காலங்கள் கழியும் ஆதலான்
துன்ன அருஞ் செருத் தொழில் தொடங்கல் தூயதோ (5866)

பாதிக்கப்படும் நபருக்குத் தகவல் தரும் உரிமை:

2005ஆம் ஆண்டில் இந்தியநாட்டில் அமலான தகவல் பெறும் உரிமைச் சட்டம் உலகத்து வெளிப்படையான நிர்வாக சட்டங்களில் மேன்மையானது எனச் சொல்லப்படுகின்றது. அதில் பிரிவு 4 இன் படி, அரசு செயல்படுத்தும் திட்டங்கள் பற்றிய தகவல் அதனால் பாதிக்கப்பட இருக்கும் மக்களுக்குச் சொல்லுதல் வேண்டும் என்பதும் ஒரு முக்கியமான சரத்து. கம்பன் காப்பியத்திலும் இப்படிப்பட்ட சூழல் வருகின்றது. வீடணனுக்கு பட்டம் சூட்டியாகிவிட்டது. கடல் தாண்டியாகியும் விட்டது. ஆனால் ஒரு யோசனை வருகிறது கம்பனின் நாயகனுக்கு. போரைத் தவிர்க்க ஏதுவாய்த் தூதனை அனுப்பலாமா என்று. இந்தச் சூழலில் பாதிப்படைய இருப்பது வீடணன் மட்டும்தான். (இராவணன் சமாதானத்திற்க்கு சம்மதித்தால் தன்னால் அரசராக முடியாது) நவீன தகவல் பெறும் சட்டம் பாதிப்படைய இருப்போருக்கு, தகவல் சொன்னால் போதும் என்கிறது. ஆனால் கம்பன் சட்டம் அதையும் மீறி, ஒரு படி மேலே நின்று, பாதிப்படைய இருப்போரிடமே (அதாவது வீடணனிடமே) ஆலோசனை செய்ய அறிவுறுத்துகின்றது. இதனால் தான் கம்பன் காப்பியம் தலைமுறைகளைத் தாண்டி நிற்கின்றது. கம்பன் பாடல் இதோ:

வள்ளலும் விரைவின் எய்தி, வட திசை வாயில் முற்றி,
வெள்ளம் ஓர் ஏழு பத்துக் கணித்த வெஞ் சேனையோடும்,
கள்ளனை வரவு நோக்கி, நின்றனன், காண்கிலாதான்,
'ஒள்ளியது உணர்ந்தேன்' என்ன, வீடணற்கு உரைப்பதானான்

வாய்மை என்பது யாதெனின் என வள்ளுவப் பெருந்தகை சொன்னது யாவரும் அறிந்ததே. ஆனால் யாதொன்றும் தீமையிலாது சொலல் என்பதினை சற்றே மாற்றி, நன்மையிலாதது சொல்லாதிருத்தலினைத் தனது அனுமன் பாத்திரம் மூலமாய்ச் சொல்கின்றார் கம்பர். நடந்த சம்பவம் உண்மை என்றாலும் அதனைக் கூறுவதின் மூலம் எந்த நன்மையும் இல்லை என்பதால் அதனை மறைக்கின்றார். கம்பன் வரையறையில் அதுவும் வாய்மையில் வருகின்றது. ஒரு நிறுவனத்தின் தலைவரது நற்பெயருக்கு களங்கம் வராது இருக்க வேண்டும்

என்ற கொள்கை விளக்கம் தான் கம்பனை இன்றும் படித்துப் போற்ற வைக்கின்றது.

இச்செய்தியினைப் பூடகமாக அனுமன் வாயிலாக நாம் சில இடங்களில் பின் தொடர்ந்து சென்றால் அவை கம்பன் வரிகளில் புலப்படும். கார்காலம் முடிந்து வருவதாய் கிட்கிந்தையின் வேந்தன் சொல்லிப் போனவன், தன் நிலை மறந்து போதையில் திளைத்து இருந்து பின்னர் இலக்குவன் கோபமாய்ப் போனபின் எழுந்து நின்று கடமையில் ஆழ்ந்தமை எல்லாரும் அறிந்ததுதானே? ஆனால் இந்த நிகழ்வு தன் வேந்தனுக்கு இகழ் தரும் என்பதால் மூன்று இடங்களில் தன்னைப் பற்றிய அறிமுகத்தின்போது மறைத்தது கம்பரின் வார்த்தை ஜாலத்தில் பலர் கவனிக்காமல் விட்டது. அசோக வனத்தில் சீதையிடம் அறிமுகம், இலங்கை வேந்தனிடம் தன்னை யார் என்று வெளிப்படுத்தல், மூன்றாம் முறையாக பரதனிடத்தில் தான் யார் எனக்கூறும் மூன்று தருணங்களிலும் தன் மன்னவன் புகழுக்குக் களங்கம் வராது 'வாய்மை' பேசிய இடங்களைக் கவனித்தல் வேண்டும்.

சீதாப் பிராட்டியிடம் சொல்லும்போது 'பின்னவற்கு அரசு நல்கி, துணை எனப் பிடித்தான் எங்கள் மன்னவன் தனக்கு, நாயேன், மந்திரத்து உள்ளேன்..' (5258) எனக் கூறி அடுத்து தேடப் புறப்பட்டதைத் தெரிவிப்பதைக் காண்க.

இதனையே, இராவணன் முன் அறிமுகத்தினை நோக்கிடுங்கள். இங்கும் சுக்ரீவன் கடமை மறந்த செயல் மறைக்கப்பட்டதை நோக்குக.

அன்னவற்கு அடிமை செய்வேன்; நாமமும் அனுமன் என்பேன்;
நன்னுதல்தன்னைத் தேடி நாற் பெருந்திசையும் போந்த
மன்னரில் தென்பால் வந்த தானைக்கு மன்னன், வாலி -
தன் மகன் அவன் தன் தூதன் வந்தனென், தனியேன்' என்றான்.
(5886)

மூன்றாம் முறையாக பரதனிடம் முழு விரிவான அறிமுகம் தொடர்கிறது. அதிலும், சுக்ரீவன் அரசன் ஆகின்றான் (ஆக்கப்படுகின்றான்); கார்காலம் முடிந்து சீதைதேடும் காரியம் துவங்குகின்றது என்பதாய்த்தான் கம்பன் வரிகள் சொல்கின்றன.

கால, மா மாரி நீங்க, கவயனோடு, இடபன், காந்து,
நீலன், மாமயிந்தன், சாம்பன், சதவலி, பனசன், நீடு
வாலி மா மைந்தனென்று இவ்வானரத் தலைவரோடு
கூல வான் சேனை சூழ, அடைந்தனன், எங்கள் கோமான்

(யுத்.மிகை.41-237)

கம்பன் மூலம் அறிவது, உண்மை என்பது உள்ளதை உள்ளபடி உரைத்தல் அன்று. பிறர் உள்ளத்தில் தேவையில்லாத சேதிகளைத் தராமல் இருத்தலுமாகும். இவை இன்றும் தனியார், பொதுத்துறை நிறுவனத்தில் இருப்போர் மனதில் கொள்ள வேண்டிய பாடமாய் இருக்கின்றது. கம்பன் இன்றும் போற்றப்படுவதின் காரணமும் இதுவும் ஒன்றாய்க் கருதுகிறேன்.

முடிவுரை:

கம்பனைப் பலவகையில் இரசிப்போர் உண்டு. பல்வேறு காரணங்களால் இன்று வரை பேசப்பட்டும் அனுபவிக்கப்பட்டும் வருவதற்கு, கம்பனின் நயம் மட்டுமே காரணமாய் இருந்துவிட முடியாது. அதனையும் தாண்டி காலத்தை வென்று நிற்பதற்கான காரணம் தேடிய போது என் சிற்றறிவுக்கு எட்டிய சில தகவல்களை மட்டும் இக்கட்டுரையில் தந்துள்ளேன். இன்றைய சூழலில் கம்பராமாயணம் ஏற்புடையதாய் இருக்கிறதா? என்ற கேள்வியினை எனக்குள் எழுப்பி அதன் மூலம் கிடைத்த பதிலின் தொகுப்பு தான் இது. கம்பனில் தோய்ந்து, ஆழ்ந்த அறிவு பெற்றோர் இப்பாமரனின் சிந்தனையினை மன்னித்து ஏற்பாராக.

கம்பன் உவமைகளில் உலகியல் மெய்ம்மைகள்

முனைவர் தீ.சண்முகப்பிரியா
முதுகலைத் தமிழாசிரியர்,
அரசு மேனிலைப்பள்ளி, மேல்கொட்டாய், கிருட்டிணகிரி மாவட்டம்

மனித வாழ்க்கைக்கு ஆதாரமாக உள்ளது தனிமனித அறம். அத்தகைய அறத்தினை மேற்கொண்டால் மட்டுமே மனித வாழ்க்கை சிறக்கும். தமிழில் உள்ள இலக்கியங்கள் பலவும் இதனையே வலியுறுத்துகின்றன. அத்தகைய இலக்கியங்களுள் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தது இராமாவதாரம். இராமாவதாரத்தில் கம்பர், தனிமனித ஒழுக்கங்களையும்;, அறங்களையும், வாழ்வியல் விழுமியங்களையும், உலகியல் மெய்ம்மைகளையும் - உவமைகள், கவிக்கூற்று, பாத்திரக் கூற்று - வாயிலாக வலியுறுத்துகிறார். அவற்றுள், உவமைகளின் வாயிலாக கம்பர் வலியுறுத்தும் உலகியல் மெய்ம்மைகளை ஆய்ந்து வெளிக்கொணரும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

உலோபகுணம் நற்குணங்களை அழிக்கும்

விசுவாமித்திரர் இராமனிடம், தாடகையின் வரலாற்றைக் கூறும்போது, தாடகையின் வலிமையையும் *(359-60)* தோற்றத்தையும்*(361-62)* கூறி, அவள் வளம் நிறைந்த மருத நிலத்தை அழித்துப் பாலைவனமாக மாற்றிவிட்டதைக் கூறுகிறார். இதனை,

உளப்பரும் பிணிப்பு அறா உலோபம் ஒன்றுமே
அளப்பு அரும் குணங்களை அழிக்கும் ஆறுபோல்
கிளப்பு அரும் கொடுமைய அரக்கி கேடு இலா
வளப்பரு மருதவைப்பு அழித்து மாற்றினாள் *(363)*

எனும் உவமையின் மூலம் விளக்குகிறார். மனத்தில் பேராசை நீங்காத உலோப குணம் ஒன்று மட்டுமே ஏனைய நற்குணங்கள் அனைத்தையும் அழிப்பதுபோல, சொல்லமுடியாத கொடுமைகளை உடையவளாகிய தாடகை கேடில்லாத வளம்பல நிறைந்த மருத நிலத்தை அழித்துப் பாலைவனமாக மாற்றிவிட்டாள் என்று கூறுகிறார்.

இவ்வுவமையின் மூலம், பல நற்குணங்கள் உடையவராயினும், உலோபகுணம் ஒன்று மட்டும் இருந்தால் அது அந்நற்குணங்கள் அனைத்தையும் அழித்துவிடும் எனும் விழுமியத்தைப் பதிவு செய்திருக்கிறார்.

மூடர்களுக்குக் கூறிய நல்லுரை

தாடகை வதைப்படலத்தில் இராமன் தாடகையை வதம் செய்ய அவள்மீது கணையைச் செலுத்துகிறான். அக்கணையானது, அவள் உடலில் தங்காமல் முதுகுப்பக்கமாகத் துளைத்துக்கொண்டு கழன்று சென்றது. புனிதமாகிய - பாவம் போக்கியாள்வதாகிய இராமபாணம் பாவியாகிய அவள் நெஞ்சில் தங்கவில்லை; கழன்று போயிற்று. இதனைக் கம்பர்,

கல் ஒக்கும் நெஞ்சில் தங்காது அப்புறம் கழன்று, கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள் எனப் போயிற்று அன்றே!
(388)

என்னும் உவமைவழி தெளிவுற உணர்த்துகிறார். கல்லாத மூடர்களுக்குக் கற்றறிந்த சான்றோர்கள் சொன்ன, அவர்கள் போக்கொடு பொருந்தாத நல்லுரைகள் புகுந்த சுவடுமின்றி உடனே மறந்து போவதைப்போல, தாடகையின் உடலில் நுழைந்த இராமபாணம், அவளுடலில் தங்காமல் உடனே வெளிவந்தது என்கிறார்.

கல்லாத மூடர்களுக்கு நல்லுரைகள் கூறினால், அதை அவர்கள் ஒரு காதில் வாங்கி மறுகாதில் விட்டுவிடுவர். ஆகவே, அவர்களுக்குக் கூறும் அறிவுரையானது விழலுக்கு இறைத்த நீரினைப்போல வீணாகிவிடும் என்னும் வாழ்வியல் விழுமியத்தைக் கம்பர் இவ்வுவமையின் மூலம் பதிவு செய்கிறார்.

நல்வினைப்பயன்

வேள்விப்படலத்தில், விசுவாமித்திரர் இராமனுக்குப் படைக்கலங்களைக் கொடுக்க, அப்படைக்கலங்கள் யாவும் இராமனை வந்தடைந்ததைக் கம்பர்,

ஆறிய அறிவன் கூறி அளித்தலும், அண்ணல் தன்பால்
ஊறிய வுவகையோடும் உம்பர்தம் படைகள் எல்லாம்,

தேறிய மனத்தான் செய்த நல்வினைப் பயன்கள் எல்லாம்,
மாறிய பிறப்பில் தேடி வருவபோல் வந்த அன்றே (395)

என்னும் உவமையின் மூலம் குறிப்பிடுகிறார். தெளிந்த மனமுடையவன் ஒருவன் ஒரு பிறப்பில் செய்த நல்வினையின் பயன்கள் யாவும், அவன் மறுபிறப்பு உற்றக்கால் அவனைத் தேடி வருதல்போல, அப்படைக்கலங்கள் இராமபிரானிடம் மிக்க மகிழ்ச்சியோடு வந்து சேர்ந்தன என்று கூறுகிறார்.

இவ்வுவமையின் மூலம், 'ஒருவன் ஒரு பிறப்பில் செய்த வினையின் பயன், அவனுடைய மறுபிறப்பில் நிச்சயம் அவனைத் தேடி வந்து சேரும்' என்னும் விழுமியத்தைக் கம்பர் பதிவு செய்கிறார். இவ் உவமையானது,

பல்லாவுள் உய்த்து விடினும், குழக்கன்று,
வல்லதாம் தாய் நாடிக் கோடலைத் - தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தே தற்செய்த,
கிழவனை நாடிக் கொளற்கு (நாலடி.101)

எனும் பாடலின் கருத்தோடு ஒப்புநோக்கத் தக்கதாக உள்ளது.

பெரியோர் செயல்

சந்திரசயிலப் படலத்தில் கம்பர் தேரினை வருணிக்கும்போது, இரதங்களின் பொன்னால் இயன்ற சக்கரங்கள் உருண்டு சென்ற இடந்தோறும் தம் பொன்னை உரைத்துக்கொண்டே ஓடிச் செல்வதனால், கருநிறம் பொருந்திய பாறைக்கற்களையும் தம் பொன்னிறமுடையவாகவே செய்யலாயின. தேரின் இச்செயலினைக் கம்பர்,

தெருண்ட மேலவர் சிறியவர்ச்சேரினும் அவர்தம்
மருண்ட புன்மையை மாற்றுவர் எனும் இது வழக்கே!
உருண்ட வாய்தொறும் பொன்உருள் உரைத்து உரைத்து ஓடி
இருண்ட கல்லையும் தம் நிறம் ஆக்கிய இரதம் (820)

எனும் உவமையின்வழி விளக்குகிறார். தெளிந்த அறிவுடைய பெரியோர், சிறியவர்களைச் சேர்ந்து இருந்தாலும் அறிவுத் தெளிவில்லாமல் மருட்சியுற்ற அவர்களின் தன்மையை மாற்றுவர் எனக் கூறுகிறார்.

இவ் உவமையிலிருந்து கம்பர், பெரியோர் சிறியோரைச் சேர்ந்திருந்தாலும் தன்னிலை மாறாமல் இருப்பர் என்ற செய்தியையும், சிறியோரின் மருட்சியை மாற்றும் இயல்புடையவர் என்ற செய்தியையும் பதிவு செய்கிறார்.

நல்லோர் இயல்பு

சந்திரசயிலப் படலத்தில், பாய்ந்தோடும் குதிரைகள் நுண்ணிய புழுதிகளிற் புரண்டு உடனே எழுந்து புழுதி படிந்ததற்கிரங்கி விரைந்து உதறிவிட்டுப் பரவி நின்றன. குதிரைகளின் இச்செயலை,

தீயவரோடு ஒன்றிய திறத்து அரு நலத்தோர்
ஆயவரை அந்நிலை அறிந்தனர் துறந்தாங்கு,
ஏயவரும் நுண்பொடி படிந்து உடன் எழுந்து ஒண்
பாய் பரி விரைந்து உதறிநின்றன பரந்தே (832)

என்ற உவமைவழி உணர்த்துகிறார். தீய குணத்தவரோடு ஆராயாது நட்பு கொண்ட அரிய திறமையுடைய நல்லோர், அந்தத் தீயவரைத் தீச்செயல் புரிந்த அவ்வளவிலே அறிந்துகொண்டு கைவிட்டுவிடுவர் என்கிறார்.

இவ்வுவமையின் மூலம் கம்பர், நல்லோர் தீயவருடனான நட்பினை உடனே கைவிட்டுவிடுவர் என்ற உலகியல் மெய்ம்மையைப் பதிவு செய்கிறார்.

வள்ளல் இயல்பு

சந்திரசயிலப் படலத்தில், ஆற்றில் ஊற்றுநீர் தோன்றுவதைக் கூறும்போது, தெளிந்த நீருள்ள நதிகள் வெள்ளமாகிய பெருஞ்செல்வத்தை வீசிக்கொண்டிராமற் போயினும் தோண்டுந்தோறும் ஊற்றாக எழுகின்ற புனலைச் சிறிது சிறிதாக உதவுவனவாக இருந்தன என்று கூறுகிறார். ஆற்றின் இச்செயலினை,

வெள்ளம் நெடுவாரி உறவீசி உளவேனும்
துள்ள எழுகின்ற புனல், கேளிரின் விரும்பித்
தெள்ளு புனல் ஆறு சிறிதே உதவுகின்ற,
உள்ளது மறாது உதவு வள்ளலையும் ஒத்த (835)

என்ற உவமையின் மூலம் குறிப்பிடுகிறார். வள்ளல்கள், செல்வம் உள்ளபோது வேண்டியவர்க்கு வேண்டியபடி அளித்து, அது வறண்ட காலத்தும் தன்னிடமுள்ள பொருளைக் கேட்போர்க்கு மறுக்காமல், உறவினரைப்போல விரும்பி அவர்களுக்கு அளிப்பர். வள்ளல்களின் இவ் இயல்பினை ஆற்றின் செயலுக்குக் உவமையாகக் கூறுகிறார். இவ்வுவமையானது,

ஆறுபெருக் கற்றருந் திடர்தான் பட்டாலும்,
ஊறலமை யாதோ உலகாற்றத் - தேற
வறியை நீ யானாலும் என் கலியை மாற்றச்
சிறியையோ சீர்க்குமணா செப்பு (தமிழ் நாவலர் சரிதை - *17*)

என்ற பாடலின் கருத்தோடு ஒப்புநோக்கத் தக்கதாக உள்ளது.

தத்துவஞானம் கைவரப்பெறல் - மாயை விலகல்

கார்காலப் படலத்தில், கூதிர்ப்பருவம் தேய்ந்து மாய்ந்ததை வருணிக்கும்போது, கார்காலத்தில் வானவீதியைப் போர்த்து மூடி, வையகத்தை இருளில் ஆழ்த்தியிருந்த மேகக் கூட்டங்கள், மெல்ல மெல்ல விலகிச் செல்லலாயின. இந்நிலையைக் கம்பர்,

தீவினை நல்வினை என்னத் தேற்றிய
பேர்வினைப் பொருள்தனை அறிந்து பெற்றதோர்
ஆய்வினை மெய்யுணர்வு அணுக ஆசறு
மாயையின் மாய்ந்தது மாரிப் பேரிருள் *(4252)*

என்று கூறி விளக்குகிறார். பாவம் புண்ணியம் என்று நூல்களில் கூறப்பட்ட பெருஞ்செயல்களின், தீமையும் நன்மையுமாகிய பயன்களின் உணர்ந்து அடைந்த, ஒப்பற்ற தத்துவஞானம் உண்டான அளவில், கார்மேகங்களின் செறிவினால் உண்டாகிய இருள் இருந்த இடம் தெரியாமல் மறைந்தது எனக் கூறுகிறார்.

கூதிர்காலம் தொடங்கிய அளவில் மேகக் கூட்டம் விலகி இருள் நீங்கி, மக்களுக்கு இன்பம் ஊட்டியது என்பதற்கு உவமையாக மெய்ஞ்ஞானம் கைவரப் பெற்றவுடன், மாயை நீங்கித் தெளிவு உண்டாகும் தன்மையைக் கம்பர் கூறுகிறார். மெய்யுணர்வு தோன்றுவதனால் மயக்க இருள் மாயும் என்னும் கருத்து,

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு (குறள்-352)

என்னும் குறளின் கருத்தோடு நோக்கத்தக்கது.

அறியாமையின் நீங்கி மெய்யுணர்வு பெற்றார்க்கு அம்மெய்யுணர்வு பிறப்பென்னும் இருளை நீக்கி, வீடென்னும் ஒளியைக் கொடுக்கும் என்பது குறளின் கருத்து. இக்கருத்தினைக் கம்பர், அதன் பொதுத் தன்மையை மாத்திரம் கொண்டு, மெய்யுணர்வு அணுக மாயை நீங்கும் என்று கூறித் தம் பாடலில் அமைத்து விளக்குகிறார்.

உலோபிகள் இயல்பு

மழை பொழிந்ததால் தாமரை செழித்து வளர அதன் இலையின்கீழ் தங்கியுள்ள ஆண் நண்டுகள் தம் பெண் நண்டுகளுடன் மெதுவாகத் தம் வளையின் வாயினைச் சேற்றால் அடைத்துக்கொண்டு, அதனுள் ஒடுங்கிக் கிடந்தன எனக் கூறுகிறார். நண்டின் இச்செயலினை,

மழை படப் பொதுளிய மருதத் தாமரை
தழை படப் பேர் இலைப் புரையில் தங்குவ,
விழைபடு பெடையொடும், மெள்ள, நள்ளிகள்,
புழை அடைத்து ஒடுங்கின, வச்சை மாக்கள்போல் (4268)

என்ற உவமையின் வாயிலாக விளக்குகிறார். விருந்தினர், சுற்றத்தினர், இரவலர் போன்றோர் தம் இல்லத்திற்கு வந்து விடுவரோ என்று அஞ்சி, உலோபிகள் தம் வீட்டுக் கதவை அடைத்துக்கொண்டு தம் மனைவி மக்களுடன் உள்ளிருப்பர். அதுபோல, ஆண் நண்டுகள் தம் பெடைகளோடு தாம் வாழும் வளைகளின் வாயிலைச் சேற்றால் அடைத்துக் கொண்டு உள்ளிருந்தன எனக் கூறுகிறார். இப்பாடலில், வச்சைமாக்களுடைய இயல்பை நண்டுகளின் செயலுக்கு உவமையாகக் கூறுகிறார்.

தீவினைகள் கெட்டொழிதல்

இராமனின் ஏவலால் இலக்குவன் கிட்கிந்தை நோக்கி சினத்துடன் விரைந்து சென்று, அடைக்கப்பட்ட கதவினைத்

தன் பாதத்தினால் தள்ளிய அளவில் கிட்கிந்தை நகரத்துக் காவலாக அமைந்த பெரிய மதிலும், வாயிற் கதவும், பாதுகாப்பமைந்த வாயிலில் அடுக்கப்பட்டிருந்த பெரும் பாறைகளுடன் பற்றுக்கோடின்றி முழுவதும் சிதைந்தழிந்தன என்கிறார். இலக்குவனின் இச்செயலினை,

காவல் மா மதிலும், கதவும், கடி
மேவும் வாயில் அடுக்கிய வெற்பொடும்,
தேவு சேவடி தீண்டலும், தீண்ட அரும்
பாவம் ஆம் என, பற்று அழிந்து இற்றவால் *(4304)*

என்ற பாடலின் மூலம் விளக்குகிறார். வழிபடு தெய்வத்தின் செவ்விய திருவடி சிந்தையிலும் சென்னியிலும் பொருந்திய அளவில், அணுகுதற்கு அரிய வெம்மை வாய்ந்த தீவினைகள் கெட்டொழியும் அதுபோல, இலக்குவனின் செயல் இருந்ததாகக் கூறுகிறார்.

இவ்வுவமையின் மூலம் கம்பர், இறைவனின் திருவடிகளில் தம்முடைய மனத்தையும் கருத்தையும் ஒருங்கே வைத்த அளவில், அடியார்களின் பண்டைத் தீவினைகள் முழுவதும் கெட்டொழியும் எனும் கருத்தினைப் பதிவுசெய்கிறார்.

அருளாளரின் பொருட் பயன்

நாட விட்ட படலத்தில் கம்பர், முண்டகத்துறையை வருணிக்கும்போது, முண்டகத்துறை என்கின்ற பூம்பொழில் இனிய கனிகளை இவ்வுலகத்து உயிர்கள் எல்லாம் உண்ணக் காலமல்லாத காலத்தும் கனிந்து நின்று விளங்குகிறது என்கிறார். இப்பொழிலின் தன்மையை,

ஞாலம் நுங்குறு நல் அறத்தோர் பொருள்
போல நின்று பொலிவது பூம்பொழில்
சீல மங்கையர் வாய்எனத் தீங்கனி
காலம் இன்றிக் கனிவது காண்டிரால் *(4464)*

என்று கூறுகிறார். நல்லறத்தை மேற்கொண்ட அருளாளரின் பொருள் பலருக்கும் பயன்படுவதுபோல, இப்பொழில் அனைவரும் பயன்பெற எப்பொழுதும் கனிந்து நிற்கிறது

என்று கூறுகிறார். இவ்வுவமையின் மூலம் கம்பர், நற்குணம் கொண்ட சான்றோரின் பொருள் பலருக்கும் பயன்படும் எனும் விழுமியத்தைப் பதிவுசெய்கிறார். இப்பாடலில்,

பயன்மர முள்ளூர் பழுத்தற்றாற் செல்வம்
நயனுடை யான்கட் படின் *(216)*

எனும் குறளின் கருத்தை உவமையாக்கிக் கூறியுள்ளமை சுட்டத்தக்கது.

தீநெறி வந்த செல்வம்

கம்பர், விடியற்காலையை வருணிக்கும்போது, இராவணன் கட்டளையால் பகற் பொழுதில் இரவு வர, சந்திரகிரணங்களால் செவ்வியொடு மலர்ந்து நின்ற ஆம்பல் மலர், சூரியன் உதித்ததும் குவிந்து, தாமரை மலர்கள் மலர்ந்தன என்பதனை,

உருக்கி அனைய கதிர் பாய, அனல்போல் விரிந்தது உயர் கமலம்;
அருக்கன் எய்த, அமைந்து அடங்கி வாழா, அடாத பொருள் எய்திச்
செருக்கி, இடையே, திரு இழந்த சிறியோர் போன்ற, சேதாம்பல்
(3183)

என்ற உவமையின் மூலம் விளக்குகிறார். சிறியோர் மனநிறைவுடையராய் அடங்கி வாழாது, தீ நெறியால் வந்த பொருளையடைந்து, செருக்குற்று வாழ்ந்து, தம் வாழ்நாளின் இடையிலேயே அச்செல்வம் முழுவதும் இழந்து வாடுவர். அத்தகைய அற்பர்களைப்போலச் சேதாம்பல்கள் சூரியன் உதித்ததும் தம் செவ்வியழிந்து குவிந்தன எனக் கூறுகிறார்.

இவ் உவமையின் மூலம் கம்பர், தீநெறியில் சேர்த்த செல்வம் வாழ்வின் இடையிலேயே அழிந்துவிடும் எனும் வாழ்வியல் மெய்ம்மையைப் பதிவு செய்கிறார்.

விலைமகளிர் இயல்பு

மாரீசன் வதைப் படலத்தில், மாரீசனாகிய பொன்மான், மலையின்மீது ஏறும்; மேகக் கூட்டத்தினிடையே குதிக்கும்; அணுகச்செல்லின் விலகும்; தொடராது தாழ்த்தால், தொடலாந் தன்மைத்தாய் அணுகும்; எதிர் நின்றது போலக் காட்டி மறையும் - போன்ற ஓரிடத்தினில் நிலைபெறாமல் பல்வேறு செயல்களைச் செய்தது. பொன்மானின் இச்செயலினை,

குன்றிடை இவரும்; மேகக் குழுவிடைக் குதிக்கும்; கூடச்
சென்றிடின், அகலும்; தாழின், தீண்டல் ஆம் தகைமைத்து ஆகும்;
நின்றதே போல நீங்கும்; நிதிவழி நேயம் நீட்டும்
மன்றல் அம் கோதை மாதர் மனம் எனப் போயிற்று, அம்மா!*(3309)*

எனும் உவமையின் வாயிலாக விளக்குகிறார். தாம் பெறும் பொருள் அளவால் அன்பு செய்யும் விலைமகளிரின் மனம் எவ்வாறு ஒருவழி நில்லாது செல்லுமோ அதுபோல, மாரீசனாகிய பொன்மானும் ஒருவழி நில்லாது சென்றது எனக் கூறுகிறார்.

இவ் உவமையின் வாயிலாக, விலைமகளிர், 'பொருள் எவ்வளவினதோ அவ்வளவே அன்பு செய்வர்; அவர்களின் மனம் ஒரு வழி நில்லாது' எனும் உலகியல் மெய்ம்மையைக் கம்பர் பதிவு செய்கிறார்.

தொகுப்புரை

கம்பர், தாம் கூற விரும்பும் கருத்துகளை விளக்கவும், காட்சிகளை வருணிக்கவும், பாத்திரங்களின் செயல்பாடுகளைக் குறிப்பிடவும் உவமைகளைப் பெரிதும் பயன்படுத்துகிறார்.

இயற்கைக் காட்சிகள், கதைமாந்தர்களின் உடல் உறுப்புகள் - போன்றவற்றை வருணிக்க காட்சி உவமைகளைப் பயன்படுத்துகிறார். இயற்கை நிகழ்வுகள், பாத்திரங்களின் செயல்பாடுகள் போன்றவற்றை விளக்க கருத்தியல் உவமைகளைப் பெரிதும் பயன்படுத்துகிறார்.

கருத்தியல் உவமைகளில் உடல், உயிர், இருவினை, பாவ - புண்ணியம் முதலிய மெய்யியல் சார்ந்த செய்திகளையும்; அரசியல், சமூக நிகழ்வுகள், சமூக அவலங்கள், தனிமனிதர்களின் செயல்பாடுகள் போன்றவற்றையும் உவமைகளாகப் பெரிதும் பயன்படுத்துகிறார்.

கம்பர் பயன்படுத்தும் உவமைகளின் மூலம் பல துறைகளில் அவருக்கிருந்த ஆழ்ந்த நுட்பமான அறிவுத்திறனையும், சமூக இயங்கியலின்பால் அவருக்கிருந்த உயர் நாட்டத்தையும் அறிய நேர்கின்றது.

கம்பர் கூறும் மருதநிலக் காட்சிகள்

முனைவர் இர. கீதா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, இராமசாமி தமிழ்க்கல்லூரி, காரைக்குடி

முன்னுரை

தமிழர்கள் தாங்கள் வாழ்ந்த நிலப்பகுதியினை இயற்கை அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு ஐந்தாகப் பிரித்தனர். கடவுள் முதல் இசை வரை இயற்கையோடு அமைந்ததாக அமைத்தனர். இயற்கை சார்ந்த வாழ்வினை முதன்மையாகக் கொண்டு வாழ்ந்தனர். முதல், கரு, உரி என்றும் மூவகைப் பொருள் வகுத்து வாழ்ந்த தமிழ் மக்கள் தம் அகப் புறவாழ்வினை இலக்கியங்கள் பல படம்பிடித்துக் காட்டுகின்றன. அந்த வகையில் கம்பர் தமது கோசல நாட்டின் வளத்தினைக் கூறும் பொழுது தான் கண்ட மருத நிலத்தின் அழகினைத் தன் கற்பனையில் விரிக்கிறார். முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்னும் அன்பின் ஐந்திணை நிலங்களுள் மிகவும் வளமிக்கதாக அமைவது மருதநிலமே ஆகும். அந்நிலத்தின் இயற்கை அழகினை மிக ஆழமாகவும் நுட்பமானதாகவும் கம்பர் தனது காப்பியத்தில் வடித்திருக்கும் முறையினை இக்கட்டுரையில் காணலாம்.

மருதத்திணை

பொதுவாக இலக்கியங்களில் காணப்படும் செய்திகளின் வழி அன்பின் ஐந்திணைகளுள் மருதத்திணையே வளமிக்கதாகும். வயலும் வயல் சார்ந்த நிலத்தினை மருதம் என்பர். இந்திரனைக் கடவுளாகக் கொண்டது. இந்நிலம் செந்நெல்லும், வெண்நெல்லும் விளையும் அழகிய திணை. மருதம் இயற்கை வளம் மிகச் சிறப்பாக அமைந்த மருதத்தில் ஆறு, கிணறு போன்ற நீர் நிலைகளும் வளமிக்கதாக அமையும். தாமரை, அல்லி, குவளை போன்ற நீரில் பூக்கும் மலர்களும், மருதம், காஞ்சி போன்ற வளமிக்க மரங்களும் காணப்படும் பகுதியாக அமைகின்றன. இப்படிப்பட்ட மருதத்திணையின் நிலத்தை கம்பர் தனது கோசல நாட்டின் வளமிக்க பகுதியாகக் கற்பனை செய்துள்ளார்.

கம்பரின் வருணனைத் திறன்

கம்பர் தனது படைப்பில் பல்வேறு கலைத்திறன்களைக் கையாண்டுள்ளார். கம்பரின் கலைத்திறனின் காரணமாகப் பல தலைமுறை கடந்தும் கம்பராமாயணம் நின்று நிலைத்திருக்கின்றது. தம்முடைய படைப்புகளைப் பெட்டகமாகப் பொலிவுறுவதற்குக் கம்பரின் வருணனை உத்தி பெரிதும் பயன்பட்டுள்ளது. கம்பராமாயணத்தைப் படைக்கக் கம்பர் பல நுண்ணிய அணுகுமுறைகளைக் கையாண்டுள்ளார். அதில் ஒன்று மருதநில வருணனையாகும். மருதநிலக் காட்சிகளை வரிசைப்படுத்தும் முறையில் அந்நிலத்தின் அழகிய காட்சிகளைத் தன் பாடல் வரிகள் மூலம் படம்பிடித்துக் காட்டுகிறார் கம்பர்.

கோசல நாட்டில் மருதநிலம்

வளமிக்க மருத நிலத்தைக் கோசலநாட்டில் கம்பர் எவ்வாறு அமைத்துத் தருகிறார் என்பதைப் பார்க்கும் போது வியப்பளிக்கிறது. கோசலநாட்டு மருதநிலத்தில் பல்வேறு ஒலிகள் கேட்பதாகக் கம்பர் வருணனை செய்கிறார். ஆறு பாய்ந்து ஓடும் ஒலி உழவர்கள் கரும்பு ஆலையில் வேலை செய்வதால் எழும் ஒலி முதலிய ஒலிகளைக் குறிப்பிடும் கம்பர் குறிப்பாக அந்தக் கரும்பு ஆலையில் இருந்து கருப்பஞ்சாறு பாயும் ஒலியானது எழுவதாகக் குறிப்பிடுகிறார். அப்படியானால் அந்தக் கோசல நாட்டின் கரும்பு ஆலையில் இருந்து வெளியேறும் கருப்பஞ் சாறு ஆறு போன்று பாய்ந்தது என்பதை நாம் அறிய முடியும் இதனை,

> ஆறு பாய் அரவம் மள்ளர் ஆலை பாய் அமலை ஆலைச்
> சாறு பாய் ஓதை .... (34:1-2)

என்கிறார். இதனால் மருத நில வளத்தை இங்கு மிக அழகாய்ப் புனைந்திருக்கிறார் கம்பர்.

மேலும் கோசல நாட்டு வளத்தினை மிகைப்படுத்தி அழகுபடுத்தும் விதமாக அங்கு நிலங்களில் விலையுயர்ந்த உலோகங்கள் கிடப்பதாகக் குறிப்பிடுகிறார். அதாவது மருதநில வயல்களில் கலப்பைகள் கொண்டு உழும்போது நிலத்தில் கிடக்கின்ற தங்கம், முத்துகள் இரத்தினங்கள் போன்றவை

மேலெழுந்து கிடக்கின்றன என்றும் அவை பரம்பு அடித்த நிலங்களில் ஒளிர்விடுகின்றன எனவும் அழகுபடுத்துகின்றார். இதனை,

படை உழ எழுந்த பொன்னும் பணிலங்கள் உயிர்த்தமுத்தும்
இடறிய பரம்பில் காந்தும் இன மணித் தொகையும் (38:1-2)

என்று குறிப்பிடுகிறார். இதனால் அங்கு செல்வ வளம் மிகுந்துள்ளதைக் காண முடிகிறது.

தேனை உண்ட மீன்கள்

கம்பரின் கற்பனைத் திறன் மீண்டும் மீண்டும் படித்து இன்புறத்தக்கது. படைப்பாளனின் படைப்பை நீண்ட காலம் நிலைபெறச் செய்வது அவனின் ஆற்றல் மிகுந்த நுட்பமான கற்பனையே ஆகும் அதனடிப்படையில் கோசலநாடு மருதநிலத்தில் பல்வேறு தேன் உள்ளதாகவும் அவை கடலில் ஆறாகச் சென்று கலப்பதாகவும் அவற்றை மீன்கள் உண்டு களிப்படைந்ததையும் தனது படைப்பில் சுட்டுகின்றார். அதாவது பலவகைத் தேன்கள் வகைகளாக கம்பர் கரும்பாலைகளில் இருந்து வெளிவந்த கருப்பஞ்சாறு, தென்னை, பனை முதலியவற்றில் அரியப்பட்ட நுனிகளையுடைய பாளையிலிருந்து தோன்றும் சாறு, தேன் கூட்டிலிருந்து ஒழுங்காக ஒழுகின்ற தேன், மக்கள் அணிந்த மலர் மாலைகளில் இருந்து சிதறிய தேன் என்பனவற்றைக் குறிப்பிடுகிறார். இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து அளவு கடந்து ஓடி கப்பல்கள் இயங்கும் கடலிடையே சென்று சேர்ந்தன. அவ்வாறு கலந்து ஓடிய பல்வகைத் தேன்களைக் கடலில் உள்ள மீன்கள் அனைத்தும் உண்டு களிப்படைந்தன எனப் புனைகிறார். இங்கு அமைந்த மருத நில வளத்தைப் போலவே கம்பரின் கற்பனை வளமும் சிறந்துள்ளதை அறிய முடியும். இதனை,

ஆலைவாய்க் கரும்பின் தேனும் அரிதலைப் பாளைத் தேனும்
சோலைவீழ் கனியின் தேனும் தொடை இழி இறாலின் தேனும்
மாலைவாய் உகுத்த தேனும் வரம்பு இகந்து ஓடி வங்க
வேலைவாய் மடுப்ப உண்டு மீன் எலாம் களிக்கும் மாதோ (41)

மக்களும் அறமும்

கோசலநாட்டுப் பெண்களும் நீங்காக் கல்வியறிவைப் பெற்றிருந்தனர். அப்பெண்கள் வறுமையால் துன்பப்படுவர்களுக்கு கொடை முதலியன வழங்கி உபசரித்து வாழ்ந்தனர். அன்னச்சத்திரங்களில் நறுக்கிய காய்கறிக் குவியல்கள் அரிசிக் குவியல்கள் நிறைந்திருந்தன. இக்காட்சிகள் அம்மக்கள் நிலைத்த அறத்தோடு பிற மக்களுக்கு அன்னம் வழங்கி அறம் செய்ததை அறியமுடிகின்றது. நல்ல குலமும் ஒழுக்கமும் நிறைந்தவர்களான அவர்கள் எந்தத் தீய பழக்கமும் இன்றி ஒழுக்கத்தில் மேம்பட்டவர்களாகவே திகழ்ந்தனர். இதனை,

கூற்றம் இல்லை ஓர் குற்றம் இலாமையால்

எனக் கூறுகின்றார் கம்பர்.

பகை இல்லை, பகைவர் இல்லை, வறுமை இல்லை, கொடைஞர் இல்லை, பொய்யில்லை எனவே உண்மை வேறுபட்டுத் தோன்றவில்லை. கற்றல் இல்லை கேள்வி ஞானம் நிறைந்திருந்தது. மக்களின் ஒழுக்கத்தால் அறம்நிலை பெற்றிருந்தன. அம்மக்கள் பொய் பேசாத தன்மை உடையவர்களாக இருந்ததால் நீதிகள் நிலைத்து நின்றன. மகளிரது கற்புத் திறத்தால் பருவ மழைகள் நிலை மாறாமல் பொழிந்து நின்றன. அத்தகு பண்புடையவர்கள் கோசலநாட்டு மக்கள். அறம் மாறாத இந்த வாழ்க்கையால் அந்நாடு புகழ் பெற்று விளங்கியது.

கோசல நாடு இயற்கை வளத்தாலும் மக்களின் பண்பு நலன்களாலும் மேன்மையுற்றுத் திகழ்ந்தது. மிகுந்த நீர்ப்பெருக்கை உடைய சரயு நதியும் கூட பலவழிகளில் ஓடிச் சென்றும் அந்நாட்டின் எல்லைகளைக் காண இயலவில்லை எனக் கம்பர் வர்ணனை செய்கிறார். மேலும் உலகத்தையே அழிக்கும் ஆற்றல் கொண்ட கடல் கூட ஊழிக்காற்றால் மோதப்பட்டுப் பேரலைகளாய் எழுந்து எல்லையைக் கடந்து வந்தாலும் கோசல நாட்டை அழிக்க இயலாத அளவிற்குப் பெருமையுடைய நாடு அது என்பதால் கோசலம் இயற்கை வளத்தாலும் மக்களின் அறத்தாலும் நீடு புகழ் பெற்ற நாடாகிறது.

கம்பன் என்றொரு அகராதியியலன்

முனைவர் மா. சிதம்பரம்
இணைப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,
அழகப்பா அரசு கலைக்கல்லூரி, காரைக்குடி -- 3

தமிழ் இலக்கிய வரலாற்றில் தன்னுடன் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத் தனித்தன்மை கொண்ட கவிஞன் கம்பன். கம்பர் வால்மீகியிடம் இருந்து கதையினைப் பெற்றார் எனினும் அதன் தழுவலாக இராமவதாரத்தினைப் படைத்து விடாமல் தமிழின் தனித்தன்மை வாய்ந்த பண்பாட்டுக் கூறுகள், சொல்லாட்சித் திறன்கள், அணிநலன்கள் போன்றவற்றைக் கொண்டு கட்டமைத்ததாலே காலம் என்னும் ஆழியிலும் காற்று மழை ஊழியிலும் சாகாத பாட்டாய் ஏற்றம் பெற்றுத் திகழ்கின்றது.பாரதியும் தமிழச்சாதி அமரத்தன்மை உடையதாய் அமைய இளங்கோவின் சிலம்பும் வள்ளுவனின் குறளும் எல்லையொன்றில்லாப் பரம்பொருளைத் தன் கவிகளால் காட்டிட முனைந்த கம்பனின் காவியமும் போதுமென்று முன்மொழிவார். இதனை

சிலப்பதி காரச் செய்யுளைக் கருதியும்
திருக்குற ளுறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகும் கருதியும்
'எல்லையொன் றின்மை' எனும்பொருள் அதனைக்
கம்பன் குறிகளாற் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும் முன்புநான் தமிழச்
சாதியை அமரத் தன்மை வாய்ந்தது என்று
உறுதிகொண்டிருந்தேன். (தமிழச்சாதி - 20 - 27)

என்பதனால் அறிய முடிகிறது. இவ்வாறு தமிழின் நிலைப்பேற்றிற்கான ஒரு காவியத்தைப் புனையும் கவிஞன் இருப்பதனைச் சொல்லும் படைப்பாளனாக இருத்தல் மட்டும் போதுமானதன்று. அதனைக் கடந்து தமிழுக்கான புதிய சொற்களை, சிந்தனைகளை, புதிய தடங்களைப் படைத்தளிக்கும் ஆற்றல் பெற்றவனாய் அமைந்திருத்தலும் இன்றியமையாததாகும். அத்தகைய தனித்தன்மைகளே கவிஞனையும் கன்னித் தமிழையும்

காலம் கடந்தும் நிலைநிறுத்தும் உயிர்ப்புடையதாய் அமையும். இத்தகைய சிறப்பியல்புகளில் அடிநாதமாய் அமையும் புதிய சொற்களை உருவாக்கல் என்பதும் அவற்றைத் தன் கவி ஆளுமைத் திறத்தால் நிலைநிறுத்தல் என்பதும் கம்பனுக்கு கைவந்த கலையாய் அமைந்தன. அவற்றை கண்டு ஆவணப்படுத்தலை அடிப்படை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை விரிகின்றது.

புதியன புனைவதற்கான அடிநிலைகள்:

ஒருமொழியில் படைப்பாளன் என்பவன் தன் படைப்பாளுமையோடு தொடர்புடைய மொழிக்குச் செய்யும் மிகப்பெரும் பணிகளுள் குறிப்பிடத்தக்கது புதிய சொல்லாக்கங்களை உருவாக்கலே ஆகும். இத்தகைய முயற்சியினை மேற்கொள்ளும் படைப்பாளன் மூன்று வகைகளான தன்மைகளைக் கொண்டு புதிய சொல்லாக்கங்களை உருவாக்கலாம். அவைமுறையே,

பிறமொழிச்சொற்களைத் தமிழாக்கம் செய்தல், புதிய சொற்களை உருவாக்கல், ஒருமொழியில் வழங்கும் பழைய சொற்களுக்குப் புதுப்பொருளைப் பெய்து நிலைநிறுத்தல் என்பனவாகும். இத்தகைய மூன்று கூறுகளையும் கம்பனில் காண இயலுகின்றது.

பிறமொழிச்சொற்களைத் தமிழாக்கம் செய்தல்:

கம்பர், வால்மீகியிடம் இருந்தே கதை பெற்றார் என்பதும் இராமாயணத்தில் இடம்பெறும் கதைத்தலைவனும் அவனைச் சார்ந்துள்ள பிற பாத்திர மாந்தர்களும் வடபுலத்தினைச் சார்ந்தவர்கள் என்பதும் பிறமொழிச் சொற்கள் காப்பியத்துள் மிகுந்திருக்கக் காரணம் ஆகின்றன. ஆயினும் கம்பர் தமிழில் இராமவதாரத்தினை எழுத முற்படும்பொழுது வடமொழியில் அமைந்த பாத்திரங்களின் பெயர்களைத் தமிழ்ப்படுத்தியே பயன்படுத்துகின்றார். அதன்படி தசரதன் 'தயரதன்' ஆகின்றான். ராமன் இராமன் எனத் தமிழ்மரபினை ஏற்கின்றான். ஜடாயு 'சடாயு' ஆகின்றார். கேகயி 'கைகேயி' ஆகின்றாள். இந்திரசித்து 'மேகநாதன்' ஆகின்றான். வீபிஷணன் 'வீடணன்' ஆகின்றான். விஸ்வாமித்திரர் 'விசுவாமித்திரர்' ஆகின்றார்.ரிஷ்யசிங்க முனிவர்

'கலைக்கோட்டு முனிவர்' ஆகின்றார். அவரின் மனைவி சாந்தா 'முகநல்லாள்' ஆகிறாள். தூமிராட்சசன் 'புகைநிறக்கண்ணன்' ஆகிறான். இரணியன் 'பொன்னன்' ஆகின்றான். இலட்சுமணன் 'இலக்குவன்' ஆகின்றான்.

இராமன் தசரதனின் மகன் என்பதனால் 'தாசரதி' என அழைக்கப்படுவான். வடமொழியின் இம்மரபினைக் கண்ட கம்பர், இதனை ஒட்டித் தமிழிலும் படைத்தளிப்பார். இந்திரசித்து தான் இராவணனின் மகன் என்பதனைக் குறிக்க 'இராவணி' என்ற சொல்லைச் சுட்டுகின்றான். அதிகாயன் மரணத்திற்குப் பின் போர்க்களம் செல்லும் இந்திரசித்து தன் தம்பியைக் கொன்றவர்களைப் போர்க்களத்தில் அழித்தொடுக்காது விடுவேன் ஆகில் தான் இராவணன் மகன் அல்லன் என்பதனைக் குறிக்கும் இடத்து 'இராவணி' என்ற சொல்லைக் குறிப்பிடுகின்றான்.

மருந்தே நிகர் எம்பிதன் ஆருயிர் வவ்வினானை ----
இருந்தேன் எனின்இ நான் அவ் இராவணி அல்லென் என்றான்
(8145)

கூற்றமும் கண் புலம் புதைப்ப கோத்து எழு
தோற்றமும் இராவணி துணிவும் நோக்கு உறா (8166)

எதிரில் நின்ற இராவணி ஈடுற
உளைவு தோன்ற இராவணி ஒல்கினான்; (8294)

இராவணி விளிதன் முன்னம் (8299)

நொய்தினின் சென்று கூடி இராவணி உளைவை நோக்கி (8302)

இளைய மைந்தன்மேல் இராமன்மேல் இராவணி இகலி (8642)

அந்தரத்திடையான் 'என்ன இராவணி 'அழகிது 'என்றான்.
(8735)

புதிய தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்துதல்:

ஒரு மொழி காலம் கடந்து நிலைப்பேறுடையதாய் அமைய வேண்டுமானால் காலத்திற்கு ஏற்பப் புதிய சொற்கள் அம்மொழியில் உருவாக்கப்பெறல் வேண்டும். பாட்டுப் புலவன் பாரதியும் சொல் புதிது, பொருள் புதிது,சோதிமிக்க

நவ கவிதை தமிழ் மொழியில் தோற்றம் பெறல் வேண்டும் என்றே மொழிந்தார். கம்பன் தன் காப்பியத்துள் பல புதிய சொற்களை உருவாக்கிப் பயன்படுத்துகின்றார். தமிழில் 'கயவன்' என்றொரு சொல் உண்டு. ஆனால் அதற்கு இணையான பெண்பாற் சொல் கம்பருக்கு முந்தைய காலம் வரை தமிழ் இலக்கியங்களில் இல்லை. ஆனால் கம்பர் 'கயவன்' என்னும் ஆண்பால் சொல்லிற்கு இணையான பெண்பாற் சொல்லாகக் 'கயத்தி' என்பதனைப் பயன்படுத்துகின்றார். இராமன் காடேக வரம் வேண்டிப் பெற்ற கைகேயியைக் குறிக்கும் இடத்து 'மாகயத்தி' என்று குறிப்பிடுகின்றார். இதற்குச் சான்றாக

கேகயத்து அரசன் பயந்த விடத்தை இன்னது ஓர் கேடு சூழ்
மா கயத்தியை உள் கொதித்து மனத்து வைவன போன்றவே.
(1542)

என்ற பாடல் அடிகள் அமையும்.

அனீகம்:

படையினைக் குறிக்க கம்பன் பயன்படுத்தும் புதிய சொல் 'அனீகம்' என்பதாகும். இச்சொல் தமிழ் மரபில் கம்பனுக்கு முன் இல்லை. ஆனால் திவாகரநிகண்டு என்னும் நூல் 'அனீகம்'; என்பது அக்ரோணியில் பத்தில் ஒரு பகுதி எனக் குறிப்பிடுகின்றது. ஆனால் இதன் காலம் பத்தாம் நூற்றாண்டு ஆகும். கம்பரின் காலமோ திவாகர நிகண்டின் காலத்திற்கு முற்பட்டதாகும்.

ஆனா மதியங்கள் மலர்ந்தது அனீக வேலை. (970)

அப்பு உடை அனீக வேலை அகன் புனல் முகந்து மாந் (1115)

ஆறு பத்து எழு கோடி அனீகருக்கு (4555);

ஆழி அன்ன அனீகத் தலைமகன் (7226)

கரிணி:

மிதிலையில் நடைபெறவிருக்கும் சீதையின் திருமணத்தினைக் காண வந்தோர்கள் தேரிலும் சிவிகையிலும் ஊர்தியிலும் கார்மேகம் போன்ற ஆண்யானைகளின் மேல் இவர்ந்து

வந்தனர். சிலர் பெண்யானைகளின் மேல் அமர்ந்தும் வந்தனர். இதனைக் குறிக்க வந்த கம்பர் பெண்யானைகளைக் 'கரிணி' எனக் குறித்தார். இச்சொல் 'கரி' என்னும் சொல்லில் இருந்து கம்பர் வருவித்துக் கொண்ட பெண்பாற்சொல் ஆகும்.

தேர் மிசை வருவாரும் சிவிகையில் வருவாரும்
ஊர்தியில் வருவாரும் ஒளி மணி நிரை ஓடைக்
கார் மிசை வருவாரும் கரிணியில் வருவாரும்
பார் மிசை வருவாரும் பண்டியில் வருவாரும். (1279)

கிச்சு:

கம்பராமாயணத்தில் கம்பரால் பயன்படுத்தப்படும் புதிய சொற்களுள் ஒன்று 'கிச்சு' என்பதாகும். அதனைக் கம்பர் 'நெருப்பு' என்னும் பொருளில் பயன்படுத்துகின்றார். இச்சொல் கம்பனில் இரண்டு இடங்களில் பயன்படுத்தப்படுகின்றது. சுந்தர காண்டத்தில் அசோகவனத்தினை அழித்த அனுமனைக் கண்ட அரக்கர் சிலர் இக்குரங்கினைத் தீயில் இட்டு அழியுங்கள் என்று சொல்லுமிடம் ஒன்றாகும். பிறிதொன்று போர்க்களத்தில் நெருப்பு மலைகள் போன்ற தேர்களின் அச்சுகள் முறிந்து போனதால் வலிமை மிக்க குதிரைகள் அவற்றை இழுத்துப்போக இயலாது போயின என உவமைப் பொருட்டாய் வந்தமைகின்றது.

நச்சு அடை படைகளால் நலியும் ஈட்டதோ?
வச்சிர உடல் மறி கடலின்வாய் மடுத்து
உச்சியின் அழுத்துமின் உருத்து; அது அன்று எனின்
கிச்சு இடை இடும் 'எனக் கிளக்கின்றார் சிலர். (5891)

கிச்சு உறு கிரி பட கிளர் பொன் தேர் நிரை
அச்சு இற செல்கில ஆடல் வாம் பரி
எச்சு உறு துயர் இடை எய்த ஈத்து உணா
முச்சு இறு வாழ்க்கையின் மூண்டுளார் என. (8478)

நாரம்:

கம்பர், தமது இராமாயணத்தில் 'நாரம்' என்றொரு சொல்லினைப் பயன்படுத்துகின்றார். இச்சொல்லிற்கு நீர், மக்கட்கூட்டம், நீர்வாழ்புள், பசுவின்கன்று, மரவகை எனப்

பல்வேறு பொருள்களை அகராதிகள் சுட்டுகின்றன. கம்பரால் இச்சொல் 'நீர்' என்னும் பொருளில் பயன்படுத்துவதுடன் 'அன்பு' என்னும் புதிய பொருளிலும் பயன்படுத்தப்படுகின்றது. கம்பர் 'நீர்' என்னும் பொருளில் பயன்படுத்துவதனை

நாரம் உண்டு எழுந்த மேகம் (நீர்) (3268)

ஆரமும் அகிலும் துன்றி
நாரம் நின்றன போல் தோன்றி (நீர்) (3918)

நாட்களின் நளிர் கடல் நாரம் நா உற (4257)

ஆரமும் அகிலும் நீவி (5387)

நாரம் உண்டு அலர்ந்த செங்கேழ் (5387)

நாரம் கொண்டார் நாடு கவர்ந்தார் (3247)

என வரும் பாடல்களின் அடிகள் விளக்கி நிற்கும்.

பொதுத்து

கம்பரால் தமிழுக்கு வழங்கப்பட்ட சொற்களுள் குறிப்பிடத்தக்க சொல் 'பொதுத்து' என்பதாகும். இச்சொல்லினை கம்பராமாயணத்தில் மூன்று இடங்களில் காண முடிகின்றது. கம்பர் பொது என்பதனை துளை என்பதாகச் சுட்டிப் 'பொதுத்து' என்பதனைத் 'துளைத்து' என்னும் பொருளில் பயன்படுத்துகின்றார்.

மழை பொதுத்து ஒழுகும் நீரால் மஞ்சனம் ஆடுவாரும். (5125)

வண்டல் தணெ்திரை ஆற்றுநீர் ----
அண்டத்தைப் பொதுத்து அப்புறத்து அப்புனல் ஆடும். (6319.)
துண்டப்பட நெடு மேருவைத் ---
அண்டத்தையும் பொதுத்து ஏகும் என்று (9893)

பிச்சர்:

கம்பர் கம்பராமாயணத்தில் 'பிச்சர்' என்றொரு புதிய சொல்லினைப் பயன்படுத்துகின்றார்.இச்சொல் 'பித்தர்' என்னும் பொருளினை உணர்த்தி நிற்கும் புதியதொரு சொல்லாகக் கம்பரால் பயன்படுத்தப்படுகின்றது.

சிலதியர்

கம்பராமாயணத்தில் பயிலப்படும் பிறிதோர் புதிய சொல் 'சிலதியர்' என்பதாகும். இச்சொல் குற்றேவல் செய்யும் பணிப்பெண்களைக் குறிக்கும் சொல்லாகக் கம்பரால் பயன்படுத்தப்படுகின்றது. இச்சொல் மேற்கண்ட பொருளில் கம்பரால் ஏழு இடங்களில் குறிக்கப்படுகின்றது.

பந்துகள் மடந்தையர் பயிற்றுவார்; இடைச் --
அந்தம் இல் சிலதியர்; ஆற்ற குப்பைகள் (137)

ஓடினர் அரசன் மாட்டு உவகை கூறி நின்று
ஆடினர் சிலதியர்; அந்தணாளர்கள் (287)

கூனொடு குறளும் சிந்தும் சிலதியர் (884)

சிந்தொடு குறளும் கூனும்
சிலதியர் குழாமும் (1224)

வயிரம் மின் ஒளி ஈனும் --
சிலதியர் கொணர்வாரும்(1271)

மன்னவர் வருவாரும் ---
சிலதியர் செறிவாரும் (1275)

மரம் அடங்கலும் கற்பகம் --
அர மடந்தையர் சிலதியர் (4950)

கண்டகர்

கண்டம் என்ற சொல்லானது, துண்டம், தொண்டை, யானைக் கழுத்தில் இடும் கயிறு, எழுத்தாணி, வாள், வயல்வரம்பு, தாளத்தின் கதி ஐந்தனுள் ஒன்று, பகுதி என்பதாகப் பல பொருள் தந்து நிற்கும். கம்பர் 'கண்டம்' என்பதனை 'முள்போலும் கொடுமை' என்பதாகக் கொண்டு இச்சொல்லினை அடியாக வைத்து முள்ளினைப் போன்ற தன்மை கொண்ட கொடியவர்களைக் குறித்தற்கு 'கண்டகர்' என்னும் புதிய சொல்லினை உருவாக்கித் தமிழுக்குத் தருகின்றார்.

கண்டகர் உய்ந்தார் எவர்? ஐயா! (3344)

பேனம்:

கடலின் நுரையினைக் குறிப்பதற்குக் கம்பர் 'பேனம்' என்னும் புதியதோர் சொல்லினைப் பயன்படுத்துகின்றார்.

பேன நீர் நெடு நெய் என பெய் கணை நெருப்பால் (6607)

மாநீர்க்குரம்பு

சொற்சுருக்கத்தின் வழியும் கம்பர் கலைச்சொற்களை உருவாக்குகின்றார். இன்றைய நிலையில் மிகப்பெரிய அணைகளைக் குறிப்பதற்கு சொற்களைத் தேடிச் சிரமப்படுகின்றோம். இதற்குக் கம்பர் தரும் சொல்,

வரம்பு எலாம் முத்தம் தத்தும் மடை எலாம் பணிலம் : மாநீர்க்
குரம்பு எலாம் செம்பொன்: மேதிக் குழி எலாம் கழுநீர்க் கொள்ளை

எனும் பாடலில் இடம்பெற்றுள்ள 'மாநீர்க்குரம்பு' என்பதாகும். குரம்பு என்பது அணையைக் குறிக்கும் சொல்.மாநீர்க்குரம்பு மிகுந்த நீரைத் தேக்கி வைக்கும் அணையினைக் குறிக்கும் சொல் ஆகும்.

பதிபடு கொடி

சொற்சுருக்கத்தின் வழியும் கம்பர் கலைச்சொற்களை உருவாக்குகின்றார். அவ்வாறு உருவாக்கப்பட்ட சொற்களுள் குறிப்பிடத்தக்கன பதிபடு கொடி, தவத்தி என்பன ஆகும்.பதியன் இட்டு வளர்க்கப்பெறும் வெற்றிலைக்கொடி போன்றவற்றைக் குறிப்பதற்கு 'பதிபடு கொடி'என்ற சொல்லைப் புதியதாய் உருவாக்கிப் பயன்படுத்துகின்றார் கம்பர்.

பதிபடு கொடியின் உள்ள - (52)

தவத்தி:

தவம் என்னும் சொல் நோன்பு, பொறுத்தல், பேறு என இடத்திற்குத் தக்க பொருளைத் தந்து நிற்கும். உற்றநோய் நோற்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை ஆகிய பண்புகளை உடைய தவத்தினை மேற்கொண்ட பெண்ணினைக் குறிக்கும் இடத்து கம்பர் 'தவத்தி' என்றொரு சொல்லினைப் பயன்படுத்துகின்றார்.

கம்பரின் இத்தகைய சொற்சுருக்கம் வியத்தற்குரித்தாம்.

என்று ஒருவன் இல்லுறை தவத்தியை இரங்காய் (6121)

மாவாதம்:

காற்றிற்குத் தமிழ் இலக்கியங்கள் பல்வேறு பெயர்களைச் சுட்டுகின்றன. வாடை, சோழகம், கொண்டல், கச்சான் என்பன போன்றன அவற்றுள் சில.காற்று வேகத்தின் அடிப்படையில் மென்மையாக வீசினால் 'தென்றல்' என்றும் வன்மையாக வீசினால் 'புயல்' அல்லது 'வன்காற்று' என்றும் பெயர் பெறுகின்றது. கம்பர் இத்தகைய பெருங்காற்றினைக் குறிப்பதற்கு புதியதோர் சொல்லினைப் பயன்படுத்துகின்றார். அச்சொல் 'மாவாதம்' என்பதாகும்.அப்பாடல்,

ஆஆ அரசன் அருள் இலனே -
மாவாதம் சாய்த்த மராமரமே போல்கின்றார் (1700)

என்பதாகும்.

சில்லறம்:

நன்மையைத் தரும் அறத்தின்பாற்பட்ட செயல்கள் யாவும் நல்லறம் எனப்பெறும். நல்லனவற்றிற்கு எதிரானவற்றை அல்லறம், தீயறம் எனக் குறிக்கலாம். ஆனால் கம்பரோ நல்லறம் என்பதற்கான எதிரதாகச் சில்லறம் என்னும் சொல்லினைப் பயன்படுத்துகின்றார்.

இல்லறம் துறந்திலாதோர் இயற்கையை இழந்தும் போரின் --
சில்லறம் புரிந்து நின்ற தீமைகள் தீருமாறு
நல்லறம் தொடர்ந்த நோன்பின் நவையற நோற்பல் நாளும் (4137)

குட்டிமம்:

செப்பனிட்டுச் சீரமைக்கப்பட்ட தரைத்தளத்தினைச் சுட்டுதற்கு கம்பர் பயன்படுத்தும் சொல் அரியதாகும். அதனைக் கம்பர் 'குட்டிமம்' என்னும் சொல்லால் குறிப்பிடுகின்றார்.

பொன்திணி மண்டபம் அல்ல.
குன்றுகள் அல்லன மணிசெய் குட்டிமம்

முன்றில்கள் அல்லன முத்தின் பந்தரே (39)

பீனதனம்:

பீனதனம் என்ற சொல் 'பெரிய' என்னும் பொருளில் கம்பனால் பயன்படுத்தப்படுகின்றது. கம்பனுக்கு முன் இச்சொல் வழக்கில் இல்லை.

ஞான முனிக்கு ஒரு நாண் இலை! என்பார்;
கோன் இவனில் கொடியார் இலை! என்பார்;
மானவன் இச் சிலை கால் வளையானேல்
பீன தனத்தவள் பேறு இலள்! 'என்பார். (780)

தெரிந்த சொல்லிற்குப் புதிய பொருள்:

தமிழில் அனைவராலும் அறியப்பட்ட சொல் 'கார்முகம்' என்பதாகும். இச்சொல் கார்மேகத்தினைப் போன்ற முகம் என உவமைத்தன்மை கொண்டதாய் அமைதல் என்பதே பொதுநிலையாகும். ஆனால் கம்பர் கார்முகம் என்பதனை 'வில்' என்னும் புதுப்பொருள் உடையதாய்ப் பயன்படுத்துகின்றார்.

பொருந்திய இராவணன் புருவக் கார்முகக்
கருந்தடங்கண்ணியர் (3089)

ஆசலம்புரி ஐம்பொறி வாளியும்
காசு அலம்பு முலையவர் கண் எனும் (6)

காசு என்னும் தமிழ்ச் சொல்லிற்கு 'குற்றம்' என்பது பொருளாகும். கம்பர் இதே பொருளைத் தரும் வகையில் பயன்படுத்தும் இடமும் உண்டு.

காசில் கொற்றத்து இராமன் கதையரோ (12)

என்பதில் காசில் கொற்றம் என்பது குற்றமில்லாத கொற்றம் என்று பொருள்படும். ஆனால் கம்பர் பயன்படுத்தும் 'காசு அலம்பு' என்பதில் காசு என்பது 'காசுமாலை' எனப் பொருள் தந்து நிற்கும்.

நிகண்டுகள் போன்று ஒருபொருள் தந்து நிற்கும் சொற்களை ஒரிடத்துத் தொகுத்துக் கூறும் மரபினையும் கம்பரிடத்துக் காண முடிகின்றது.

ஆறு பாய் அரவம்; மள்ளர் ஆலை பாய் அமலை; ஆலைச்
சாறு பாய் ஓதை; வேலைச் சங்கின் வாய் பொங்கும் ஓசை;
ஏறு பாய் தமரம்; நீரில் எருமை பாய் துழனி; இன்ன
மாறு மாறு ஆகி தம்மின் மயங்கும் மா மருத வேலி. (34)

மேற்கண்ட பாடலில் இடம் பெற்றுள்ள அரவம், அமலை ஓதை, ஓசை, தமரம், துழனி போன்றன ஒருபொருள் குறித்த பன்மொழிகள் ஆகும். அவற்றை ஓரிடத்துத் தொகுத்துச் சுட்டி கவிதைநயத்தை உருவாக்குகிறார் கம்பர்.

கம்பர் தமது காப்பியத்துள் பிறமொழிச்சொற்களைத் தமிழாக்கம் செய்தும் பல புதிய சொற்களை உருவாக்கியும் பழைய சொற்களுக்குப் புதிய பொருள்களைத் தந்தும் நிகண்டுகள் போன்று ஒருபொருள் குறித்த பல சொற்களைத் தொகுத்துரைத்தும் தமிழுக்கு அணிசெய்துள்ளார் என்பதனை ஆயும் வழி அறியமுடிகின்றது.

தமிழ்மரபு போற்றும் தகைசால் கம்பன்

முனைவர் மு.சுதா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி-3

வால்மீகி தந்த பொன்தான் இது. ஆனால் அதனைத் தமிழ்க்கோலம் கொடுத்து அவர் காலத்திற்கு (கம்பர்) ஏற்ற வகையில் வார்த்தெடுத்து மெருகிட்டு அழியாமல் என்றும் இருக்கும் வகையில் தான் கண்ட உலகத்தின் உட்பொருள் எல்லாம் அதன்வழியே விளங்கும்படியாக அவர் (கம்பர்) படைத்துவிட்டார்' என்பார் தெ.பொ.மீ. வால்மீகி இராமாயணத்தின் வழிநூலாகக் கம்பரின் இராம காதை படைக்கப்பட்டாலும் அதனைத் தமிழ் மரபிற்கேற்ப, பண்பாட்டிற்கேற்ப மாற்றி தரப்பட்டுள்ளமைக்குச் சான்று பல காட்டலாம்.

பொதுவகையில் வால்மீகியைப் பின்பற்றிய போதிலும் கட்டங்கள் தோறும் இவன் (கம்பன்) இராமசரித அம்சங்களை வேறுபடுத்திப் பேரழகுபட வைத்திருக்கிறான்.' (எஸ். வையாபுரிப்பிள்ளை, ப-18) என்பதும்,

வால்மீகியின் கதையினையே தமிழ்ப் பசும்பொன்னாகத் தம்கற்பனை சித்தின் திறத்தால் மாற்றி உருக்கி வார்த்துவிட்டார் கம்பர்' (தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், ப-112) என்பதும்,

வால்மீகரின் கதையைக் கம்பர் பின்பற்றியிருந்தாலும், வருணனை, நிகழ்ச்சி, மாந்தர் படைப்பு போன்றவற்றில் செய்த மாற்றங்களையும் அவற்றின் தனித் தன்மைகளைச் சுட்டும். கம்பரின் இம்மாற்றங்களுக்கு உறுதுணையானது வால்மீகி காலத்திற்குப் பின்னர் கிடைத்த இராமகாதை பற்றிய தமிழ்ச் சமூகம் சுட்டும் குறிப்புகளும், சங்க இலக்கியங்களும், அற இலக்கியம், காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள் போன்றனவும் ஆகும். இதனை உள்வாங்கியமையாலேயே கம்பர் தமிழ்ப் பண்பாட்டுச் சூழலுக்கு ஏற்றவாறு இராமகாதையைப் படைத்தார் என்பதனை நன்கு உணரலாம். அவ்வகையில் இராமகாதையில் கம்பர் போற்றிய தமிழர்தம் மரபைக் கம்பரின் மாறுபட்ட பரிணாமத்தை எடுத்துக்காட்டுவதாய் இக்கட்டுரை அமைகிறது.

வால்மீகியின் இராவணன் சீதையின் கூந்தலைப் பற்றிச் செல்ல, கம்பரின் இராவணனோ சீதை இருந்த குடிலோடு பெயர்த்து எடுத்துச் செல்கிறான். தமிழ் மரபிற்கிணங்க அவ்வாறு மாற்றப்பட்டதாகத் திறனாய்வாளர்கள் சுட்டுவர். கற்பிற்கான இலக்கணம் வரையறுக்கப்பட்ட காலத்திற்குப் பிந்தைய சூழலில் உருவான கம்ப இராமாயணம் கற்பினுக்கு அணியாய்ச் சீதையை உணர்த்தச் செய்த மாற்றம் என்றும், இது தொடர்பான இராவணன் தலை வெடித்துச் சிதறும் என்ற சாப வரலாறு வால்மீகத்திலும், கம்பரிலும் கூறப்பட்டாலும் இவ்வரலாற்றின்படி வால்மீகச் சீதை பற்றிய கருத்தாக்கங்கள் பலவாறாகத் தோற்றம் பெறுவதும், அச்சூழலைத் தவிர்க்கச் சீதையைக் கற்பின் இலக்கணமாய், அதே சாப வரலாற்றின்படி இராவணன் சீதையைத் தீண்டாது பர்ணசாலையோடு பெயர்த்து எடுத்ததாக மாற்றி

உயிரினும் நாணம் சிறந்தது,
அந்நாணத்தினும் கற்பு சிறந்தது (தொல்:கற்:22)

பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பெனும்
திண்மை உண்டாகப் பெறின் (குறள்:54)

இன்றுணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக்கடம் பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்
(சிலப்:அடைக்:142-144)

என்ற தனக்கு முந்தைய தமிழ்ச் சமூகத்தை அறிவித்த இலக்கியங்களைப் பின்பற்றி தம் படைப்பில் காட்சி மாற்றம் செய்வதைக் கம்பரில் காணமுடிகின்றது. இது குறித்தப் பல்வேறு கருத்துகள் காணப்படும் சூழலில், கம்பரின் புதிய பரிமாணமாக, தமிழ் மரபைப் போற்றும் கம்பரின் படைப்புத் திறனுக்குச் சான்றாக, மற்றொரு எடுத்துக்காட்டாக விளங்குவது கணவன்-மனைவி இணைந்து வாழும் குடும்ப வாழ்வியல் குறித்தது.

கணவனும் மனைவியுமாக இணைந்து வாழும் குடும்பம் மனித சமூகத்தின் அடிப்படை அலகெனப்படுகிறது. குடும்ப அமைப்பிலிருந்து சமூகம் கட்டமைக்கப்படுகிறது. இக்குடும்ப

அமைப்பு குறித்தும் அது பண்டைக்காலம் தொட்டு போற்றப்பட்டு வந்தமையையும் இலக்கண, இலக்கியங்கள் வழி அறியமுடியும்.

'குடும்பம் என்ற அமைப்பு ஏற்படப் பன்னெடுங்காலம் ஆகியிருக்கலாம். இந்த உயரமைப்பின் மூலமே உலகச் சமூகம் இயங்குகிறது. சங்ககாலத்தில் குடும்ப அமைப்பு மேலோங்கிய ஒன்றாக இருந்துள்ளது. அதன் தொடர்ச்சி இன்று வரை காணப்படுகிறது. தொன்மைக் காலத்திலேயே மேம்பட்ட குடும்ப அமைப்பை உருவாக்கியிருந்த தமிழ்ப் பண்பாட்டின் செழுமை சங்க இலக்கியங்கள் வாயிலாக வெளிப்படுகிறது என்று தமிழ்ப் பண்பாட்டைக் குறித்தும், அதில் குடும்பம் பெறும் இடத்தையும் பக்தவத்சல பாரதி குறிப்பிடுகிறார்.'

தொல்காப்பியம், சங்க இலக்கியம் போன்றவற்றில் காணப்படும் குடம்பை, குடும்பு, கடும்பு போன்ற சொற்கள் மற்றும்

இரவுக்குறியே இல்லகத் துள்ளும்
மனையோர் கிளவி கேட்கும்வழி யதுவே
மனையகம் புகாஅக் காலை யான (தொல்.களவு:40)

எனத் தொல்காப்பியம் குறிப்பிடும் இல், மனை போன்றவையும் வாழிடங்களைக் குறிப்பதுவே. இவ்வாழிடங்களில் தனிக்குடித்தன முறை பற்றிக் குறிப்பிடுகையில், 'சங்க இலக்கியங்களில் தம்மனை, நும்மனை *(அகம்:346)* என மனைவியின் இல்லத்தையும், கணவனின் இல்லத்தையும் பிரித்துப் பேசும் போக்கினைக் காணமுடிகின்றது. இவற்றுள் திருமணத்திற்குப் பின் கணவனும் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து தனியாக வாழுமிடம் 'தன்மனை' *(neolocal)* எனவும் வழங்கப்படுகிறது' என்றும் பக்தவத்சலபாரதி குறிப்பிடுகிறார்.

குறிப்பாக ஆதிகாலத்திலிருந்தே தனிக்குடும்ப அமைப்பு, கூட்டுக் குடும்ப அமைப்பு இரண்டும் நம் முன்னோர்களால் போற்றப்பெற்று வந்துள்ளது.

தனிக்குடும்பம் *(nuclear family)* தோன்றுவதற்கான தொடக்கநிலைக் குடும்பங்கள் பற்றிச் சங்க இலக்கியங்கள்

மிகுதியாகப் பேசியிருக்கின்றன.' மறியிடைப் படுத்த மான் பிணை போல்' (ஐங்:401) மகனை நடுவணாகக் கொண்டு தலைவனும், தலைவியும் வாழ்ந்திருக்கின்றனர். நெருக்கமான உறவு இணையும் இத்தனிக் குடும்பவகை சமூகப்படி மலர்ச்சியில் இறுதியாக ஏற்பட்ட ஒன்று. இது இன்று பெரும்பான்மையாகக் காணப்பட்டாலும் பல ஆதிக்குடிகளிடம் தனிக்குடும்ப முறை முக்கியமான குடும்ப முறையாக இருந்து வந்துள்ளன. இது ஒரு தொல் வடிவம் என இனவரைவியல் ஆய்வுகள் சுட்டுகின்றன' என்று தனிக்குடித்தனமுறை தொல் காலத்திலிருந்தே இருந்து வந்தமைக்கும் அது நெருக்கமான உறவு நிலையாக அமையும் என்றும் கூறுவர். இந்த குடும்ப அமைப்பு கணவன்-மனைவிக்கு புரிதல், விட்டுக் கொடுத்தல் போன்ற பண்புகளை உருவாக்கும் காரணியாக இருப்பதையும் உளவியலாளர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். தொல்வடிவமாகிய தமிழர்தம் பண்பாட்டு கூறுகளில் ஒன்றாக, மரபு வழிப்பட்டு போற்றப்படும் இக்குடும்ப அமைப்பு முறை தமிழ்ச் சமூகத்தின் அடையாளமாகும்.

காலம் காலமாகப் போற்றப்பட்டு வந்துள்ள இவ்வமைப்பில், செவிலிக்கு மிகப் பெரிய இடமிருந்திருக்கிறது.

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுஉறு கலிங்கம் கழாஅது உடீஇ
குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்
தான்துழந்து அட்ட தீம்புளிப்பாகர்
இனிது எனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின்மகிழ்ந்தன்றுஒண்ணுதல்முகனே (குறுந்:167)

என்னும் குறுந்தொகைப் பாடல், சங்க காலத்துக் காணப்பட்ட திருமணம், தனிக் குடித்தன அமைப்பு, அவர்கள் இணைந்து வாழ்ந்த மனமொத்த வாழ்க்கை, அதைக் கண்டு மகிழ்வுறும் தாயுள்ளம் போன்றவற்றை எடுத்துக்காட்டுகிறது. இப்பாடல் கொண்டு சங்க காலத்திலேயே போற்றப்பட்ட தனிக்குடித்தன மரபை அறிய முடிகின்றது.

இதைப்போல் பின்வந்த சிலப்பதிகாரமும் கோவலனையும், கண்ணகியையும் தனிக்குடியமர்த்திய செய்தியை,

வாரொலி கூந்தலைப் பேர்இயல் கிழத்தி
மறுப்புஅருங் கேண்மையொடு அறப்பரி சாரமும். . .
காண்தகு சிறப்பின் கண்ணகி தனக்குஎன
(சிலம்பு:மனையறம்:84-90)

என்று குறிப்பிடுகிறது. தமிழர் போற்றிய குடும்ப அமைப்பு பண்டைக்காலத்தில் போற்றப்பட்டு வந்துள்ளமைக்கு இத்தமிழ் இலக்கியங்களே சான்றாகின்றன.

கணவன் மீது கொண்ட அன்பில் புதிய ஆடை பாழ்படுமே என்று பாராதும், குவளை மலர் போன்ற, அழகு சேர்த்த கண்கள் கலங்கவும், செல்வச் செழிப்புடன் வளர்ந்து முதன் முறையாக கணவனுக்காக உணவு தயாரிக்கும் தலைவியையும், எச்சுவை எனினும் அச்சுவை இனிதென,பெரிதென உணர்ந்து, நினையும் தலைவனையும், அவர்கள் வாழும் அத்தகைய புரிதலும், அன்பும் மிக்க வாழ்வினையும், இல்லறம் நல்லறமாகக் கோவலனின் தாய் அவர்களைத் தனிக் குடித்தனம் அமர்த்தியதையும், அதன்வழி

தூமப் பணிகள் ஒன்றித் தோய்ந்தால் என ஒருவார்
காமர் மனைவியெனக் கைகலந்து-நாமம்
தொலையாத இன்பம் எலாம் துன்னினார் மண்மேல்
நிலையாமை கண்டவர்போல் நின்று
(சிலம்பு:மனையறம்:வெண்பா)

என கோவலன் கண்ணகியோடு மனம் ஒன்றி வாழ்ந்த வாழ்வினையும் குறுந்தொகை மற்றும் சிலப்பதிகாரம் எடுத்துக்காட்டுகிறது. இத்தகைய இனிமையான புரிதல் மிக்க வாழ்வே தமிழ் மரபு போற்றிய வாழ்வென்பதும், அத்தகைய அமைப்பினை உருவாக்கித் தந்து தலைவனும் தலைவியும் வாழும் இல்லறம் எடுத்துரைத்து நல்லறத்தின் சிறப்பை இலக்கியங்கள் வலியுறுத்துவதை இவ்விலக்கியங்கள் வழி அறிய முடிகின்றன.

சங்க இலக்கியங்களும், திருக்குறளும், சிலம்பும் முன்தோன்ற பின் வந்த கம்பரும் இம்மரபைப் போற்றியுள்ளது தமிழ்மரபு போற்றும் அவரின் தனித்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. பாலகாண்டம் இராமன், சீதை திருமணத்துடன் நிறைவடைகிறது. அடுத்து அயோத்தியா காண்டத்தில் இவர்களின் இல்லறம் குறித்து அமைந்திருக்க வேண்டும். ஆனால் மூலநூலைப்

பின்பற்ற வேண்டிய நிலையிலும், காப்பிய போக்கில் இடையூறு வந்துவிடாமல் பாதுகாக்க வேண்டிய சூழலும், சில நிகழ்வுகளை நீக்கியும், மாற்றியும், அமைத்தும் மாறுதல்களைச் செய்து தன் புதிய பரிணாமத்தைக் காட்டிவிடுகிறார் கம்பர்.

அயோத்தியா காண்டம் காப்பியத்தின் போக்கை மாற்றி அமைக்கும் திருப்புமுனைக் காண்டம். இங்கு மூலநூலில் இல்லாத இராமன்-சீதையின் தனித்த வாழ்க்கையினை விவரித்துச் செல்வது காப்பிய நோக்கைச் சிதைக்கும் தன்மைத்தது. ஆதலால் மந்திரப்படலம், மந்தரையின் சூழ்ச்சி, கைகேயின் வாதங்கள், தயரதனின் சிறப்பு, பரதனின் வருகை என அவலங்கள் நிறைந்து செல்லும் இப்பகுதியில் இராமன்-சீதை மணவாழ்வினைக் கூறுவது பொருத்தமற்று அமைவதுடன் காப்பியப் போக்கில் விறுவிறுப்பைக் குறைத்துவிடும். இருப்பினும் தமிழ்மரபில் புதிதாய்த் திருமணமானவர்களின் தனித்த இனிமையான புரிதலுக்குக் காரணமான நிகழ்வுகள் அமையும் சூழல் இல்லாமல் போவதிலும் கம்பருக்கு உடன்பாடில்லை. ஆதலால் அவர் அமைத்த காட்சிகளே தமிழ் மரபைப் போற்றும் அவரின் தனித்தன்மையை உணர்த்தி நிற்கின்றது.

யான் நின் வயின் பெறுவது ஈது' எனத் தந்தை அரசனாகி வேண்ட, 'யாது கொற்றவன் ஏவியது அது செயல் அன்றோ நீதி எற்கு' என நினைத்து விருப்பு, வெறுப்பின்றி அப்பணி ஏற்றுச் செல்லும் இராமன், 'ஆழி சூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள, நீ போய்த் தாழ் இருஞ் சடைகள் தாங்கி, அருந்தவம் மேற்கொண்டு பூழி வெங்கானம் நண்ணிப் புண்ணியத் துறைகள் ஆடி வா' என்று கைகேயி கூற, அவளிடம் 'மன்னவன் பணி அன்றாகின் நும் பணி மறுப்பெனோ' என்றுரைத்து விடைபெறுகிறான். இங்கு அரசினைப் பெற்றபோது பெருவிருப்பும், இழந்தபோது பெரு வெறுப்பும் ஏதும் இன்றி அதனைப் பொருட்டாகக் கருதாது பரதனுக்குரிய அரசைத் தான்பெற்ற பழியிலிருந்து நீங்கிய மகிழ்வுடன் காணப்படும் இராமனை,

மெய்த்தி ருப்பத மேவென்ற போதினும்
இத்தி ருத்துறந் தேகென்ற போதினும்

சித்தி ரத்தின லர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருக்கு முகத்தினை யுன்னுவாள்
(5088)

என்ற சீதையின் நினைவோட்டத்தின் வழி கம்பர் தெரிவிக்கிறார். பழிச்சொல் நீங்கிய மகிழ்வு, தந்தையின் வாய்மையைக் காத்த நிறைவு என்ற மனநிலையில் 'நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு' என்ற அன்பு கொண்ட மனைவியுடனும், 'நீர் உள எனின் உள மீனும் நிலமும்' (குவளைமலர்) நானும், சீதையும் ஆர் ஊர் எனின் உளம் அருளுவாய்' எனத் தானின்றி வாழாது போகும் தமையனுடனும், கானகம் நோக்கி விருப்புடன் செல்வதாக இராமனைக் காட்டும் கம்பர் இச்சூழலைத் தம் தமிழ்மரபு, பண்பாடு போற்றும் எண்ணத்திற்குரிய இடமென மாற்றிக் கொள்கிறார். உறவினர் உடனிருந்து காக்க தனித்து உறையும் சூழலில் 'மாசறு பொன்னே வலம்புரி முத்தே' என காதல்மிக்கச் சொற்களை மனதிற்கினியவளிடம் பகரும் கோவலனைப் போல, இங்கு கம்பரின் இராமனும் கானகம் நோக்கிச் செல்லுகையில் காணும் காட்சிகளை,

மன்றலின் மலிகோதாய் மயில் இயல் மடமானே' (2001)

அருந்ததி அனையாளே அமுதினும் இனியாளே'
(2006)

ஏந்து இள முலையாளே! எழுத அரு எழிலாளே'
(2007)

'அகில் புனை குழல் மாதே' (2009)

என்றும்,

வாள் புரை விழியாய் உன் மலர் அடி அணிமானத்
தாள் புரை தளிர் வைகும் தகை ஞிமிறு - இவை காணாய்
கோள் புரை இருள் வாசக் குழல் புரை மழை காணாய்
தோள் புரை இள வேயின் தொகுதிகள் அவை காணாய்
(2015)

எனச் சீதையின் அழகை வருணித்தும், கானகத்தின் கவின்மிகும் காட்சிகளைச் சுட்டிக்காட்டி மகிழ்ந்தும் சென்ற காட்சியை வனம்புகு படலத்தில் ஏறக்குறைய 18 பாடல்களில் வழி நடைக்

காட்சிகளாக அமைக்கின்றார். இதனைப் போல சித்திர கூடப் படலத்தில்

செம் பொனால் செய்து குலிகம் இட்டு எழுதிய செப்பு ஓர்
கொம்பர் தாங்கியது எனப் பொலி வனமுலைக் கொடியே
அம் பொன் மால் வரை அலர் கதிர் உச்சி சென்று அணுக
பைம் பொன் மா முடி மிலைச்சியது ஒப்பது பாராய்'

(2071)

என்று ஏறக்குறைய 36 பாடல்களில் சீதையின் அழகை மெய்மறந்து வருணித்து உலா அழைத்துச் செல்லும் இராமனைப் பதிவு செய்கிறார். இராமன், சீதையின் மனமொத்த காதல் வாழ்வு இவ்விரு படலங்களில் கம்பரால் அமைக்கப்பட்டுள்ளது. தலைவன் தலைவியின் இல்லற வாழ்வைக் காணும் செவிலியின் இன்பம், கண்ணகியுடன் கோவலன் தனித்துப் பெற்ற இன்பம் கம்பனின் கவிகளில் இழையோடுகிறது.

'அண்ணலும் நோக்கினாள் அவளும் நோக்கினாள்' என்று களவை முன் வைத்தும், கற்பினைப் பின் வைத்தும் தமிழ்மரபைப் போற்றிய கம்பர், அவலம் மிக்க அயோத்தியா காண்டத்திலும் தமிழர் தம் இல்லற மாண்பை, நல்லறத்தைக் காட்சி அமைக்கும் திறத்தில், கிடைக்கும் சூழலைத் தன் மரபு போற்றும் மனப்பாங்கிற்கு ஏற்பப் படைத்து அதன்வழி தன் புதிய பரிமாணத்தைத் தமிழுலகிற்கு அளித்து சென்றுள்ளார். இந்தக் காட்சியமைப்பு கம்பரின் தனித்துவம். இவ்வாறு காப்பியத்தில் ஒவ்வொரு காட்சியமைப்பையும் முன்னோர் போற்றி, மரபைக் காத்து, பண்பாட்டைப் பதிவு செய்து தனக்கென்று தனித்துவம் பெற்று ஒவ்வொருமுறை நோக்கும் போதும் ஒவ்வொரு பரிணாமத்தை உணரச் செய்வதால்தான்,

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை

(தமிழ், பாரதியார் கவிதைகள்-2)

என்று முதற்கண் வைத்துப் பாரதி போற்றினான் போலும்.

'உயர் கம்பநாடனுடன் கவிதை போயிற்று' என்றும் 'கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும், என்றும் கம்பனிசைத்தக்

கவியெலாம் நான்' என்றெல்லாம் பாரதி குறிப்பிடும் போது கம்பனின் பெருமைகளையும் அவனது பல பரிமாணங்களையும் உணரமுடிகின்றது. (பாரதி அ.சீனிவாசன் ப-2) என்று கம்பனின் பரிமாணங்கள் குறித்துப் பலரும் புகழக் காரணம், கம்பனின் இராமகாதை காப்பியத்தின் திட்பமும், நுட்பமுமேயாகும். கம்பநாடன் கட்டிய கலைக் கோவிலில் ஒவ்வொரு பகுதியும் தனிச் சிறப்புடையது. பகுதி சிறிதாயினும், பெரிதாயினும் அதுபற்றிக் கவலையில்லை. சிறிய பகுதியையும், மிக நுண்ணிய தன்கதைத் திறமையால் அக்கலைஞன் ஒப்புயர்வற்றதாகவே ஆக்கிவிட்டான் (அ.ச.ஞானசம்பந்தன். ப-327) என்ற கருத்திற்கிணங்க காப்பியத்தினையும், தமிழ்மரபையும் ஒவ்வொரு நிலையிலும் போற்றி தனக்கென ஒரு தனிமுத்திரையைப் பதித்தமையால்தான் இன்றளவும் 'தமிழுக்குக் கதி' என்று முன்வைத்துக் கம்பர் போற்றப்படுகிறார்.

துணைநின்றன

1. கோபாலகிருஷ்ணமாச்சாரியார்.வை.மு,(2006) கம்பராமாயணம்,உமா பதிப்பகம்.
2. சங்கஇலக்கியம்(மூலமும் உரையும்)(2004) நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ்.
3. சீனிவாசன்.அ,கம்பன் ஒரு சமுதாயப்பார்வை,Tamil Virtual Academy.
4. ஞானசம்பந்தன்.அ.ச, (1966)கம்பன்கலை,கங்கை புத்தக நிலையம்.
5. தொல்காப்பியம் (மூலமும் உரையும்) (1953) கழக வெளியீடு.
6. பக்தவத்சலபாரதி,பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம்.
7. பரிமேலழகர் உரை,(1991)திருக்குறள்,கங்கை புத்தக நிலையம்.
8. பாலசுப்பிரமணியன்.சி,(1983)சங்ககாலமகளிர்,பாரிநிலையம்.

9. மீனாட்சிசுந்தரனார். தெ.பொ, (1966), நாடகக்காப்பியங்கள், சேகர் பதிப்பகம்.

10. வேங்கடசாமி நாட்டார்.ந.மு. (உரை) (2010) சிலப்பதிகாரம், ராமையா பதிப்பகம்.

11. வையாபுரிப்பிள்ளை.எஸ்,(2011) கம்பன் காவியம், வஉசி பதிப்பகம்.

12. ஜகந்நாதன்.கி.வா,(1991)தமிழ்க்காப்பியங்கள்(ஆராய்ச்சி), அமுத நிலையம்.

கம்பன் என்னும் சமதர்மவாதி

முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை
பேராசிரியர் & இயக்குநர், தமிழ்ப்பண்பாட்டு மையம்,
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி-3.

முன்னுரை

உண்மை நிகழ்ச்சிகளோடு கவிஞனுடைய இலட்சியக் கற்பனைகளும் கலந்து காப்பியம் உருவாக்கப்படுகின்றது. எல்லாக் காப்பியங்களுக்கும் இதுவே பொது விதி. கம்பராமாயணமும் இதற்கு விதி விலக்கன்று. கம்பர் மனித சமுதாயம் முழுவதிலும் சுதந்திரம் - சமத்துவம் - சகோதரத்துவம் ஆகிய நற்பண்புகள் நிலவி, என்றென்றும் நிலைபெற வேண்டும் என்னும் கொள்கையுடன் இராமயணத்தைப் படைத்துள்ளார். எனவே கம்பன் கண்ட சோசலிச சமூகம் குறித்துக் காண்பது இவ்வுரையின் நோக்கமாகும்.

கம்பன் கண்ட சமத்துவ நாடு

கம்பராமாயணத்தில் வருணிக்கப்படும் கோசல நாடும், அதன் தலைநகரான அயோத்தி நகரமும், கம்பருடைய கற்பனையில் எழுந்த இலட்சிய நாடும் நகரமுமாகக் காட்சியளிக்கின்றன. இதனைப் பால காண்டத்திலுள்ள நாட்டுப் படலமும் நகரப் படலமும் நன்கு விளக்கும்.

வரம்பெலாம் முத்தம்: தத்து மடையெலாம் பணிலம்: மாநீர்க்
குரம்பெலாம் செம்பொன்: மேதிக் குழியெலாம் கழுநீர்க் கொள்ளை
பரம்பெலாம் பவளம்; சாலிப் பரப்பெலாம் அன்னம்: பாங்கர்க்
கரும்பெலாம் செந்தேன்: சந்தக் காவெலாம் களிவண் டீட்டம்!
(33)

என்ற பாடலில், கோசல நாட்டின் செல்வச் செழிப்பை வருணிக்கிறார் கம்பர். மேலும் பல பாடல்களில் கோசல நாட்டின் நீர்வளம், வயல் வளம், பால் வளம், தேன் வளம், சோலை வளம் ஆகியவற்றையெலாம் வருணித்து, தம் கற்பனையில் உள்ள சோசலிசப் புது உலகை நம் அகக்

கண்களுக்குக் காட்சிப் படுத்துகின்றார். (கம்ப.பால.காண்.36 முதல் 46 வரை)

இங்ஙனம் மனிதர்கள் மட்டுமன்றி, ஊர்வன, பறப்பன ஆகிய உயிர் வர்க்கங்களும் வாழ்வாங்கு வாழ்கின்றன என்றும் கூறுகின்றார். கம்பர், தாம் காண விரும்பிய சோசலிச சமுதாயத்தில் ஆறறிவுடைய மனித குலத்தினரேயன்றி, ஒரறிவு உயிர் வர்க்கம் முதற்கொண்டு, அனைத்துயிரும் இன்பம் பெற வேண்டும் என்று எண்ணினார். அந்த எண்ணத்தையே கோசல நாட்டின்மீதேற்றிக் கூறுகின்றார். இதனை

நீரிடை உறங்கும் சங்கம்; நிழலிடை உறங்கும் மேதி;
தாரிடை உறங்கும் வண்டு தாமரை உறங்கும் செய்யாள்
தூரிடை உறங்கும் ஆமை; துறையிடை உறங்கும் இப்பி;
போரிடை உறங்கும் அன்னம் பொழிலிடை - உறங்கும் தோகை (38)

என்னும் பாடல் விளக்கும்.

சோசலிசம் என்பது:

எல்லாரும் எல்லாமும் பெற்று வாழ்தல் என்பது சமதர்மக் கொள்கையாகும். எனவே சமதர்மம் உற்பத்தி வழிமுறைகளின் பொது உரிமையை அடிப்படையாகக் கொண்டது என்பது புலனாகும்.

கம்பரின் சமதர்ம சமுதாயத்தில் நிலத்தின் மீது தனி மனிதனுக்கு உரிமை இல்லை. விளைநிலம் அனைத்தும் மக்களுக்கே உரிமையாகி, மக்கள் சார்பில், மக்களுக்காக மன்னனே நிருவகிக்கிறான். இதனை,

கோசல நாட்டில் விளைந்து அறுத்த தானியங்கள் மலைபோல் குவிக்கப்படுகின்றன. பின்னர், அவை ஆறு கூறாகப் பங்கிடப் பெற்று, அவற்றில் ஒரு கூறு வறியவர்க்கு வழங்கப்படுகின்றது. எஞ்சியவற்றில் ஒரு கூறு 'ஆறிலொரு பங்கு' என்ற முறைப்படி அரசருக்கு 'வரி'யாகிறது. மற்றுள்ள மூன்று பங்கினை விருந்தோடும் சுற்றத்தோடும் கூடித்தாமும் உண்ண தம் மனைக்குக் கொண்டு செல்கின்றனர் உழவர்கள் (கம்ப.பால.கா.52) என்னும் செய்தி விளக்கும்.

கோசல நாட்டில் மக்கள் முக்கனியோடு, முழுத்த நெய்யோடு, செந்தயிர், கண்ட சர்க்கரை சேர்த்து விருந்தினரையும் உடனிருத்தி, வேளைதோறும் வயிறார உண்கிறார்கள் என்கிறார் (கம்ப.பால.கா.54) இதில் உணவுண்ணுவோர் பட்டியலில் அந்தணர், தமர், விருந்தினர், சுற்றத்தவர் என்னும் அனைவரும் இடம் பெற்றிருத்தல் சமபந்திபோசன முறையை விளக்குவதாய் உள்ளது. தாம் காணும் சோசலிச சமுதாயத்தின் சிறப்புகளை,

வண்மை இல்லையோர் வறுமை இன்மையால்
திண்மை இல்லையோர் செறுநர் இன்மையால்
உண்மை இல்லைபொய் உரையிலாமையால்
வெண்மை இல்லைபல் கேள்வி மேவலால் (84)

என்றுரைக்கின்றார். ஒரு பக்கம் சிலரிடையே செல்வம் குவிந்தால், இன்னொரு பக்கம் பலரிடையே வறுமை வளரும். கம்பரின் சமதரும சமுதாயத்திலே செல்வம் எல்லோரிடமும் பரவி இருத்தலால், எவரிடமும் வளமுமில்லை வறுமையுமில்லை. வாழ் வாங்கு வாழ மக்களுக்கு வாய்ப்பிருப்பதால், எல்லோரும் பொய்ம்மை மறந்து வாய்மை காக்கின்றனர். அதனால், இன்னார் உண்மையாளர் என்றும், இன்னார் பொய்யுரையாளர் என்றும் பிரித்துக் காணும் நிலை இல்லை. ஏட்டுக் கல்வி பயிலாத வரும் கேள்வி ஞானம் பெறுவதால், அறியாமை இருள் அடியோடு இல்லையாம். பகையொழித்த நாட்டிற்குப் படை தேவையில்லை. உலகெலாம் சமதர்மம் தழைக்கு மேல், இராணுவத்தின் தேவை அறவே ஒழிந்து விடும். இதனை அறிந்த கம்பர், தம்முடைய சமதரும சமுதாயத்தில், திண்மை இல்லை நேர் செறுநர் இன்மையால் என்கிறார். வறுமை ஒழிந்த நாட்டில் களவு நிகழ வழியேது? உழைக்கத் தொழிலும், உழைப்புக்கும் தேவைக்குமான ஊதியமும் கிடைக்குமேல், பிச்சை எடுப்பாருமில்லை; கொடுப்பாருமில்லை என்னும் உண்மையை மேலைப் பாடல் தெளிவுபடுத்தும்.

செல்வம் சிலரிடையே குவிந்து பலரிடையே வறுமை வளர்ந்தால், அத்தகைய இழிநிலைக்கு உள்ளான தனி உடைமைச் சமுதாயத்தில் ஒழுக்கம் குறைந்து குற்றங்கள் கூடுதலாகும். ஆனால், கம்பர் காணும் சமதரும சமுதாயம் இதிலிருந்து வேறுபட்டதாகும்.

கூற்றம் இல்லையொர் குற்றம் இலாமையால்
சீற்றம் இல்லைதம் சிந்தையிற் செம்மையால் (70)

என்னும் பாடலடிகளில், கோசல நாட்டு மக்களுடைய செம்மையான வாழ்வைச் சித்தரிக்கின்றார் கம்பர். கூற்றம் இல்லை என்றதால், குற்றங்கள் மிகுந்து கொலைகள் நிகழ்வதில்லை என்று கொள்ளலாம். மேலும் நேர்மைகுணமே இருப்பதால் அங்கு சினம் என்பது இல்லை என்கிறார்.

ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம்

கம்பர் சித்தரிக்கும் சோசலிச சமுதாயத்திலே ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக எல்லா உரிமைகளையும் பெற்று வாழ்கின்றார்கள். இதனை,

பெருந்த டங்கண் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே (67)

என்னும் பாடல் விளக்கும். இதில் கோசல நாட்டுப் பெண்கள் சொத்துரிமை பெற்றவர்கள் என்பதோடு, கல்வி கற்றவர்களாகவும் விளங்கக் காண்கின்றோம். பொருந்து செல்வம் என்றதால், தமக்கே உரிமையான செல்வத்தைப் பெற்றிருக்கிறார்கள் எனக் கொள்ள இயலும் அந்நாளில், தாய்வீட்டுச் சொத்திலும் பெண்களுக்குப் பங்கிருந்தது போலும். மேலும் ஆணுக்கு நிகராகப் பெண்களும் கல்வி கற்றிருந்ததாகப் பாடுவது குறிப்பிடத்தக்கது.

பந்தினை இளையவர் பயிலிடம் மயில்ஊர்
கந்தனை யனையவர் கலைதெரி கழகம் (79)

என்பதில் இளமங்கையர் பந்து விளையாட்டில் ஈடுபட மயிலேறும் பெருமானாகிய கந்தனையொத்த காளையர் கூட்டம் வில் வித்தை முதலிய கலைகளிலே பங்கு கொண்டு வீதிதோறும் கழகங்கள் கண்டு கலைகள் பயில்கின்ற காட்சியைக் காட்டுகின்றார் கம்பர். இதில் பெண்ணும் ஆணும் சரிநிகர் சமானமாக விளையாடும் செயல் உரைக்கப் பெறுதல் கம்பர் பெண் சமத்துவத்தைப் பேணுதலைப் புலப்படுத்தும்.

முடியரசும் குடியரசும்

கம்பர் வாழ்ந்த காலத்தில், தமிழகத்தில் மட்டுமன்றி, உலக நாடுகள் அனைத்திலும் முடியாட்சியே நிலவி வந்தது. அதனால், முடியாட்சி அல்லாத ஒரு குடியாட்சியைக் கம்பர் கற்பனை செய்யவில்லை. முடியரசிலே சோசலிசக் குடியரசுக்குரிய நெறிகளைச் சேர்த்து வைக்க முயன்றிருக்கிறார். சங்க காலப் புலவரான மோசிகீரனார் நெல்லும் உயிரன்றே, நீரும் உயிரன்றே, மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் என்ற அடிகளில், மக்களை உடலாகவும் மன்னனை உயிராகவும் கற்பித்துப் பாடினார். 'மணிமேகலை'யில் சாத்தனார், இதனை, வேறு விதமாக மன்னுயிரெல்லாம் மண்ணால் வேந்தன் தன்உயிர் என்று குறிப்பிட்டார். மன்னன் குடிமக்களைத் தன் உயிர்போலக் கருதவேண்டும் என்ற செங்கோல் பண்பினை வலியுறுத்தவே மனித குலத்தை உடலாகவும், மன்னனை உயிராகவும் கற்பனை செய்தனர் பண்டைப் புலவர்கள்.

கம்பரோ, அயோத்தி மன்னனை அறிமுகப்படுத்தமிடத்து, உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான் என்று கூறுகின்றார். பண்டை புலவர்களைப் பின்பற்றிக் குடிமக்களை உயிராகவும், அந்த உயிரெலாம் உறைகின்ற உடலாகவும் மன்னனையும் கற்பனை செய்கிறார். உயிருக்காக உடலேயன்றி, உடலுக்காக உயிரில்லை. அதுபோல, மக்களுக்காக மன்னனேயன்றி, மன்னனுக்காக மக்களில்லை என்பதனை நினைப்பூட்டுகின்றார். இத்தகைய குடியரசுப் பண்பினை முடியரசோடு பிணைத்தவர் சமதரும வாதியான கம்பரேயாவார்.

பிறப்பு வழிப் பேதமில்லை

சமதரும சமுதாயத்தில் பிறப்புவழிப் பேதம் பாராட்டுவதோ, தொழில்வழி ஏற்றத்தாழ்வு காண்பதோ இருக்கக் கூடாது. கம்பர் காணும் கற்பனைச் சமுதாயத்திலும் பிறப்புவழி உயர்வு தாழ்வு காணாத ஒருமைப்பாட்டினைக் காணமுடிகிறது.

கங்கைக் கரையில் தன்னைச் சந்தித்த கடைக்குலத்து வேடனான குகனையும் தம்பி எனக் கொண்டான் காகுத்தன்.

கிட்கிந்தையில் தன்னோடு நட்புப் பூண்ட குரங்கினத்துச் சுக்கிரீவனையும் உடன் பிறந்தானாக ஏற்று உறவு கொண்டான்.

பின்னர், பகைவனின் பாசறையினின்று வெளிப்பட்டுத் தன்னிடம் சரணடைந்த அரக்கரினத்து வீடணனுக்கும் அடைக்கலம் தந்து, அவனைத் தன் தம்பியருள் ஒருவனாக ஏற்றுக் கொண்டான்.

குகனொடும் ஐவர் ஆனேம் முன்பு; பின் குன்று சூழ்வான்
மகனோடும் அறுவர் ஆனேம்; எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல்அருங் கானம் தந்து, புதல்வரால் பொலிந்தான் நுந்தை
(6507)

என்ற பாடல் சோசலிச சமுதாயத்திற்குத் தேவைப்படும் சகோதரத்துவத்தையே பிரதிபலிப்பதாகக் கொள்ளலாம். இறுதியாக, முடிசூட்டு படலத்தில், நால்வருணப் பாகுபாட்டினை ஏற்கும் கம்பர், அந்த வருணங்களிடையே நிலவியிருந்த உயர்வு தாழ்வை ஒழித்துக் கட்டுகிறார்.

சாணக்கியர் வகுத்த அரசியல் சாத்திரத்தின் வழி மன்னனுக்கு முடிசூட்டும் பெருமை அந்தணர் குலம் ஒன்றுக்கே உரிமை. ஆனால் சமதர்ம சமூகம் காண விரும்பும் கம்பனால் அதனை ஏற்க இயலவில்லை. அதனால்தான் இராமனுக்குச் சூட்ட வேண்டிய மணிமுடியைச் சடையன் மரபுளோர் கொடுக்க, வாங்கி, வசிட்டன் புனைந்தான் மௌலி என்று கூறுகின்றார். இதன் பொருள், வெண்ணைநல்லூர்ச் சடையப்ப வள்ளலின் குலத்தவரான வேளாளர் மணிமுடியை எடுத்துக் கொடுக்க, அந்தணனாகிய வசிட்டன் அதனை வாங்கி இராமனுடைய சிரசில் சூட்டினான் (கம்ப.யுத்த.கா.4316) என்பதாகும் இங்கு அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் எனும் அனைவரும் சரி நிகர் சமானம் எனும் கோட்பாட்டை மெய்ப்பிக்கிறார். இதன் வழி கடையனுக்கும் கடைத்தேற்றம் எனும் கொள்கை இங்கு நிறுவப்படுகிறது.

கம்பன் கண்ட உலகச் சகோதரத்துவம்

கம்பர் பழமைப் பண்புகளை அடியோடு வெறுத்தவரல்லர்.

பழமையும் புதுமையும் கலந்த சமதர்ம (சோசலிச) சமுதாயத்தைப் படைக்கவே அவர் விரும்பினார். உண்மையான சமதர்மவாதி தாம் வாழும் பிரதேசத்தில் தனிப்பற்றுடையவராயினும் 'ஒரே உலகம்' என்ற இலட்சியத்தையே உள்ளத்தில் கொண்டிருப்பார். சமதர்மவாதியாகிய கம்பரும், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற புறநானூற்றுப் புலவரின் வாக்கைப் பின்பற்றி, 'ஒரே உலகம்' என்ற சீரிய இலட்சியத்தைச் சிந்தையில் கொண்டிருந்தார். அதனாற்றான், இராம கதையைத் தமிழில் யாத்து, ஒரே உலக இலட்சியத்திற்கு உதவி புரியும் நோக்குடன் அகண்ட பாரதம் காணும் பணியைத் தாம் இயற்றிய இராமாயணத்தின் மூலம் துவக்கிவைத்தார்.

இராமாயணக் காப்புச் செய்யுளில் உலகம் யாவையும் என்ற சொற்றொடரை முதலில் வைத்தே முழுமுதற் கடவுளை வழிபடத் தொடங்குகின்றார் கம்பர். சமதர்ம நெறிக்குத் தெய்வ நம்பிக்கையோ, தெய்வ வழிபாடோ முரண்பட்டவை என்று எண்ணுவதற்கில்லை, சொந்தப் பண்பாட்டில் காலூன்றி நின்று சமதர்ம சமுதாயங் காண விரும்பும் எவரும் இந்த முடிவுக்கே வருவர். காப்பியம் முழுவதற்குமாக அமைந்துள்ள கடவுள் வணக்கப் பாடலில், நாம ரூப பேதங்களைச் சுட்டாமல், படைத்தல் - காத்தல் - அழித்தல் ஆகிய முத்தொழிலைமட்டுமே சுட்டிக்காட்டி, அந்த முத்தொழிலுக்கும் கர்த்தாவாகிய முதல்வனைத் 'தலைவர்' எனப் பெயரிட்டழைத்து வழிபடுகின்றார் கம்பர்.

உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யார்அவர்
தலைவர்; அன்னவர்க் கேசரண் நாங்களே (1)

என்பது கம்பர் இயற்றிய கடவுள் வணக்கப் பாடல். தன்னலங் கருதி, கடவுளுக்குத் தனித்தனி வடிவங்கற்பித்து வழிபடும் பிற்கால முறைப்படி அல்லாமல் சமதர்மவாதியான கம்பர், தலைவர் 'அன்னவர்க்கே சரண் நாங்கள்' என்று கூறி, சோசலிச சமுதாயத்துக்குத் தேவைப்படும் கூட்டு வழிபாட்டு முறையை அறிமுகப்படுத்துகின்றார்.

நிறைவாக

இதிகாச காலத்தில் நடந்த ஒரு கதையை 12-ஆம் நூற்றாண்டில் பாடும் கம்பன் காலத்திற்கு ஏற்ப அதிலும் குறிப்பாக இந்நூற்றாண்டிற்குத் தேவைப்படுகின்ற அரசியல், பொருளாதார, சமூகப் பண்புகள் அனைத்தையும் இராமாயணத்தில் பாடியுள்ளமை அவரைச் சமதர்மவாதியாக இனம் காணுவதற்குத் துணைநிற்கின்றது. பெண் சமத்துவம், சமூக சமத்துவம், அரசியல் சமத்துவம் என அனைத்து நிலைகளிலும் சமத்துவ சமூகம் காணும் கம்பர் உலகச் சமத்துவத்தையும் பேணியதன் வழி ஓர் உலக சோசலிசவாதியாக விளங்குகிறார் எனில் அது மிகையாகா!

துணை நூற்பட்டியல்

1. கம்பராமாயணம், ஆறுகாண்டங்கள், வை.மு.கோ (உரை) உமா பதிப்பகம், 171, பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை.
2. en.wikipedia.org

கம்பனில் கணக்கியல் அறிவு

தங்கவேலு சின்னசாமி

பதிவர், செயல்மன்றம்

கம்பர் நல்எண்ணங்களை விதைத்தவர். எண்ணிலும் நல்அளவு எது என நிர்ணயித்தவர். ராமகாதை எனும் இருசொற்களைக் கரந்துறை சொற்களில் பதிவோம் எனில், ராஜ்ஜியத்தில் மக்களின்- பண்புகளைக் காப்பியத்தில் தைத்தவர் எனலாம். கம்பனின் கவியை ஆய்வு செய்தால், கம்ப இலக்கியம், சரியான அற இலக்கை நோக்கிச் செல்கிறது என அறியமுடியும். .கம்பனின்கவி இலக்க எண்களிலும் குறியீடுகளை உடையது என்பதும் அறியத்தக்கது.

கணக்கு, என்றசொல்லுக்குப் பல பொருள்கள் உள்ளன. கணம் எனும் தொகைக் குறிப்பை, அக்கு, அக்கு ஆகப் பிரிப்பது கணக்கு எனக் கொள்ளலாம். அதாவது, கணக்கு எனும் சொல்லைக் கணம் கூட்டல் அக்கு எனும் சொல் ஆக்கமாகக் கொள்ள வேண்டும். கண(ம் +அ)க்கு = கணக்கு ஆகின்றது.

கணக்கு என்பது எண்களின் கணித்தல் ஆகும். பழமையான காலத்தில் ஐந்தும் ஐந்தும் பத்து கை விரல்களில் எண்ணுவதன் வழி கணக்கு கணிக்கப்பெற்றுள்ளது. கூடுதலாக வேண்டும் நிலையில் கால் விரல்களும் கணக்கு முறைக்குக் கணிக்கப் பயன்பட்டுள்ளன.

கம்பர், ராம காதையை, கற்பனையில் விதையாகத் தைத்து, ராம கதையை தொகுத்தளித்திருந்தாலும் அதனுள் கணித முறைமைகளையும் இடம் பெறச் செய்துள்ளார். கம்பரமாயணப் பாக்களில் எண்களின் குறியீடாக, பல செய்திகளைக் கம்பர் எடுத்துரைக்க முனைகிறார். கம்பர் ராமகாதையில் நாற்பத்தோரு இடங்களில் கணக்கு என்ற சொல்லைச் சுட்டிக் காட்டிஉள்ளார். கம்பர் காட்டிய இக்கணக்குக் குறியீட்டு முறை விரிக்க விரிக்கப் பெருகும் என்றாலும் இங்கு இக்கட்டுரை ஓரளவிற்கு இத்துறையில் அமைந்த செய்திகளை எடுத்துரைக்க முனைகிறது.

கம்ப கணக்கு

கலம்சுரக்கும் நிதியம்; கணக்குஇலா.
நிலம்சுரக்கும். நிறைவளம்; நல்மணி
பிலம்சுரக்கும்; பெறுதற்குஅரியதம்
குலம்சுரக்கும் ஒழுக்கம் குடிக்கு எலாம் (69)

என்ற பாடலில் கணக்கு என்ற சொல் இடம் பெறுகிறது. நிலம் கணக்கு இல்லாத நிறைவான வளத்தைக் கொடுக்கும் நிலையில் இருந்தது என்று கம்பர் கணக்கின் அளவின்மையையும் கோசல நாட்டு நிலத்தின் அளவின்மையையும் ஒருசேர எடுத்துரைக்கிறார்.

மேலும், இப்பாடலில், கலம் சுரக்கும் என்ற தொடர் கோசல நாட்டு மக்களுக்குக் கப்பல்கள் வரவின் வழியாகக் கடல் வாணிபம் பெருகியதை உணரமுடிகின்றது. எல்லாச் செயல்களுக்கும் நிலமே அடிப்படை என அறிந்து நிலம் சுரக்கும், நிறை வளம் சுரக்கும் என்று எல்லாச் செழிப்பிற்கும் வேளாண்மையே அடிப்படை என சுட்டிக் காட்டுகிறார் கம்பர். .வேளாண்மை மூலம் நன்மை செய்யும் நன்செய்யும் நிலத்திலும், புதுமை பெருகும் புன்செய் நிலத்திலும் வளம் என்றும் சுரக்கும் என இப்பாடல் வழி காட்டுகிறார். இதனால், நிலத்தின் கணக்கு அளவற்ற எண்ணிக்கையில் நிறைவான வளத்தைக் கொடுக்கும் என்பதைக் கம்பரால் உணர்த்திவிட முடிகின்றது.

பிலம் சுரக்கும் என்று நிலத்தைக் குடைந்து வளம் சுரக்கும் சுரங்கத்தின் மூலமும் செல்வச் செழிப்பு கோசல நாட்டில் பெருகியுது என்று பொருளாதார வளம் பாடுகிறான் கம்பன். இவ்வாறு வளங்கள் பல பெருகும் மதிப்புடைய உயிர் வாழ்வினையும் உயர் வாழ்வினையும் கம்பர் உணர வைக்கிறார். பெரும்பாலும், கம்பன் கணக்கிலா அளவற்ற செல்வச்செழிப்பினை, காட்ட கணக்கு என்ற சொல் பயன்பட்டுள்ளது.

எக்கணக்கும் இறந்த பெருமையன்' (கம்ப ராமாயணம், பால காண்டம், மிகைப்பாடல் எண் 14) என எந்தக் கணக்கையும் அறிந்த முக்கண் மூர்த்தியைக் குறிக்கிறார். இவ்வாறு பல்வேறு இடங்களில் கணக்கு கம்பருக்குக் கணக்கிடப் பயன் பெற்றுள்ளது.

கருதல் அரும் பெரும் குணத்தோர்,
இவர் முதலோர் கணக்கு இறந்தோர்,
திரிபுவனம் முழுது ஆண்டு
சுடர் நேமி செல நின்றோர்,
பொருது உறைசேர் வேலினாய்!
புலிப் போத்தும் புல்வாயும்
ஒரு துறையில் நீர் உண்ண
உலகு ஆண்டோன் உளன் ஒருவன் (641)

என்ற பாடலில் எண்ணற்றவர்கள் என்ற எண்ணிக்கையைக் குறிக்க, கணக்கு இறந்தோர் என்கிறார் கம்பர்.

கால்விரிந்து எழுகுடை கணக்குஇல் ஓதிமம். , (பாலகாண்டம், எழுச்சிப்படலம் 742) என்னும் பாடலடியில், கணக்கிலா நிலையில் அன்னப் பறவைகள் பறந்தமையைக் கணக்கிடுகிறார் கம்பர்.

அயோத்தியா கண்டத்தில், மந்தரை சூழ்ச்சிப் படலத்தில், (பா.எ.1468) கல்வியும், இளமையும், கணக்கில் ஆற்றலும் உடையவனாகப் பரதனின் தன்மைகள் கம்பரால் காட்டப்படுகின்றன.

கிட்கிந்தை காண்டத்தின் வாலிவதைப் படலத்தில் 'பகைவம் இயற்றி, யாண்டும் கழிப்ப அருங்கணக்குஇல் தீமை வைகலும் புரிந்துளாரும், வான்உயர் நிலையை அடைவர்' என்று உரைக்கப்பெற்றுள்ளது. இங்கும் கணக்கினைப் பயன்படுத்துகிறார் கம்பர். மற்றொரு இடத்தில், 'இன்னன கமழ்வுறத்து வன்றிய கணக்குஇலகொட்பது' (பா.எ. 4557) என்று கணக்கு என்ற சொல் அளவின்மைக்குக் கம்பரால் கையாளப்பெற்றுள்ளது,

இவ்வாறு கணக்கு பற்றிய அறிவு கம்பரின் கவிநயத்தில் இன்னும் பெருமை கூட்டுகிறது.

கம்பரும் எண்களும்

கம்பர் தன் காவியத்தில் பற்பல எண் அடிப்படைகளை எடுத்துரைத்துள்ளார். ஒன்று தொடங்கி அவரின் எண்ணல் அறிவு ஆயிரம், நூறாயிரம், கோடி வரை செல்வதை அறியமுடிகிறது.

கோடிகளிலும் நூறு கோடி, கோடிகோடி என்று கம்பன் எண்களைத் தன் காப்பியத்துள் அளந்து உரைக்கிறான்.

பாலகாண்டம், ஆற்றுப் படலத்தில், நாற்பத்தெட்டாவது பாவில், 'ஒன்றாய் விரி இருள் இரண்டு கூறாய் வெகுண்ட என விலங்குகளை ஆற்றுப்படலத்தில் விவரிக்கும்போது, பெண் எருமைகள் இரண்டினைக் காட்டினாலும் அவை எங்கும் ஒரே பொருளாய், ஒரே நிறத்தனவாய், ஒரே தரத்தனவாய், ஒரே உருவாய் வாழ்ந்தன என்று குறிப்பிடும் நிலையில் ஒன்று, இரண்டு ஆகிய எண்களைக் குறிப்பிட்டு எண்வழிச் சில குறியீடுகளை உணர்த்த ஆரம்பிக்கிறார் கம்பர்.

கம்ப ராமாயணப் பாடல் எண் நானூற்று இருபத்தாறில் கம்பர், 'அடி ஒரு மூன்றும் நீ அளந்து கொள்' என்று மூன்று என்ற எண்ணைச் சுட்டுகிறார். 'நீ என்னைக் கேட்ட அந்த மூன்று அடி அளவு உள்ள நிலத்தை, உனது காலால் அளந்து கொள்க' என்று இரணியன் சொல்லுகின்ற இடத்தில் கணித அளவியல் கணக்கான அடி அளவைக் காட்டுகிறார்.

பாலகாண்டத்தின் பாடல் அறுநூற்று நாற்பத்தேழில், இந்திரனை வென்று, திசை இரு-நான்கு எட்டுத்திசைகள் என நான்கு என்ற எண்ணையும் சுட்டி அதனுடன் இரு நான்கு என்ற பெருக்கல் வாய்பாட்டினையும் சுட்டுகிறார். நால் இரண்டு எட்டு என்ற அளவில் பெருக்கல் கணக்கு இயல்பினைக் கம்பர் எடுத்துரைத்துள்ளார்.

கம்பர் தன் கம்பரமாயணத்தில் பத்தாயிரத்து இருநூற்றுத் தொன்னூற்று ஐந்தாம் பாடலில் மற்றொரு பெருக்கல் கணக்கினையும் காட்டுகிறார். 'எட்டு என இறுத்தபத்தின் ஏழ்பொழில் வளாக வேந்தர்' என எட்டு என்று முடிகின்ற பத்து அதாவதது பதினெட்டின் பிரிவான எண்ணை, ஏழு எல்லையிலும் இருந்த மன்னர்கள் வணங்கிச் சூழ்ந்ததை, விசைக்குறி எண்கணிதம் மூலம் விவரித்து உள்ளார்.

ஒன்று முதல் ஐந்து என்ற எண்ணிக்கைத் தொடர்ச்சியைக் கம்பன் பாலகாண்டப் பாடல் ஒன்றில் காட்டுகிறான். "ஒன்றாய், பரம்பொருள் ஒன்றால் ஆனது எனவும், பரிதி மதி

என்ற இருசுடர்களாக அது நிற்கிறது எனவும், அதுவே மூன்றும் ஆகி, அழியாத வேதம் நான்கோடு, ஐம்பூதமாக விளங்குகிறது என்றும் அவன் காட்டும் எண் தொடர்வரிசை கணக்கியலின் அடிப்படை என்றால் மிகையாகாது.

அல் ஆயிரகோடி அடுக்கியது ஒத்ததேனும் - (ஆரண்:10 159-1)

பல் ஆயிரகோடி பனி சுடர் ஈன்ற திங்கள் - (ஆரண்:10 159-3)

பல் ஆயிரகோடி பரந்துளவால் - (ஆரண்:11 52-3)

ஆயிரகோடி தூதர் அரி_கணம் அழைக்க ஆணை - (கிட்:11 55-1)

கூனல் மா குரங்கு ஐ_இரண்டு ஆயிர கோடி - (கிட்:12 2-3)

ஆன்ற பத்து நூறு ஆயிர கோடியோடு அமைய - (கிட்:12 3-3)

ஆறு எண் ஆயிரகோடி அது உடன் வர அமிழ்தம் - (கிட்:12 4-3)

ஐம்பது ஆய நூறு_ஆயிர கோடி எண் அமைந்த - (கிட்:12 5-1)

கண் கொள் ஆயிர கோடியின் இரட்டியின் கணித்த - (கிட்:12 6-3)

இனிய மா குரங்கு ஈர்_இரண்டு ஆயிர கோடி - (கிட்:12 7-3).

பனசன் என்பவன் பன்னிரண்டு ஆயிர கோடி - (கிட்:12 8-3)

பகுத்த பத்து நூறு_ஆயிர பத்தினின் இரட்டி - (கிட்:12 13-3)

இயைந்த பத்து நூறு_ஆயிர பத்து எனும் கோடி - (கிட்:12 14-1)

ஏழின் ஏழு நூறு_ஆயிர கோடி என்று இசைந்த - (கிட்:12 17-1)

ஐஅஞ்சு ஆயிர கோடி கொண்டு அனுமன் வந்து அடைந்தான்
- (கிட்:12 20-4)

என்பன கம்பரின் விரிவான எண்ணல் தொகை அறிவுக்குச் சான்றாவனவாகும். பத்து நூறு ஆயிரம்கோடி, எண் ஆயிரம் கோடி என்பன கம்பனின் விரிந்த அறிவினுக்குச் சான்று பயப்பன.

கம்பன் ஆறு காண்டங்களில், நூற்றுப் பதினெட்டுப் படலங்களில், பத்தாயிரத்து முன்னூற்று அறுபத்தெட்டு, பாடல்களில் மூன்று லட்சத்துக்கும் அதிகமான சொற்களைப்

பயன்படுத்தி உள்ளார். இவற்றில் கணக்கு சார்ந்த சொற்களும், தொடர்களும் அதிக அளவில் கம்பரால் பயன்படுத்தப்பெற்றுள்ளன என்பதை முடிவாகப் பெறமுடிகின்றது.

கம்பன் காட்டும் நதி நீர்ப்பாதுகாப்பு

முனைவர் நா.பழனிவேலு
தமிழ் இணைப்பேராசிரியர் & துறைத்தலைவர் (ப.நி),
அரசு ஆடவர் கலைக்கல்லூரி,
கிருட்டிணகிரி- 635001.

இந்திய இதிகாசங்களும், புராணங்களும் நதிகளைக் கடவுளர்களோடு தொடர்புபடுத்தியும், பெண்தெய்வங்களாகவும் சித்திரிக்கின்றன. வான்மீகி ராமாயணத்தில், சரயு, கங்கை, சோணை, கௌசிகி, தமஸா, வேதஸ்ருதி, கோமதி, சியநந்திகா, யமுனை, மால்யவதி, மந்தாகினி, கோதாவிரி - நதிகளைப் பற்றிய செய்திகளும் மேற்கூறிய கருத்தின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன, வான்மீகியை முதனூலாகக் கொண்டு 'இராமாவதாரத்தை'ப் படைத்த கம்பர் சரயு, கங்கை, கோதாவரி, காவிரி, பொருநை, நருமதை, சோணை, பெண்ணை - ஆகிய நதிகளைப் பற்றித் தமது இராமகாதையில் குறிப்பிடும்போது, வான்மீகி கூறியவாறே குறிப்பிடுகிறார். கம்பர் அவற்றை வருணிப்பதிலிருந்து 'நீரை மாசுபடுத்தாமல் பாதுகாக்கவேண்டும்' என்கிற அவரது உட்கிடக்கையை உணரமுடிகிறது. ஆறு, பொய்கை - போன்ற நீர் ஆதாரங்களை மாசுபடுத்தாமல் அவற்றை அடுத்தடுத்த தலைமுறையினர்க்கும் பயன்படும் வண்ணம் பாதுகாக்கவேண்டும் எனும் கருத்தை வலியுறுத்தும் நிலையிலேயே ஆறு, பொய்கை - போன்ற நீர் - ஆதாரங்களை அவர் வருணித்திருக்கின்றார்.

கடவுள் தன்மையை / புனீதத் தன்மையை ஏற்றிக் கூறுதல்

சரயு, கங்கை, கோதாவரி, காவிரி, பொருநை, கௌசிகி - ஆகிய நதிகளை வருணிக்கும்போது அவற்றின்மீது கடவுள் தன்மையை, புனிதத்தன்மையை ஏற்றி வருணிக்கின்றார்.

கங்கையைப் பற்றி வருணிக்கும்போது, 'கங்கை என்னும் கடவுள் திருநதி' (1935) என்றும்; 'பொன்னியைப் பொருவும் / கங்கை என்னும் அக்கரை பொரு திருநதி' (456) என்றும் கூறுகிறார். கங்கையின் தெய்வத் தன்மையைப் பெரியாழ்வார்

'கங்கை கங்கை என்ற வாசகத்தாலே / கடுவினை களைந்திட நிற்கும் கங்கை' (4 - 7) எனக் கூறுவது சுட்டடத்தக்கது.

கோதாவரியை வருணிக்கும்போது, கோதாவரி, யாவர்க்கும் நரகத்தை நீக்கி, அலையாமல் தேவர் உலகத்தை எளிதில் தரவல்லது; புனிதத் தன்மையையுடையது என்பதை, . . . யார்க்கும் / புத்து ஈர்த்திட்டு அலையாமல் புலவர்நாடு உதவுவது; புனிதமான / அத்தீர்த்தம் அகன் கோதாவரி என்பார் (4467) என்றும்; 'செல்வர்க் கண்டு அடிபணிவ தென்ன பொலிந்தது கடவுள்யாறு' (2733) என்றும்; காவிரியை வருணிக்கும்போது, 'தெய்வப்பொன்னி எனல் ஆய புனல்யாறும் உள' (2688) என்றும்; 'சேடுஉறு தண்புனல் தெய்வத் திருநதியின்' (4475) என்றும்; பொருநை நதியை வருணிக்கும்போது, 'பொன் திணிந்து புனல்பெருகும் பொருநை எனும் திருநதி' (4477) என்றும்; சரயு நதியை வருணிக்கும்போது, 'மேன்முறை அமரர் போற்றும் விழுநதி' (398), 'பவங்கள் தீர்க்கும் புனித மாநதி' (398) என்றும்; கௌசிகி நதியை வருணிக்கும்போது, இராமனின் கூற்றில் 'சுரர் தொழுது இறைஞ்சற் கொத்த தூநதி' (399) என்றும் குறிப்பிடுகின்றார்.

நருமதை நதியை வருணிக்கும்போது, தேவர்களும் விரும்பி நீராடப்பெறும் இயல்புடையது. அதனிடத்தே உள்ள பலவகை மணிகளால் இருள் ஒடப்பெறுகிறது என்பதையும் ' . . . தேவரும் / ஆடுகின்றது . . . பல்மணியால் இருள் / ஓடுகின்ற நருமதை' (4565) எனக் குறிப்பிடுகின்றார்.

பெண்ணை ஆற்றினைக் குறிப்பிடும்போது தன்கண் மூழ்குவார் எவராக இருந்தாலும் அவர்களுடைய நோயையும், பிறவிக்குக் காரணமாகிய இருவினைகளையும் துண்டிக்கும் தன்மையடையது. என்பதை 'எவரும் ஆடுவார் / பிணிகொழித்து வெம்பிறவி வேரின் வன் துணிகொழித்து' (4607) எனும் அடிகளின் மூலம் உணர்த்துகிறார்.

இராமன் கங்கையில் நீராடியதன் மூலம் தான்செய்த பாவங்கள் நீங்கப்பெற்று உய்ந்ததை,

பன்னி நீக்க அரும் பாதகம், பாருளோர்
என்னின் நீக்குவர்; யானும் இன்று என் தந்த
உன்னின் நீக்கினென்; உய்ந்தனென் யான்' என்றாள் (1942)

என்று இராமன் கங்கையை நோக்கிக் கூறுவதாகக் கம்பர் குறிப்பிடுகிறார்.

எழுமையுங்கூடி யீண்டிய பாவம் இமைப்பொழுதளவினில்
எல்லாம் கழுவிடும் பெருமைக் கங்கை (1-5)

எனப் பெரியாழ்வார் கூறுவது சுட்டத்தக்கது.

நதிகள், நீர்நிலைகளின்மீது கடவுள் தன்மையை, புனிதத் தன்மையை ஏற்றிக் கூறினால் மக்கள் அவற்றை மாசுபடுத்தாமல் பாதுகாப்பர் எனக் கருதியே கம்பர் நதிகளைக் கடவுளர்களோடு தொடர்புபடுத்தியும், அவற்றின்மீது புனிதத் தன்மையை ஏற்றியும் வருணித்திருப்பார் எனக் கருத முடியாது.

தற்காலத்தில், மக்கள் கூடும் பேருந்துநிலையம், மருத்துவமனை - போன்ற பொது இடங்களில் மக்கள் சிறுநீர் கழித்தல் போன்ற செயல்களைச் செய்து அசுத்தப்படுத்துவதையும், சுகாதாரக்கேடு உண்டாக்குவதையும் தடுக்கக் கருதிய பொதுநலம் பேணுவோர் அந்த இடங்களில் கடவுளர்களின் திருவுருவப்படங்களை வரைந்து வைத்து அந்த இடங்களைப் பாதுகாக்க முனைந்திருப்பதைப் போல, கம்பரும் நதிகள் மக்களால் மாசுபடுத்தப்படுவதிலிருந்து அவற்றைக் காப்பாற்றிட, அவற்றைக் கடவுளர்களோடு, தொடர்புபடுத்தியும், அவற்றின்மீது புனிதத்தன்மையை ஏற்றியும் கூறுகின்றார் என எண்ணலாம்.

நதி நீரின் தூய்மை

நதிகளின் நீரை வருணிக்கும்போது, அவற்றின் தூய்மையைப் பற்றி பலபடக் கூறுகின்றார்.

கங்கை நதியைக் கூறும்போது, 'விரி திரைப் புனல் கங்கை' (1934), 'கண்ணகன் பெரும்புனல் கங்கை' (2304) எனக் குறிப்பிடுகின்றார்.

உவர்ப்புச் சுவையுடைய கடலும் தெளிவான கங்கை நீரைப் பருக வேண்டும் எனும் விருப்பம் அடைந்ததை 'உப்புடைக்

கடலும் தெண் நீர் உண் நசை உற்றது அன்றே' (1030) எனக் கூறுகிறார்.

என்றும் வற்றாது பாயும் நீர்ப்பெருக்குடைய கங்கை நதியினை,'கன்னி நீக்கருங் கங்கை' (1942) எனவும், நீரின் தெளிந்த தன்மையைப் பற்றிக் குறிப்பிடும்போது 'வெண்ணிறக் கங்கை' (1943) எனவும், மோதுகின்ற அலைகளை உடையதைக் குறிப்பிடும்போது 'தள்ளும்நீர்ப் பெருங்கங்கை' (1944) எனவும் கூறுகிறார்.

அரக்கனால் வஞ்சிக்கப்பட்ட சீதையின் கூந்தலிலிருந்து நழுவி வந்து பூமியினை அடைந்த மாலையைப் போல கோதாவரி இருந்தது என்பதை, . . . அரக்கனால் வஞ்சிப்புண்ட / சீதைபோகின்றாள் கூந்தல் வழீஇ வந்து, புவனம் சேர்ந்த / கோதை போல் கிடந்த கோதாவரி (4620) என்றும்; நிலத்தை அளவிடுதற்குரிய நூல் என்று சொல்லத் தக்கதாகி, அலைகளால் மணியும்,பொன்னும் வாரி வீசப்பட்டு அழகாகக் கிடந்தது என்றும்;

ஆசில் பேருலகில் காண்போர் அளவை நூல் எனலும் ஆகி
காசொடு கனகம் தூவி கவின் உறக் கிடந்த கான்யாறு (4622)

என்றும் கூறுகிறார்.

கோதாவரி நதியினை வருணிக்கும்போது, அதன் ஆழத்தில் உள்ள பொருளும் நன்றாகத் தெரியும்படி தெளிந்திருந்தது என்பதை 'கவி உறத் தெளிந்து' (2732) எனக் குறிப்பிடுகிறார்; உயர்ந்த புலவர்களால் இயற்றப்பெற்ற கவிதைகளைப் போல கோதாவரி நதி விளங்கியதை, 'சான்றோர் / கவி எனக் கிடந்த கோதாவரி' (2732) எனக் குறிப்பிடுகிறார்.

பெண்ணையாற்றை வருணிக்கும் போது, வற்றாத நீர் வளத்துடன் கரையில் செடி, கொடி, மரங்கள் செழித்து வளர, பலநிற மலர்களைத் தன்மேல் பரப்பிக்கொண்டு ஓடி வந்ததை, 'அணிகொழித்து வந்து' (4607) எனும் அடியின் மூலமும்; சுழிகள் தோறும் நல்ல இரத்தினங்கள் வீசப்பட்டிருந்த கரைகளைக் கொண்டிருந்ததை நன்மணி கொழிப்பதன் துறை (4607) எனும் அடியின் மூலமும் உணர்த்துகிறார். பெண்ணையாறு

வற்றாத நீர்ப்பெருக்கு உடையதாகவும், இயற்கை வளங்களை உடையதாகவும் இருந்ததை உணர்த்துகிறார்.

வட பெண்ணை நதியினைக் 'கரிய பெண்ணை' எனக் குறிப்பிடுவதன் மூலம், கரிய நீரை உடையதாக (தெளிந்த நீர் கருநிறமாகத் தோற்றுதல் இயற்கை) வடபெண்ணை நதியின் நீர் இருந்தமை அறியவருகிறது.

காவிரியாற்றை 'நளிநீர்ப் பொன்னி' (4475) எனக் குறிப்பிடுவதன் மூலம் பரந்துபட்ட பெருந்தன்மையுடைய பொன்னி நதி எனக் கூறுகிறார்.

பொருநை நதியைக் குறிப்பிடும்போது, பொன் திணிந்த புனல்பெருகும் பொருநை எனும் திருநதி (4477) எனக் கூறுவதன் மூலம் பொருநை ஆற்றின் நீர்ப்பெருக்கையும், அந்த நீரின் தெளிந்த தன்மையையும் உணரமுடிகிறது.

சோணையாற்றை வருணிக்கும்போது. குறை எலாம் சோலை ஆகி குழி எலாம் கழுநீர் ஆகி / துறை எலாம் கமலம் ஆன சோணையாறு (891) என்று அந்த ஆற்றின் இயற்கை அழகையும், வளம் நிறைந்த நீர்த்துறைகளையும் குறிப்பிடுகிறார்.

மிதிலையின் அரண்மனையைச் சூழ்ந்துள்ள அகழியை வருணிக்கும்போது, 'அலைகள் மிகுந்து மேலே பொங்கும் கங்கை நதி போல' (501) ஆழமாக இருந்தது எனக் கூறுவதன் மூலம் கங்கை நதியின் ஆழத்தைச் சுட்டுகிறார்.

மிதிலையில், ஆவண வீதிகளின் இருமருங்கிலும், மணி முதலிய பண்டங்கள் குவித்து வைக்கப்பட்டிருந்ததை வருணிக்கும்போது, மணி, முத்து, அரதனம், மயிற்பீலி, கவரிமா வால், அகில், யானைத் தந்தம் போன்றவற்றைக் கரைகள் தோறும் பரப்பிய, 'பொன்னி யன்ன ஆவணம்' (489) என்று கூறுவதன் மூலம் காவிரி நதிக்கரைகளின் வளத்தைக் குறிப்பிடுகிறார்.

பம்பைப் பொய்கையை வருணிக்கும்போது அப்பொய்கையின் நீர் 'தெளிவு சான்றது' (3709) எனவும்; ஈர்ந்த நுண் பளிங்கென தெளிந்த ஈர்ம்புனல் (3710) எனவும்; பம்பைப் பொய்கையின் அடிப்பகுதியில் உள்ள நீரும் கலக்கமின்றித் தெளிந்த இயல்புடையது (3713) எனவும்; பம்பைப் பொய்கையின்

அடியில் தங்கிய காசுகள் நன்கு தெரியும்படி தெளிந்த தோற்றம் உடையது (3716) எனவும் குறிப்பிடுகிறார். இவற்றின் மூலம், பம்பைப் பொய்கையில் உள்ள நீர் மாசுபடாமல் தெளிவாக இருந்தமையை உணர்த்துகிறார்.

இராமனை அழைத்து வர, பரதன் சேனைகளுடன் காட்டிற்குச் சென்றபோது, அந்தச் சேனையில் உள்ள யானைகளின் மதநீர் அருவிபோலக் கங்கையில் பாய்ந்ததால் கங்கையின் நீர் வண்டினங்களைத் தவிர மற்றைய உயிரினங்களுக்கு நீராடவும், உண்ணவும் முடியாமல் போனதை,

எண்ண அரும் சுரும்பு தம் இனத்துக்கு அல்லது
கண்ணகன் பெரும்புனல் கங்கை எங்கணும்
அண்ணல் வெம்கரி மதத்து அருவி பாய்தலான்
உண்ணவும் குடையவும் உரித்தன்று ஆயதே (2304)

எனக் கூறுகிறார்.

இதன் மூலம், நதி நீரை மாசுபடுத்தாமல் பாதுகாக்கவேண்டும் எனும் கருத்தை வலியுறுத்துகிறார்.

ஆற்றுநீர் மக்களைக் காத்தல்

கம்பர், சரயு நதியின் நீர்ப்பெருக்கெடுத்தோடும் தோற்றத்தை வருணிக்கும்போது, 'வார்புனல் சரயு' (335) எனக் கூறுகிறார்.

தாய்ப்பால் குழந்தைகளை நல்ல வலிமையுடனும், நோய் எதிர்ப்புத்திறனுடனும் வளர்க்கின்றதைப் போல சரயு நதியும் உலக மக்களை வளர்த்து வருகின்றது. என்பதை, 'சரயு என்பது தாய் முலை அன்னது / இவ்வுரவுநீர் உலகத்து ஓங்கும் உயிர்க்கெலாம்' (23) எனும் அடிகளின் மூலம் கூறுகின்றார்.

தமிழ் இலக்கிய மரபில் ஊறித் திளைத்த கம்பர்,

புனிறுதீர் குழவிக்கு இலிற்று முலைபோலச்
சுரந்த காவிரி மரங்கொல் மலிநீர்
மன்பதை புரக்கும் (68: 8- 10)

எனும் புறநானூற்று அடிகளால் ஈர்க்கப்பட்டே கம்பர், சரயு நதியை மேற்குறிப்பிட்டவாறு வருணித்திருப்பார் எனக் கருத முடிகிறது.

தொகுப்புரை

வான்மீகி, தமது காவியத்தில் நதிகளை வருணித்திருப்பதைப் போன்றே கம்பரும் நதிகளை வருணித்திருக்கிறார்.

மக்கள் நதிகளை மாசுபடுத்தாமல் அவற்றைப் போற்றிக் காத்திடவேண்டும் எனும் நோக்கில் கம்பர் அவற்றின்மீது கடவுள் தன்மையை ஏற்றியும், கடவுளர்களோடு தொடர்புபடுத்தியும் வருணிக்கிறார். மக்கள் அவற்றில் நீராடினால் அவர்கள் செய்த பாவங்கள் அனைத்தும் அழிந்துவிடும் எனவும், மக்கள் செய்த பாவங்களைப் போக்கும் ஆற்றல் நதிகளுக்கு உண்டு எனவும் கூறுகிறார்.

கம்பர் வருணிக்கும் நதிகள் அனைத்தும் வற்றாத நீர்ப்பெருக்கைக் கொண்டதாகவும், தெளிந்த - தூய்மையான நீரை உடையதாகவும் ஓடிக்கொண்டிருந்தன.

தாயின் முலைப்பாலைப் போன்று நதிகளின் நீர் மக்களுக்குப் பயன்பட்டது.

பயன்பட்ட நூல்

1.கம்பராமாயணம், கம்பன் கழகம், சென்னை - 1976

கம்பனின் சட்டம்

கே.எம்.பூபதி
அரசு வழக்கறிஞர்,
செயலாளர், கம்பன் கழகம், குடியேற்றம், வேலூர் மாவட்டம்.

முன்னுரை

உயர்ந்த இலக்கை இயம்புவதால் (இலட்சியத்தை) இலக்கியம் எனப்படுகிறது. சட்டமும் மக்களின் வாழ்க்கை முறையை நன்னெறிப்படுத்தும் உயர்ந்த இலக்கைக் கொண்டுள்ளது. இவ்வகையில் இலக்கியமும் சட்டமும் மக்களுக்கு இருகண்கள் போன்றன. கம்பராமாயணத்தில் சட்டம் என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சகோதரத்துவம்:

நீதி மன்றங்கள் சட்ட நூல்களின் துணைகொண்டு அவற்றின் அடிப்படையில் வழக்குகளில் தீர்ப்பு அளிக்கப்படுகின்றன. சட்ட நூல்களில் உள்ள சமூக நீதிக் கருத்துகள் பலவும் கூர்ந்து நோக்கினால் கம்பர் தமது காப்பியத்தில் கூறப்பட்டுள்ளவற்றை ஒத்திருப்பது தெரிய வரும்.

நமது அரசியல் அமைப்புச் சட்டத்தின் சட்டப்பிரிவு 51 அளவில் சகோரத்துவம் ஒவ்வொரு குடிமகனின் கடமையாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கம்பராமாயணத்தில் உலக சகோதரத்துவத்தைத் கம்பன் வலியுறுத்தும் போது, குறிஞ்சி நிலத் தலைவன் குகன், முல்லை நிலத்தலைவன் சுக்ரீவன், நெய்தல் நிலத்தைச் சார்ந்த வீடணன் ஆகியோரைத் தன் சகோதரனாக ஏற்றுக் கொள்கிறான். இவ்வாறு ஒரு வேடனை, ஒரு குரங்கனை, ஒரு அரக்கனை தன் சகோதரர்களாக ஏற்றுக் கொள்கிறான் இராமன் என்பதை

குகனொடும் ஐவர் ஆனேம்முன்பு பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவரானேம் எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய நின்னொடும் எழுவர் ஆனேம் (6507)

கம்பர் குறிப்பிடுகிறார். வீடணனைச் சேர்த்து சகோதர்கள்

ஏழு பேர்கள் ஆனதைக் கம்பர் கூறும் விதத்தில் சட்ட அங்கீகாரம் பெற்ற சகோதரத்துவம் மிகவும் உன்னத நிலையை அடைகிறது.

ஒருவனுக்கு ஒருத்தி:

இராமனை 'நடையில் நின்றுயர் நாயகன்' எனக் கம்பர் குறிப்பிடுகிறார். காரணம், இந்த இப்பிறவிக்கு இருமாதரை 'சிந்தையாலும் தொடேன்' என வாழ்ந்தவன் ஒருவனுக்கு ஒருத்தி என்ற நம் தமிழ்ப்பண்பாட்டின்படி வாழ்ந்தவன் இராமன். இந்துத் திருமணச் சட்டம் 1955 இருதார மணத்தைத் தடை செய்துள்ளது.

எனவே இராமன் சீதைக்கு அளித்த வரம் கம்பராமாயணத்தின் உயர்ந்த சட்ட அமலாக்கக் கருத்தைப் பிரதிபலிக்கிறது.

தூதர் சட்டம்

நாட்டிடைச் சட்டங்களின் கீழ் தூதராக உறவு கொண்டுள்ள நாடுகளில் ஒரு நாட்டின் தூதராக அலுவலரை நன்முறையில் மற்றொரு நாடு நடத்த வேண்டியதைப் பற்றி விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

மயிடன் என்ற இராவணனின் தூதன் இராமனை அடைந்த போது வானரச்சேனை அவனைத் தாக்க முனைந்த போது தூதனை விடுமாறு (தூதன் இவனைக் களியன்மின்) இராமன் வானரரிடம் கூறியதாகக் கம்பர் படம் பிடித்துக் காட்டுகிறார்.

அனுமன் சீதையைக் கண்டு இராவணனைக் காணும் பொருட்டு பல போர்களைச் செய்த போது, இராவணன் இக்குரங்கைக் கொல்லுக என மொழிந்த பொழுது, அறத்தின் நாயகன் வீடணன் தூதனைக் கொல்லுதல் கூடாது என கூறியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இராமன் ஆட்சி

இராமன் குடிமக்களை எவ்வாறு ஆட்சி செய்தான் என்று கம்பர் குறிப்பிடும்போது செங்கோலானது மனுவற நூலில் கூறியபடி நிகழ பூபாரங்களைப் போக்கிக் காத்து வந்தான்

என்றும், அறத்தையும் நாட்டையும் காத்தருளினான் என்றும் விடைகொடுத்த படலத்தில் கம்பர் கூறியுள்ளார்.

குடியரசு நாட்டில் சட்டத்தின் ஆட்சிப் படி மக்கள் அனைவரையும் பாகுபாடின்றி காக்க வேண்டும் என்று நமது உச்ச நீதிமன்ற நீதியரசர் முனைவர் சவுகான் குறிப்பிட்டு சட்ட இதழ் 2011-6 *Sec.* 508-ல் தீர்ப்புரை வழங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

தீர்ப்புரையில் கம்பராமாயணம்

மேனாள் நீதியரசர் மு.மு.இஸ்மாயில் வழக்கை முடித்து தீர்ப்பு வழங்கும் பொழுது 'முதல்நாளிரவு கம்பராமாயணத்தைப் படித்துவிட்டு பிறகு தீர்ப்பு வழங்குவேன்' எனக் கூறியதன் மூலம் கம்பராமாயணம் நீதியரசர்களின் தீர்ப்புரைக்குப் பேருதவியாக இருந்துள்ளது என்பதை அறியமுடிகிறது.

ஸ்ரீனிவாச பிரசாத் எதிர் தமிழ்நாடு அரசு (சட்ட இதழ் *CCI* 2011 *Sec*-6521-ல் தீர்ப்புரை வெளியிடப்பட்டுள்ளது) வழக்கில் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையின் தீர்ப்பை அளித்த மேதகு நீதியரசர் இராமசுப்பிரமணியன், 'சீருடை அணிந்து ஆயுதம் தாங்கிப் பின்தொடரும் சில மனிதர்களால் ஒருவரைக் காப்பது அரிது' என்றும், 'தர்மம் போன்ற நல்லறங்கள் அவரைக் காக்க இயலும்' என்றும் சுட்டிக் காட்டியுள்ளார். தீர்ப்புரையில், 'விதிவலியால் கானகம் சென்ற இராமன் நல்லறங்களாகிய நடுவு நிலைமையும் சத்தியமும் காத்தன' என்பதை ஒப்பிட்டுள்ளார்.

யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனம் (வரையறுக்கப்பட்டது) எதிர் இராமகிருஷ்ணன் (சட்ட இதழ் 2009(2) *TNML* 546-இல் தீர்ப்புரை வெளியிடப்பட்டுள்ளது) வழக்கில் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளை தங்களின் ஒரே குழந்தையை மோட்டார் வாகன விபத்தில் இழந்த பெற்றோருக்கு எவ்வளவு தொகை வழங்கினாலும் இழப்பை ஈடு செய்ய முடியாது என்று சுட்டிக் காட்டியது. தீர்ப்புரை வழங்கிய மேதகு நீதியரசர் கிருபாகரன் கம்பராமாயணத்தில் இராமன் காட்டுக்குச் சென்றபோது புத்திர சோகத்தால் மன்னன்

தசரதன் இறந்ததை ஒப்பிட்டுள்ளார்.

இவ்வாறு பல தீர்ப்புரைகளுக்கு அடிப்படையாகக் கம்பராமாயணத்தை நீதியரசர்கள் பயன்படுத்தியுள்ளார்கள்.

முடிவுரை

கம்பராமாயணத்தில் உள்ள நிகழ்வுகளை ஆராய்ந்தால் இன்றுள்ள சட்ட அமைப்புகளுக்கு எப்படி வழிகாட்டி நிற்கின்றன என்பதை அறிய முடியும். சட்டவியலில் இலக்கியவியலில் கொண்டுள்ள தொடர்பால் சட்ட மாணவர்கள் கம்பராமாயணம் போன்ற தமிழ் இலக்கியங்களைக் கற்கும் வகையில் பாடத்திட்டம் மாற்றி அமைக்கப்பட்டால் 'வானம் வீழினும் நீதி நிலவுக' என்ற பொன்மொழியை உயிர்ப்பிக்க முடியும். இலக்கியக் கோட்பாடுகளோடு சட்டக்கோட்பாடுகளும் இணைந்தால் நாடு நலம்பெறும். காலப்போக்கில் சட்ட அமலாக்கத்தில் கம்பராமாயணத்தின் பங்கை அதிகரிக்கச் செய்யக் கம்பன் கழகம் பெரும் பங்கை வகிக்கும்.

கம்பர் தீட்டிய சித்திரம்

முனைவர் தமிழ் திருமால்
இணைச் செயலாளர், கம்பன் கழகம்,
குடியேற்றம் - திருப்பத்தூர்.

தோரணவாயில்

கம்பரைக் கவிச்சக்ரவர்த்தி எனப் போற்றுகின்றோம். கம்பர் கல்வியில் பெரியவர், அவருடைய அறிவு ஆழ்ந்தகன்று நுண்மையாய் விளங்குவது. காலமெனும் ஆழியிலும், காற்று மழை ஊழியிலும் சாகாத வரம் பெற்ற கவிதைகளை வழங்கி காலத்தை வென்ற கவிஞர்.

பற்பல திருத்தம் செய்தார், பாத்திரம் பொருத்தம் செய்தார். அற்புத அருத்தம் செய்தார். அதன்பின் விருத்தம் செய்தார் என்ற கவிஞர் திலகம் வாலியின் வைர வரிகளுக்கேற்ப கம்பர் பாடிய இராம காதை முதல் நூல் அன்று. வடமொழியில் வால்மீகி பாடிய இராமாயணத்தை இவர் முதல் நூலாகக் கொண்டு தம் காப்பியத்தை வழிநூலாக அமைக்கின்றார்.

ஒரு கவிஞன் தானே ஒரு பாத்திரத்தைப் படைப்பதற்கும், மற்றொருவர் வடிவமைத்த பாத்திரத்தைத் தான் வைத்துக் கொண்டு மெருகேற்றுவதற்கும் வேறுபாடு உண்டு. கவிஞர் தாமே படைக்கும் பாத்திரத்தின் பண்புநலன்களை அமைப்பதற்கு எல்லையற்ற வாய்ப்பு உண்டு. ஆனால், பிறர் வடிவமைத்த பாத்திரத்தைக் கையாள்வதில் அதன் வடிவம் மாறுபடாமலும், காப்பியத்தில் அதன் எல்லை மீறாமலும் அமைத்து உயர்த்த வேண்டும். இராமாயணக் காப்பியத்தில் பெரியனவும் சிறியனவுமாக நூற்றுக் கணக்கில் பாத்திரங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் ஒவ்வொன்றிலும் கம்பனுடைய கைவண்ணத்தைக் காண்கிறோம்.

கம்பர், அவ்வாறு பாத்திரங்களை மாற்றி, உயர்த்தி, வண்ணம் பூச வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டுவிட்டது. சிறப்பாகப் பெண் பாத்திரங்களை அவர் கையாண்டிருப்பதனை நோக்கினால், அவை அனைத்தும், இந்த நாட்டு மக்கள்

அப்பாத்திரங்களை மனங்கொள்ளும் பொருட்டு அவர் அவ்வாறு மாற்றியமைக்க வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை உணரலாம்.

தமிழர் பண்பாடு

தமிழ்நாட்டில், கற்புடைய ஒரு பெண்ணின் உடல் மேல் பிற ஆடவரின் கை தீண்டுதல் கூடாது. வான்மீகியில் சீதையை இராவணன் தூக்கிச் சென்றவிதம் வேறு, அதனை இம்மக்கள் ஏற்கமாட்டார் என்பதை எண்ணிய கம்பர் கதையை வேறு விதமாக மாற்றி விட்டார். தன்னை விரும்பாத ஒரு பெண்ணை இராவணன் வலிந்து சென்று பற்றுவானாயின்; அவன் தலை வெடித்து மாள்வான் என்னும் சாபம் இராவணனுக்கு இருப்பதாகக் கம்பர் கற்பனை செய்து கொண்டார். எனவே, தனியாளாய், அபலையாய் இருந்த சீதாபிராட்டியை அவன் நெருங்கவும் அஞ்சுகின்றான். அப்போது, இராவணனுடைய எல்லையற்ற ஆற்றல் அவனைப் பிராட்டி இருந்த குடிலை (பர்ணசாலை) அடிநிலத்தோடு பெயர்த்தெடுத்துக் கொண்டு போகச் செய்தது.

இப்படிக் கம்பர் மாற்றியமைத்த பாத்திரப் படைப்புகளில் மிகச்சிறந்து விளங்குவது தாரையின் பாத்திரமாகும். கிட்கிந்தையில் வாலியினுடைய தர்மபத்தினியாகத் தாரை காட்சியளிக்கின்றாள்.

வான்மீகி படைத்த தாரை

கம்பர் தாரையின் பாத்திரத்தை எப்படி மாற்றி உயர்த்தியிருக்கிறார் என்பதனை நாம் நன்கு உணர்வதற்கு முதலில் வான்மீகியின் தாரையை நோக்க வேண்டும்.

உருசியமுக மலையின் இராமன் சுக்ரீவனுக்கு அடைக்கலம் அளித்த நாளில், கார்காலம் வந்துவிட்டது. அக்காலம் முடிந்த பின் வானரப்படைகளுடன் வருமாறு சுக்ரீவனை இராமன் அனுப்பிவிட்டான். சுக்ரீவன் தன் நகர்க்குள் சென்று அங்கு அரசாட்சி தொடங்கிய நிலையில் அவனுடைய சிந்தை திரிந்து இன்பத்தில் மூழ்கியது. அவன் கள்ளுண்டு களித்ததோடு, இளம் பெண்களுடன் இன்துயிலாடி உவகைக்

கடலில் மூழ்கியிருந்தான். அதனால், அவன் இராமனிடம் வாக்களித்தவாறு, கார்காலம் முடிந்தவுடன், தன் கடமையை எண்ணி இராம கைங்கர்யத்தில் ஈடுபடமுடியாமல் போயிற்று. பிராட்டியைப் பிரிந்து வேதனைக்குள்ளாகியிருக்கும் இராகவன் வெகுண்டான்.

இலக்குவனைக் கிட்கிந்தைக்கு அனுப்பினான். இலக்குவனும் வீராவேசம் கொண்டு நகருக்குள் செல்கிறான். கிட்கிந்தை கலங்குகிறது. வானர வீரர்கள் தங்களைக் காத்துக்கொள்ள முற்படுகின்றனர். வீரர்களில் வேறு சிலர் சுக்ரீவனிடம் சென்று செய்தி சொல்கின்றனர். ஆனால், அங்கு சுக்ரீவன் தாரையுடன்கூடி இன்புற்றிருக்கிறான். வானர வீரர்களும் வாலியின் மகன் அங்கதனும் சுக்ரீவனைத் தெளிவிக்க முடியவில்லை. பின் அனுமன் சென்று சுக்ரீவனுக்கு அறிவுறுத்திச் செய்யத்தக்கவற்றைச் சொல்கிறான். அப்போது சிறிது தெளிவுற்ற சுக்ரீவன், தாரையை இலக்குவனிடம் அனுப்புகிறான். அவளும் இலக்குவனைக் காணச் செல்கிறாள். இலக்குவன் அவள் வந்த அலங்கோலத்தைக் காணவும் கூசுகிறான். இது வால்மீகம்.

கம்பர் வரைந்த தாரை

சுக்ரீவன், தான் வலிய துணையைப் பெற்ற செருக்கோடு தன் அண்ணன் வாலியைப் போருக்கு அழைத்து ஆரவாரம் செய்கிறான். வாலியும் அதனைக் கேட்டுத் தம்பியுடன் போர் செய்யப் புறப்படுகிறான். அப்போது அவனுடைய மனைவியான தாரை தன் கணவனைத் தம்பியுடன் போருக்குச் செல்ல வேண்டாமெனத் தடுகின்றாள். இந்த இடத்தில்தான் கம்பர் முதலில் தாரையை அறிமுகம் செய்கிறார்.

> ஆயிடை, தாரையென்று அமிழ்தின் தோன்றிய
> வேயிடைத் தோளினாள் (3956)

என்று தாரையைக் கம்பர் கூறுகிறார். தாரை அமுதில் தோன்றினவள் என்பதனால், அமுதம் போல் தாரை தன்னை மணந்தவனுக்கு இன்பம் பயப்பவள் என்பதோடு, கொண்டவன் சாகாமல் தடுக்கும் ஆற்றல் பெற்றவள் எனக் கூறியவாறும் ஆயிற்று.

வாலி, தன் மனைவியை, மலைக் குல மயில் என்று அன்பு தவழ விளிப்பதனால், அவன் தன் மனைவியிடம் எத்தகைய அன்புடையவனாக இருக்கிறான் என்பதனை உணரலாம்.

தாரையைக் குறிக்க கவிஞர் சொல்லும் தொடர்கள் எல்லாம் மிக அழகானவை, அவை தாரையின் பண்புநலன்களை அளந்தறிய உதவுவனவாகும். மயிலியல் குயில் மொழி என வாலியே மீ;ண்டும் விளிக்கின்றான். தாரையின் மயில் போன்ற சாயலை வாலியின் வீழ்ச்சியைக் காண அஞ்சியவளாய் அவனைப் போருக்குப் போக வேண்டாமெனத் தாரை தடுக்கின்றாள்.

யானிது காண அஞ்சினேன்

என்ற அவன் புலம்பலினால், இதனை, நாம் உணர்கின்றோம். ஆனாலும், வாலியின் விதி அவனை விடவில்லை, தம்பியுடன் போருக்குச் சென்று அழிந்தான்.

வாலி மாண்டபின், தாரை தன்மகன் அங்கதனுக்காகவே வாழ்கின்றாள். அவள் விதவைக் கோலத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

சுக்ரீவன் வணங்கிய தாய்

சுக்ரீவன் தன் அண்ணன் மனைவியான தாரையைத் தன் தாயின் நிலையில் மதித்திருந்தான் என்று கம்பர் காட்டுகிறார். இராமனிடமிருந்து திருப்பி வந்த சுக்ரீவன் பட்டாபிடேகம் முடிந்தபின் தன் நாட்டின் ஆட்சியைத் தொடங்கும்போது,

தாரையை வணங்கி அன்னாள்
தாயெனத் தந்த சொற்கள்
சீரியர் சொல்லே என்னச்
செவ்விதின் அரசு செய்தான்

என்று கவிஞர் ஒர் அழகிய செய்தியைக் கூறுகின்றார்.

சுக்ரீவனைக் காப்பாற்றிய தாரை

இலக்குவன் ஆவேசத்துடன் கிட்கிந்தைக்கு வந்துற்றகாலை அனுமன் உட்பட வானர வீரர்கள் அனைவரும் அஞ்சினார்கள். அவர்கள் தாரையிடம் சென்று இலக்குவன் வரவை

அறிவித்தபோது,

நீரெலாமயல் நீங்குமின், நேர்ந்துயான்
வீரன் உள்ளம் வினவுவல் என்றலும்,
பேர நின்றனர், யாவரும் பேர்கலாத்
தாரை சென்றனள் தாழ்குழ லாரொடும் (4311)

தாரை, தானே சென்று இலக்குவனுடைய உள்ளத்தில் இருப்பதை, அவன் சினத்தோடு இங்கு வந்த காரணத்தை, அறிந்து வருவேன் என்று சொல்லி;ச் செல்கிறாள். தாரை, அதுவரை, தன் கோயிலில் இருந்து வெளிவந்ததில்லை என்பதைக் குறிக்கப் பேர்காலத் தாரை என்னும் தொடரைக் கம்பர் மிக அருமையாக வழங்கியுள்ளார்.

தூமன நெடுங்கண்தாரை

ஆவேசத்துடன் வந்துள்ள இலக்குவன் ஒரு தூயவீரன் என்று அறிந்து அவன் முன்னே செல்வதற்கு அவள் தயங்கவில்லை. தாரை, தார் குழல் மாதர் சூழச்சென்று இலக்குவனை இடைமறித்தாள். மாதர்கள் அவனைச் சூழ்;ந்து நின்றனர். வீரத்தோடு வந்த இலக்குவன் தன் சினம் தணிந்து நாணத்தால் முகம் தாழ்த்தினான். அவன் மாதர்களை முகம் நிமிர்ந்து நோக்கவும் நாணினான். தாரையும் அவனிடம் பேச அஞ்சி நின்றாள். இந்த இடத்தில் கவிஞர் தாரையை, 'தூமன நெடுங்கண்தாரை' என்று குறிப்பிட்டிருப்பது நினைவில் கொள்ளத்தக்கது.

தாரையின் நிலையைக் கவிஞர் விளக்கும் சொற்களை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். முழுநிலா பகல் பொழுதில் பூமிக்கு வந்த தோற்றம் போல அழகை உடைய முகத்தினாள் என்று கூறுகின்றார். முழுநிலாவுக்;கு நல்ல, இனிய ஒளியுண்டு, ஆயினும், அது இரவில் மட்டுமே ஒளிவிட வல்லது. ஆனால், அந்த நிலா பகல் பொழுதில் வந்தால், தன் ஒளி குன்றி வெளிறிப் போகும். இதனால், ஒளி பொருந்திய முகத்தை உடைய தாரை, தன் கணவன் இறந்தபின் விதவைக் கோலம் பூண்டு வாழ்வதனால், தன் அழகு மறைத்து வெளுத்துக் காணப்பட்டாள் என்னும் பொருளைக் கவிஞர் நமக்கு உய்த்துணர வைத்துள்ளார்..

அவர் கூற்று

பார்குலாம் முழுவெண் திங்கள் பகல் வந்த படிவம் போலும்
ஏர் குலாம் முகத்தினாள்... (4319)

மேலும்,

மங்கல அணியை நீக்கி மணியணி துறந்து வாசக்
கொங்கலர் கோதை மாற்றிக், குங்குமஞ் சாந்தங் கொட்டா
பொங்குவெம் முலைகள் பூகக் கழுத்தொடு மறையப் போர்த்த
நங்கையைக் கண்ட வள்ளல் நயனங்கள் பனிப்ப நைந்தான் (4320)

என்று தாரையின் விதவைக் கோலத்தையும், அவளுடைய அடக்கத்தையும் மேலும் விளக்குகின்றார் கவிஞர். தாரை விதவையாயினும் அவளுடைய இளமை மாறவில்லை என்பதையும் குறிப்பிடத் தவறவில்லை. அவர் தாரை இலக்குவன் முன் வந்துநின்றபோது மிக்க அடக்கத்துடன் தன் மார்பையும், கழுத்தையும் தன் முந்தானையினால் போர்த்து மறைத்துக் கொண்டாளாம்.

தாரையைக் கண்ட இலக்குவனுக்கு அயோத்தியில் உள்ள தன் தாயார் (கோசலை மற்றும் சுமித்திரை) நினைவு வருகின்றது. அவர்களும் இவளைப்போல்தானே விதவைக் கோலத்துடன் இருப்பார்கள் என்று மனம் நொந்து நிற்கின்றான். எனவே, தாரை தன் தோற்றத்தினால், தன் தாயாரை நினைவுறுத்தினாள் அந்த வீரனுக்கு என்றால், அவளுடைய மேனியின் நிலை, மனநிலை, இலக்குவனுடைய மனநிலை ஆகிய அனைத்தையும் ஒருங்கே படம் பிடித்துக் காட்டி விட்டார் கவிஞர். இது கவிஞரின் பாத்திரப் படைப்பாற்றலுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

நிறைவுரை

சுக்ரீவனுடைய பள்ளியறையிலிருந்து அலங்கோலத்துடன் வந்து இலக்குவனைக் காணும் தாரை-வான்மீகியின் இந்தப் படைப்பினையும், இலக்குவன் தாயாரை நினைத்து நைந்துருகும்படி தன் தோற்றத்தினாலேயே செய்தாள் தாரை என்னும் கம்பர் தீட்டிய சித்திரத்தையும் நாம் ஒப்பிட்டுப் பார்த்து வேறுபாடு காணவேண்டும்.

இந்திரனுடைய போகப் பொருளில் ஒருத்தியாக விளங்கும் இந்திராணியின் நிலைக்குத் தாரையைத் தாழ்த்திவிட்டார் வான்மீகி, அந்தத் தாரையைச் சீதாபிராட்டியின் கற்பு மேம்பாட்டுக்கும், மண்டோதரியின் மாட்சிக்கும் ஈடாக வைத்து ஒரு சிறப்பான சித்திரத்தைத் தமிழ்மக்கள் போற்றும் வண்ணம் தீட்டியுள்ளார் கம்பர்.

தாரையின் காட்சி முழுவதுமாகப் பார்க்கும்போது அவள் ஒரு தமிழ்நாட்டுப் பெண் எப்படிப் பண்புடன் நடப்பாள் என்பதனையே கம்பர் நமக்குச் சித்தரித்துக் காட்டியுள்ளார். கம்பருடைய காப்பியத்தில் வரும் கதை மாந்தர் அனைவரும் தமிழரே! வருணிக்கப்பட்டுள்ள நிலமெல்லாம் காவிரி நாடே! அங்கு தமிழரின் பண்பாடே பெரிதும் போற்றப்படுவதையும் நாம் காண்கின்றோம்!

இளைஞர்களுக்குக் கம்பன்

ஜே.கே.என். பழனி
நிறுவனர், கம்பன் கழகம், குடியேற்றம்.

தோரணவாயில்

நாம் சாலையில் வெளியூர்ப்பயணம் மேற்கொள்கையில் இருமருங்கிலும் நன்கு வளர்ந்த மரங்களைப் பார்க்கிறோம் அவைகளுக்கு யாரேனும் நீர்பாய்ச்சுகிறார்களா? உரம் இடுகிறார்களா?

அல்லது வேலி போட்டுத்தான் பாதுகாக்கிறார்களா? நன்கு வளர்ந்த மரங்களுக்கு வேலியா, உரமோ தேவைப்படுவதில்லை, நாற்றுகளுக்குத் தான் பாதுகாப்பு அவசியம். இளஞ்செடி கொடிகளை வேலிபோட்டு, நீர் ஊற்றி, எரு இட்டு கவனமாகப் பாதுகாக்காவிடின் அவற்றை ஆடு, மாடு மேய்ந்துவிடும். நீரில்லாமல் வாடி வதங்கி விடும். அதைப்போலவே நாட்டின் நாளைய தலைமுறையாக இருக்கும் இளைஞர்களை நல்வழிபடுத்த கம்பன் காவியம் எவ்வாறு பயன்படும் என ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இன்றைய தேவை

இளம் வயதில் பிஞ்சு உள்ளங்களை மயக்கி, ஏமாற்றித் திசை திருப்பத் தீய சக்திகள் பல நாட்டில் உள்ளன. மதவெறியர்கள், தீவிரவாதிகள் என ஒருபுறம் ! திரைப்படம் தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் மறுபுறம்! அறிவியலின் வளர்ச்சியில் ஊடகங்கள் உணர்ச்சியைத் தூண்டும் கேளிக்கைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. மடிக் கணினியில் பையன் பாடம் படிக்கிறான் என்று நினைத்தால் அவன் 'முக புத்தகத்தால்' விளையாடிக் கொண்டிருக்கிறான். இப்படிப்பட்ட இளைஞர்களுக்குக் 'கம்பராமாயணம்' வழிகாட்டி நிற்கிறது.

விளையாட்டு வினை

விளையாட்டுக்காகக் கூட பிறரைத் துன்புறுத்தக் கூடாது அது வினையாகிவிடும் என்று இராமன் வாயிலாக எச்சரிக்கிறார் கம்பர்.

சிறியர் என்று இகழ்ந்து நோவு செய்வன செய்யல்; மற்று, இந்
நெறி இகழ்ந்து, யான் ஓர் தீமை இழைத்தலால், உணர்ச்சி நீண்டு,
குறியது ஆம் மேனி ஆய கூனியால், குவவுத் தோளாய்!
வெறியன எய்தி, நொய்தின் வெந் துயர்க் கடலின் வீழ்ந்தேன் (4126)

கூனியின் உருவத்தைக் கண்டு விளையாட்டாக அவள் மீது உண்டிவில் கொண்டு சிறு உருண்டையை வீசி விட்டேன் அதன் வினைப் பயன் இன்று அனுபவிக்கின்றேன் என வனத்தில் சுக்கிரீவனிடம் இராமன் வேதனையை வெளிப்படுத்துவதாகக் கம்பர் கூறுகிறார். கூனியை இகழ்ந்து விளையாட்டாக உண்டைவில் வீசியது எத்தகைய துன்பத்திற்குக் காரணமாகிவிட்டது! 'உருவு கண்டு எள்ளாமை வேண்டும்' என்பதை அழகாக எடுத்தியம்புகிறார் கம்பர்.

அன்பின் எல்லை

'காக்கை குருவி எங்கள் சாதி' என்று பாடிய பாரதி, 'வண்டியிழுக்கும் நல்ல குதிரை, நெல்லு வயலில் உழுதுவரும் மாடு, அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு' இவை ஆதரிக்க வேணுமடி பாப்பா' என்று கூறி உயிர்களிடத்தில் அன்பு வேணும் என முடிக்கிறார். சடாயு ஒரு கழுகரசன். சடாயு உயிர்நீத்தபோது இராமன் அதற்கு ஈமச் சடங்கு செய்ததை,

ஏந்தினன் இரு கைதன்னால்; ஏற்றினன் ஈமம்தன்மேல்;
சாந்தொடு மலரும் நீரும் சொரிந்தனன்; தலையின் சாரல்
காந்து எரிகஞல மூட்டி, கடன்முறை கடவாவண்ணம்
நேர்ந்தனன்-நிரம்பும் நல் நூல் மந்திர நெறியின் வல்லான் (3537)

என்பார் கம்பர்.

சாதிகள் இல்லையடி பாப்பா குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்

என்பார் பாரதி. பறவை இனத்தைச் சேர்ந்த சடாயுவுக்கு ஈமக் கடன் செய்தவன் இராமன் என்றால் இராமனின் அன்பு இன்றுள்ள இளைஞர்களுக்குத் தேவைதானே!

உலக சகோதரத்துவம்

வேடர் குலத்துக் குகனையும், குரங்கினத் தலைவனான

சுக்ரீவனையும், அரக்கர் குலத்து வீடணனையும், தன் உடன்பிறப்பாக இராமன் ஏற்றுக் கொள்கிறான்.

குகனோடும் ஐவரானேம் முன்பு குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனேம் எம்முழை அன்பில் வந்த
அகனமர் காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனேம் (6507)

என்று குகன், சுக்ரீவன், வீடணனிடம் இராமன் கூறுவது நட்பு என்பது சாதி இனத்தைக் கடந்தது என விளங்கவில்லையா? 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பார் வள்ளுவர். பிறப்பினால் அனைவரும் சமம் என்ற கருத்தை கம்பர்,

தக்க இன்ன தாகதன இன்ன என்று
ஒக்க உன்னலர் ஆயின் உயர்ந்துள்ள
மக்களும் விலங்கே, மனுவின் நெறி
புக்கவேல் அவ்விலங்கும் புத்தேளிரே (4054)

என்ற வரிகளால் விளக்குகிறார். எனவே இக்கால இளைஞர்களுக்கு சாதி சமயம் கடந்த சமுதாயத்தைப் படைத்திட வழிகாட்டுகிறார் கம்பர்.

தாய் தந்தையைப் போற்றுதல்

தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை
தந்தை சொல்மிக்க மந்திரமில்லை

என்பது நம் முன்னோர் வாக்கு.

ஆழி சூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள, நீ போய்த்
தாழ் இருஞ் சடைகள் தாங்கி, தாங்க அருந் தவம் மேற்கொண்டு,
பூழி வெங் கானம் நண்ணி, புண்ணியத் துறைகள் ஆடி,
ஏழ்இரண்டு ஆண்டின் வா" என்று, இயம்பினன் அரசன்' என்றாள் (1601)

என, 'பதினான்கு ஆண்டு கானகம் செல்' எனக் கைகேயி இராமனிடம் கூறியபோது,

மன்னவன் பணியன்றாகின் நும்பணி மறுப்பெனோ? என்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ (1602)

என்று இராமன் அளித்த பதில் தாய் சொல் எதுவாக இருந்தாலும் அதற்குப் பிள்ளைகள் கீழப்படிதல் வேண்டும் என்ற கம்பரின் கருத்தைத் தெளிவாக்குகிறது.

பகைவருக்கும் அருளுதல்

முதல்நாள் போரில் இராவணன் நிராயுதபாணியாக நின்ற போது ' இன்று போய், போர்க்கு நாளை வா' என இராமன் விளம்பிடுவது, பகைவனிடமும் கருணை காட்ட வேண்டும் என்ற உயர்ந்த பண்பைச் சிறப்பாக எடுத்துக்காட்டுகிறார் கம்பர்.

செய்நன்றியறிதல்

இளைஞர்கள் அவசியம் அறிந்து கொள்ள வேண்டிய இன்னொரு பண்பு செய்ந்நன்றியறிதல்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு

என்பார் வள்ளுவர். கம்பர் தம்மை ஆதரித்த சடையப்ப வள்ளல் என்னும் கொடையப்பரைத் தமது காவியத்தில் ஆங்காங்கே பெருமைப்படுத்துகிறார். அவை அனைத்திற்கும் முத்தாக

அரியணை அனுமன் தாங்க, அங்கதன் உடைவாள் ஏந்த
பரதன்வெண் குடைக விக்க இருவரும் கவரி பற்ற
விரை செறி கமலத் தாள்சேர் வெண்ணெய்யூர்ச் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி, வசிட்டனே புனைந்தான் மௌலி
(10327)

என்று பாடும்போது அந்த மௌலியை வெண்ணையூர் வாழ் சடையப்ப வள்ளலின் முன்னோர்கள் எடுத்துக் கொடுத்ததாகச் சொல்லித் தன் நன்றிப்பெருக்கைப் புலப்படுத்துகிறார் கம்பர்.

முடிவுரை

இளைஞர்களுக்குக் கம்பன் வழிகாட்டும் நெறிமுறைகளை அறிஞர் பெருமக்கள் மூலம் எளிமையாக்கி, இனிமையாக்கி இளைஞர்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். நற்கருத்துகளின் கருவூலமாயத் திகழும் கம்பன் காவியத்தை உரைநடை வடிவில் பள்ளிக் கூடங்களிலும், கல்லூரிகளிலும் துணைப்பாடமாக வைத்திட வேண்டும். வளரும் தலைமுறையைப் பாதுகாக்க நாம் போடும் வேலியாக, உரமாக அது அமையும்.

கம்பனும் கல்வியும்

கு.மா.கோ.இராஜேந்திரன்
தலைவர், கம்பன் கழகம்,
குடியேற்றம், வே.மா.

முன்னுரை

கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு

எனப்பாடிய பைந்தமிழ்த் தேர்ப்பாகன் பாரதி கம்பனையும் கல்வியையும் ஒருசேரப் பாடியிருப்பதன் மூலம் 'கல்வியில் பெரியவன் கம்பன்' என்ற தொடர் புலப்படுத்தப்படுகிறது. இங்ஙனம் கல்வி கம்பருடன் இணைத்தும், சேர்த்தும் சொல்லப்படுவதிலிருந்தே அவரது கல்விப்புலமையும் ஆற்றலும் விளங்கும். கம்பன் தான் படைத்த இராமகதையில் வரும் கல்வி தொடர்பான செய்தியினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கோசல நாட்டு மக்களின் பொழுதுபோக்கு:

கோசல நாட்டு மக்கள் இயலிசை பயன் துய்க்கின்றனர். சிலர் நன்கேள்விச் செல்வத்தைக்கேட்டு அனுபவித்தனர்.

பருந்தொடு நிழல் சென்றன்ன. இயல்இசைப் பயன்துய்ப்பாரும்
மருந்தினும் இனிய கேள்வி செவிஉற மாந்து வாரும் (46)

என்று அவர்களின் பல்வேறு பொழுதுபோக்குகளுள் இரண்டைக் கூறுகிறார். இதனால் மக்கள் தற்காலம் போல வீணான களியாட்டங்களில் பொழுது போக்காமல் கலைகளில் பொழுது போக்கினர் என்பதால் அந்நாட்டின் கலை மற்றும் கல்விவளத்தை அறிமுகப்படுத்துகிறார் கம்பர்.

பெண் கல்வி

ஒரு குடும்பத்தில் ஒர் ஆண் கல்வி கற்றால், அது ஒருவர் பெற்ற கல்வி. ஒரு பெண் கல்வி கற்றால் அது குடும்பமே பெற்ற கல்வி என்கிறார் நம் தேசப்பிதா மகாத்மா காந்தியடிகள். பெண்கல்வியை பாரதி, பாரதிதாசன் போன்றார் முழங்கும்

முன்னரே 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கம்பர் கூறியிருப்பது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. நாட்டுப்படலத்தில்,

பெருந்தடங் கண்பிறை நுதலார்க்கெல்லாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால் (36)

என்று கோசல மங்கையர் மாண்பை விளக்குகிறார் கம்பர். கோசல நாட்டுப் பெண்கள் கல்விச் செல்வத்திலும், பொருட் செல்வத்திலும், அருட்செல்வத்திலும் சிறந்து விளங்கினர். அவர்கள் நாணம், பணிவு, கல்வி முதலிய மகளிர் மாண்புகள் பெற்றவராகையால் தம் இல்லறக் கடமைகளாகிய விருந்தோம்பல், சுற்றத்தார் பேணல் ஆகியவற்றைத் தவறாமல் செய்தனர். கோசல நாட்டு ஆடவர் கல்வியில் சிறந்தவர் என்று பாடாமல், பெண்டிர் கல்வியில் சிறந்து விளங்கினர் என்பதால் குடும்பமும், நாடும் அவர்களால் கல்விபெற்றுச் சிறந்து விளங்கும் என அறியமுடிகிறது.

பெண்கல்வி குறித்த கம்பரின் கல்விச் சிந்தனை இக்கால கல்வியாளர் கருத்திற்கு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் விளங்கியுள்ளது.

மேலும், குடிமக்கள் ஒழுக்கத்தில் சிறந்து விளங்கியதை ஒழுக்கம் குடிக்கு எலாம் (நாட்டுப்படலம், 38) எனச் சுருக்கச் சொல்லி, ஒழுக்கத்தோடு வழங்கப்படும் கல்வி சாலச்சிறந்தது என விளம்பிடும் கம்பரின் கல்விக் கொள்கை இன்று நடைமுறைப்படுத்திட வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்குகிறது.

அயோத்தி மக்களின் கல்வி

மருந்திலும் இனிய கேள்வி செவியுது மாந்துவாரும்

என்பதால் கேள்விச் செல்வமும்,

கந்தனை அனையவர் கலை தெரி கழகம்

என்பதால் பல கலைக் கழகங்களும்,

வெண்மை யில்லை பல கேள்வி மேவலால்

என்பதால் அறியாமை உடையவர் எவருமிலர் என்பதும் நாட்டில்

பல்வகை கலைகளும் நிரம்பி விளங்கின என அறியமுடிகிறது. அந்நகரமக்கள் மனுநூலை நன்கு கற்று, அந்நன்னெறிகளைப் பின்பற்றி வாழ்ந்தனர் என கம்பர் புலப்படுத்துவதன் மூலம் கற்றலும் கற்றவழி நிற்றலும் உடையோராக அயோத்தி நகர மக்கள் விளங்கினர்.

விசுவாமித்திரரால் விளைந்த கல்வி

தான் இயற்றும் வேள்வி காக்க இராமனை அனுப்புமாறு தசரதனிடம் விசுவாமித்திரர் கேட்கிறார். தன் கண்ணான, உயிரான இராமனை அனுப்ப தயரதன் தயங்கினான். அப்போது குலகுருவான வசிட்டர் தசரதனிடம், அவருடன் இராமனை அனுப்பு அதனால் இராமன் அளவற்ற மழை வெள்ளம் போல, அளவற்ற கல்வி அவரால் பெறுவான் எனக் கூறினார்.

ஐய, நின்மகற்கு அளவுஇல் விஞ்சை வந்து
ஏய்து காலம் இன்று எதிந்தது என்னவே (329)

எனக் கம்பர் விளம்பிடும்போது விசுவாமித்திரன் மூலமாக இயற்கை சூழலில் பெறும் அனுபவக் கல்வியே வாழ்க்கைக்கு வேண்டுவது என்பது இதனால் விளங்கும்.

ஆசிரியரின் சிறப்பு

ஆசிரியரின் சிறப்பைக் கம்பர் உணர்த்தியுள்ள பாங்கினை, விசுவாமித்திரர் தன் வேள்வி முடிந்தபின், இராமஇலக்குவரை மிதிலைக்கு அழைத்துச்சென்று சனக மன்னனிடம் அறிமுகப்படுத்தும்பொழுது தசரத புதல்வர்கள் என்றார். பல மனைவியர் கொண்ட தசரதன் மக்களா? என்ற எண்ணம் சனகன் உள்ளத்தில் எழக்கூடாதென்று

திறையோடும் அரசும் இறைஞ்சும் செறிகழற்கால் தசரதன் ஆம்
பொறையோடும் தொடர் மனத்தான் புதல்வரெனும் பெயரே காண்
உறையோடும் நெடுவேலாய் உபநயன விதிமுடித்து
மறையோதுவித்து இவரை வளர்த்தானும் வசிட்டன் காண் (660)

என்று தெளிவுபடுத்தினான். அதாவது இவர்கள் பெயரளவில் தயரதன் பிள்ளைகள். இவர்களுக்குக் கல்வியளித்து ஒழுக்கத்து டன் வாழ பயிற்றுவித்த ஆசிரியர் அருந்ததி என்ற ஒரே

மனைவியுடன் வாழ்ந்த வசிட்டன் என்றார். நல்லாசிரியன் வாழ்க்கையால், பயிற்சியால், மாணவர்கள் நலமுடன் திகழ்வர் என்ற உயரிய கல்விச் சிந்தனை கம்பரால் பெறப்படுகிறது.

முடிவுரை

தமிழகப் புலவர்களுள் கம்பருடன் கல்வி என்பதைச் சேர்த்தே புலவர் பலர் புகழ்ந்துரைத்துள்ளனர்.

கற்றார் கல்வியிற் பெரிதாந் தமிழ்க்கம்ப நாடன்
உற்றாங் குரைத்தான் உரையாதன ஓதுநிற்பாம்

என்று அரசகேசரி பாராட்டுவார். கம்பராமாயணத்தில் கல்வி தொடர்பான ஏராளமான சிந்தனைகள் இடம்பெற்றிருப்பதால் அச்சிந்தனைகளைப் பயன்படுத்தி நம்நாடு கல்விவளர்ச்சி பெற்ற நாடாக உருவாக்குதல் நமது கடமையாகும்.

கம்பர் விருந்து

ச.விஜயலெக்ஷ்மி குமரகுரு
பெங்களூரு

முன்னுரை

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்.. பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை என நெஞ்சு நிமிர்த்திப் பாரதி பெருமிதம் கொண்டதற்குக் காரணம் கம்பன் இராமாயணம் எனும் சொற்றமிழ் விருந்து நமக்களித்தது தான். வடமொழிக் காவியம் வான்மீகி ராமாயணத்தை மூலமாகக் கொண்டு வடமொழிச் சொல் சிறிதும் கலவாது, தமிழ் மரபு மாறாது, யாப்பு, அணி, பொருள் நடை ஆகிய அனைத்தாலும் மிகச் சிறந்த ஒப்பற்ற காவியம் படைத்துத் தந்தது தான்.

வெய்யோன் ஒளி தன் மேனியின் விரிசோதியின் மறைய
பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்
மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ
ஐயோ இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகுடையான்
(1926)

என்றவாறு எண்ணற்ற இடங்களில் வியத்தகு வகையில் தேர்ந்தெடுத்த சொல்லடுக்குகளால் நமக்கு சொல் விருந்து அளிக்கின்றார் கம்பர். அதனைப் போற்றாதோர் பூமிதனில் எங்கேயும் இல்லை என்றே சொல்லலாம். அவரளித்த சொல்லமிழ்தத்தைச் சுவைத்தவர் அத்தனை பேரும் உள்ளூற அளித்த உண் விருந்தை ருசித்திருப்பாரா என்றால் சந்தேகம் தான். சொல் விருந்தை அனுபவிக்கத் தமிழறிவு சிறிதேனும் வேண்டும். உண்ணும் விருந்தை அனுபவிக்க ஒரு சாப்பாட்டு ராமன் போதும். இங்கு ஒரு புதிய பரிமாணத்தில் கம்பன் விருந்தை நாம் சுவைப்போம்.

எதிரில் வரும் ஒரு நண்பரைப் பார்த்து உங்களுக்குச் சமைக்கத் தெரியுமா? என்று கேட்டால் என்ன பதில் கிடைக்கும்? அதென்ன பெரிய கம்ப சூத்திரமா என்ன? என்று ஏளனமாகத்தான் கேட்பார். நான் அறுதியிட்டுக் கூறுகிறேன். கம்பரைத் தவிர வேறு யாராலும் ஒரு காப்பியத்தில் இந்த

அளவிற்கு நமக்கு விருந்தைத் தந்திருக்க முடியாது. அது கதிர் விளையும் மருத நிலமாகட்டும், இரத்தம் வழியும் பொருது களமாகட்டும், எந்த இடத்திலும் கம்பர் தன் கைவண்ணம் காட்டுகிறார். ஆங்காங்கு விளையும், கிடைக்கும் பொருட்களை மூலமாகக் கொண்டு அவர் அமுது படைக்கும் திறனே அருமை. அத்திறத்தை விளக்குவதே இக்கட்டுரை.

உட்கொள்ளும் உணவானது. ஆயுள், ஆரோக்கியம், அறிவு, பலம், சுகம், சுவை ஆகிய அனைத்தையும் அளிப்பது. அத்தகைய உணவு என்பது நான்கு வகைகளாய்ப் பிரித்துச் சொல்லப் படுகின்றது. அவையாவன, உண்ணுவது, தின்னுவது, நக்குவது, பருகுவது என்பதாம். திடமான மற்றும் திட திரவமான *(Solid liquid)* ஆகியவை உண்ணுவது. அவை சோறு கூழ் போன்றவை. தின்னுவது என்பது பற்களால் கொறித்துச் சுவைத்துத் தின்பது இலை, காய் கனிகள், தின்பண்டங்கள் போன்றன. பருகுவது என்பது பால், மோர், கரும்புச்சாறு அமுதம். பாயசம் ஆகிய திரவ வகைகள். நக்குவது என்பது தேன், வெண்ணெய், நெய் போன்ற குழைவான வகை உணவுகள். இத்தனை உணவு வகைகள் அனைத்தையும் தம் காப்பியத்தில் ஆங்காங்கே அளித்துச் செல்கிறார் கம்பர்.

பாலும், கலந்த தேனும்:

கம்பர் ஒரு உணவுப் பிரியராக இருந்திருப்பார் போலும், குருந்த மரம், மருத மரம் ஆகிய அனைத்தையும் புரட்டிப் போட்டுக் கொண்டு பொங்கிப் பிரவகிக்கும் சரயு நதி வெள்ளத்தை விளக்க வந்த இடத்து, அவர் சொல் வண்ணம் நாவில் சுவையூட்டுவதை உணரலாம். ஆயர்பாடியில் உறிகளில் கட்டித் தொங்க விடப்பட்டு நிறைந்து உறைந்திருக்கும் அடர்த்தியான நல்ல மணம் உள்ள தயிரும், கெட்டியான பாலும், திரண்ட வெண்ணெயும், நெய்யும் ஆகிய அனைத்தையும் வாரி விழுங்கி மரங்களையும் புரட்டி உருட்டிக் கொண்டு செல்கிறது வெள்ளம் என்றவாறு விளக்குகின்றார்.

செறி நறுந் தயிரும் பாலும் வெண்ணெயும் சேந்த நெய்யும்
உறியொடு வாரி உண்டு குருந்தொடு மருதம் உந்தி (26)

என்றவாறு. வெள்ளத்திற்கும் பால் வெண்ணெய் தயிருக்கும் என்ன சம்பந்தம்? சரயு நதி வெள்ளமானது அத்தகைய அடர்த்தியான திரண்ட பாலையும் தயிரையும் வெண்ணெயையும், நெய்யையும் வாரி உண்டதால் அதிக தெம்பும், தினவும் வந்ததால்தான் அந்த மரங்களை அத்தனை எளிதாய் அப்படி உருட்டிச் சென்றதோ?

பால், தயிர், நெய் சுவை தந்த கம்பர் அடுத்து தேன் சுவையைக் கூட்டுகிறார்; அந்தத் தேனில் தான் எத்தனை வகையைக் காட்டுகிறார்?

கரும்பாலைகளிலிருந்து வெளிவந்த கருப்பஞ்சாறாகிய தேனும், தென்னை, பனை இவற்றினிருந்தும் தோன்றி வடிகின்ற கள்ளெனும் தேனும், சோலைகளில் நிறைந்து பெருகும் பழச்சாறு என்னும் தேனும், தேன் கூட்டிலிருந்து சீராக ஒழுகும் தேனும். மக்கள் அணிந்த மலர் மாலைகளிலிருந்து சிந்தும் தேனும் எல்லாமுமாய் ஒன்று சேர்ந்து அளவு கடந்து பெருகியோடி கடலிலே கலக்க.. அப்பல்வகை கலப்பான தேனை கடலில் உள்ள மீன்கள் உண்டு களிப்படைந்தன என்ற கலந்த மதுவின் மயக்கத்தை தமிழ்த்தேனால் நமக்கும் அல்லவா ஊட்டுகிறார்

ஆலைவாய்க் கரும்பின் தேனும் அரிதலைப் பாளைத்தேனும்
சோலைவீழ் கனியின் தேனும் தொடையிழி இறாலின் தேனும்
மாலைவாய் உகுத்த தேனும் வரம்பு இகந்து ஓடிவங்க (40)

என்னும் வரிகளால் இங்ஙனம் இயற்கையாகக் கிடைத்தன. கிடப்பனவற்றைச் சுவைத்த கம்பர் அடுத்து விருந்து தயாரிப்பதையும் நமக்கு விளக்குகின்றார்

விருந்தொடு உண்டல்:

கம்பன் காப்பியத்தில் நாட்டின் விளைபொருள் வளம் வெகு சிறப்பாக இப்பகுதியில் காட்டப்படுகின்றது.

விருந்திற்கான பொருட்களை சேகரிக்கின்றனர். விளைந்து பெருகிய நெல் மணிகளை கொடுக்க வேண்டியவருக்குக் கொடுத்தும். வறியவர்களுக்குத் தானம் கொடுத்தும் பின்னர் அத்தானியங்களைக் கட்டி வீட்டுக்கு எடுத்துச் செல்கின்றனர். வழியில் விளைந்து முதிர்ந்த மரங்களிலிருந்து கனிகள், காய்கள்,

படர்ந்து கிடக்கும் கொடிகளிலிருந்து வேண்டிய வற்றையும். வழியில் புன்செய் விளைபொருட்களையும்கூடத் தோண்டி அகழ்ந்து எடுக்க வேண்டிய இஞ்சி, மஞ்சள், வள்ளி, மற்ற கிழங்குகளையும் கையகப் படுத்திக் கொண்டு உழவர்கள் வீடு செல்கின்றனர்.

இவ்வாறு சேர்த்துக் கொணர்ந்த விளை பொருட்களால் மக்கள் அத்தனை பேர் வீடுகளிலும் விருந்துணவு தயாராகின்றது. எப்படிப்பட்ட விருந்து?

சமையல் சாலைகளில் உலை கொதிக்கும் ஒலி பெரிதாகக் கேட்கின்றது. அங்கு எழும் புகை மண்டலம் வானத்தில் சென்று மேகக் கூட்டங்கள் போலக் காணப்படுகின்றன. அனைத்தில்லத்தாரும் அரிசியைக் கழுவி ஊற்றிய நீர் வெள்ளமாகப் பெருகி விளைநிலங்களில் வடிந்து செந்நெல் நாற்றுகளை வளர்க்கின்றபடி வடிகின்றது.

திருமணம் மற்றும் மங்கல நிகழ்வுகளின்போது பலவகையான பருப்புகளைச் சேர்த்து உணவு தயாரிப்பதை 'முப்பருப்பு' விருந்து என்பர் அந்த வகையில் பருப்பு கலந்த உணவில் அது மூழ்கும் வண்ணம் நெய்வார்த்து, ஆண்டாள் நாச்சியார் அருளியது போல ...மூட நெய்பெய்து முழங்கை வழிவார.. உண்ணவும் அடுத்ததாக அடைபோட்டு காய்ச்சியதால் கெட்டியாகி செந்நிறமான பாலை உறையூட்டியதால் ஆன சுவையான கெட்டித்தயிரை சோற்றில் விட்டு அதில் கண்டச் சர்க்கரை கலந்து, பின்னர் மா, பலா, வாழை ஆகிய முக்கனியும் சேர்த்து உற்றாரோடும். வந்த விருந்தினரோடும் கூடி உண்ணும் சுவையும் கலந்து சிறப்பான விருந்தைச் சமைத்துச் சுவைப்பதைக் காட்டுகின்றார் கம்பர்.

முந்து முக்கனியின் நானாமுதிரையின் முழுத்த நெய்யின்
செந்தயிர்க் கண்டம் இடைஇடை செறிந்த சோற்றின்
தந்தம் இல்இருந்து தாமும் விருந்தோடும் தமரினோடும்.(53)

என்னுமாறு விளக்குகிறார்.

ஈகையும் விருந்தும்:-

... வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே (67)

வந்தவர்களுக்கு வஞ்சனையில்லாமல் உணவு வழங்கும் அன்ன சத்திரங்களையும் காட்டுகின்றார் கம்பர். அங்கே வெண் முத்துக் குவியல் போல குவிந்து கிடக்கின்றது அரிசி மணிகள். பக்கத்தில் பருப்புகள் மலைபோல, அதையும் தாண்டி அரிவாள் மணையில் அரிந்து திருத்தப்பட்ட காய்கறிக் குவியல்களும் காணக்கிடைக்கின்றன.

சரி. இங்ஙனம் வந்தவர்க்கெல்லாம் விருந்திட வேறு என்னென்ன தேவை? சத்து மிகுந்த சிறுதானிய வகைளையும் சேகரிக்கின்றார் 86ஆவது பாவில். எள், செந்திணை, சோளம், சாமை, கொள் இத்தனையோடும் இவற்றைச் சமைத்துப் பக்குவப் படுத்துவதற்குத் தேவையான உப்பு. உப்பளத்திலிருந்தும் அமுது போன்ற உப்பையும் வண்டியிலேற்றிக் கொண்டு வருவதைக் காட்டுகின்றார். தேன், வெல்லப்பாகு, கண்ட சர்க்கரை போன்ற ஒன்றையும் விட்டுவிடாமல்,

வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதருக் கெல்லாம்.. என்னும் கருணையை, கருத்தை கம்பரின் பாக்களில் நாம் காணலாம்.

பால்-பழச்சாறு:

பால் பழச்சாறு - மில்க் ஷேக் என்று இக்காலத்துப் புழக்கத்தில் இருக்கும் சுவையான ரசத்தின் சமையல் குறிப்பு செய்முறையை *(Recipe)* முதன் முதலில் கண்டு தெரிவித்தது கம்பர்தான்.

முறையினின் முதுமேதியின் முலைவழிப் பாலும்
துறையின் நின்று உயர் மாங்கனி தூங்கிய சாறும்
அறையும் மென்கரும்பு ஆட்டிய அமுதமும் அழிதேம்
நறையும்... (456)

என்னுமாறு பாலும், மாங்கனிச்சாறும். கரும்பின் சாறும் தேனும் சேர்ந்தவாறு மிதிலையின் ஆறுகள் நீரைக் கொண்டிருந்தன என்னுமிடத்தில் காட்டுகின்றார்.

குகன், சபரி அளித்த விருந்து:

தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்பதற்கு உதாரண

புருடனாய் காடேகிய இராமன் கங்கையைக் கடக்கும் இடத்தில் ஓடக்காரனாம் குகன். அளவில்லா அன்பை உடைய அவன் தான் கொண்டு வந்த உணவை இவர்கள் உண்ணுவார்களோ என்னும் அச்சத்தோடு,

...தேனும் மீனும் அமுதினுக்கு அமைவது ஆகத்
திருத்தினென் கொணர்ந்தேன் என்கொல் திருவுளம்..?
(1966)

என்றனன். அந்தக் காட்டில் அவனுக்கு என்ன கிடைக்கும்? அடர் வனத்து மரங்கள் தந்த செறி தேன், ஆழ் நீர் தந்த மீன் இவை தானே? உயர்ந்த மரக்கொம்புகளின் உச்சியில் ஆன தேன் குகன் இராம பிரானிடத்துக் கொண்ட உயர்ந்த பற்றையும். ஆழத்துக் கிடைத்த மீன் அவன் பிரானிடத்துக் கொண்ட ஆழ்ந்த அன்பையும் அவற்றைத் திருத்திக் கொண்டு வந்தேன் என்றது அவன் அக்கறையையும் குறிப்பால் உணர்த்தியதாம்.. அதனைக்; கண்ட இராமபிரான்,

'உள்ளத்துக் கொண்ட அன்பினால் பக்தியோடு அருமையாய்க் கொண்டுவரப்பட்ட இத்தேனும் மீனும் அமிழ்தைக் காட்டிலும் சிறந்தவை; அவ்வகை நீ கொண்டு வந்தவை எவையாயினும் தூய்மையானவையே அவற்றை யாம் இனிதாக உண்டவர் போல் ஆனோம்' என்றருளுகிறார்.

ஆரணிய கண்டத்தில் இராமன் சபரியைச் சந்திக்கிறார். சபரி, உம்மைச் சந்தித்ததால் என் மாயப்பாசம் நீங்கியது; என் நெடுந்தவத்தின் பயன் கிட்டியது என மகிழ்ந்து பிரான் உண்பதற்குக் தேவையான காய்-கனி இவற்றைக் கொடுத்து உபசரித்தாள். பிரானும் ...எங்கள் வருந்துறு துயரம் தீர்த்தாய் அம்மனை வாழி! (ஆரணியகாண்டம் 1187) என மகிழ்ந்தருள் புரிகின்றார். இராமாயணத்தில் மிக முக்கியமான காட்சி இது. வான்மீகி இராமாயணம்; சபரி கனிகளைத் தான் முன் சுவைத்து இனிமையான கனிகளைத் தேர்ந்தெடுத்தே பிரானுக்கு அளித்தாள் என்று உரைக்கின்றது. கம்பர் அந்த விதியை மாற்றி

...வேண்டிய கொணர்ந்து நல்க விருந்து செய்து..(ஆரணியகாண்டம் 1185) என்றவாறே அருளுகின்றார்.

சுக்ரீவன் அளித்த விருந்து:

இராமர்-சுக்ரீவன் நட்பு கொண்ட இடத்து உனக்கு உண்டான துயரங்களைத் தீர்ப்பேன் என்றருள்கிறார். அச்சமயம் வானரர்கள் சென்று இனிமையான கனிகளையும், உண்பதற்கேற்றதான கிழங்குகள், இலை, வேர் முதலியனவற்றைத் தேர்ந்து கொண்டு வந்து நல் விருந்து கொடுத்தனர்.

விளைச்செல்வங்கள் பெருகிய இடத்து வளமான சூழல், மகிழ்ச்சியான சூழல், துன்பச் சூழல், அன்பு-நட்பு-பக்தியுடன் ஆன சூழல் ஆகிய இடத்தெல்லாம் கம்பன் தந்த விருந்தை ருசித்தோம். சோகமான சூழலில் அதைப் பற்றிச் சிந்திக்க முடியுமா?

அசோக வனத்தில் சீதை.. துயரத்தின் உச்ச கட்டம்; அன்னை அமர்ந்திருந்த இடம் கரையான் புற்றாகி சூழ ஆரம்பித்து விட்டது. ..மருந்தும் உண்டு கொல் யான்கொண்ட நோய்க்கு.. என அன்னை மயங்கும் அந்த இடத்திலும் விருந்து பற்றி நினைக்க யாரால் முடியும் கம்பனைத் தவிர?

அருந்தும் மெல்லடகு ஆர்இட அருந்தும் என்று அழுங்கும்
விருந்து கண்டபோது என்னுறுமோ என்று விம்மும்... (5083)

மென்மையான இலை உணவு போன்றவற்றை இராமன் உண்ண யார் பரிமாறுவார்? இந்நிலையில் விருந்தினர் வந்துற்றால் உபசரிப்பார் இல்லாமல் அவர் என்ன நிலைக்கு ஆளாவாரோ? என்று விம்முகிறாள் அன்னை. அடுத்து,

வானரர் விருந்து:

கண்டேன் அன்னையை எனப் பொங்கும் மகிழ்வோடு வந்த அனுமனை வானரர் கண்டனர். அழுதனர்; சிலர் தொழுதனர் சூழ்ந்து கொண்டனர். வெற்றியோடு வந்த அனுமனைத் தழுவி,

'தேனோடு கிழங்கும் காயும் நறியன அரிதின் தேடி... (திருவடி தொழுத படலம் 1251) இதோ வைத்திருக்கிறோம் இவற்றை உண்டு இளைப்பாறுக' என்று வரிசையாக வந்து தந்ததனைப் பதிவிடுகிறார் கம்பர்.

அசைவ உணவு:

இதுவரை கம்பர் தந்த சுவையான சைவ உணவினை ருசித்தோம் இப்போது அரக்கர்களுக்கே உரித்தான உணவை இவண் பார்ப்போம். உறக்கம் நீங்கி எழுந்த கும்பகருணன்,

ஆறு நூறு சகடத்து அடிசிலும் நூறு நூறு குடங் களும் நுங்கினான்(கும்பகருணன் வதைப்படலம் *1272,1273*) இதெல்லாம் பசியைத் தூண்டுவதற்கானவைமட்டுமே. பின் ஆயிரத்து இருநூறு கடாக்களை ஒருவிதச் சிரமமும் இல்லாமல் சிற்றுண்டியாகத் தின்று பசியைச் சிறிதே தணித்துக் கொண்டானாம் பெருமை பொருந்திய உணவைப் பிறகு உட்கொள்வோம் என்றபடி காட்சிப் படுத்துகிறார் கம்பர்.

முடிவுரை:

உயிர்கள் உயிர்த்திருப்பதற்கு உணவு தேவை அது எந்த வடிவில் ஆன போதும். ஆதி மனிதன் வேட்டை தொடங்கியதிலிருந்து, விஞ்ஞான வித்தகத்தால் வேற்றுக் கிரகத்தில் கால் பதிக்கும் இன்று வரை உணவுத் தேவைக்கு முற்றுப் புள்ளி என்பதே கிடையாது. இதனை நன்கு உணர்ந்ததாலேயே கம்பன் காப்பியத்தின் எல்லாக் கட்டத்திலும் அதனைப் புகுத்தி காட்டியிருக்கின்றான். கம்ப இராமாயணத்தில் அறமும், மறமும் காணும் போது மாற்றுப் பரிமாணத்தில் இதனையும் காணமுடிகின்றது. கம்பனின் தேன் தமிழில், சொற்சுவையும் பொருட் சுவையும் கூட உணவுச் சுவையும் பொருந்தி இருக்கையில்,

இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்

கம்பரின் இலக்கிய நடையில் யாப்பும் அணியும்

கோ. கோகிலா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு),
சீதாலெட்சுமி இராமசுவாமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி-02.

கம்பர் யாத்த நூல்களுள் காப்பியப் பனுவலோடு அமைந்த நூலே கம்பராமாயணம். இந்நூலைப் பற்றி அறியாதவர் எவரோ? பாமர மக்களும் இக்கதை அறிந்தவரே. வடமொழி கலவாத தூய தமிழ்ச் சொற்களைத் தனது நூலில் கையாண்டதால் கம்பர், தொல்காப்பிய நெறி நின்றவர் என்றும் புகழப்படுகிறார்.

வடசொல் கிளவி வடஎழுத்தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகுமே-தொல் (எ-5)

என்ற நூற்பாவும் கூறுகிறது. இப்படிப்பட்ட புகழ் வாய்ந்த கம்பரின் சொல்லாட்சியை மதுரப்பா என்றே குறிப்பிடலாம். ஆறு காண்டங்களையும், பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களையும் நூற்றி பதிமூன்று பாடல்களையும் கொண்ட இந்நூல் பெருங்காப்பிய இலக்கணத்தோடு அமைந்துள்ளது. எனவே இலக்கணமும், இலக்கியமும் கலந்து வரும் இப்பாடல்களில் யாப்பும், அணியும் அமையும் உத்திகளைப் பற்றியே இவ்வாய்வு அமையவுள்ளது.

கம்பனின் இலக்கிய உத்திகளை ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம்.

1. யாப்பு நிலை உத்திகள் (Prhsedical Techniques)
2. மொழி நடை உத்திகள் (Stylistic Techniques)
3. அணி உத்திகள் (Rhethrical Techniques)
4. காப்பிய அமைப்பு உத்திகள் (Epichs theematic Techniques)

எனவாகும்.

யாப்பு உத்திகள்

செய்யுள் இலக்கியத்தில் முக்கிய இடத்தை யாப்பு உத்திகள் பெறுகின்றன. செய்யுள் ஒழுங்கமைப்புக்கு மிகத் தேவையான

உத்திநிலையை யாப்பு வடிவம் அளிக்கின்றது. செய்யுள் இலக்கியங்கள், யாப்பு வடிவினை இன்றியமையாத கூறாகக் கொண்டதாகும். கவிஞரின் தனித்தன்மையாகும், ஆற்றலுக்கு ஏற்பவும், பாடு பொருளுக்கு ஏற்பவும் யாப்பு வடிவத்தை மாற்றி அமைக்கலாம். உணவு, பொருள், காட்சி போன்ற பொருள்களுக்கேற்ற சந்தமாற்றம் ஏற்படுவதும் யாப்பு உத்தியில் குறிப்பிடத்தக்கவை ஆகும். கவிதை படிக்கும் போது ஒரே ஓசை காரணமாக சோர்வு ஏற்படா வண்ணம் கவிஞன் பலவகை ஓசைகளைக் கவிதைகளில் அமைத்து செவிக்கு இனிமை தருகின்றான். சோர்வு நீக்குவதாகவும், சுவை சேர்ப்பதாகவும், நயம் மிகுந்ததாகவும் அமைகிறது. எண்சீர் அமைதியும் விரிவுமுடைய செய்யுளுக்குப் பயன் கொள்ளுவதிலும் தனித்தன்மை புலப்படுகின்றது. காட்சி மாற்றம், காட்டும் தனித்தன்மை புலப்படுகிறது. காட்சி மாற்றம் காட்டும் போது மட்டுமின்றி உணர்வு மாற்றம் வெளிப்படுமிடத்தும் பாவமைப்பில் மாற்றம் தந்து புலப்படுத்துதல் யாப்பு உத்தியாகும்.

விருத்தப்பாவகையை ஆளுவதிலும், ஒருவகை விருத்தத்தின் ஒலிநிலை வேறுபாடுடைய பாக்களை ஆளுவதிலும் கம்பன் சிறப்புடையவனாக விளங்குகின்றான். ஒவ்வொரு இடத்தில் திருப்பம் உருவாகும் போதும் கவிஞன் யாப்பு அந்தாதியைப் பயன்கொண்டு யாப்பு மாற்றத்தால் வரும் விளைவை ஒத்த மாற்றத்தை ஆற்றொழுக்குப் போன்று வந்த நிலை சிறிது வேறுவிதமாகத் திரும்பிச் செல்லுவதைக் காட்டுகின்றன.

மாயமானைப் பற்றியக் கருத்து வேறுபாட்டில் சீதையின் சீற்றமும் இராமனின் செயல்பாடும் வருமிடத்தில்,

நாயக நீயே பற்றி நல்கலை போலும் என்னா
சேயரிக் குவளை முத்தம் சிந்துபு சீறிப் போனாள் (3303)

போனவள் புலவி நோக்கி புரவலன் பொலன்கொள் தாராய்
மான் இதுநானே பற்றி பற்றி வல்லையன் வருவென் நன்றே
(3304)

இதுபோன்று அந்தாதிக்கும் வழி வகுத்துள்ளார். 'மடக்கு' உத்தி முறைகளுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. ஒர் அடி அல்லது அடிப்பகுதி தொடர்ந்து வரும் அடி அல்லது அடிகளில் மீண்டும்

வரலாம். ஒரே அடியில் ஒரு சொல் அருகருகே மீண்டும் வரும் இது இரட்டையாப்பாகவும் அமையும். மடக்கில் பலவகைகள் உள்ளன. முழு அடி மடக்குதல், அடிப்பகுதியோ, முதற்சீரோ மடக்குதல் எனும் அமைப்பு உள்ளது.

ஈரடி மடக்கு

ஈரடி மடக்குகள் பெரும்பாலும் போர்க்களக் காட்சியில் வருமிடத்து போரோசை மீண்டும் உயர்ந்தும் தாழ்ந்தும் சுவையாக எழும் நிலையையும் உள்நிறுத்தி நிற்கின்றது என்று எண்ணம் ஏற்படும் போது வெறும் சொல் வித்தையாக அன்றி; பொருளும், ஓசையும் சிறக்க நயமுடன் அமைக்கும் தனியுத்தி நிலையும் இணைந்து வருகின்றது. நீளொலிகளும், மெல்லின ஒலிகளும் இணைந்து துன்ப உணர்வு மிக்க சூழற்பொருளுடன்; இணைந்து செல்வதனை,

உணர்வான் அனையாள் உரையால் உயர்நதான் உரைசால் குமரன்
புணரான் நிலமே வனமே போவானே ஆம்என்னா
இணர் ஆர்தரு தார் அரசன் இவரால்அயர் வான் வினையேன்
துணைவா துணைவா என்றான் தோன்றால் தோன்றாய் என்றான்- (1659)

முன்னதில் விரைவும இதன்கண் வருத்தமும் வெளிப்படும் வண்ணம் ஒலிகள் பயில்கின்றன. எனவே பாடலின் மொத்த ஓசையும் பொருளினைப் புலப்படுகின்றது.

இயைபு

இயைபுத் தொடையும் பிற எதுகை மோனைகளும் சீரில் அமைவதைக் கம்பனில் காணலாம்.

மலையே மரனே மயிலே கறிலே
கலையே பிணையே களிறே பிடியே (3393)

சீர்தோறும் இல்லாதும் நாற்சீரின் மிக்க அடிகளிலும் இவ்இயைபு காணப்படுகின்றது.

அணி

அணி இலக்கியத்திற்கு அழகு சேர்ப்பன இவை. வெறும்

அலங்காரமாக மட்டும் அமையாது சில நோக்கம் நிறைவேற விளைவு கருதியும் பயன்தந்து கையாளப்படும் போது உத்தி நிலை பெறுகின்றது.

உவமை

அணிகளில் அடிப்படையானதும், மிகுந்த பயிற்சியுடையதும் இலக்கியத்திற்கு இன்றியமையாததும் பலவகையான பொருளணிகளின் தோற்றக் களனாய் அமைவது உவமை ஆகும். உவமை வகைகள் அமையக் காப்பியங்களின் பெருக்கும் பரப்பும் காரணமாவதோடு, கவிஞனின் தனித்தன்மையும், படைப்பாற்றலும் சில தோற்றங்களும் காரணமாக அமைகின்றன. காப்பிய உவமைகளை,

1. நெடும் உவமைகள்
2. காப்பிய உவமையுத்திகள்

என இருவகையாகப் பிரிக்கின்றனர்.

என் ஒக்கும் என்னல் ஆகும் இளையவ இதனை நோக்காய்
தன் ஒக்கும் உவமை அல்லால் தனை ஒக்கும் உவமை உண்டோ-
3294

மாயப் பொன் மானை இராமன் எனச் சுட்டுவதாக அமைகின்றது காப்பியத் தலைவனைப் பன்முறை உவமையோடு காட்டும் கவிஞன் அவன் உவமைத் தன்மைக்கு அப்பாற்பட்டவன் என உரைக்கும் போது உவமை வெறும் போலி நிலையினது என்னும் பொருளில் சிறப்பு பெறுகின்றது.

மா இயல் உதயம் ஆம் துளப வானவன்
மேவிய பகை இருள் அவுணர் வீந்து உக
கா இயல் குடவரை காலநேமி மேல்
ஏவிய திகிரி போல் இரவி ஏகினான். (2083)

கீழ்வானம் துழாய் மாலை அணிந்த கரிய வானாகவும், அங்கு நின்று எழுந்து சுழன்று செலுத்திய ஆழிப்படையாகவும், இருள் கிழிந்து எழுந்த கதிர் அசுரரை அழிக்க ஏவப்பட்ட திகிரியாகவும் பொருந்துகின்றன. திருமால் தன் மனங்கவர்ந்தது போன்றே அவனது மற்றொரு மன்னர் அவதாரமான கண்ணனும்

கவிஞனை ஆழ்ந்து பற்றுக் கொள்ளச் செய்ததை பல உவமைகள் வாயிலாக அறியலாம்.

சூர்ப்பணகை பன்முறை சீதையை மலர்களுடன் இயைகின்றாள். முதலில் சீதையைக் கண்டமையை,

அரவிந்த மலருள் நீங்கி அடி இணை படியில் தோய
திரு இங்கு வருவாள் கொல்லோ என்று அகம் திகைத்து நின்றாள்
(2790)

எனச் சீதையைக் காட்சிப்படுத்துகின்றான் கம்பன்.

சீதையைப் பற்றி இராமனிடம் உரைக்கும் போதும்,

'தாமரைத் தவிரப் போந்தாள்' (3133)

எனவும் திருவினும் சிறந்தவள் என்ற நிலையில் சீதையை,

.... தார் தந்த கமலத்தாளை தருக்கினர் கடைய சங்க
நீர்தந்தது அதனை வெல்வான் நிலம் தந்து நிமிர்ந்தது அன்றே
- 3144

எனக் கூறுகிறது கம்பனின் உவமை.

அரசிழந்த நிலையில் தன் ஒரே செல்வமாக அமைந்த இல்லாளையும் பறிகொடுத்த தன்மையில் இச்சமுதாய உண்மையை அமைக்கின்றான். கவிஞன் மண்ணில் மறைத்து வைக்கப்பட்ட பெரும்பொருள் மண்ணோடு மறைந்தது போல, பர்ணசாலையுடன் மறைந்த சீதை நிலை பொருந்துகின்றது. உடையவன் இல்லா வேளையில் பொய்மை வேடத்தில் பொருளைக் கவர்தல் போல மாயமான் பின் சென்றதால் சீதையை நீங்கிய சூழலில் அரக்கனிடம் தன் பொருளை இழக்கின்றான் இராமன்.

கைத்த சிந்தையன் கனங்குழை அணங்கினைக் காணான்
உய்த்து வாழ்தரவேறு ஒரு பொருள் இலான் உதவ
வைத்த மாநிதி மண்ணொடும் மறைந்தன வாங்கிப்
பொய்த்துளோர்கொள திகைத்து நின்றானையும் போன்றான்
(3474)

தன் வாழ்வின் ஒரே பற்றுக் கோட்டை இழந்த திகைப்பில் தவிப்பில் நின்ற அவனைப் பொருத்தமாக மாநிதி இழந்தவனாக அமைத்துள்ளார்.

இயற்கை

இயற்கை உவமைகளையும், வாழ்வில் காணும் மிக இயல்பான செயலைக் காட்டும் உவமைகளையும் அழகுணர்வுடனும் கருத்து விளக்க முறையிலும் விளக்குகிறார்.

மூங்கில்கள் உரசுவதால் எழும் தீ மூங்கிற்காடு முழுவதையும் அழிக்கும் இயற்கை பற்றிய மரபு உண்மையை அரக்கர் குலத்தை அழிக்கும் தன்மையினளான சூர்ப்பணகைக்குக் கம்பர் உவமிக்கின்றார்.

வான்தொடர் மூங்கில் தந்த வயங்கு வெந்தீ இது என்னத்
தான்தொடர் குலத்தை யெல்லாம்தொலைக்குமா சமைந்து நின்றாள்
(2940)

'நெருப்பிலிடப்பட்ட மெழுகு' என்பது உவமை. மெழுகு என்பதற்குப் பதிலாக உருக்கு, அரக்கு, வெண்ணெய், நெய், விறகு என்பனவும் காணப்படுகின்றன. அது போன்று கொடி மலர், கழை, வனம் என்பன நெருப்புறுதலும் ஒப்புடைய உவமைகளாகும். தீயிடை விறகும் நெய்யும் வெகுளி பொங்க உவமையாகக் கூறப்பட்டுள்ளன.

அயிலுடை அரக்கின் உள்ளம் அவ்வழி மெல்ல மெல்ல
வெயிலுடை நாளில் உற்ற வெண்ணெய் போல் வெதும்பிற்று அன்றே
(3151)

எனச் சீதையைப் பற்றிக் கேள்விப்பட்ட இராவணன் நிலையைக் காட்டுகின்றான் கம்பன்.

இவ்வாறு கம்பனின் இலக்கிய நடையில் யாப்பும், அணியில் உவமையும் அமைந்து வருவதை மேற்கண்ட செய்திகள் வழி காண முடிகின்றது. காப்பிய அமைப்பில் அமைந்த கம்பராமயணம் முழுவதும் ஒவ்வொரு பாடலும் சுவை மிகுந்தும், சொல்லும், எழுத்தும், மிளர்ந்து வருவதிலும் கம்பனின் கலைநயத்தை விண்ணோடு ஒப்பிடலாம். கம்பரின் இலக்கியத்தில் கூறப்படாத அழகும், அறிவும் இல்லை என்றே எண்ணும்படி இவரின் கவித் தன்மையை ஆராய்தல் என்பது மிகவும் எளிதன்று.

கம்பன் இலக்கியத் திறனாய்வுப் புதிய பார்வைகள்

பேராசிரியர் பெஞ்சமின் இலெபோ
இலக்கியத்தேடல் நிறுவுநர் & தலைவர்.
கம்பன் கழகம், பிரான்சு.

கம்பன் காவியம் - காலத்தால் அழியா ஓவியம்! சிந்தையை மயக்கும் விந்தைச் செய்திகள் பல அஃதில் உள .அவற்றுள் சிலவற்றை மட்டும் இங்கு காண்போம்.

1. புதுமை நாடகம்

நாடகக் கலை இதுவரை காணாத புதுமை நாடகத்தைக் கம்பன் அரங்கேற்றிக் காட்டுகிறார் என்ன புதுமை இதில்? நாடகம் என்றால் வசனங்கள் வேண்டாவோ? இந்த நாடகத்தில் வசனமே இல்லை! அஃறிணை பாத்திரங்கள் இரண்டு; உயர்திணை பாத்திரங்கள் இரண்டு...அவ்வளவுதான். கடகடவென நாடகம் நடந்தேறி முடிகிறது.

ஓதிமம் ஒதுங்க, கண்ட உத்தமன், உழையள் ஆகும்
சீதைதன் நடையை நோக்கி, சிறியது ஓர் முறுவல் செய்தான்;
மாதுஅவள்தானும், ஆண்டு வந்து, நீர் உண்டு, மீளும்
போதகம் நடப்ப நோக்கி, புதியது ஓர் முறுவல் பூத்தாள் (2736)

கோதாவரி ஆற்றங்கரை ஓரம்; தன் கூட்டத்தினின்று பிரிந்த அன்னம் ஒன்று தளிர் நடை இட்டு நடந்து வருகிறது; நடையின் நின்றுயர் நாயகனின் தோளோடு தோள் உரசி வரும் சீதையவள் நடை அழகைக் கண்டு நாணிய அன்னம் வெட்கி ஒதுங்கிச் செல்கிறதாம்; அதனைக் கண்டு விட்ட தண்ணளியான் மங்கையர் தம் மனத்தை வாங்கும் தடந்தோளான் இராமன் தன் அருகில் நடந்து வரும் சீதையை நோக்கிச் சிறிய புன்னகை செய்தானாம்.அந்த மந்திரப் புன்னகையின் உட்பொருளை உடனே உணர்ந்துகொண்ட சீதை அங்கே வந்து நீருண்டு மீளும் யானை நடப்பதைக் கண்ணால் காட்டிப் புதியதோர் முறுவல் செய்தாளாம்

முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல், பேதை
நகைமொக்குள் உள்ளது ஒன்று உண்டு (குறள்-1274)

என்பார் வள்ளுவர். அதாவது இதழ் விரித்து அரும்பு மலரும்போது, அதன் உள்ளே அடங்கியிருக்கும் மணம்போல, காதலியின் புன்சிரிப்பிலும் ஒரு கருத்து அடங்கி உள்ளது. குறளின் இக்கருத்தைக் கம்பர் இங்கே எடுத்தாளுகிறார்.

இப்படி இருவரும் கண்ணாலேயே (கேலியும் கிண்டலுமாகப்) பேசிக்கொள்கிறார்கள். பாற்கடல் பள்ளியுள் பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ (என்று கம்பரே பாடி விட்டார் அல்லவா!) . ஒரு பேச்சுரைக்காமலேயே தத்தம் கருத்தைப் பரிமாறிக்கொண்ட அழகை என்னென்பது! எந்த இலக்கியத்திலும் காணாத அரிய காட்சி அல்லவா இஃது!

2. உறிஞ்சு குழல் காட்சி

இக்காலத்தில் குளிர் பானங்கள், இளநீர் போன்ற நீர்மங்களைக் குடிக்க உறிஞ்சு குழல்களைப் பயன்படுத்துகிறோம். இவை இன்று நேற்றல்ல மிக முற்காலத்தில் - சுமேரிய காலத்தில் - இருந்தே வழக்கத்தில் புழங்கி வந்திருக்கின்றன என வரலாறு கூறுகிறது. அக்காலத்தே நாணல் உறிஞ்சு குழலாகப் பயன்பட்டது.இது போன்ற உறிஞ்சு குழலை வேறு தமிழ் இலக்கியங்களில் காண இயலாது. ஆனால் கம்பர் காட்டுகிறார்.

விசுவாமித்திர முனிவரின் யாகத்தைப் பாதுகாத்த இராம இலக்குவரை, மிதிலையில் சனகனின் அவைக்கு அழைத்து வருகிறார் முனிவர்.

அங்கே, வெள்ளம் அணைத்தவன் வில்லை எடுத்துப் பிள்ளை முன் இட்டனர்; நாகமும் நாகமும் நாண நடந்து அவ்வில்லை இராமன் எடுத்தது கண்டார்; இற்றது கேட்டார். திருமணச் செய்தி தாங்கிய ஓலையைத் தூதர் அயோத்திக்குச் சென்று தயரதச் சக்கரவர்த்தியிடம் சேர்ப்பித்தனர்; மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டு ஓடியது. அனைவரும் புறப்பட்டு மிதிலைக்குச் செல்கின்றனர். இந்த நிகழ்ச்சிகளைக் கம்பர் எழுச்சிப் படலம், வரைக்காட்சிப் படலம், பூக்கொய் படலம், புனல் விளையாட்டுப் படலம், உண்டாட்டுப் படலம்... எனப் படலம் படலமாகத் தீட்டுகிறார்.

அதில் மிகச் சுவையான படலம் உண்டாட்டுப் படலம். கள்ளுண்டு மயங்கிய கன்னியர்கள் அடிக்கின்ற கொட்டங்களைக் கம்பர் சுவையாகப் படம் பிடித்துக்காட்டுவார். இதோ அப்பாடல்

வான்தனைப் பிரிதல் ஆற்றா வண்டு இனம் வச்சை மாக்கள்
ஏன்றமா நிதியம் வேட்ட இரவலர் என்ன ஆர்ப்ப
தேன்தரு கமல செவ்வாய் திறந்தனள் நுகர நாணி
ஊன்றிய கழுநீர் நாள தாளினால் ஒருத்தி உண்டாள் (980)

கள்ளாடிக் களிக்கின்ற கன்னி ஒருத்தி கள் குடிக்க வாய் திறக்க அஞ்சுகிறாள் .ஏன்? தாமரை மலராய்ச் சிவந்து இருக்கும் அவள் செவ்வாயில் (முன்)உண்ட கள் (தேன்) படர்ந்து இருக்கிறது. அதனை உண்ண வரும் வண்டுகள் கூட்டமாய் மொய்க்கின்றன எவ்வளவு விரட்டியும் போக வில்லை. என்ன செய்யலாம்? சட்டென அரிய எண்ணம் உள்ளத்தில் முகிழ்கின்றது தாமரை மலரைப் பறிக்கின்றாள்; அதன் தண்டை (நாளத்தை) ஒடிக்கின்றாள்; நாளத்தின் உள்ளே நுண் துளைகள் இருக்குமே ஆகா நல்ல உரிஞ்சுகுழல் கிடைத்துவிட்டது .அதனை மதுக் கிண்ணத்தில் ஊன்றினாள்; மதுவைக் குடிக்கின்றாள். உரிஞ்சுகுழலின் நோக்கம், பயன் முதலியவற்றையும் கம்பர் இங்கே தெள்ளத் தெளிவாகக் குறிப்பிட்டு விடுகிறார். தமிழ் இலக்கியத்தில் கூடக் காண இயலாத காட்சி இது.

3. உளுந்தும் எள்ளும்.

இராம சீதை மணவினை காண அயோத்தி செல்கென தயரதன் பறையறிவிக்க, படைகள் புறப்பட்டன.ஆடவரும் பெண்டிரும் யானைகளும் புரவிகளும் என மக்களும் மாக்களும் கூடியகூட்டத்தின் பெருக்கிணைப் புலப்படுத்த கம்பர் உழு(ளு) ந்து இட இடம் இல்லை என்று உயர்வு நவிற்சியாகக் கூறுகிறார் எள் போட்டால் எள் விழ இடம் இல்லை என்று சொல்வதே (உலக))வழக்கம். ஆனால் கம்பர் இங்கே எள்ளுக்குப் பதில் உளுந்து என்கிறாரே ! நீத்தார் கடனுக்குப் பயன் படுவது எள். மணவினைக்கு அதனைப் பயன் படுத்தல் கூடாது ஆகவே தான் கம்பர் உளுந்தைக் குறிப்பிடுகிறார். மங்கலம் அல்லாத இடத்தில் எள்ளைக் குறிப்பிடத் தவறவில்லை. மும்மடங்கு

பொலிந்த முகத்தோடு மாவீரன் இராவணன் மண் மகள் மடி மேல் மடிந்து கிடக்கிறான்; தன்னை மணந்த அவனைத் தன் மடி கிடத்திப் புலம்பும் மண்டோதரி

"வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த திருமேனி மேலும் கீழும்
எள்ளிருக்கும் இடனுன்றி உயிரிருக்கும் இடன்நாடி - இழைத்தவாறோ!
கள்ளிருக்கும் மலர்க் கூந்தல் சானகியை மனச்சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக் கருதி உடல் புகுந்து தடவியதோ ஒருவன் வாளி?
(9940)

என்று புலம்பித் தீர்க்கிறாள் இந்தக் கவிதையின் இலக்கிய நலன்களை எல்லாம் எடுத்துச் சொல்ல ஒரு நாள் போதுமோ! ஒருநாவுதான் போதுமோ! இப்படி உழுந்தையும் எள்ளையும் பயன்படுத்த வேண்டிய பொருள் அறிந்து இடம் அறிந்து பயன்படுத்தும் கம்பர் கவிச்சக்கரவர்த்திதானே.

4. கடும் வேகத்தில் தேரை இயக்கும் கருவி

சுந்தர காண்டம் பஞ்சசேனாபதிகள் வதைப் படலம் பாடல் 49 -இல் இடம் பெறும் பாடல். இது வரை எவருமே எடுத்துக் காட்டாத பாடலும் கூட. இப்பாடலில் விந்தையான பொறி பற்றிக் கம்பர் குறிப்பிடுகிறார்

எய்த கடும் கணை யாவையும் எய்தா
நொய்து அகலும்படி கைகளின் நூறா
பொய்து அகடு ஒன்று பொருந்தி நெடும் தேர்
செய்த கடும் பொறி ஒன்று சிதைத்தான் (5649)

மதங் கொண்ட யானை போல் சினங்கொண்ட அனுமன் கிங்கரர், சாம்புவாலி..போன்ற அரக்கர்களை வதம் செய்தான். இதனை அறிந்த பஞ்சசேனாபதிகள் தம்மைப் போருக்கு அனுப்புமாறு இராவணனை வேண்டுகின்றனர். அவன் இசைகிறான்; அந்தப் பஞ்சசேனாபதிகளைப் பஞ்சாகப் பறக்க விடுகிறான் அனுமன். அவர்களுள் ஒருவனின் தேர் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட தேராம். என்ன சிறப்பு அதில்? நெடும் தேரின் நடுவில் துளைக்கப்பட்ட இடத்தில் பொருத்தப்பட்ட பொறி (engine) உள்ளதாம். விரைந்து செல்லுதற்கு உரிய எந்திரம் என்று பொருள் எழுதுகிறார்

வை மு கோபாலகிருஷ்ணமாச்சாரரியார் (கம்பராமாயணம் - சுந்தரகாண்டம் பஞ்சசேனாபதிகள் வதைப் படலம் பக்கம் 663.) இந்த வகை எந்திரத்தை ஆங்கிலத்தில் *'Motorized vehicle'*. என்பர்.

5. வால்மீகி காட்டாத புதிய செய்தி

வால்மீகி காட்டாத புதிய செய்தி ஒன்றைக் கம்பர் காட்டுகிறார்; வியப்புக்கு உரிய இந்தச் செய்தி வேறெந்த இராமாயணத்திலும் இடம் பெற்றுள்ளதாகத் தெரியவில்லை.

கடுமையாக நடந்த போரில் இந்திரசித்து விட்ட பிரம்மாத்திரத்தால் இராம, இலக்குவன்; அனுமான், வானரப் படைகள் என அனைவரும் இறந்து விழுகிறார்கள். உணவு கொண்டுவரப் போயிருந்த வீடணன் திரும்பி வந்து நிலைமயை அறிந்து வருந்துகிறான். இராமன், அனுமன் இருவரையும் மயக்கம் தெளிவித்த பின் செய்வது என்ன என அறியாது மயங்கும் வீடணன் அனுமன் அறிவுரையைக் கேட்கிறான்; சாம்பன் (ஜாம்பவான்) எனும் பெயரைத் தாங்கிய முது கரடி நல்ல வழி காட்டுவான் என்று அவனைத் தேடிச் சென்று கேட்கின்றனர்.பல்லாயிரம் யோசனைக்கு அப்பால் இருக்கும் மருத்து மலை பற்றிக் கூறி அங்கே நாலு வகை மூலிகைகள், அவை ஆற்றும் செயல்கள், அங்கே செல்லும் வழி பற்றி எல்லாம் விளக்கமாகக் கூறுகிறான். காலை விடியும் முன்பு, இரவோடு இரவாக மூலிகைகளைக் கொண்டு வந்தால் இறந்தோரைக் காப்பாற்றலாம் என்கிறான் சாம்பவான். உடனே அனுமன் கிளம்புகிறான். இச்செய்திகளைக் கம்பர் மருத்துப் படலத்தில் விரிவாக எழுதுகிறார்.

மருத்து மலை இருக்கும் போக பூமியாகிய உத்தரகுருவை அனுமன் அடைந்தபோது அங்கே பகலவன் ஒளி வீசக் காண்கிறான். "அடடா விடிந்து விட்டதே! என் முயற்சி எல்லாம் வீணாகிவிட்டதே" எனக் கலங்குகிறான் அனுமன். தான் மறை வல்லோரிடமிருந்து கற்ற உண்மை ஒன்று அவன் நினைவில் வருகிறது . என்ன அந்த உண்மை?

நம் பூமி உருண்டை வடிவில் ஆனது. அதில் மேற்கு நோக்கிப் பயணம் செய்யும் போது நமக்கு முன் மேற்கு,பின்னால் கிழக்கு, வலப்பக்கம் வடக்கு இடப் பக்கம் தெற்கு இருக்கும். பூமியை ஒரு முறை சுற்றி வந்தாலும் இது மாறாது. இப்போது நிலநடுக்கோட்டில் இருந்து வடக்கு நோக்கிச் செல்வோம். நமக்கு முன்னால் வடக்கு, பின்னால் தெற்கு, இடப்பக்கம் மேற்கு, வலப்பக்கம் கிழக்கு இருக்கும். அனுமன் இலங்கையை விட்டுக் கிளம்பும் பொது பகலவன் மேற்கில் இறங்கிக்கொண்டு இருக்கிறான். அதாவது இருள் சூழத் தொடங்குகிறது. 'வீடணன் கொள்ளி ஒன்று அங்கைக் கொண்டான்' என்று கம்பர் எழுதுகிறார்.

வடதிசை மேலே செல்லச் செல்ல அட்ச ரேகையின் சுற்றளவு குறைந்துகொண்டே வரும்.அதாவது நிலநடுக்கோட்டை விடச் சுற்றளவு சிறியதாகிக்கொண்டே வரும். இதனைத்தான் கம்பர் 'கால்திசை சுருங்கச் செல்லும் கடுமையான் 'என்று விவரிக்கிறார் . இப்படி அட்ச ரேகையின் சுற்றளவு குறைந்துகொண்டே போவதால் மேற்கு கிழக்கு என்று சொல்லக் கூடிய தூரங்களில் அளவும் குறைந்துகொண்டுதானே போகும். இறுதியாக வட துருவத்தை அடையும்போது என்ன நேரும்? மேற்கும் கிழக்கும் இணைந்து ஒன்றாகிவிடும் அல்லவா! வடதுருவத்தைத் தாண்டும் சமயம் முன்பு மேற்காக இருந்தது இப்போது கிழக்காகவும் முன்பு கிழக்காக இருந்தது தற்போது மேற்காகவும் மாறிவிடும்..

அனுமன் வடமுனை தாண்டியதும் இலங்கையில் இருந்து கிளம்பும்போது அனுமனுக்கு இடப் பக்கம் மறையத் தொடங்கிய பகலவன் இப்போது அவனுக்கு வலப் பக்கம் தெரிகிறது. மறையும் அந்தப் பகலவனை எழு ஞாயிறு என்று (முதலில்) தவறாக எண்ணிவிட்டான் அனுமன். இதை இப்படி விளக்கலாம் மெல்லிய தாளில் அம்பு முனை இடப் பக்கம் இருக்குமாறு வரைக; பின் அத்தாளை இடவலமாகத் (*lateral inversion*) திருப்புக. இப்போது அம்பின் முனை வலப் பக்கமாகத் தெரியும் அல்லவா! இதனைத்தான் கம்பர் 'மேரு மாற்றினான்' என்று வரைகிறார். (பாடல் 56)

உலகத்தின் ஒரு பகுதியில் இருட்டும், இன்னொரு பகுதியில் வெளிச்சமும் ஒரே நேரத்தில் விளங்கும் என்பதும், ஒரு பக்கத்தில் இரவான பின்னர், இன்னொரு பக்கத்தில் பகலவன் உதயம் நிகழும் என்பதும் மிக விரைவான வான் வழிப் பயணம் மேற்கொள்ளும் நம் காலத்தில் அறிந்திருக்கிறோம். இலங்கையில் இரவும், உத்தரகுருவில் மாலையுமாக இருக்கும் செய்தியை 'வேத நூல் வல்லார் அறிவர்,' என்று அனுமன் வாய்மொழியாகக் கம்பன் சொல்வதில் உண்மை இருக்கிறது. இலங்கையும், உத்தரகுருவும் வேறு வேறு *time zone* என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

இவ்வுண்மைகள் கம்பருக்கு எப்படித் தெரிந்தன?!!! வியப்பிலும் வியப்புதான்! . இவற்றைக் கம்பர் தம் காவியத்தில் அழகாய்ப் பொதிந்து வைத்திருக்கிறார்!

6. இராமனின் பாதாதி கேச வருணனை

அசோக வனத்தில் சீதையை அனுமன் சந்திக்கிறான்; காட்சி, ஐயம் தெளிந்து தீர்ந்தபின் அனுமனை நோக்கிச் சீதை, "ஐய சொல் ஐயன் மேனி எப்படிக் கறிதி?" என்றாள்

சீதை பார்க்காத இராமனா!

கண்ணொடு கண் இணை கவ்வி, ஒன்றை ஒன்று
உண்ணவும், நிலைபெறாது உணர்வும் ஒன்றிட *(514)*

மிதிலையில் பார்த்தவள்தானே! "கைவளை திருத்துபு கடைக்கணில்" நோக்கினவள்அல்லவா! இருப்பினும் ஏன் இப்படிக் கேட்கிறாள்?

கேட்பதற்குக் காரணங்கள் இரண்டு உண்டு இராம பிரானை உண்மையாகவே அனுமன் பார்த்திருக்கிறானா என்று சோதித்து அறிந்துகொள்ளவும் அவன் வருணனையைக் கேட்டாவது அவள் பிரிவுத் துயர் ஆறாதா என்று எதிர்பார்த்தும் சீதை வினவுகிறாள்.

திருவடியில் இருந்து தொடங்கி நகம், புறவடி ,கணைக்கால், தொடைகள், திருவுந்தி, திருமார்பு, திருக்கைகள், திருக்கை நகங்கள், திருத்தோள்கள்,கழுத்து, திருமுகம், திருவாய், பற்கள்,

மூக்கு, புருவங்கள், நெற்றி, திருக்குழல்கள், நடையழகு என யாவற்றையும் விரிவாக வருணிக்கிறான்.

இப்படி அடி முதல் முடி வரை வருணிப்பதை வட மொழியில் பாதாதி கேச வருணனை என்பர். இராமன் இறைவன் அல்லவா! இறைவன் திருவடிகளைத்தான் முதலில் தொழவேண்டும். ஆகவேதான் அனுமன் இராமன் திருவடிகளை முதலில் வருணிக்கிறான். புலவர்கள் பெண்களைத்தான் உறுப்பு உறுப்பாக வருணிப்பார்கள்; ஆடவனை வருணிக்க ஆள் இல்லை .ஆனால் தமிழ்ப் புலவர்கள் இருவர் வருணித்து உள்ளனர். ஒருவர் இப்போது பார்த்த கம்பர்.இன்னொருவர்? சங்கப் புலவராகிய கபிலர்தான் அவர். குறிஞ்சிப் பாட்டில் தலைவனைத் தலை முதல் கால் வரை வருணிப்பர்:

"எண்ணெய் நீவிய சுரி வளர் நறும் காழ்த்
தண் நறும் தகரம் கமழ மண்ணி... *(107-108)*

என்று தொடங்கி,

இயல் அணிப் பொலிந்த ஈகை வான் கழல்
துயல்வருந்தோறும் திருந்தடிக் கலாவ... *(126-127)*

என்று பாடுவார். இப்படிப்பாடுவதை வடநூலார் கேசாதி பாத வர்ணனை என்பர்.கபிலர் மானிடத் தலைவனைப் பாடினார் என்றால் கம்பர் மானிடத் தெய்வத்தைப் பாடிவிட்டார்.

இத்தகு புதிய பரிணாமங்கள் வழியாகக் கம்பரின் கவித்துவச் சிறப்பு நன்கு புலப்படுகிறது.

எக்காலத்தும் அழியாத கம்பன் சிந்தனைகள்

முனைவர் பீ. ரகமத்பீபீ
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, பாரதியார் கலை அறிவியல் கல்லூரி,
தேவியாக்குறிச்சி.

இராமயணம் இந்தியாவின் விலைமதிக்க முடியாத செல்வங்களில் மிக உன்னதப் படைப்பாகும். மனிதனை மனிதனாக உணரச் செய்யும் உன்னதக் காவியமாகும். மனித சமுதாயத்தில் நடக்கும் நல்லவை கெட்டவை இவற்றைச் சீர்த்தூக்கிப் பார்க்க உதவும் காவியம் இராமாயணம். எண்ணற்ற மகான்களை உருவாக்கிய காவியம். மனிதனின் வாழ்வியல் நெறிகளையும், மனிதம் ஒன்றை ஒன்று சார்ந்து வாழ்கிறது என்பதை உணரச் செய்யும் நூலாகும். தெய்வீகத்தாருக்குத் தெய்வீகம் மனித சமூக நோக்கில் பார்ப்பவருக்கு மானுடம் போதிக்கும் நூலாகும்.

அப்படிப்பட்ட கம்பராமாயணத்தை இன்றுள்ள நடப்பு நிலையுடன் ஒன்றுபடுத்தியும் வேறுபடுத்தியும் இக்கட்டுரை தொடரும். உறவுகளின் பாசம் அறிய வழியின்றி தனிக் குடித்தனங்கள் பெருகிவிட்ட இந்த அவசர உலகத்தை,

அண்ணன் என்னடா தம்பி என்னடா
அவசரமான உலகத்திலே
ஆசை கொள்வதில் அர்த்தமென்னடா
காசில்லாதவன் குடும்பத்திலே

என்ற பாடல் வரிகளில் கண்ணதாசன் இன்றைய பாசமற்ற உறவுச் சூழலை அழுத்தமாகச் சொல்கிறார். ஆனால் கம்பனோ அசுரனாகிய இராவணன் மீது அசுர சகோதரனாகிய கும்பகர்ணன் காட்டும் பாசம் நெஞ்சை நெகிழச் செய்வதாகச் சித்தரிக்கின்றார்,

தம்பியர் இன்றி மாண்டு கிடப்பனோ தமியன் மண்மேல் (7429)

என்று கேட்பதன் வழி கும்பகர்ணனின் உயர்ந்த சகோதரப் பாசத்தை எடுத்துக் காட்டுகிறார். நாளைய சமுதாயத்தில்

சகோதரப்பாசம் முழுமையாக அழிந்துவிட்டாலும் கம்பராமாயணம் அழியாது. பாசத்தின் நினைவுச் சின்னமாய்க் காலம் கடந்து வாழும், பின்னாளில் சகோதரப் பாசமின்மை தோன்றினாலும் கம்பனின் படைப்பான கம்பராமாயணத்தைப் பாருங்கள்... இராவண, கும்பகர்ணப் பாசத்தை, இராம, பரதனின் சகோதர பிணைப்பைப் பாருங்கள் உறவின் தன்மையும் ஆழமும் புரியும். இராவணன் அசுரனானவன் சீதையைக் கவர்ந்ததால் தான் போர் மூண்டது. அசுரர்களின் அழிவுக்குக் காரணமானான் அண்ணன் இராவணன் என்பதை அறிந்தும், தம்பியர் இன்றி அண்ணன் மண்மீது மாண்டு கிடப்பானோ என்று கூறுகின்றான் கும்பகர்ணன்.

ராமன் தன் அன்னை கைகேயினால் காட்டுக்குச் சென்றான் என்பதைக் கேட்டவுடன் பரதன் படும் மனவேதனையைக் கம்பர் வெகு சிறப்பாக எடுத்துரைத்துள்ளார். ராமனைத் தேடி வனத்திற்குச் செல்கிறான் அண்ணா நாட்டுக்கு வாருங்கள் என்றழைக்கிறான். ராமன் மறுக்கவும் தங்களது பாதுகைகளைத் தாருங்கள் என வாங்கி வந்து 14 ஆண்டுகள் அரியணையில் வைத்து ஆட்சி செய்கிறானே பரதன். இவனைக் காட்டிலும் சிறந்த சகோதரன் வேண்டுமா? கம்பராமாயணத்தைப் பாருங்கள், படியுங்கள் சகோதரத்தின் மேன்மை விளங்கும் எனச் சொல்லாமல் சொல்லியுள்ளார்.

பதவி:

பதவியில் இருப்பவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை இராமனின் மூலம் கம்பன் சொல்லும் இடம் சுவையானது. ஆட்சித் தலைவன் தன் ஆதரவாளர்களின் புகழ்ச்சியில் மயங்கக் கூடாது, எதிரிகளைக் கண்டு மயங்கி விடக் கூடாது. பணிவாகவும் கவனமாகவும் இருக்க வேண்டும் என்பதை,

ஏவரும் இனிய நண்பர் அயலவர் விரவார் என்றுஇம்
மூவகை இயலோர் ஆவர் முனைவர்க்கும் உலகம் முன்னே (4124)

என்று சுட்டியுள்ளார். இதனைக் கண்ணதாசன்

பதவி வரும்போது பணிவு வரவேண்டும்

என்று ஆட்சியில் இருப்பவர்கள் பணிவாக இருக்க வேண்டும் என்று பாடியுள்ளார். பதவி இருப்பவர்களை மதிப்பிடத் தெரிந்திருக்க வேண்டும். தன்னைச் சுற்றி ஒரு கருத்தை ஆதரிப்பவர்களும், கருத்தை எதிர்ப்பவர்களும், நடுநிலையாகச் சிந்திப்பவர்களும் இருப்பார்கள். நடுநிலையில் இருப்பவர்களைத் தன்னுடன் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கம்பன் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு வளம்:

கம்பன் அயோத்தி நகரம் எத்தனை வளமையாக இருக்கிறது என்பதனை,

ஆலை வாய்க் கரும்பின் தேனும் அரிதலைப் பாளைத் தேனும்
சோலைவீழ் கனியின் தேனும் தொடைஇழி இறாலின் தேனும்
மாலைவாய் உகுத்த தேனும் வரம்பு இகந்து ஓடி வங்க
வேலைவாய் மடுப்ப - உண்டு மீன்எலாம் களிக்கும் மாதோ (40)

என்று அயோத்தியில் தேனோட விடுவர் என்பதைச் சுட்டுகிறார். ஆனால் இன்று நாட்டின் நிலை மிகுந்த வேதனையளிக்கும் விதமாக உள்ளது. சோலைகளை அழித்து சாலை அமைத்துச் சோலை என்பதை வருங்காலச் சந்ததிகள் கம்பராமாயணத்தைப் படித்துத்தான் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற நிலையினை உருவாக்கி விட்டனர். கம்பனும் இதை உணர்ந்து தான் அன்று அவ்வாறு எழுதி வைத்தானோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

எதிர்வீட்டு ஜன்னலில் எத்தனை சட்டைகள்
என்சட்டையில் எத்தனை ஜன்னல்கள்

என்று ஒரு புதுக்கவிதை இன்றைய சமூக வறுமை நிலையைச் சொல்கிறது. ஆனால் பாரதியோ,

தனியொருவனுக் குணவிலை யெனில்
ஜெகத்தினை அழித்திடுவோம்

எல்லோரும் எல்லாப் பெருஞ்செல்வரும் எய்தலாலே
இல்லாரும் இல்லை, உடையார்களும் இல்லை மாதோ

என்று சமத்துவத்தை நிலை நாட்டும் பொருட்டு எல்லாரும் சமமாக வாழவேண்டும் என்ற கருத்தினை அக்காலத்தே வலியுறுத்துகின்றார். இருப்பவன் இல்லாதவருக்குக் கொடுக்க வேண்டும், எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும். இல்லாமை என்பதே நாட்டில் இருக்கக் கூடாது என்று வழி சொல்கிறார். கம்பனோ கம்பராமாயணத்தை ஒரு தடவை படியுங்கள் மனம் தெளியும் பசிப்பட்டினி இல்லாமல் எல்லோரும் வாழ நம்மால் இயன்றதைச் செய்வோம் என்கிறார்.

கடவுள்:

கம்பன் கடவுட் கொள்கையை உடையவரா? இல்லையா? என்றாய்ந்தால்

ஒன்றே என்னின் ஒன்றேயாம்பலஎன் றுரைக்கின் பலவேயாம்
அன்றே என்னின் அன்றேயாம் ஆமே என்னின் ஆமேயாம்
இன்றே என்னின் இன்றேயாம் உளதென் றுரைக்கின் உளதேயாம்
நன்றே நம்பிகுடி வாழ்க்கை நமக்குஇங்கு என்னோபிழைப்பு அம்மா
(6059)

என்ற பாடலில் கம்பன் இச்சமுதாயம் எவ்வாறு ஒன்றுபட்டு இருக்க வேண்டும் என்பதனை மிக அழகாக எடுத்துரைக்கின்றார். ஆனால் இன்றைய சமயச் சண்டைகள், எத்தனை சாதிகள், மதங்கள், தெய்வ வழிபாடுகள், கொலைகள், வெறிக்கூத்தாட்டம் இதெல்லாவற்றையும் கண்ணுறுகையில் அன்றே கம்பனுக்குத் தெரிந்திருக்கிறது, அதனால் தானோ என்னவோ மனித வாழ்க்கை சமாதானமாக வாழ்வது தானே. ஏன் சண்டை இட வேண்டும், வாக்குவாதம் செய்ய வேண்டும், ஏன் கத்திக் கூச்சல் போட வேண்டும் என்ற விழிப்புணர்வை தனது செய்யுளின் வழி நமக்கு உரைத்துள்ளார்.

ஒரே கடவுள் என்கிறீர்களா? அப்படியே ஆகட்டும். கடவுள் ஒன்று தான். கடவுள் பல என்கிறீர்களா? சரி பல கடவுள்தான். என்று ஏற்றுக்கொள்வோம். கடவுளே இல்லை என்கிறீர்களா? சரி கடவுள் இல்லை என்பதையும் ஏற்றுக்கொள்ளலாம். கடவுள் உண்டு என்கிறீர்களா? சரி கடவுள் உண்டு என ஏற்றுக்கொள்ளலாம். நமக்கு வேண்டியதெல்லாம், எல்லா மக்களும் இன்பமாக வாழவேண்டும் என்பதுதான். யார் யாருக்கு

எந்தக் கொள்கைப் பிடிக்குமோ அப்படியே வாழட்டும் என்ற எண்ணம் கம்பனது மகா ஞானத்தின் வெளிப்பாடாகும்.

துணைகலம்:

வாலியின் அழிவுக்குக் காரணம் கூடா நட்பு. இராமனிடமிருந்து அங்கதன் இராவணனிடம் தூது செல்லும்போது இராவணன் அங்கதனிடம் நானும் உன் தந்தையும் நண்பர்கள் என்ற கருத்தை வலியுறுத்துகிறான்,

உந்தை என் துணைவன் அன்றே? ஓங்கு அறச் சான்றும் உண்டால் (6998)

இந்தத் தீய நட்புதான் வாலியின் அழிவுக்குக் காரணம்.

மூர்க்கரை மூர்க்கரே முகப்பர் (மூதுரை 24)

என்ற மூதுரை குறிப்பிட்டுள்ளபடியும், இனம் இனத்தோடுதான் சேரும் என்ற வாக்கும் உண்மைதான் என்பதைக் கம்பன் இராவணன் வாயிலாகக் குறிப்பிட்டுள்ளார்.

இராமனால் வாலி அடிபட்டு இறக்கும் நிலையில் கதறி அழும் கொடுமையான நிலையிலும் வாலி தன் மகனுக்குச் சொன்னது

உன் உயிர்க்கு உறுதி செய்தி; இவற்கு அமர் உற்றது உண்டேல்,
பொன் உயிர்த்து ஒளிரும் பூணாய்! பொது நின்று, தருமம் நோக்கி (4090)

என்ற பாடலில் தருமத்தைக் காக்க, இராமன் மேற்கொள்ளும் போரில், இராமனுக்காகப் போரிட்டு மடிவதைப் பெருமையாக நினைப்பாய் ஏனெனில் தருமமே உலகில் சிறந்தது. அதர்மம் கூடாதது என்பதை வாலித் தன் மகன் அங்கதனுக்குக் கூறுவதைப் போலக் கம்பர் இன்றைய தேவையற்ற போராட்டங்கள், எதற்காக? இதன் விளைவென்னவென்று தெரியாமல் சண்டையிட்டு மண்டை உடைத்துக்கொள்பவர்களைப் பார்த்துச் சொல்வது போல் உள்ளது.

கொடை:

இன்று அரசியல்வாதிகள் இலவச வேட்டி, சேலை,

துண்டு, ஏன் அரிசி, பருப்பு, கரும்பு, 1000ரூபாய் பணம் என இலவசமாகக் கொடுத்து மக்களை என்றுமே ஏழைகளாகவே, கையேந்துபவனாகவே இருக்க வேண்டும். தாங்கள் அதற்கு அதிகமாக கணக்குக் காட்டி வசதியாக வாழ்கிறார்கள். இந்த நிலை தவறு. இருப்பவன் இல்லாதவன் என்ற நிலை இல்லாமல் நாடு இருக்கவேண்டும். எல்லோரும் சமமாக இருந்தால் கொடுப்பாரும் இல்லை கை நீட்டிப் பெறுவோரும் இல்லைதானே என்று எண்ணிய கம்பன்,

வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால் (84)

என்ற பாடலில் கொடை என்பதே இல்லை. ஏனெனில், உணவில்லை, உடையில்லை, வீடில்லை என்று யாரும் கூறுவதற்கில்லை. இல்லாமல் இருந்தால் தானே கொடை கொடுப்பதற்கு. எல்லோரும் சமமாக இருந்தால் கொடை என்ற சொல்லே தேவையில்லை என்கிறார். கம்பன் சிந்தனைகள் சமப்பார்வை, ஆழப்பார்வை, எதிர்நோக்கும் பார்வை, முன்னோக்குப்பார்வை, பின்னோக்குப் பார்வை உடையது. எக்காலத்திலும் கம்பனும் கம்ப காவியத்தின் சத்திய வாசகங்களும் அழியாது வாழும். எப்பொழுது படித்தாலும் படிப்பவர் மனது தெளிவடையும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

கம்பனில் காந்தியம்

முனைவர் லலிதா சுந்தரம்

கபிலர் விருதாளர்

14, வள்ளலார் தெரு,ஜெகதாம்பிகை நகர்,

பாடி, சென்னை-50.

நுழைவாயில்

ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த கம்பனுக்கும், இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மகாத்மா காந்திக்கும் என்ன பொருத்தம்? எக்காலத்துக்கும் பொருத்தமான கவிஞர் கம்பர் ஆவார். வாய்மை காக்க எடுத்த அவதாரமே இராமவதாரம். அதே வாய்மையை காந்தியும் காப்பாற்றினார். இராமனை அடியொற்றி தமது குருவாக எண்ணி காந்தி வழி நடந்தார். கம்பனில் காந்தியம் எவ்வாறு நடை பயில்கிறது? என்பதே இவ்ஆய்வு.

கம்பன் பாடல்களின் நிலை

பாடல்களின் வழி துணிவு, விவேகம், தெளிவு, உருக்கம், அறிவின் வழிச் சிந்தனை, முதலியன அறிய முடியும். கம்பனின் கவிதைகள் தெய்வீகமானது என்பது பாரதியின் கருத்தாகும்.

கம்பன் மகாகவி என அறிதல்: காந்தியின் எண்ணம்

ஆங்கிலத்தில் ஜி.யு.போப் அவர்கள் கம்பன் பாடல்களை மொழி பெயர்த்துத் தந்தார். அதனைப் படித்ததும் கம்பன் ஒருமகாகவி என்று அறிந்தார் காந்தி மகான். மற்றையோரிடமும் கம்பன் கவிதைகளைப் பற்றிய விரிவான கருத்துகளை அறிந்து கொண்டார். ரசிகமணி டி.கே.சியைச் சந்தித்து அவர் வழி கம்பன் கவிதை நயம் கேட்டு மகிழ்ந்தார் காந்தி. கம்பராமாயணம் மானுடத்தைச் செந்நெறிப் படுத்துவதையும் உணர்ந்தார் காந்திமகாத்மா.

காந்தியின் கொள்கை

இராமன் வாழ்ந்து காட்டிய நெறியில் எல்லோரும் நடந்து, உயர்ந்து மேன்மையுற வேண்டும் என்பதில் அசையாத நம்பிக்கை,

உறுதியான கொள்கை கொண்டிருந்தார் காந்தி. மகாத்மா காந்தி போற்றிய இராமன் கம்பன் கண்ட இராமனே. இராமனையே தன் வழிபடு தெய்வமாக ஏற்றுக் கொண்டிருந்தார்.

இராம நாம மகிமை

மகாத்மா காந்தி வாழ்நாள் முழுமையும் இராமநாமத்தைப் பாடியும், விளக்கியும் மற்றவர்களுக்கு அறிவுரை கூறியும் வந்ததை நாம் அறிவோம். இறைவழி பாட்டுக் கூட்டங்களில் இராமநாமப் பாடல்களைப் பாடி வரச் செய்தார். முக்கியமாகத் தன் கடைசி நேரத்தில் உயிர்விடும் போது சொன்ன தாரக மந்திரம், 'ஹரே ராம்' என்பது தான். இராமநாம மகிமையை பற்றிக் கூறுவது பிறவிப் பிணியைத் தீர்க்க உதவும் அற்புத மருந்தாகும். இராமநாமத்தைச் சொல்பவர்கள் இணையற்ற சக்தியைப் பெறுகிறார்கள். சகல துன்பங்களையும் போக்கக் கூடிய நிவாரணி இராமநாமம், காந்தி உண்ணா நோன்பு இருந்த போது தம் உயிரினைக் காத்ததும் இராமநாமமே என்று கூறினார்.

இராமநாமம் பற்றிய கம்பன் பாடல்

மும்மைசால் உலகுக்கு எல்லாம் மூலமந்திரத்தை, முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதத்தை தானே
இம்மையே, எழுமை நோய்க்கும் மருந்தினை இராமன் என்னும்
செம்மை சேர் நாமம் தன்னை கண்களின் தெரியக் கண்டான்
(4013)

சர்வசமய நோக்கு

கம்ப இராமாயணத்தில் காணப்பெறும் சர்வசமய நோக்கில் காந்திஜி தன் மனதைப் பறி கொடுத்தார். அனைத்து மதங்களும் இறைவனை நாடிச் செல்கின்றன என்ற கருத்தில் மிகுந்த பற்றும் உறுதியும் உடையவராக இருந்தார் காந்திஜி.

கல்லிடைப் பிறந்து, போந்து, கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையில் மறைகளாலும் இயம்பரும் பொருள் ஈதென்னத்
தொல்லையில் ஒன்றேயாகி துறைதோறும் பரந்த சூழ்ச்சி
பல்பெருசமயம் சொல்லும் பொருளும் போல் பரந்தவன்றே! (30)

கம்பர் வழி ஒருமைப்பாடு

சமய ஒருமைப்பாடு கண்டார். 'ராம்ரகீம்' என்ற முழக்கத்தை உருவாக்கினார். இந்து முஸ்லீம் ஒற்றுமைக்குப் பாடுபட்டார். காலப்போக்கில் மதங்கள், சமயங்கள் பலவாயின. இவை அகல, அரசியலில் ஆன்மீகம் வேண்டும் என விரும்பினார். காப்பிய நாயகனின் தனிச்சிறப்பினை அனைத்துச் சமயத்தினரும் தம் தம் சமயங்களுக்கேற்றவாறு தம்படைப்பில் படைத்திருத்தலைக் காண்கிறோம். காந்தியடிகள் நாட்டில் சமயங்களை அகற்ற முனைந்தார் வேற்றுமை தவிர்த்து அனைத்து மதநூல்களையும் மேற்கோள் காட்டினார்.

இராமராஜ்ஜியம்

கம்பன் காட்டிய கோசலத்தின் சிறப்பையும், புதிய சிந்தனைகளையும், கனவுகளையும், அன்பு வழி வலியுறுத்திய, ஒருமைப்பாடு சகோதரத்துவம், அன்பு ஆகிய உன்னதக் கொள்கைகளையும், பிடிப்புகளையும் கண்டு, மகாத்மா தான் படைக்க இருக்கும் இராச்சியத்திற்கு இராமராச்சியம் என்று பெயரிட்டார். இராமராச்சியம் கம்பனின் சிந்தனை வழியைப் பின்பற்றியதாய் இருக்க வேண்டும்.

கம்பன் படைத்த ராமன் தன் வாழ்வில் உலக சகோரரத்துவத்தை, ஆன்மநேய ஒருமைப்பாட்டை கடைப்பிடித்ததைக் கண்ணுற்ற காந்திஜி தம் வாழ்நாளில் தானும் கடைப்பிடித்தார். தாழ்த்தப்பட்ட பிற்போக்கான ஒடுக்கப்பட்ட தீண்டத்தகாத மக்களை தம் வாழ்நாளில் சகோதரர்களாக எண்ணினார். சமமாகப் பாவித்தார். பழகினார். நடத்தினார். ஹரிஜன சமுதாய மேம்பாட்டிற்காக உழைத்தார். அவர்களுடன் ஒன்றாகத் தங்கி இருந்து வாசம்புரிந்தார். சமபந்தி போஜனம் பரிமாறச் செய்து அரவணைத்தார்.

கம்பனின் அறிவுரை/காந்தியின் அறிவுரை

கம்பர் காலத்திலும் நாட்டிடையே குடிப்பழக்கம் இருந்தது. மதுவினால் ஒழுக்கக்கேடு ஏற்படும். குடியால் அறிவிழந்தவன் தாய்க்கும், தாரத்துக்கும் வேற்றுமை அறியான் என்றும், அது

பஞ்சமா பாதங்களில் ஒன்று என்றும் கம்பன் எடுத்தியம்புகிறார். செய்ய வேண்டிய கடமைகள் மது அருந்தினால் மறக்கவும், புறக்கணிக்கவும் நேரிடும் என்று சுட்டிக் காட்டுகிறார். மகாத்மா காந்தியடிகள் கம்பனின் கொள்கைகளினால் கவரப்பட்டு மது விலக்கை மிகத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்தார்.

இலட்சியம் (குறிக்கோள்)

இராமன் சீதையை மீட்பதற்கு வாலியின் துணையை நாடவில்லை. இரண்டாம் உலகப் போரின் சமயத்தில் சுபாஷ் சந்திரபோஸ் பிரிட்டனை எதிர்த்துச் சுதந்திரம் பெற இதுவே தக்க தருணம். பிரிட்டனுக்கு எதிரான ஜெர்மனின் உதவி பெற்று அதனைச் சாத்தியமாக்கிக் கொள்ளலாம் என்ற கருத்தினை மகாத்மா காந்தி ஏற்றுக் கொள்ளவில்லை.

தன்னுடன் போர் செய்த இராவணன் போர்வாள் இழந்து யாவும் போன நிலையில் நிராயுதபாணியாக நின்ற போது அவனை இன்று போய் நாளை வா என்று சொல்லி அனுப்பியதை நினைத்த காந்தியடிகள் பகைவனுக்கும் அருளும் நல்ல உள்ளத்தைப் பெற்றிருந்தார் 2ஆம் உலகப் போரின் போது தான் சுதந்திரப் போராட்டத்தை எதிர்த்துப் போராடும் பிரிட்டன் நாட்டிற்கு அந்தப் போர்க்காலச் சூழ்நிலையில் அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தும் எந்தச் செய்கைகளிலும் ஈடுபடலாகாது எனத் தம் தொண்டர்களுக்கு அறிவுறுத்தியது பகைவனுக்கு அருளும் பரந்த பண்பின் உள்ளத்தைப் புலப்படுத்துகிறது.

வன்முறைச் சம்பவங்களின் விளைவு

பாரதநாடு சுதந்திரம் பெற்ற பிறகு நவகாளி சம்பவங்கள் மிகத் துயரமானவை அதில் பல அபலைப் பெண்கள் தங்கள் கற்பினை இழந்து தவித்தனர். அதனைக் கண்ணுற்ற காந்திஜி அவர்கள் நாட்டு வாலிபர்களுக்கு அறிவுரை கூறினார். தங்கள் மனமறியத் தவறு செய்யாத அப்பெண்களுக்கு வாழ்வளிக்க வேண்டும் என்ற புரட்சிகரமான கருத்தைப் பிரசாரம் செய்தார். இந்நிகழ்வு அகலிகையை விசுவாமித்ர முனிவர் கௌதம முனிவரிடம் ஒப்படைத்த போது கூறிய வாசகத்தின் தாக்கத்தைக் கம்பனின் பாடலில் காணலாம்.

கம்பன் பாடல்

அஞ்சன வண்ணத்தான் தன் அடித்துகள் கதுவா முன்னம்!
வஞ்சிபோல் இடையாள் முன்னை வண்ணத்தன் ஆகிநின்றாள்!
நெஞ்சினால் பிழைப்பு இலாளை நீ அழைத்திடுக என்ன!
கஞ்சமா மலரோன் அன்ன முனிவனும் கருத்துள்கொண்டான்'
(478)

காந்திஜியின் அந்தரங்கச் செயலாளர் திரு.மகாதேவ தேசாய் மறைந்தார். அவ்வமயம் நீ எனக்குச் செய்ய வேண்டியதை நான் உனக்குச் செய்ய வைத்து விட்டாயே என வருந்திக் கூறினார். இந்திரஜித் மறைந்த பொழுது இராவணன் புலம்பிய பாடலை இங்கே உதாரணமாகக் காணலாம்;. கம்பன் பாடல்

எனக்கு நீ செய்யத் தக்க கடன்எலாம் ஏங்கிஏங்கி
உனக்கு நான் செய்வதானேன்! என்னின்யார் உலகத்து உள்ளார்?
(9224)

அறத்திற்குத் துணைபோதல்

அரசியல் அறத்திற்குத் தான் துணைபோவேன். அன்றி கொடுந்துன்பம் தரும் மறத்துக்குத் துணைபோக மாட்டேன் என்று காந்திஜி உரைத்தார். இவ்வுரை வீடணன் உரையினை நினைவுப்படுத்துகிறது.

அறம்துணைஆவது அல்லால் அருநரகு அமையநல்கும்
மறம் துணையாக மாயாப் பழியொடும் வாழமாட்டேன்
துறந்திலேன் மெய்ம்மை, எய்தும் பொய்ம்மையே துறப்பது அல்லால்
பிறந்திலேன் இலங்கை வேந்தன் பின்னவன் பிழைத்த போதே
(9105)

இராமன் தன்னைக் காட்டிற்கு அனுப்பிய கைகேயி பற்றி எங்குமே குறைகூறியோ பழித்துப் பேசவோ இல்லை. அதுபோல் காந்திஜி தன்னைப் பலமுறை சிறைக்கு அனுப்பிய ஆங்கிலேயர் பற்றிப் பழித்துப் பேசவே இல்லை. நாடு சுதந்திரம் பெற ஆங்கிலேய ஆட்சியைத் தான் எதிர்த்தோம். ஆங்கிலேயர்களை அல்ல என்று கூறினார்.

தசரதன் இறந்த போது இராமன் வருந்தி இப்பாடலைக் கூறுகிறார்.

நந்தா விளக்கு அனைய நாயகனே! நானிலத்தோர்
தந்தாய்! தனி அறத்தின் தாயே! தயா நிலையே?
எந்தாய்! இகல் வேந்தர் ஏறே இறந்தனையே
அந்தோ! இனி வாய்மைக்கு ஆர்உள ரேமற்று? என்றார்.
(2434)

இராமன் தன் தகப்பன் தசரதன் வாய்மை காப்பதற்காக கைகேயிக்கு வரத்தைக் கொடுத்து விட்டு பின் தன் மூத்த மகன் இராமனுக்கு மூடி சூட்டி மகிழ முடியவில்லை. கைகேயி கேட்ட வரத்தினால் 'நத்தம் போல் கேடும் உளதாகும் சாக்காடு' (குறள்.255) என்ற குறள்வழி உண்மைகளை நிலைநாட்டி மறைகிறார் தசரதன். காந்திஜி இறந்த பொழுது கல்கி தனது இதழில் 'நந்தா விளக்கு அனைய என்ற கம்பன் பாடலைக் குறிப்பிட்டு வருத்தப்படுகிறார்.

காந்தி தன்னைக் கட்டுக் கொல்ல முயன்றவனைக்கூட ஒன்றும் செய்யாதீர்கள் என்று தன் சாவிலும் அஹிம்சையைக் கடைப்பிடித்தார். சடாயு, இராவணன் சீதையைத் தூக்கிச் செல்லும் பொழுது சீதையை மீட்கப் போராடுகிறான். இராவணன் சடாயுவின் இரு இறக்கைகளை வெட்டி வீழ்த்தி விடுகிறான். காந்தி கூறியதுபோல் தனக்குத் துன்பம் வந்தாலும், பெண்ணிற்குத் தீங்கு நேரும் பொழுது தன் உயிரை துச்சமென நினைத்துக் காப்பாற்ற வேண்டும் என்கிறார். அதுபோல சடாயு செயலாற்றுகிறார். தான் இறக்கும் தருவாயில் இராம இலக்குவனிடம் நிகழ்ந்தவற்றைக் கூறுகிறார். இராமன் தன் தகப்பனாருக்குச் செய்ய முடியாத ஈமக்கிரியைகளை மனமுவந்து செய்கிறான்.

இராமன் சீதையைத் திருமணம் செய்யும் பொழுது இந்த இப்பிறவிக்கு இருமாதரை சிந்தையாலும் தொடேன் என்று கூறினார். அதாவது மனதால் கூட நினைக்க மாட்டேன் என்று கூறினார். சீதையை இராவணன் சிறை வைத்த பொழுது இதனை அனுமனிடம் கூறி வருத்தப்பட்டாள். அனுமன் இராமனிடம் திரும்பி வந்து 'கற்பினுக்கு அணியைக் கண்டேன்' எனப் பெருமையுடன் கூறினான். மற்றவர் சந்தேகப்பட்டதற்காக சீதையை தீக்குளிக்கச் சொன்னார் இராமர். உலகிற்கு தன் மனைவி தூயவள் என்பதை நிரூபித்தார்.

மகாத்மா காந்தியும் கஸ்தூரிபாயும் மனம் ஒருமித்து வாழ்ந்தனர். அன்னை கஸ்தூரிபாய் இறந்த பொழுது மயானத்தில் காந்தியை திரும்ப அழைத்த பொழுது வாழ்நாளெல்லாம் என்னோடு வாழ்ந்தவள் எரிகிறாள். எரிந்து முடியும்வரைக்குமாவாது நான் இருந்து கவனித்து வருகிறேன் என்று கூறினாராம். இதிலிருந்து இவர்களின் அன்பும், பாசமும், பரிவும் தெரிகிறது.

அனுமன் இலங்கை வரும் பொழுது பல துன்பங்களை அனுபவித்தான். பற்பல வேதனைகளை அவன் வென்று இறைவனின் கருணையைத் துணையாகக் கொண்டான். வருந்தேன் அது என் துணை வானவன் வைத்த காதல் என்பது அனுமனின் மூலவாக்கியம். இக்காரணங்களால் அனுமன் மகாத்மாவாகப் போற்றப்படுகிறான்.

பிரகலாதனைத் தனது மைந்தன் எனப் பாராது பற்பல கொடுமைகளை இரணியன் அவனுக்குச் செய்தான். பிரகலாதனுக்காக இறைவனே இரக்கம் கொண்டு நரசிங்கவடிவம் எடுத்து இரணியனை அழித்தான். இக்கருவைக் கம்பன் தன் காப்பியத்தில் குழைத்துக் கொடுத்துள்ளார். பிரகலாதனை மகாத்மாவாக்கி அழியாப் புகழ் பெற்றுவிட்டான் கம்பன்.

கம்பனில் காந்தியம் என்ற இவ்ஆய்வில் இரு மகாத்மாக்களையும் சேர்த்துக் கண்டோம்.

நிறைவுரை

கம்ப இராமாயணத்தில் காந்தியின் கொள்கைளான வாய்மை, சத்தியம். அஹிம்சை, அன்பு என்ற பண்புகளைக் காணலாம்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் (குறள்-50)

என்ற வள்ளுவரின் உண்மை புலனாகிறது. தனி மனித ஒழுக்கமும் போற்றப்படுகிறது.

முன்னும் பின்னும் - கம்பன் நேர்த்தி

அ.வி. வரதராஜன்
சிங்கப்பூர்.

கதை சொல்வதில் காப்பியத்தை நடத்திச் செல்வதில், நூலாசிரியர்கள் பல உத்திகளைப் பயன்படுத்துகிறார்கள். இதில், அந்தக் காலம் இந்தக் காலம் என எந்தவொரு வேற்றுமையும் இல்லை என்பது என் கருத்து. அந்தந்தக் குறிப்பிட்ட காலக் கவிஞர்கள், அவரவர்களுக்குக் கை வந்த நேர்த்தியைக் கையாண்டு, தாம் சொல்ல வந்ததைச் சுவைபடச் சொல்கிறார்கள்; சொல்லிச் சென்றிருக்கிறார்கள். இந்தக் கலை எல்லாக் காலத்திற்கும் பொருந்தும் ஒரு பரிமாணமே. காப்பியத்தைத் திறம்பட நடத்திச் செல்லும் நேர்த்தி என்பது, காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் ஒரு வித்தைதான்.

கம்பனும் இந்தக் கலையில் மிகக் கைதேர்ந்தவன்தான். காப்பியத்தை ஒப்பில்லாச் சுவையுடன் நடத்திச் செல்லும் திறமையில், அவன் கையாண்டுள்ள பல உத்திகளில் நான் மிகவும் இரசித்த ஒன்று, அவன் சிலவற்றை முன்னர் சொல்லி, பின்னர் மறக்காமல் அதன் தொடர்ச்சியைப் பின்னொரு கட்டத்திலும் கொண்டு வந்து இணைக்கும் அவனுடைய கைவண்ணம்; ஒப்பில்லாக் கலைத் திறன்.

இந்த நேர்த்தியைக் கொண்ட கட்டங்கள் பலவற்றைக் கம்பனில் காண முடியும் என்பது மறுக்க முடியாத உண்மை. தோண்டத் தோண்ட வைரங்களை ஈயும் சுரங்கம் அன்றோ அவன்! இருப்பினும், நான் இரசித்த ஒரே ஒரு கட்டத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்வதுதான் இக்கட்டுரையின் நோக்கம்.

பால காண்டத்தில், கார்முகப் படலத்தில் விசுவாமித்திரனின் கண்சாடைக் குறிப்பை ஏற்று இராமன் சிவனின் வில்லை நாணேற்றுகிறான். அம்முயற்சியில், அந்த வில் முறிந்து போகிறது. இவ்விதம் வில் முறிந்து போன நிகழ்வு, சீதைக்கும்

தெரிவிக்கப்படுகிறது. அதைத் தெரிவிப்பவள் சீதையின் தோழி நீலமாலை.

செய்தி சொல்ல வந்த நீலமாலை முதலில் மிகுந்த மகிழ்ச்சியில் ஆடிப்பாடிக் குதிக்கிறாள்; குதூகலிக்கிறாள். பின்னர் சீதையை முறைப்படி தொழுது அந்த வில் முறிந்து விட்டது என்ற செய்தியைச் சொல்கிறாள். அப்படி வில்லை முறித்தவன் இன்னான் என்ற விவரத்தையும் நீலமாலை சீதைக்குச் சொல்கிறாள். தயரதனின் மைந்தன்; இராமன் என்னும் பெயர் கொண்டவன்; முனிவன் ஒருவனோடும், தன் தம்பியுடனும் இந்த நகருக்கு அவன் வந்துள்ளான் - என்பனதான் நீலமாலை சீதைக்குச் சொல்லும் விவரங்கள்.

முந்தின நாள் மாலையில்தான், கன்னிமாடத்தின் மேலிருந்து, கீழே வீதியில் செல்லும் ஒருவனைப் பார்த்து, அவனிடம் தன் மனத்தைப் பறி கொடுத்தாள் சீதை. அவன்தான் தன் கணவன், அவனன்றி மற்றொருவன் அல்லன் - என்று பார்த்த நொடியிலேயே மிகுந்த உறுதியுடன் தீர்மானித்துக் கொண்டவள் அவள்.

இப்பொழுது வில்லை நாணேற்றும் முயற்சியில் வென்ற ஒருவன் தன்னைக் கரம் பற்றப் போகிறான் என்பதைச் சீதை அறிகிறாள்.

சீதையின் எண்ணவோட்டம் இவ்வாறு அமைகிறது

நேற்று கன்னி மாடத்திலிருந்து குனிந்து, நான் கீழே பார்க்க, அதே தருணத்தில், வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த அவனும் என்னை அண்ணாந்து பார்த்தான்; கண்ணொடு கண் இணை கவ்வி, ஒன்றை ஒன்று உண்ணவும் நிலை பெறாது, உணர்வும் ஒன்றிட, பருகிய நோக்கு என்னும் பாசத்தால் நாங்கள் இருவரும் பிணிக்கப்பட்டோம்; ஒருவரை மற்றொருவர்தம் உள்ளம் ஈர்த்தலால், ஒருவர் இதயம் இடம் மாறி மற்றவர் இதயம் இருந்த இடம் புகுந்த நிலையை எய்தினோம்; இப்படி, கண்வழி நுழைந்த அந்தக் கள்வன் தான் வில்லை முறித்தவனா? - அல்லது வேறொருவனா?

இந்த மாபெரும் ஐயம் சீதையை வாட்டுகிறது.

இதில் அவளைச் சற்றே ஆறுதல் படுத்தும் விவரம், இப்போது வில்லை முறித்தவன், முனிவனோடும் தன் தம்பியோடும் வந்துள்ளவன் என்ற செய்திதான். சீதை நீலமாலையின் இந்தக் குறிப்பைப் பிடித்துக் கொள்கிறாள். அவன் உள்ளம் கவர்ந்த இளைஞனும் நேற்று மாலை வீதியில் ஒரு முனிவனொடும், தம்பி என்று கணித்துக் கொள்ளத் தக்கவனொடும் நடந்து சென்று கொண்டிருந்தான்தானே! எனத் தன்னைத்தானே ஓரளவு சமாதானப்படுத்திக் கொள்கிறாள். இது அவளுக்குச் சிறிதளவு நம்பிக்கையை ஊட்டுகிறது.

ஆனாலும் இந்த ஒரே ஒரு விவரத்தால், சீதையின் மனது முற்றிலுமாக சமாதானம் அடையவில்லை.

இருவரும் ஒரே ஆளாக இல்லாமற் போய்விட்டால்? என்ற அச்சமும் அவளைக் கொல்கிறது. அவனேதான் என்ற நம்பிக்கையும் ஆறுதலும் ஒரு பக்கம். அவ்வாறு இல்லாவிட்டால் என்ற அச்சமும், கவலையும் வருத்தமும் மறு பக்கம். ஆக இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவிக்கிறாள் சீதை. முடிவில் அவள் உறுதியான ஒரு மனக் கட்டுப்பாட்டுக்கு வந்து விடுகிறாள்.

நீலமாலை சொன்ன குறிப்புகளை வைத்துப் பார்த்தால், உள்ளம் கவர்ந்த கள்வனும், வில்லை முறித்தவனும் ஒருவனேதான் என்று தோன்றுகிறது. அவ்வகையில் காதலன்தான் கரம்பற்றவும் போகிறான். இதற்கு மாறாக, அவ்வாறு அமையா விட்டால், (வில்லை முறித்த மாற்றானை மணப்பதை விட) நான் தற்கொலை செய்து கொண்டு உயிர் போக்கிக் கொள்வேன். இவ்வாறு தனக்குள் ஒரு அசைக்க முடியாத முடிவுக்குச் சீதை வந்துவிடுகிறாள். ஆனாலும், இந்த முடிவை வாய்திறந்து யாரிடமும் சொல்லவில்லை. அகத்துள் உன்னினாள் என்பது கம்பனின் பதிவு.

சொல்லிய குறியின் அத்தோன்றலே அவன்;

அல்லனேல், இறப்பென் - என்று அகத்துள் உன்னினாள் (728)

கம்பனின் வார்த்தையான அகத்துள் உன்னினாள் என்பதை மிக நுணுக்கமாகக் கவனிக்க வேண்டும். இது சீதையின்

சிந்தையில் தோன்றிய ஓர் எண்ணம். அவ்வளவுதான். அவள் இதை வெளிப்படையாக யாரிடமும் சொல்லவில்லை.

அகத்துள் உன்னிய காரணத்தால், இத்துடன் இந்த நிலையிலேயே இது அமுங்கிப் போயிருக்க வேண்டும். இது மீண்டும் தலை தூக்க வழியே இல்லை. இருந்தாலும் கம்பனின் கதை சொல்லும் நேர்த்தியாலும், காப்பியத்தின் நிகழ்வுகளைச் சங்கிலித் தொடர் போல இணைப்பதில் அவன் காட்டும் திறமையாலும், இது மீண்டும் சுட்டடப்படுகிறது. சீதையின் மனக்குறிப்பாக, வெளியே யாருடனும் பகிர்ந்து கொள்ளப் படாத எண்ணமாக இருந்த போதும், இது காப்பியத்தில் பின்னர் ஒரு கட்டத்தில் மிகச்சிறப்பாகத் தலை தூக்குகிறது. வெளிப்படையாகவே சொல்லப்படுகிறது. வாசகன் எந்த விதத்திலும் எதிர்பார்க்க இயாலாத வகையில் இந்த நிகழ்வு மறு வாசிப்புச் செய்யப்படுகிறது. இதனை அவ்விதம் மீண்டும் தோண்டி எடுப்பவன் இராமன்.

அனுமன் சீதையைத் தேடித் தென் திசையில் பயணிக்கப் போகிறான். அவனைத் தனியே அழைத்துக் கொண்டுபோய், சீதை குறித்த பல அங்க அடையாளங்களையும், மேலும் சில செய்திகளையும் சொல்லி, தன் கணையாழியையும் அனுமனுக்கு இராமன் அளிக்கிறான்.

தானும் சீதையும் என இருவர் மட்டுமே அறிந்துள்ள சில தனிப்பட்ட செய்திகளில் ஒன்றாக இந்த நிகழ்வை இராமன் சுட்டுகிறான். திருமணத்திற்கு முன்னர் தான் பெற்ற பல்வேறு அனுபவங்களைக், கலியாணத்திற்குப் பின்னர் மனைவி தன் கணவனுடன் பகிர்ந்து கொள்வது மிக இயல்பான ஒன்று தானே. இவ்வழக்கம் அன்று தொட்டு இன்றுவரை நடைமுறையில் உள்ள ஒன்றுதானே! அவ்வகையில், வில்லை ஒடித்தவன் நீயாக இல்லாத பட்சத்தில், (அப்படி முறித்த எவனோ ஒருவனுக்கு மாலையிடுவதற்குப் பதில்) நான் தற்கொலை பண்ணிக்கொள்வதாக அக்கணத்திலேயே முடிவு செய்து விட்டேன்; நல்லவேளை! 'வில்லை முறித்தவன் நீயாகவே இருந்து என்னைக் கரம் பற்றினாய்' என்று சீதை இராமனிடம் சொல்லி இருக்கிறாள். இது உள்ளங்கை நெல்லிக்கனி.

இவ்வாறு சீதை தற்கொலை செய்து கொள்வேன் என்று நிச்சயித்த அந்த பாலகாண்ட நிகழ்வை இராமன் அனுமனுக்கு விளக்கிச் சொல்லி, நீ சீதையைப் பார்க்கும் போது அவளுக்கு இதை எடுத்துச் சொல்லி, நீ இராம தூதன் தான் என்பதை நிருபித்துக் கொள்வாய் என்கிறான்.

சீதையின் இந்த எண்ணம் இராமனை மிகவும் தாக்கியிருக்க வேண்டும். இச்செயலால், அவள் செய்த இத்தகையவொரு தீர்மானத்தால், அவள் இராமனின் உள்ளத்தில் மிக உயர்ந்த ஓர் இடத்தைப் பெற்றுவிடுகிறாள்.

இதற்கும் காரணம் இருக்கிறது.

வில்லை நாணேற்றினால், மிதிலையின் அரச குமாரியை மணக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருக்கிறது என்பதை இராமனும் அறிவான். நேற்று மாலையில் வீதியில் நடந்து வந்துகொண்டிருக்கும் போது, தன்னைக் கன்னிமாடத்திலிருந்து பார்த்த ஒரு பெண்ணிடம் உள்ளத்தை பறிகொடுத்துவிட்டோமே, அவள்தான் மிதிலை அரச குமாரியா? அப்படி இருந்து விட்டால் நல்லது; காதலிதான் மனைவி என்ற இன்பநிலை கைகூடும்.

அவ்வாறு இல்லாவிட்டால்? உள்ளத்தைப் பறித்துக் கொண்டவள் ஒருத்தி; உடனுறைய வருபவள் வேறொருத்தி என்ற நிலையில் தன்னால் வாழமுடியுமா? இந்த இக்கட்டான சூழலில் இந்த வில்லை நான் நாணேற்றத்தான் வேண்டுமா?

என்பன போன்ற எண்ணமே/ஐயமே இராமனுக்கு ஏற்படவில்லை.

இந்த ஐயம் தனக்கு ஏற்படவில்லை என்பதும், இந்த ஐயம் சீதைக்கு ஏற்பட்டு, காதலனே கணவனாகும் பேறு கிடைக்காத பட்சத்தில் ஆவி துறப்பேன் என்ற மிகத் தீவிரமான ஒரு நிலைமையை அவள் ஏற்றுக் கொண்டதும், சீதைபால் இராமனுக்குச் சொல்லொண்ணா மதிப்பையும் மரியாதையையும் தோற்றுவித்திருக்க வேண்டும்.

'கண்டதும் காதல்' என்ற நிலைமை இராமனுக்கும் ஏற்படத்தான் செய்கிறது. இந்தக் காதல் கைகூடுமா என்ற ஐயம் இராமனுக்கும் தோன்றத்தான் செய்கிறது.

ஆனால் அவன் எண்ணம் வேறு திசையில் செல்கிறது. கன்னிமாடத்திலிருந்து என்னைப் பார்த்த பெண்ணிடம் உள்ளத்தைப் பறி கொடுத்து விட்டேனே! அவள் ஏற்கனவே மணம் ஆனவளாக இருந்துவிட்டால்? - இதுதான் இராமன் கொள்ளும் கவலையாக இருக்கிறது. அவள் கலியாணம் ஆகாத கன்னியாக இருந்துவிட்டால் மட்டும் போதும்; எப்படியும் அவளைக் கலியாணம் செய்து கொண்டுவிடலாம் என்பதில் அவன் திடமாக இருக்கிறான்.

இந்தக் கவலையையும் உடனேயே இராமன் போக்கிக் கொள்கிறான். தன் மீதும் தான் பின்பற்றும் வாழ்க்கை நெறிகள் மீதும் அவனுக்கு அசையாத நம்பிக்கை. தன்மனம் தீய வழியில் ஒருக்காலும் செல்லாது என்பதனால், தான் ஆசைப்பட்ட பெண் நிச்சயமாகக் கன்னியாகத்தான் இருத்தல் வேண்டும் என்ற ஓர் உறுதியான நிலைப்பாட்டைச் சிந்தையில் நிறுத்தி, இராமன் அன்றிரவு நிம்மதியாக உறங்குகிறான்.

ஆகும் நல் வழி; அல்வழி என்மனம்,
ஆகுமோ? இதற்கு ஆகிய காரணம்,
பாகு போல் மொழிப் பைந்தொடி கன்னியே
ஆகும்; வேறு இதற்கு ஐயுறவு இல்லையே (626)

இவ்வாறு மிகஎளிதாக ஒரு விளக்கத்தைத் தனக்குத் தானேகொடுத்துக் கொண்டு, தன் பிரச்சினையைத் தீர்த்துக் கொண்டவன் இராமன்

தன் எண்ணவோட்டம் இவ்வாறு அமைய, சீதையோ வில்லை முறித்தவன் உள்ளத்தைப் பறிகொடுத்தவனாக இல்லாவிட்டால், மரணத்தைத் தழுவிக்கொள்வேன் என மிகத் தீவிரமாக முடிவெடுத்ததால், அவள் கற்பை இராமன் ஆகா ஓகோ என்று புகழ்கிறான்.

கம்பனின் சொற்கள் வழக்கமாக எல்லாப் பாடல்களிலும் அமைவது போலவேமிக அற்புதமாக அமைந்துள்ளன.

வரை செய் தாள் வில் இறுத்தவன், அம் மா முனியொடும்,
விரசினான் அல்லனேல், விடுவல் யான் உயிர் - என,
கரை செயா வேலையின் பெரிய கற்பிலள் தெரிந்து,

உரை செய்தாள்; அஃது எலாம் உணர, நீ உரை செய்வாய்
(4514)

சீதையின் கற்பை மிக வியந்து போற்றுகிறான் இராமன். பெரிய கற்பு என்று என்று சொல்லி ஒரு பாராட்டுப் பத்திரம் வழங்குகிறான். பெரிய என்றால் எவ்வளவு பெரியது? அதற்கு இராமன் விளக்கமும் சொல்கிறான். கரை என்ற ஒன்றை அமைக்க முடியாத கடலைப் போன்ற பெரிய கற்பு (கரை செயா வேலையின் பெரிய கற்பினள்) எனவிவரிக்கிறான். மனத்தைப் பறிகொடுத்தவனுடன் மணம்; இல்லாவிடில் மரணம் என்ற ஒரு தீவிரமான அளவில் சீதையின் மனவோட்டம் அமைந்ததால், அதனைப் பெரிய கற்பு என்று இராமன் புகழ்கின்றான். கலியாணத்திற்குப் பின்னர்தான் கற்பு என்பதெல்லாம் இல்லை; காதலில் வீழ்ந்து விட்ட கணத்திலேயே அந்தத் திண்மை உருவாகிவிடுகிறது என்பது கம்பன் சொல்லாமல் சொன்ன செய்தி.

தெரிந்து உரை செய்தாள் என்கிறான் இராமன். தெரிந்து என்ற சொல்லாட்சி மிக ஆழம் மிக்கதாக இவ்விடத்தில் அமைந்துவிடுகிறது.

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து (குறள் 645)

என்ற வள்ளுவன் வாக்கை முற்றிலும் கடைப்பிடிப்பவன் அன்றோ கம்பன்!

என்ன செய்ய வேண்டும் என்பதைப் பல கோணங்களில் நோக்கி, தனக்கு இருக்கும் பலவேறு வழிகளையும் வகுத்து, ஆராய்ந்து பார்த்து, ஒவ்வொன்றும் விளைவிக்கக் கூடிய நன்மை தீமைகளைச் சீர்த்தூக்கிப் பார்த்து, பின்னர் இதுதான் சிறந்தது என்று தேர்வு செய்தல் - என்பதாக இங்கே தெரிந்து என்ற அச்சொல் பொருள் தரும்.

இந்தப் பெருமை எல்லாம் என்னளவிலோடு நின்று விடாமல் அனுமனே! நீயும் அதனை உணர்ந்து கொள்வாய் எனவும் இராமன் வலியுறுத்துகிறான். அஃது எலாம் உணர, நீ என்பது கம்பனின் வரிகள். சீதை நன்றாக உணர இதனை நீ

உரைப்பாய் என இராமன் சொன்னான் என்று உரையாசிரியர்கள் எழுதுகிறார்கள். எனக்கு அதில் உடன்பாடு இல்லை. சீதை இதனை ஏற்கனவே நன்றாக உணர்ந்தவள் தானே? எனவே அனுமனே நீயும் இதனை நன்றாக உணர்ந்து கொண்டு, பின்னர் சீதையிடமும் இதனைச் சொல்வாய் என இராமன் சுட்டுகிறான் என்பது என் கருத்து.

பால காண்டத்து நிகழ்வை, சுமார் 3,800 பாடல்களுக்குப் பிறகு கிட்கிந்தா காண்டத்தில், மிகப் பொருத்தமாக, மிகச்சரியான ஒரு தருணத்தில், ஒப்பில்லா நேர்த்தியுடன் எடுத்து மறுவாசிப்புச் செய்வது கம்பனுக்கே உள்ள தனிப்பாணி.

காப்பியத்தை நடத்திச் செல்லும் உத்தியில், இவ்வகையில் புதிய பரிமாணம் படைத்தவன் கம்பன் என்பது தெளிவு.

வீறுகவியரசரின் கவிதைகளில் கம்பரின் பரிமாணங்கள்

முனைவர் ம.ஸ்டீபன் மிக்கேல் ராஜ்
செயலாளர், வீறுகவியரசர் முடியரசன் அவைக்களம்,
காரைக்குடி.

முன்னுரை:

கம்பன் புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்த்த காரைக்குடியில் அரைநூற்றாண்டிற்கும் மேல் கவியுலகின் முடிசூடா மன்னராக தமிழியப் புரட்சிக்கவிஞராக திராவிடநாட்டின் வானம்பாடியாக பகுத்தறிவு இயக்கப்பாவலராக கவியாட்சி செலுத்தியவர் இவ்வாண்டு (2021) நூற்றாண்டு நிறைவு விழா காணும் வீறுகவியரசர் முடியரசன் ஆவார். அவர் காரைக்குடியில் மட்டுமல்லாது தமிழகத்தின் பல்வேறு இடங்களில் நடைபெற்ற கம்பன் விழா, குறள்விழா, பறம்பு மலை பாரிவிழா, பல்கலை-கல்லூரி விழா, தமிழ்ச்சங்க விழா, உலகத்தமிழ் மாநாடுகள், வானொலி நிகழ்ச்சிகள் போன்ற பல நிகழ்வுகளில் கவியரங்கத் தலைமையேற்று மொழி - இனம்- நாடு ஆகிய பொருண்மைக் கூறுகளில் வீறுணர்ச்சி மிக்க கவிதைகளை முழங்கி தனக்கெனத் தனித்துவமிக்க புகழைப் பெற்றிருந்தார். அத்தகைய வீறுகவியரசர் முடியரசனார் பாடிய கம்பன்விழாக் கவியரங்கக் கவிதைகளின் வழி கவிச்சக்கரவர்த்தி கம்பனின் பரிமாணங்களைக் காண முயலுகின்றது இக்கட்டுரை.

கம்பன்விழாக் கவியரங்குகளில் வீறுகவியரசர் முடியரசன்:

ஆட்சிக்கும் அஞ்சாமல் யாவரேனும் ஆள்க எனத்துஞ்சாமல் தமிழ்நாட்டின் மீட்சிக்குப் பாடிய வீறுகவியரசரின் கவியரங்கிற்கெனத் தனித்த சுவைஞர் கூட்டம் தமிழகமெங்கும் இருந்தது.

காரைக்குடி கம்பன் கழகக் கவியரங்குகளை உலகம் போற்றும் வண்ணம் ஒளிரச் செய்தவர் கவிஞர் முடியரசன்' என்று தினமணி நாளிதழில் சுட்டிக்காட்டும் பெருந்தமிழறிஞர் தமிழண்ணல் கவியரசு முடியரசனும் நானும் கம்பன் கழகம், திருக்குறள் கழகம், திருச்சி வானொலி நிலையம் உட்படத்

தமிழ்விழா அனைத்திலும், கவியரங்குகளிலும் சேர்ந்தே கலந்து கொள்வோம். அவருடைய கவிதைகள் மிக எளிதாக மக்களால் வரவேற்கப்படும்[2] எனத் தன் வாழ்க்கை வரலாற்று நூலில் குறிப்பிட்டுள்ளார்.

வீறுகவியரசருடன் பல கவியரங்குகளில் பங்கேற்றுள்ள கவியரசு கண்ணதாசன் தம் 'தென்றல்' இதழில் வெளியிட்ட கட்டுரையில் 'முடியரசன் விரைவாகவும் எளிதாகவும் பாடுகின்றார். சிலர் கவிதை பாடும்போது 'பிரசவவேதனை'படுவதுண்டு. முடியரசனுக்கோ எண்சீர், வெண்பா, அகவல் முதலிய பாவகைகள் பாடுங்கால் வேதனைப்பட்டதாகவே அறிந்ததில்லை. ஒரு பாடல் விறுவிறுப்பு ஏறும், கருத்து மிகும், சொற்கள் வளம் பெறும். அவர் கவியரங்க மேடையேறித் தோற்றதே கிடையாது[3] என்று போற்றியுள்ளார்.

ஒருமுறை காரைக்குடி கம்பன் திருநாள் நிகழ்வில் பங்கேற்று இரவு சென்னைக்குப் புறப்பட இருந்த தினமணி ஆசிரியர் ஏ.என்.சிவராமன் அவர்களை பேரா.அ.ச.ஞானசம்பந்தன் அவர்கள் 'மறுநாள் முடியரசன் கவியரங்கைக் கேட்டுவிட்டுப் போகலாம்' என்று வற்புறுத்தி இருக்கச் செய்ய மறுநாள் இருவரும் கவியரங்கைக் கேட்டு மகிழ்ந்து கவிஞரைப் பாராட்டிய பிறகே ஊர் திரும்பினர்.[4] முடியரசனாரின் கம்பன் விழாக்கவியரங்குகள் குறித்து திறனாய்வாளர் கெ.பக்தவச்சலம் தன் கட்டுரையில் 'தம் பாட்டுத்திறம் முழுவதையும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளைப் பரப்புவதற்காகச் செலவிடும் இச்சுயமரியாதைக் கவிஞரை (முடியரசன்) காரைக்குடியில் தொடர்ந்து கம்பன்விழா நடத்திப் பெருமை பெறும் திரு.சா.கணேசன் அவர்கள் கம்ப இராமாயணக் கவியரங்கிலும் அடிக்கடி அழைத்துப் பங்கேற்கச் செய்துள்ளார். தி.மு.க.வினரிடையே கம்பனில் இலக்கிய நயங்காட்டும் கவிஞராகவும், கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போரிடையே முன்னேற்றக் கருத்துகளை முழங்கும் திறமை கொண்ட கவிஞராகவும் விளங்கி, இரு திறத்துப் பாராட்டுதலையும் ஒருங்கே பெற்றுள்ள உயர்கவிஞர் முடியரசன். கம்பன் விழாக்கவியரங்குகளிலும் பிற வானொலி, மாநாட்டுக் கவியரங்குகளிலும் தனியிடம் பெற்றவை முடியரசன் கவிதைகள்[5] என்று மதிப்பிட்டுள்ளார்.

சாகித்திய அகாதெமி வெளியிட்ட தம் நூலில் பேரா.இரா. மோகன் முடியரசனின் கவியரங்கக் கவிதைகள் நாவிற்கும் காதிற்கும் சிந்தைக்கும் ஒருங்கே இனிமை தருவனவாகும். எடுப்பான தொடக்கமும் சுவையான ஒட்டமும் முத்தாய்ப்பான முடிப்பும் கொண்டவையாக அவை விளங்குகின்றன. நூற்றுக்கணக்கான கவியரங்க மேடைகளை முடியரசன் தம் எடுப்பான குரலாலும் ஏற்றமிகு கருத்தாலும் அணி செய்துள்ளார்[6] என்று புகழ்மகுடம் சூட்டியுள்ளார்.

கம்பன் விழா தொடக்க காலத்தில் 'நமஸ்காரம்' கூறித்தொடங்கும் வழக்கம் இருந்தது. அதற்கு மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள் திரண்டு எதிர்ப்பு தெரிவித்தபிறகு விழாவில் வணக்கம் கூறுதல் பழக்கமானது. இப்புரட்சியை இயக்கியவர்களில் முதன்மையானவர் முடியரசன் என்று தம் கட்டுரையில் முடியரசனின் மாணாக்கரான முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பழ.கருப்பையா நினைவு கூர்ந்துள்ளார்.[7]

முடியரசனாரை 'காரைக்குடி கம்பன்' என்று போற்றும் வழக்கமிருந்ததைச் சுட்டும் பொதுவுடைமை இயக்கத்தலைவர் தா.பாண்டியன் 'அந்தக் காலத்தில் மாணவர் புடைசூழ வீறுகவியரசர் முடியரசனார் நடந்து வருவதைப் பார்க்கும் பொழுது அக்காட்சி சோழன் ராஜசபையில் கம்பன் நடந்து வருவது போல் இருக்கும். எங்களுக்குக் காரைக்குடிக் கம்பன் அவர் தான். அவரை நாங்கள் 'காரைக்குடி கம்பன்' என்றுதான் அழைப்போம்'[8] என்று குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு கம்பன் விழாக்கவியரங்குகளுக்கும் வீறுகவியரசர் முடியரசனார்க்கும் மிக நெருங்கிய தொடர்பு இருந்தது.

கம்பன் - புதிய பரிமாணங்கள்:

சுயமரியாதை இயக்கத்திற்கு எதிர்ப்பு மிகுந்திருந்த காலத்தில் மாற்றுக்கருத்துள்ளோர் நடத்திய கவியரங்குகளில் தம் இயக்கக் கொள்கைகளைத் தலைப்புகளுக்குத் தக்கவாறு தம் கவிதைகளுக்குள் நயமாகப் புகுத்திவிடும் கவியாளுமை முடியரசனார்க்கு இயல்பாக அமைந்திருந்தது. சான்றாக 'கவியரங்கில் முடியரசன்' என்னும் நூலில் அமைந்த 'ஆடவர்' என்னும் பாடலில்

வீரச் செயல்புரியும் வேல்தாங்கும் காளையரின்
தீரப் பணிகண்டு செம்மாந்து வாழ்ந்திருக்கும்
வெண்தாடி வேந்தனைப்பார்' என்றவுடன் யாரென்றேன்'

(கவியரசர்முடியரசன் கவிதைகள், ப.131)

என்னும் பாடல் வரிகளில் தயரதனைக் குறிக்கும் வெண்தாடி வேந்தனை தந்தை பெரியார்க்கும், படைவீரரைக் குறிப்பிடும் வீரச்செயல்புரியும் காளையரை பெரியாரின் தொண்டர்க்கும் குறிப்பாகச் சுட்டுகின்றார்.

மண்ணாள் அரசொரு மங்கையின் சொல்லால் முறைகொன்றான்,
அண்ணா! அருளுடன் ஆண்டிட வேண்டும்; அறமொன்றே
கண்ணா நினைத்திடும் கண்ணிய னேநின் அரசுரிமை
நண்ணேன் அரசியல் நாயக' என்றனன் அவ்விளையோன்'

(க.மு.க, ப.132)

என்று கைகேயி, இராமன், பரதனைக் குறிப்பிடும் வரிகளுக்குள் அக்காலத்தைய அரசியல்சூழலையும் குறிப்பால் உணர்த்தியுள்ளார். இவ்வாறு குறிப்புப்பொருளுடன் முடியரசனார் கவிபாடும் பொழுது அக்குறிப்பைப் புரிந்துகொண்ட அவையோரின் கையொலி அரங்கையே அதிரவைக்கும். மாற்றுக் கருத்தினரும் அதனை இரசிப்பர். இவ்வாறு கவிதை பாடுவது முடியரசனுக்குக் கைவந்த கலை என்பர்".

கம்பன் விழாக் கவியரங்குகளில் கம்பரின் புதிய பரிமாணங்களாக வீறுகவியரசர் பாடிய பாடல்கள் பலவாயினும் நூலாக அச்சேறியவை சில மட்டுமே.. அவற்றுள் 18.03.1954 இல் காரைக்குடி கம்பன் விழாக்கவியரங்கில் பாடப்பெற்ற 'கம்பன் கண்டபடி ஆடவர்' என்னும் கவிதை 'கவியரங்கில் முடியரசன்' என்னும் நூலிலும், மார்ச் 1965இல் அங்கு பாடிய 'புகழ்க்கம்பன்' என்னும் கவிதை 'தமிழ்முழக்கம்' என்னும் நூலிலும், 21.03.1970 அன்று பாடிய 'கம்ப நாட்டில்' என்னும் கவிதை தமிழ்முழக்கம் நூலிலும் இடம் பெற்றுள்ளன. 16.04.1967இல் திருமலைராயன்பட்டினம் கம்பன் விழாக்கவியரங்கில் பாடிய 'வெம்புவான் கம்பன்' என்னும் கவிதை 'மனிதனைத் தேடுகிறேன்' என்னும் நூலில் அமைந்துள்ளது. மேற்சுட்டிய இந்நான்கு கவிதைகளிலும் வீறுகவியரசர் முடியரசனார் கவிச்சக்கரவர்த்தி கம்பரைப் பல பரிமாணங்களில் காட்டியுள்ளார்.

கன்னித்தமிழ்க்காதலன் - கம்பன்:

கம்ப இராமாயணத்தில் இடைச்செருகலாகவும், இடை நீக்கியும், பாடபேதம் கூறியும் பிறர் திருத்தங்கள் செய்வதைக் கம்பன் கண்டால் நெஞ்சம் கொதிப்பான் என்று 'வெம்புவான் கம்பன்' என்னும் பாடலில் குறிப்பிடும் கவிஞர் தாய்மொழியைப் புறந்தள்ளி வேற்றுமொழியை ஏத்தித்துதிக்கின்ற பேதை மனத்தவராய்ப் பேருக்குத் தமிழராய் வாழ்வோரைக் கம்பன் இன்று காணநேர்ந்தால்

'பித்தரெனத் தக்கவரைப் பிள்ளையெனப் பெற்றாளே!
நன்றறிவு காண்கின்ற நாளிவர்க்கு வாராதோ?'
என்றெல்லாம் எண்ணி இரங்கிமனம் வெம்பிடுவான்'

(க.மு.க, ப.236)

என்று தமிழின் மீது கம்பன்கொண்ட பற்றுதலைப் பாடுகின்றார்.

புகழ்க்கம்பன்' என்னும் பாடலில் இராமனுடன் கம்பனை ஒப்பிடும் முடியரசனார்

வில்வளைத்துப் பேராற்றல் விளங்கக் காட்டி
மிதிலைதரும் எழிலணங்கை மணந்தான் அண்ணல்;
சொல்வளைத்துப் பாவாற்றல் துலங்கக் காட்டிச்
சொல்லரிய புகழணங்கை மணந்தான் கம்பன்,
மல்விளைக்குந் தோளுடையான் மருங்கு காணா
அலைமகட்கு மணவணிநூல் சூட்டி நின்றான்;
சொல்விளைக்கும் நாவுடையான் மருங்குகாணும்
கலைமகட்குச் சுவையணிநூல் சூட்டி நின்றான்'

(க.மு.க, ப.249)

என்று கம்பனின் தமிழ்க்காதலைப் போற்றுகின்றார்.

வள்ளுவநெறி வழுவா வேந்தன் - கம்பன்

வள்ளுவன் இறைமாட்சி (39) அதிகாரத்தில் குறிப்பிடும் அரசனுக்குரிய இலக்கணங்களைக் கவிச்சக்கரவர்த்தியிடம் ஏற்றிப் போற்றுகின்ற வீறுகவியரசர், தாம் முடியரசன் என்பதாலும், கம்பரைச் சக்கரவர்த்தி என்பதாலும் கம்பநாட்டின் மீது போர்தொடுத்துச் செல்வதாகக் கற்பனையில் பாடுவதாக அமைந்ததே 'கம்பநாட்டில்' என்னும் கவிதையாகும்.

அக்கவிதையில் கம்பநாட்டின் கோட்டைக்கதவு அடைக்காமல் திறந்தேயிருந்தது. முனைந்தெழுந்து காவல்செய்யும் வீரரோ, முற்றுகையைத் தடுக்கின்ற படையோயில்லாதது கண்டு வியப்புற்று சினம் தணிந்து அறம் வளர்க்கும் குறளும், புலம் வளர்க்கும் தொல்காப்பியமும் கைகளில் ஏந்திக் கருணையோடு வரவேற்ற கம்பனைக்கண்டு மண்டியிட்டு நாட்டின் நலம் காண வந்ததாகக் கூறுகின்றார். கம்பனும் அதற்கிசைந்து தன் நாட்டின் வளங்களை முடியரசனார்க்கு சுற்றிக்காட்டுவதாக கற்பனையில் நீள்கிறது அக்கவிதை. மேலும் கவிச்சக்கரவர்த்தியின் ஆட்சிச்சிறப்பைக் கண்டு மகிழ்ந்து

வயலொன்றைக் காத்துவரும் உழவன் போல
　　வையமெலாம் காக்கின்ற கோன்மை கண்டேன்;
உயிரொன்றி வாழ்கின்ற உடம்பாய் நின்றே
　　உயிரனைத்துங் காக்கின்ற கோன்மை கண்டேன்;
செயிரின்றி இயல்பினிலே ஒருமைப்பாடு
　　செழித்துயரச் செய்கின்ற கோன்மை கண்டேன்;
கயலொன்றும் விழிமடவார் கற்பைக் காக்கும்
　　கருத்தேபோல் நிலங்காக்குங் கோன்மை கண்டேன்
(க.மு.க, ப. 261)

என்று வியந்து போற்றுகின்றார். கல்வி, கலை, உழவு, தொழில், வணிகம், சமயநல்லிணக்கம் போன்ற பலவற்றிலும் குடிபோற்றும் கோமகனாக வள்ளுவநெறியில் முறைசெய்து காப்பாற்றி மக்கட்கு இறையாகக் கம்பன் திகழ்வதாகப் பாடுகின்றார்.

பாகுபாடு ஒழித்த பகுத்தறிவாளன் - கம்பன்:

ஆடவர் என்னும் தலைப்பிலமைந்த கவிதையில் குகனைச் சுட்டும் கவிஞர்

ஓடு புனற்கிடை ஓடம் விடுத்திடும் ஆழ்கங்கை
வேடர் களுக்கிடை வீரம் நிறைந்திடும் வில்லாளன்
நாடு கொடுத்திடும் நாயகன் என்றிவர் தோழமையால்
மூட மதிப்படு சாதி தொலைத்தனர் முன்னின்றார்
கண்டு மகிழ்ந்தனம்....' (க.மு.க, ப.132)

என்று சாதி தொலைத்த பகுத்தறிவாளனாய்க் கம்பரைக் காணுகின்றார்.

கம்பனுக்குக் கல்வியறிவு இல்லை, காளிதேவி கம்பரின் நாவில் சூலாயுதத்தால் எழுதியதாலேயே அவருக்கு கவித்திறம் வாய்த்தது' என்ற செவிவழிக்கதையை ஏற்காத வீறுகவியரசர்

கற்றறிவு கம்பனுக்குச் சிறிதும் இல்லை
காளி வந்தாள் அவன் நாவில் எழுதி விட்டாள்'
பற்றுடையார் இவ்வண்ணம் கட்டி விட்டார்
பகுத்தறிவுக் கொவ்வாத கதையீ தாகும்;
முற்றுணர்ந்த அறிஞனவன், கலைப்ப ரப்பில்
மூழ்கிஎழுங் கலைஞனவன், காலங் காணாச்
சொற்றமிழிற் கவிஞனவன், நறைப முத்த
துறைத்தமிழில் தோய்ந்தெழுந்த புலவன் ஆவன்'

(க.மு.க, ப.249)

என்று 'புகழ்க்கம்பன்' என்னும் பாடலில் பகுத்தறிவிற்கு ஒவ்வாத கருத்தையும், கம்பனின் கல்விப்பெருமையையும் உணர்த்துகின்றார்.

கம்பநாட்டில்' என்னும் கவிதையில் கம்பநாட்டில் வாழ்ந்த மக்களைப் பற்றி

சாதியெனும் தொழுநோயை அறியா மக்கள்
சமுதாயப் பண்புடனே ஒழுகக் கண்டேன்

(க.மு.க, ப.262)

என்று சாதிப்பாகுபாடுகளை ஒழித்த பகுத்தறிவாளராகக் கம்பரைப் போற்றுகின்றார்.

பொதுவுடைமைப் புரட்சியாளன் - கம்பன்:

வீறுகவியரசரின் எண்ணம்-சொல்-செயலில் புரட்சி நிறைந்திருக்கும். முடியரசனாரின் கவியரங்கக் கவிதைகளடங்கிய 'தமிழ் முழக்கம்' நூலை வெளியிட்ட பதிப்புச்செம்மல் ச.மெய்யப்பன் 1950-70களில் நடைபெற்ற கவியரங்குகளில் முடியரசனார் தலைமையேற்றுப் பாடிய பாடல்கள் தமிழ் உணர்ச்சிப் பிழம்புகள். பங்கேற்றுப் பாடிய பாடல்கள் பல, இளைஞர்களின் தசைநார்களை வலிமைப்படுத்துவன. இவரின் பழந்தமிழ்ப்புலமை, மொழிவளம், சொல்லாக்கம் இவர் கவியரங்கக் கவிதைகளில் தனிச்சிறப்பைத் தந்தன[10] என்று போற்றியுரைத்தார்.

அத்தகைய வீறுகவியரசரின் புரட்சி உள்ளம் கவிச்சக்கரவர்த்தி கம்பரை பொதுவுடைமைப் புரட்சியாளராகக் காணச் செய்தது. கம்பன் இவ்வுலகைக் காணவந்தால் பொதுவுடைமையுலகம் தனியுடைமைப் போக்கில் செல்வதைக் கண்டு

எல்லா வுயிர்க்கும் பிறப்பொக்கும் என்றுணர்ந்தும்
அல்லா நெறிசென்றோம் அப்பிறப்பில் தாழ்வுயர்வும்
செல்வம் பதவியெனச் செப்பும் அவற்றுள்ளும்
பல்வகைய வேற்றுமை பண்ணிப் பிளந்தோம்
கொடுப்பாரும் அப்பொருளைக் கொள்வாரும் இல்லா
மிடுக்கான ஒருலகம் வேண்டும் எனவெண்ணிக்
காதையொன்று கண்டான் கனவொன்றுங் கண்டானிங்(கு)'

(க.மு.க, ப.236)

என்று கம்பனின் பொதுவுடைமையுலகக் கனவு நனவாகாமலிருப்பதைக் கண்டு வருந்துவான் என்பதை 'வெம்புவான் கம்பன்' என்னும் பாடலில் சுட்டுகின்றார்.

கம்பநாட்டில்' என்னும் கவிதையில் கம்பன் ஆட்சிபுரியும் நாட்டில் படி முழுதும் நெல் விளைந்திருப்பதால் படியரிசித்திட்டம் இல்லை, எழில் வயல்கள் உழவர்களிடம் இருப்பதனால் இடுவரம்புச்சட்டங்கள் அங்கில்லை, பார்முழுதும் எல்லோர்க்கும் எல்லாப் பொருளும் கிடைப்பதனால் படுபொருளைப் பதுக்குகின்ற பழக்கமில்லை என்று பாடும் கவிஞர்

பலவகைய தொழில்வளங்கள் படைத்து நிற்பார்
பணிபுரியும் நிறுவனங்கள் அடைத்து நில்லார்;
உலகுடனே தலைநிமிர உழைத்து நிற்பார்
உண்டாக்கும் பொருள்தடுத்து வளைத்து நில்லார்;
கலகமொடு கயமைசெய விருப்பங் கொள்ளார்
கடமைகளைப் புரிவதற்கு வெறுப்புங் கொள்ளார்;
பலதொழில்கள் புரிவினைஞர் பகைமை கொள்ளார்
பாடுபடும் நிலைக்கேற்பப் பயனே கொள்வார்'

(க.மு.க, ப.262)

என்று பொதுவுடைமைப் புரட்சியால் விளைந்த கம்பநாட்டை வருணிக்கின்ற முடியரசன் சீர்திருத்தச் செம்மல் சொ. முருகப்பா

அவர்களின் இராமகாதைப் பதிப்புப் பணியில் உடனிருந்து உதவியிருக்கிறார் என்பது ஈண்டு நினைந்து போற்றத்தக்கது.

நிறைவுரை:

வீறுகவியரசர் முடியரசன் திராவிட இயக்கக் கொள்கைகளுக்கு ஒவ்வாததாக கம்ப இராமாயணத்தைப் புறந்தள்ளி விடாமல் கம்பரின் கவியழகில் தமிழுணர்வில் மூழ்கித் திளைத்து தம் கவியரங்கக் கவிதைகளில் பல பரிமாணங்களில் கவிச்சக்கரவர்த்தியைக் கண்டு இன்புறுகின்றார். பிறர்க்கும் இன்புறுத்துகின்றார். கவிச்சக்கரவர்த்திக்கும் வீறுகவியரசர்க்கும் இடையேயான தமிழ்ப்பிணைப்பை அவருடைய கவிதைகளின் வழி நன்குணர முடிகின்றது.

அடிக்குறிப்புகள்:

1. தினமணி, 05.12.1998, பாடிப்பறந்த பறவை- கட்டுரை
2. மனத்துக்கு மனம், ப.44
3. தென்றல், 04.12.1954
4. பாட்டுப்பறவையின் வாழ்க்கைப் பயணம், ப.286
5. இளந்தமிழன், மே -1973
6. இந்திய இலக்கியச்சிற்பிகள் - முடியரசன், ப.132
7. இவர் தாம் முடியரசர்! வீறுகவியரசர்!, ப.70
8. மேலது, ப.50
9. கவிதைக்குப் பிறந்த மகன் கவியரசர் முடியரசன், ப.94
10. முடியரசன் கவிதை முத்துக்கள், ப.28
11. பாட்டுப் பறவைகள் வாழ்க்கைப் பயணம், ப. 267

துணை நூற்பட்டியல்:

1. இரா.மோகன், இந்திய இலக்கியச்சிற்பிகள்- முடியரசன், சாகித்திய அகாதெமி, புதுதில்லி. 2006
2. கவியரசர்முடியரசன், பாட்டுப்பறவையின் வாழ்க்கைப்பயணம், தமிழ் மண் பதிப்பகம், சென்னை. 2008

3. தமிழண்ணல், மனத்துக்கு மனம், மீனாட்சி புத்தகநிலையம், மதுரை. 2010
4. (தொ) பாரி முடியரசன், முடியரசன் கவிதை முத்துக்கள், சாகித்திய அகாதெமி, புதுதில்லி. 2015
5. (ப) பாரிமுடியரசன், கவியரசர் முடியரசன் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை. 2016
6. பாரி முடியரசன், கவிதைக்குப்பிறந்த மகன் கவியரசர் முடியரசன், கலைஞன் பதிப்பகம், சென்னை. 2016
7. (தொ) பாரி முடியரசன், இவர் தாம் முடியரசர் வீறுகவியரசர், மணிவாசகர் பதிப்பகம், சென்னை. 2019

இராமன் நல்ல நண்பன்

முனைவர் சி.மகேஸ்வரி
கோயில்பட்டி

முன்னுரை

மனித இனம் தோன்றிப் பல இலட்சக்கணக்கான ஆண்டுகள் ஆகியிருப்பினும், குடும்பம் என்ற வடிவமைப்பில் என்று மக்கள் வாழக் கற்றுக் கொண்டனரோ, அன்றைய நாளிலிருந்து தான் சமூகம் இயங்கத் தொடங்கியது. கூட்டமாக வாழ்ந்த மனிதன் தனித்தனிக் குடும்பமாகப் பிரிந்த வரலாறு. அந்தக் குடும்பத்தில் அவன்தான் தலைவன். அவனோடு வாழ்கின்ற பெண்கள் அவனுக்கு மட்டுமே உரியவர்கள், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் அவனுடைய வாரிசுகள். இவர்கள் என்னுடைய குழந்தைகள் என்ற நிறைவையும், சமூக அங்கிகாரத்தையும் பெறவே குடும்பம் என்ற அமைப்புத் தோன்றியது. மனிதன் திருமணம் என்னும் சமூகச் சடங்கில் குடும்பத்தைத் தொடங்கினான். கணவன் - மனைவி உறவில் விளையும் மக்கள் உறவு, குருதி வழி உறவு ஆகும். பிற மனிதருடன் கொள்ளும் உறவு குருதி அல்லாத உறவு. இவ்வுறவுக்கு நண்பர்களிடையே மலரும் உறவுச் சான்றாகிறது.

இராமாயணத்தில் இந்தச் சமூக அமைப்பு எவ்வாறு இடம் பெற்றுள்ளது என்றும் இராமன் - சீதை இருவரின் உறவு நிலையையும் காண்கிறோம். ஏகபத்தினி விரதனாக விளங்கினான் இராமன். தந்தையின் வாய்மையைக் காக்க தாய் சொன்ன பணியைத் தலைமேல் சுமந்து, வனம் செல்லப் புறப்பட்டான் இராமன்,

இதனை,

'கருவி மாமழைக் கல்கடம் கண்டு நான்
வருவென் ஈண்டு வருந்தலை நீ (1822)

என்று கூறுகிறான். இச்சொற்கள் சீதையைச் சுட்டன. இதனைக் கம்பன்,

நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு (1827)

என்றார், சீதை இராமன் ஆகிய இருவரும் 'ஈருடல் ஒருயிர்" என வாழ்ந்த அவர்களின் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுகிறது. இராமனும், சீதையும் இலக்குவனும் வனத்திற்குச் செல்கிறார்கள். அங்கு கங்கைக் கரையில் குகனின் நட்புறவு மலர்ந்து தோழமை உறவாகக் கருதப்படுகிறது. 'இராமன் நல்ல நண்பன்" என்ற தலைப்பில் இராமன் வாழ்வில் உள்ள நட்புத் தன்மை இக்கட்டுரையில் காணப்படுகின்றது. இதனை,

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு (குறள் - 786)

என்கிறார் வள்ளுவர். சிறிது நேரம் முகம் மட்டும் மலருமாறு பேசிப் பழகி பிரிவது சிறந்த நட்பன்று. ஒருவரோடு மற்றவர் மனமும் அன்பால் மகிழும்படி பழகுவதே சிறந்த நட்பாகும். இக்கூற்றுக் கேற்ப இராமன் - குகன் ஆகிய இருவரின் நட்பானது ஆழமான நட்பு என்று கம்பர் அழுத்தமாகப் பதிவு செய்துள்ளார்.

குகனின் அறிமுகம்:

வடநாட்டுக் கங்கைக் கரையிலுள்ள சிருங்கிபேரம் என்னும் நகரத்தில் வாழ்கின்றான் குகன் என்னும் வேடன் குகனால் வேடர் குலம் பெருமையுற்றது. கங்கை வேடனான குகன்| என்று இலக்கிய உலகம் போற்றுகிறது. குகன் ராமனின் உயரிய அன்பு நெறியைக் கடைபிடித்து அழியாப்புகழ் பெற்றான். கவிக்கு நாயகராகிய கம்பர் இராம காதையை வடமொழிக் காவியத்தினின்றும் எடுத்துக் கொண்டு, அதனைத் தமிழ்நாட்டவர்க்கு ஏற்றவாறு நல்ல இனிய நண்பனாக, விருந்தாக அளித்துள்ளார். இராமனிடம் அன்பு பூண்ட கங்கை வேடனை உருவாக்கும் பொழுது கம்பர் உள்ளத்தில் காளத்தி வேடனாகிய கண்ணப்பனின் வடிவம், அன்பு கனிந்து, அவனைக் கருவாகக் கொண்டு கங்கை வேடனாகிய குகனை அவர் வார்த்து வடித்துள்ளார்.

குகனின் அன்பு:

கோசல நாட்டு இளவரசனாகிய இராமன், தாயின் சொல்லை ஏற்றுக்கொண்டு தனக்குரிய நாடு துறந்து, கங்கைக் கரையை வந்தடைந்தான் என்று அறிந்த குகன் அக்குரிசிலைக் காணப்புறப்பட்டான். வால்மீகி முனிவர் எழுதிய வடமொழிக் காவியத்தில் குகன் இராமனைக் காணப்புறப்படும் கோலம், ஓர் அரசன், மற்றோர் அரசனைக் காண எழுகின்ற தன்மையில் அமைந்திருக்கின்றது. ஆனால், கம்பர் ஆண்டவனைக் காணச் செல்லும் அடியவனாகக் குகன் கோலத்தைத் திருத்தி அமைத்துள்ளார்.

இராமனைக் காணவரும் போது குகன் தன்னுடைய கையில் மீனையும், தேனையும் காணிக்கையாக ஏந்தித் தன் சுற்றத்தாரோடு அவனைக் காணவந்தான். குகன் தன் உறவினர்களைத் தூரத்தில் நிறுத்திவிட்டு, அம்பையும், வில்லையும் இடுப்பில் கட்டிய வாளையும் நீக்கி விட்டு, பொய்யை நீக்கிய மனத்தை உடையவனாய், இராமனிடத்தில் பேரன்பு கொண்டு அவன் தங்கியிருந்த தவப்பள்ளியின் வாயிலை நெருங்கினான். நெஞ்சில் நிரம்பிய அன்போடு வாயிலில் நின்ற குகன் இராமனை நோக்கி, 'இறைவா! நாய் போன்ற அடியவனாகிய நான், உங்கள் கட்டளையை நிறைவேற்றச் சரியாக இங்கு வந்துவிட்டேன்" என்று உரக்கக் கூறினான்.

'தேவா! நின்கழல் சேவிக்க வந்தனென்
நாவாய் வேட்டுவன் நாயடியேன் (1963)

என்று குகன் கூறுவதிலிருந்து இவ்உண்மை விளங்குகிறது.

குகன் இராமனைக் காணல் :

குகன் என்னும் வேடன் தன்னைக் காண வந்திருப்பதாக இலக்குவன் கூறக் கேட்ட இராமபிரான் மனம் விரும்பி, 'நீ அவனை என்னிடம் அழைத்து வருக" என்று கூறினான். இலக்குவன் குகனை அழைத்து உள்ளே வருமாறு தெரிவித்ததும், இராமபிரானிடம் அன்பு கொண்ட குகன் விரைந்து உள்ளே புகுந்து அவனைக் கண்டு மகிழ்ந்தான். பின்னர் தன் கரிய தலைமயிர் மண்மீது படியுமாறு கீழே விழுந்து வணங்கித் தன் உடம்பை வளைத்து வாயைக் கையால் மூடிய வண்ணம் நின்றான்.

குகன் கொண்டு வந்த உணவு :

இராமன் குகனை நோக்கி, 'இங்கே அமர்க" என்று கூறிய போதும் குகன் உட்காரவில்லை. இராமனிடம் அளவற்ற அன்பை உடைய அவன் ஐயனே! தங்களுக்கு உணவாக அமையும்படி தேனையும், மீனையும் திருத்திக் கொணர்ந்தேன் தேவரீர் திருவமுது செய்தருள வேண்டும் என்று இறைஞ்சி நின்றான். அச்செயல் நிகழும் போது இராமனுடன் உரையாடிக்கொண்டிருந்த சில விருத்தமாதவர்கள் குகனது மனப்பான்மையை அறியாதவராய், தகாதபொருள்களை வேடன் எடுத்து வந்து அபசாரம் செய்துவிட்டான் என்று எண்ணி வெறித்து நோக்கினர். அவர்கள் மனத்தில் நிகழ்ந்த கருத்தினை அறிந்த இராமன்,

'அரியதாம் உவப்ப உள்ளத்து அன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால் அமிழ்தினும் சீர்த்தவன்றோ? (1967)

என்று விருந்த மாதவரை தெருட்டி அருளினான். இராமன் வயது முதிர்ந்த முனிவர்களை நோக்கிப் புன்முறுவலுடன், 'இந்தக் காணிக்கைப் பொருள்கள் குகனின் உள்ளத்திலிருக்கும் பேரன்பினால் எனக்குக் கொண்டு வந்தவை இவை கிடைத்தற்கு அரியனவும், அமிழ்தத்தைவிடச் சிறந்தனவும் ஆகும். அன்போடு பொருந்தியன. ஆதலின் இவை தூய்மையான பொருள்களே. எம் போன்றவர்களுக்கும் உரியன. அதனால் நாம் உண்பதற்குச் சமமே ஆகும்" என்று கூறினான்.

குகனின் தொண்டு:

குகன் இராமனைப் பிரிந்திருக்க முடியாத மனப்பான்மையைப் பெற்றான். அந்தி மாலை வந்தடைந்த பொழுது இராமன் குகனை நோக்கி, 'அப்பா! இன்றிரவு உன் ஊருக்குச் சென்று நாளைக் காலையில் கங்கை ஆற்றைக் கடப்பதற்குப் படகுகள் கொண்டு வருக" என்று கூறிய பொழுது குகனுடைய மனம் அனலிடைப்பட்ட மெழுகுபோல் உருகியது. என் ஐயன், என் ஆண்டவன், என்னைப் போ என்றானே! அவனை விட்டு நான் எவ்வாறு போவேன்? அவனுடன் இருத்தலே எனக்குப் பேரின்பம், அவனைப் பிரிந்து இருந்தால் பெருந்துன்பம் என்று

எண்ணி இராமனை நோக்கி ஐயனே! நான் போகமாட்டேன். இங்கிருந்து தங்களுக்கு என்னால் இயன்ற தொண்டு செய்வேன்" என்றான்.

> கார்குலாம் நிறுத்தான் கூற காதலன் உணர்த்து வான்இப்
> பார்குலாம் செல்வநின்னை இங்ஙனம் பார்த்த கண்ணை
> ஈர்கிலாக் கள்வனேன்யான் இன்னலின் இருக்கை நோக்கித்
> தீர்கிலேன் ஆன தைய செய்குவன் அடிமை என்றான் (1969)

என்று குகனின் பெருமையைக் கம்பர் அழகாக வருணித்துள்ளார்.

இராமனுக்கு இனிய நண்பன்:

குகன் இராமனை நோக்கி, 'என் பெருமானே! அயோத்தி மாநகரில் அரியாசனத்தில் மன்னர் மன்னனாய் மணிமுடி தரித்துச் செங்கோல் ஏந்தி அரசாளும் கோலத்தில் காண வேண்டிய உன்னைச் சடை முடியும், மரவுரியும் தரித்துக் கானகப் புல்லில் அமர்ந்திருக்கக் கண்டேனே! என் கண்கள் செய்த பாவம் கடலைக் காட்டிலும் பெரிதன்றோ? இந்தக் கோலத்தில் உன்னைக் கண்ட என் கண்களைப் பறித்தெறியாத பாவியேன் நான். ஐயனே! உன்னை விட்டுப் போக என்னால் இயலாது. என்னால் இயன்ற சிறுதொண்டு செய்து கொண்டு இங்குதான் இருப்பேன்" என்று மனங்கசிந்து பேசினான். கங்கை வேடனின் சொல்லின் சுவையை அறிந்த இராமன்,

> சீதையை நோக்கித் தம்பி திருமுகம் நோக்கித் தீராக்
> காதலன் ஆகும் என்று கருணையின் மலர்ந்த கண்ணன்
> யாதினும் இனிய நண்ப இருத்தி ஈண்டு எம்மோ டென்றான் (1970)

என்று கூறினான். 'யாதினும் இனிய நண்ப" என்று அழைத்தமையால் குகன் இராமனுக்குப் பொன்னினும் இனியன் ஆனான். புகழினும் இனியன் ஆனான். மற்றெதனினும் இனியன் ஆனான் என்பது வெளிப்படையாக விளங்குகின்றது. குகன் அகமும், முகமும் மலர்ந்தான். அன்றிரவு நாணாற்பாயலில் இராமனும், சீதையும் படுத்துறங்க இலக்குவன் வில்லை ஊன்றிய கையோடு அவ்விருவரையும் காத்து நிற்க, அன்பு வடிவான குகன் முறையாக மூவரையும் காத்து நின்றான். இரவு முழுவதும் கண்ணிமைக்காமல் காவல் செய்த குகன்,

இன்பப்பணியிலே ஈடுபட்டான். காளத்திநாதனை இரவு முழுவதும் கண்ணிமைக்காமல் காத்திருந்த கண்ணப்ப வேடனைப் போல குகனும் இராமனைக் காத்து நின்றான்.

உறவு கூறுதல்:

சித்திரகூடத்திற்குத் தானும் வருவதாகக் கூறிய குகனிடம் இராமன், மறுமொழி கூறுகிறான். 'நீ என் உயிர் போன்றவன், என் தம்பி உனக்குத் தம்பி ஆவான். இந்தச் சீதை உன்தோழி ஆவாள். கடலில் சூழப்பட்ட உலகம் முழுவதும் உன்னுடையதே. நானும் உன்னுடைய ஏவல் தொழிலில் கட்டுப்படும் உரிமையில் இருக்கின்றேன்.

ஐவர்கள் ஆனோம்:

துன்பம் இருந்தால் தான் சுகம் உண்டாகும். இடையில் உண்டாகின்ற பிரிவுக்காக வருந்த வேண்டாம். முன்பு நாங்கள் உடன் பிறந்தார் நால்வராக இருந்தோம். எல்லையில்லாத அன்பைக் கொண்டுள்ள நாம் இப்போது 'ஐவர் ஆனோம்" இதனை,

என் உயிர் அனையாய் நீ இளவல் உன் இளையான் இந்
நன்னுதல் அவள் நின் கேள் நுளிர்கடல் நிலமெல்லாம்
உன்னுடையது நான் உன் தொழில் உரிமையில் உள்ளேன் (1994)

அன்புள இனி நாம் ஓர் ஐவர்கள் உளர் ஆனோம் (1995)

என்றெல்லாம் சகோதர உறவை இராமன் கூறுகிறான்.

அயோத்தியில் இருக்கும் உன் சுற்றத்தாரைப் பாதுகாப்பதற்கு உன் தம்பியாகிய ஒருவன் பரதன் அங்கு இருக்கின்றான். உன்னுடைய இன்னொரு தம்பி இங்கே என்னோடு வருகிறான். நீயும் என்னுடன் வந்துவிட்டால் இங்குள்ள என்னுடைய உறவினர்க்கு யார் துணையாக இருப்பார்? சொல் பார்க்கலாம். ஆதலால் நீ இங்குள்ள என் மக்களைப் பார்த்துக் கொள்வாயாக. வனவாசம் முடிந்து திரும்பி வரும்போது உன்னைப் பார்க்காமல் அயோத்திக்குச் செல்லமாட்டேன். இது என் அன்புக்கட்டளை இதனைத் திருப்தியாக ஏற்றுக்கொள் என்றான். இராமன் கூறிய அன்புக் கட்டளைக்கு குகன் சம்மதிக்கிறான். இராமன் பிறர்

மனம் புண்படாதபடி பார்த்துப் பேசிக் கொள்கிறான். மேலும் அவனுக்குச் சமாதானம் கூறிக் குகன் சித்திரக்கூடத்திற்கு வருவதை இராமன் தவிர்த்தான்.

குகனின் பக்தி:

குகன் இராமனிடம் பயன் கருதாமல் பக்தியில் ஈடுபட்டான். 'கூடும் அன்பினில் கும்பிடுதல் தம் கடன்" என்று கொண்டவன். குகனின் இந்தப் பக்தியே சாலச்சிறந்தது. இராமன் நாடு துறந்து, காடு புகுந்த பின்னர் அவன்பால் அன்பு கொண்டவர் மூவர் ஆவர். கங்கைக் கரையிலே குகன் இராமனிடம் சேர்ந்தான். கிட்கிந்தையில் சுக்ரீவன் நட்பு கொண்டான். இலங்கையில் விபீடணன் வந்து நண்பன் ஆனான். தன்னுடன் வந்த மூவரையும் தன்னுடைய குடும்பத்திலே சேர்த்துக் கொண்டான் இராமன். அசோகவனத்தில் இருந்த சீதையை அனுமன் கண்டுபிடித்து வந்தான் எனினும் சுக்ரீவன் இராமனிடம் அன்பு பூண்டதற்குக் கைம்மாறாகக் கிட்கிந்தை அரசைப் பெற்றான். விபீடணன் இராமனைச் சரண் அடைந்து இலங்கை அரசைப் பெற்றான். குகன் ஒருவனே பக்திக்காகப் பக்தி செய்து கைம்மாறு கருதாது அன்பின் பெருமையைப் பெற்றான்.

சுக்ரீவன் மனம் வாடுதல் :

கங்கை வேடனைக் குறிக்கோளாகக் கொண்டு வானர வேந்தனாக சுக்ரீவன் வாடி வருந்தினான். இராமனிடம் எப்பயனையும் கருதாமல் விழுமிய அன்பு பூண்ட வேடனுடைய பெருமையையும், தனது சிறுமையையும் நினைத்து சுக்ரீவன் மனம் வருந்தினான். வானரப்படை இலங்கை மாநகர்ப்புறம் எய்தியபோது, அப்படையின் திறன் அறியுமாறு தன் நகரில் நின்று நோக்கிய இலங்கை வேந்தனைக் கண்டான் வானர மன்னன். அவன் உள்ளத்தில் சீற்றம் பொங்கி எழுந்தது. பஞ்சின் மெல்லடிப் பாவையாகிய சீதையை வஞ்சனையாற் கவர்ந்து, சிறை வைத்த அரக்கர் கோனைக் கொன்று பழி தீர்க்கக் கருதி அவன் மீது பாய்ந்தான். வீரராகிய இருவரும் நெடும்பொழுது கடும்போர் புரிந்தார்கள். இலங்கை நாதனது வலிமையை அறிந்த வானரத்தலைவன் அவனது தலைமீதுள்ள

மணிமுடியைக் கவர்ந்து இராமனது பாசறைக்கு வந்தான். அரக்கன் கையிலிருந்து தப்பி வந்த வானர வீரனைக் கண்டு இராமன் பெருமை அடைந்தான். அப்பொழுது அன்பினால் அகம் மலர்ந்த வானர மன்னன், ஐயனை நோக்கி,

'காட்டிலே கழுகின் வேந்தன் செய்தது காட்ட மாட்டேன்
நாட்டிலே குகனார் செய்த நன்மையை நயக்க மாட்டேன்
கேட்டிலேன் இன்று கண்டும் கிளிமொழி மாதராளை
மீட்டிலேன் தலைகள் பத்தும் கொணர்ந்திலேன் வெறுங்கை வந்தேன்
(6933)

என்று மனம் வருந்திக் கூறினான். காட்டில் வாழும் கழுகுவேந்தனும், நாட்டில் வாழும் நல்லவேடனும், காட்டிய அன்பை நான் காட்ட இயலாதவன் ஆனேன். இலங்கை மாநகரில் சீதையை இங்கே கொண்டுவர வலியற்று வெறுமையாகக் கண்டு வந்தேன். அரக்கனை எதிர்த்தும், அவனது தலையைக் கொண்டு வராமல் வெறுங்கையனாய் வந்தேன் என்று வானர மன்னன் சுக்ரீவன் வருந்தினான்.

கழுகு வேந்தன் ஆற்றிய கடமை:

காட்டில் தனியாக இருந்த சீதையை இலங்கை வேந்தன் கவர்ந்து வேகமாகச் செல்லும் பொழுது ஆதரவற்ற நங்கையின் அழுகுரல் கேட்டுக் கழுகினக் காவலன் காற்றினுங் கடுகி வந்தான். அறநெறி தவறிய அரக்கனுடன் நெடும்பொழுது கடும்போர் புரிந்து ஆவி துறந்தான். இவ்வாறு ஆதரவற்ற சீதைக்காக அறப்போர் புரிந்து ஆவி நீத்த கழுகின் வேந்தன் தெய்வ மரணம் எய்தினான் என்று இராமன் போற்றினான். 'தன்னுயிர் புகழ்க்கு விற்ற சடாயு" என்று சொல்லின் செல்வனான அனுமன் புகழ்ந்து கூறினான். அரன் அளித்த வாளுடையானை வெறும் அலகுடையான் வெல்லுதல் இயலாது என்று அறிந்தும், அறநெறி நிறைந்த அரக்கனோடு போர் புரிந்து, ஆவி துறத்தலே தன் கடமை என்று அறிந்து கழுகின் வேந்தன் உயிர் கொடுத்துப் புகழ் அடைந்தான். இவ்வாறு இராமனது சேவையில் அமரநிலை புரிந்து இறக்க முடியவில்லை என்று சுக்ரீவன் தன் குறையை நினைத்து வருந்தினான்.

தோழமை உறவு :

கங்கைக் கரையின் காவலனாகிய குகன் பரதனது சேனையைக் கண்டபோது, அவன் இராமனை வெல்லக் கருதி வந்தான் என்று எண்ணித் தன் உயிரையும் ஒரு பொருளாகக் கருதாமல் போர்க்கோலம் புனைந்தான்.

ஆழ நெடுந்திரை யாறுக டந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டுவி லங்கிடும் வில்லாளோ
தோழமை என்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன்றோ
ஏழைமை வேடன் இறந்திலன் என்றெனை ஏசாரோ (2317)

என்று வீரமொழி பகர்ந்து தன் தோழனுக்காக உயிரையும் கொடுக்க இசைந்து நின்றான். 'என் காவலில் அமைந்த கங்கையாற்றைக் கடந்து இவர் போவாரோ? தோழன் என்று நாயகன் உரைத்த சொல் ஒரு சொல்லன்றோ? நன்றி மறவாத நாய்போல் தலைவனது ஆணைக்கடங்கிக் காவல் புரியும் ஏழையேன். அமர்களத்தில் நான் இறந்த பின்னன்றோ பரதன் இராமனைப் பார்க்க வேண்டும் என்று குகன் கூறியதிலிருந்து இராமனிடமுள்ள அன்பு தலைத்தோங்கியது.

கோசலையின் அறிவுரை:

பரதன் குகனிடம் தாயார் மூவரையும் அறிமுகம் செய்தான். உறவினர்களும், தேவர்களும் வணங்கும் சிறப்புடைய கோசலையை வணங்கி, அவர் யாரென்று குகன் வினவினான். அதற்குப் பரதன் இராமனைத் தன் மகனாகப் பெற்றதால் அடைய வேண்டிய செல்வத்தை, நான் பிறந்ததனால் இழந்த பெருமை உடையவள் என்றான். மேலும் கோசலை, குகனை பரதனிடம் யாரென்று வினவினாள். அதற்குப் பரதன் 'இந்த ஆண்மகன் இராமனுக்கு இனிய துணைவன், இலக்குவனனுக்கும், இளைய தம்பியாகிய சத்துருக்கனனுக்கும். எனக்கும் அண்ணன் இவன் பெயர் குகன்" என்று கூறினான். கோசலை பரதனையும், குகனையும் நோக்கி, 'மைந்தர்களே! இனி நீங்கள் துன்பத்தால் வருந்தாதீர்கள். வலிமை மிக்க வீரர்களாகிய இராமனும், இலக்குவனனும் நாட்டைவிட்டுக் காட்டிற்கு வந்ததும், நன்மைக்கே ஆகும். துதிக்கையில் வீரம் காட்டும் ஆண்

யானையைப் போன்ற குகன் என்னும் இவ்வாண்மகனுடன் சேர்ந்து நீங்கள் ஐந்து பேரும் ஒற்றுமை உடையவர்களாய் இந்நிலவுலகத்தை நெடுங்காலம் பாதுகாப்பீராக" என்று ஆறுதல் கூறினாள்.

முடிவுரை

குகன் தன் தோழனுக்காக உயிரையும் கொடுக்க இசைந்து நின்றான். குகனின் அன்பு நெறிக்கு ஒப்பாரின்றி உயர்வுற்று ஏனைய அன்பர்க்குக் கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறான். நட்பு மனம் சார்ந்த ஒன்று. ஒரே தன்மையான உணர்ச்சி நட்பு ஏற்படுவதற்கு வேண்டிய உரிமையை உண்டாக்குகிறது. இன்பத்திலும், துன்பத்திலும் துணை நிற்பது நட்பு. இக்கூற்றுக்கேற்ப இராமனுடைய அன்பு முதலில் கொண்ட விருப்பம் எப்போதும் மாறாமல் இருப்பதே நட்பாகிறது. இராமன் - குகன் நட்புறவு இரத்த உறவைவிடத் தோழமை உறவுச் சிறந்தது" என்பதைக் காட்டுகிறது. இராமன் நல்ல தலைவன், ஷநல்ல நண்பன்| என்ற பண்பின் மூலம் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறான் என்பதைக் கம்பர் வெளிப்படுத்துகிறார்.

கம்பரின் புவியியல் சார் சிந்தனைகள்

முனைவர் மு.பழனியப்பன்

தமிழ்த்துறைத் தலைவர், அரசு கலை அறிவியல் கல்லூரி,

திருவாடானை

கவிச்சக்கரவர்த்தி கம்பர், கவிதைக்கலையோடு பிற கலைகளிலும் விற்பன்னராக விளங்கியுள்ளார். இவரின் அறிவாற்றல் பல்வேறு துறைகளிலும் சிறப்புடையதாக இருந்துள்ளது. வரலாற்று அறிவு, சுற்றுச் சூழல் அறிவு, வழக்கியல் அறிவு, புவியியல் அறிவு போன்ற பல துறைகளிலும் கம்பர் தன் அறிவுத்திறத்தால் சிறந்து விளங்கியுள்ளார். அவரின் கம்பராமாயணக் காப்பியம் பல்துறை சார்ந்த நுணுக்கங்களை உடையதாக விளங்குகிறது. கம்பர் பாடிய ஒவ்வொரு பாடலிலும் ஒவ்வொரு படலத்திலும் புதிய புதிய செய்திகள் நிரம்பிக்கிடக்கின்றன. அவற்றைச் சுவைத்து உணருகையில் கம்பரின் புலமைத்திறம், பல்துறை அறிவுத் திறம் வெளிப்பட்டு நிற்கின்றது.

கம்பரின் புவியியல் அறிவுத் திறன் குறித்த செய்திகளை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது. இலங்கை என்பது கம்பராமாயணத்தின் மிக முக்கியமான களமாக விளங்குகின்றது. இலங்கையின் அமைவிடம் குறித்தும் இலங்கைக்கு அருகில் உள்ள தீவுகள் குறித்துமான பல செய்திகளைக் கம்பர் தன் காப்பியத்தில் உரைத்துள்ளார். அச்செய்திகள் அவரின் புவியியல் சார்ந்த அறிவுத் திறனுக்குச் சான்றாகின்றன.

புவியியல்

புவியியல் என்பது பூமி குறித்தான அறிவியல் ஆகும். இது பூமியின் தன்மை, அதன் வளம், அதன் அமைவிடம், அமைவிடத்தில் வாழும் உயிரினங்கள், கனிம வளம் போன்றன குறித்து ஆராயும் துறையாகும். "இச்சொல்லை நேரடியாக மொழி பெயர்க்கும்போது அது புவியைப்பற்றி விளக்குவது அல்லது எழுதுவது என்பதைக் குறிக்கும்" என்கிறது விக்கிப்

பீடியா. புவியியல் என்பது, புவியையும் அதிலுள்ள எல்லா மனித மற்றும் இயற்கைச் சிக்கல்களையும் புரிந்துகொள்ள முயல்கிறது. எங்கெங்கே பொருள்கள் இருக்கின்றன என்பதை மட்டுமன்றி, அவை எவ்வாறு மாறுகின்றன, எப்படித் தற்போதைய நிலையை அடைந்தன என்பவற்றை அறிவது தற்காலப் புவியியலின் நோக்கமாகும். மனிதனுக்கும், இயற்பு அறிவியலுக்கும் இடையே உள்ள தொடர்பாக அமைவதால், புவியியல் துறையானது, மானிடப் புவியியல், இயற்கைப் புவியியல் *(physical geography)* என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவ்வடிப்படைச் செய்திகளைக் கொண்டு புவியியல் துறை பற்றி அறிந்துகொள்ள முடிகின்றது.

இராமாயணம் இந்தியப் பெருநாட்டின் இதிகாசம். இது இந்தியா முழுமைக்கும் பயணிக்கும் இராமன் என்ற மனிதனின் வாழ்க்கை குறித்தானது. இவ்விராமன் பூமியின் ஒரிடத்தில் தங்காது பல இடங்களுக்குச் செல்லும் நிலைக்குத் தள்ளப்படுகிறான். அவன் தான் செல்லும் இடங்களுக்கு ஏற்பத் தன்னை தகவமைத்துக் கொள்கிறான். கங்கைக்கு வரும்போது அவன் படகோட்டியின் துணையை நாடுகிறான். கடலுக்கு வரும்போது பாலம் கட்டுகிறான். இத்தகைய நிகழ்வுகளில் அவன் மனிதர்களை மட்டுமல்ல மண்ணின் இயல்புகளையும், மண்ணின் தன்மைகளையும் அறிந்து செயல்பட வேண்டியவனாகிறான். அவனுக்கு எதிரான தலைவன் இராவணன். அவனும் தன்னால் முடிந்த அளவு தன் மண் குறித்த இயல்புகளை அறிந்துள்ளான். இத்தகைய கதை மாந்தர்களைப் படைத்த கம்பன் இவ்விரு மாந்தர்களின் புவி சார் இயல்புகளையும் அறிந்துக் காப்பியம் படைத்துள்ளான் என்பது இங்கு எண்ணத்தக்கது.

இலங்கைக்கு பயணிக்கும் வழி

சுக்ரீவன் தன் வானரப் படைகளுக்குச் சீதையைத் தேடிக் கண்டுபிடிக்க பல வழிகளைச் சுட்டிக்காட்டுகிறான். தென் திசை நோக்கிப் பயணிக்கும் அனுமன் உள்ளிட்ட வானரக் குழுவினருக்கு அவன் காட்டும் வழி கம்பரின் புவியியல் சார் அறிவியல் திறனுக்கு உரிய சான்றாக அமைகின்றது.

கிட்கிந்தையில் இருந்து தென்பகுதி நோக்கிச் செல்லும்போது, முதலில் விந்திய மலை வரும். அதனைக் கடந்து சென்றால் நருமதை ஆறு வரும். அதற்கடுத்து ஏமகூடம் என்னும் மலை வரும். அதனைக் கடந்து சென்றால், பெண்ணை ஆற்றங்கரை வரும்; அதனைத் தொடர்ந்து வரும் விதர்ப்ப நாட்டைக் கடந்தால், தண்ட காரணியம் என்ற பகுதி வரும். இதற்கடுத்து முண்டகத்துறை என்ற இடம் வரும். இதனைக் கடந்து சென்றால், பாண்டுமலை எதிர்படும். இம்மலையை அடுத்து, கோதாவரி ஆறு எதிர்படும். இதற்கடுத்து சுவணம் என்ற ஆறு எதிர்படும். இவாற்றைத் தாண்டிய பிறகு கொங்கண நாட்டையும் குலிந்த நாட்டையும் காணலாம்; அதன்பின் அருந்ததி மலையை அடையலாம்; ஆற்றை எல்லாம் கடந்து சென்றால் தமிழ் நாட்டின் வட எல்லையாகிய திருவேங்கட மலையை அடையலாம். இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு வரும். தமிழ் நாட்டில் காவிரி யாற்றினனக் கடந்தால், மலை நாடும் பாண்டிய நாடும் வரும்; அகத்தியர் தமிழ் வளர்த்த பொதிகை மலை தோன்றும். அவற்றை எல்லாம் கடந்தால் 'மயேந்திரம்' என்னும் மலை தென்கருங்கடலை அடுத்து வரும்; அங்கிருந்து இலங்கைக்குச் சென்று விடலாம்" என்று சுக்ரீவன் தென்திசை செல்லும் வானரங்களுக்கு இலங்கை செல்லும் வழியைக் காட்டுகிறான்.

வடசொற்கும் தென் சொற்கும் வரம்பு ஆகி
நான் மறையும் மற்றை நூலும்
இடைசொற்ற பொருட்டு எல்லாம் எல்லை ஆய்
நல் அறிவுக்கு ஈறு ஆய் வேறு
புடை சுற்றும் துணை இன்றி புகழ் பொதிந்த
மெய்யே போல் பூத்து நின்ற
அடை சுற்றும் தண் சாரல் ஓங்கிய
வேங்கடத்தில் சென்று அடைதிர் மாதோ

(நாடவிட்டபடலம் 26)

என்ற பகுதி வேங்கட மலையின் தன்மையைக் காட்டுவதாக உள்ளது. இதுபோன்று ஒவ்வொரு இடத்தையும் கம்பர் அதன் புவியியல் தன்மையுடன் எடுத்துக்காட்டுவது இங்கு எண்ணத்தக்கது.

அஞ்சு வரும் வெஞ் சுரனும், ஆறும், அகன்
    பெருஞ் சுனையும், அகில் ஓங்கு ஆரம்
மஞ்சு இவரும் நெடுங் கிரியும், வள நாடும்,
    பிற்படப் போய் வழிமேல் சென்றால்,
நஞ்சு இவரும் மிடற்று அரவுக்கு, அமிர்து நனி
    கொடுத்து, ஆயைக் கலுழன் நல்கும்
எஞ்சு இல் மரகதப் பொருப்பை இறைஞ்சி,
    அதன் புறம் சார ஏகி மாதோ, (நாடவிட்ட படலம் 25)

என்ற பாடலில் நிலத்தின் இயல்பினை கம்பர் எடுத்துரைக்கிறார். சுரம், ஆறு, சுனை, நெடுங்கிரி, வளநாடு, பொருப்பு போன்ற நில இயல்புகள் இப்பாடலில் காட்டப்பெறுகின்றன.

இந்தப் பயண வரைபடம் கிட்கிந்தை முதல் இலங்கை வரையான இடங்களை அடுத்து அடுத்து உரைப்பதாக உள்ளது. இந்த விளக்க வழிகாட்டலை வைத்துக் கொண்டு எவரும் இலங்கை செல்ல இயலும் என்பது தெளிவு. தற்போதைய பயணம் போல பல இடங்களைத் தவிர்த்தும், சில இடங்களைக் கண்டும் தூங்கியும் தூங்காமலும் செல்லும் இயந்திர வழிப் பயணமாக அமையாது நடந்து செல்லும் பயணமாக இந்த இலங்கைப் பயணம் அமைந்ததால், ஒவ்வொரு இடத்தையும் போவோர் நின்று இருந்து கடந்து சென்றிருக்கவேண்டும். கம்பரும் இவ்வழி அயோத்திக்கும் இலங்கைக்கும் சென்று இருக்க வேண்டும். அத்தகைய அளவில் சரியான வழிகாட்டலை இப்பகுதி வழங்குகிறது.

இதனைப் போன்று அனுமன் இந்த வழிகளில் செல்லும் போது பல நிலவமைப்புகளைக் காண்கிறான். கடலிலும், இலங்கையிலும் அவன் கண்ட காட்சிகள் இன்னும் கம்பரின் நிலவியல் சார்ந்த அறிவினுக்குச் சான்று பயக்கின்றன.

தொடர்ந்து இராவணன் போருக்குச் செல்லும் நிலையில் அவனுக்கு உதவி செய்ய மூல பல படை வருகிறது. அப்படை இலங்கையைச் சுற்றியுள்ள ஏழு தீவுகளில் இருந்து வந்துள்ளது. அவற்றைக் கம்பர் விவரிக்கையில் அவரின் இடம் சார்ந்த புவியியல் அறிவு சிறப்புடையதாக விளங்குவதைக் காண முடிகின்றது.

இலங்கையைச் சுற்றி ஏழு தீவுகள் அமைந்துள்ளன. இத்தீவுகள் குறித்துத் தமிழ் இலக்கியங்கள் பல பதிவு செய்துள்ளன. மணிமேகலை, கந்தபுராணம், பாரதம் போன்ற இலக்கியங்கள் தீவுகள் குறித்துப் பதிவு செய்துள்ளன. கம்பரும் ஏழு தீவுகள் குறித்துப் பதிவுசெய்துள்ளார்.

ஏழு தீவுகள்

இலங்கையைச் சுற்றியுள்ள ஏழு தீவுகளை சப்த தீவுகள் என்று அழைப்பது முறைமையாகும். இத்தீவுகள் குறித்துத் திவாகர நிகண்டு

நாவலந் தீவே இறலித் தீவே குசையின் தீவே
கிரவுஞ்சத் தீவே சான்மலித் தீவே தெங்கின் தீவே
புட்கரத் தீவே எனத்தீ வேழே
ஏழ்பெருந் தீவும் ஏழ்பொழி லெனப்படும்"

என்று தீவுகளின் வகைகளைக் குறிக்கின்றது. திவாகர நிகண்டின்படி நாவலந் தீவு, இறலித்தீவு, குசையின் தீவு, கிரவுஞ்சத்தீவு, சான்மலித்தீவு, தெங்கின் தீவு, புட்கரத்தீவு என்பன ஏழ் தீவுகளாகும். இத்தீவுகள் அனைத்தும் அங்குள்ள மரங்களின் பெயர்களைப் பெற்றனவாக விளங்குகின்றன.

கந்தபுராணம் இத்தீவுகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது. உவர் நீர்க் கடல் சூழ்ந்தது சம்புத்தீவு, பாற்கடலால் சூழப்பட்டது சாகத்தீவு, தயிர்க்கடலால் சூழப்பட்டது குசத்தீவு, நெய்க்கடல் சூழ்ந்தது கிரௌஞ்சத்தீவு, கருப்பஞ்சாற்றுக் கடல் சூழ்ந்தது சால்மலி, தேன் கடலால் சூழப்பட்டது கோமேதகம், நன்னீர்க் கடலால் சூழப்பட்டது புஷ்கரம் என்று இத்தீவுகள் குறித்து மொழிகிறது கந்தபுராணம்.

இத்தீவுகள் குறித்து படைக்காட்சிப் படலத்தில் எடுத்துரைக்கி றார் கம்பர். இராவணன் தன் தம்பி கும்பகர்ணன், மகன்கள் அதிகாயன், இந்திரசித்து போன்றவர்களை இழந்த நிலையில் போருக்குத் துணை செய்ய யாரும் இல்லாத நிலையில் கவலையுறுகிறான். அப்போது மூலபலம் என்ற நிலையில் உலகின் பல இடங்களில் இருந்தும் அரக்கர் சேனை ஒன்று திரட்டப்ப டுகிறது. அவ்வகையில் ஏழு தீவுகளில் இருந்து இராவணனுக்குப்

பெரும் படைகள் வந்ததாகக் கம்பர் குறிப்பிடுகிறார். இத்தீவு களில் இருந்துப் பெருமளவில் வீரர்கள் வந்து இலங்கையில் நிறைந்தனர் என்று தூதுவர்கள் இராவணனிடம் சொல்லுவதாக கதைப்பகுதி அமைக்கப்பெற்றுள்ளது. இவ்வேழு தீவுகளில் இருந்தும் இன்னும் பல மலைப்பகுதிகளில் இருந்தும், பாதாள உலகில் இருந்தும் இராவணனுக்குப் படைகள் வந்து சேர்ந்தன. இவையே மூல பலப் படை ஆகியது. இப்படையின் பெருக்கத்தால் இலங்கை நகரில் இடம் இல்லா நிலை ஏற்பட்டது என்று கம்பர் குறிக்கிறார்.

கம்பர் காட்டும் தீவுகள்

கம்பர் இலங்கையில் அமைந்த ஏழு தீவுகளில் ஆறினைக் குறிக்கிறார். சாகத்தீவு, குசைத் தீவு, இலவந்தீவு, அன்றில் தீவு, இறலித்தீவு, புட்கரத்தீவு என்பன அவ்வாறு தீவுகள் ஆகும். இத்தீவுகள் அனைத்தும் இலங்கையைச் சுற்றி அமைந்துள்ளன. அவை பற்றிய விளக்கங்களையும் கம்பர் சொல்லிய நிலைப்பாடும் அறியத்தக்கனவாகும்.

சாகத்தீவு - காரைநகர்

சாகத்தீவு என்பது தற்போது இலங்கையில் உள்ள காரைத்தீவு ஆகும். இலங்கையில் பல காரைத் தீவுகள் உள்ள நிலையில் இது காரை நகர் என்று அவற்றில் இருந்து வேறுபடுத்தப்படுகிறது. சாகத் தீவு என்பதில் உள்ள சாக என்ற சொல் சாகை என்ற மரத்தின் அடிப்படையில் தோன்றியதாகும். சாகை என்பது தேக்கு மரங்களைக் குறிக்கிறது. இதே சொல் வாகை மரங்களையும் குறிக்கிறது. இவ்விரண்டில், பெரும்பாலும் வாகை மரங்கள் சூழ்ந்த பகுதியே சாகத்தீவு என்று கொள்ளப்பட வேண்டும்.

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட இந்த அழகான தீவு இன்று, பாடசாலை, சிவாலயம் போன்ற பல அமைப்புகளை உடையதாக விளங்குகின்றது. இலங்கைச் சிதம்பரம் என்று இன்றைக்குப் புகழும் அளவிற்குச் சிவசம்பந்தம் உடையதாக உள்ளது. இந்தத் தீவு யாழ்ப்பாணத்திற்கு மிக அருகில் உள்ளது. இத்தீவு குறித்துக் கம்பர்

சாகத் தீவினில் உறைபவர் தானவர் சமைத்த
யாகத்தில் பிறந்து இயைந்தவர் தேவரையெல்லாம்
மோகத்தில்பட முடித்தவர், மாயையின் முதல்வர்
மேகத்தைத் தொடும் மெய்யினர், இவர் என விரித்தார்

(படைக்காட்சிப் படலம்10)

என்று சாகத் தீவு வீரர்களை அடையாளம் காட்டுகிறார். சாகத் தீவு சார்ந்த வீரர்கள், அரக்கர்கள் செய்த யாகத்தின் வழியாகத் தோன்றியவர்கள் என்றும் அவர்கள் தேவர்களை மோகத்தில் ஆழ்த்தும் வல்லமை பெற்றவர்கள் என்றும், மாயை வல்லவர்கள் என்றும் கம்பர் இவர்களின் வீரப்பெருமையைப் பேசுகின்றார்.

குசையின் தீவு

கம்பர் சுட்டும் அடுத்த தீவு குசைத் தீவு என்பதாகும். குசை என்பதற்குத் தர்ப்பைப் புல் என்று பொருள். தர்ப்பைப் புல் அதிகம் உள்ள தீவு என்பதால் இத்தீவு குசைத் தீவு என அழைக்கப்பட்டது.

குசை என்பதற்கு தனம் என்று மற்றொரு பொருளும் உண்டு. தனம் (மார்பு) போன்றமைந்த தீவு என்பதால் இப்பெயரும் இதற்கு அமைந்திருக்கலாம். இத்தீவு தற்போது இலங்கையில் உள்ள வேலணைத் தீவு என்பதாகக் கொள்ளப்படுகிறது. இதனை லைடன் தீவு என்றும் மக்கள்அழைக்கின்றனர்.

கந்தபுராணக் கதைப்படி, கிரௌஞ்ச மலையைப் பிளக்க முற்படும் நிலையில், முருகப்பெருமான் வேல் அணைந்த தீவு என்பதால் இது வேலணைந்த தீவு எனப்பெயர் பெற்றிருக்க வேண்டும். இத்தீவு பத்து ஊர்களை உள்ளடக்கிய பெருந்தீவு ஆகும். இதுகுறித்துக் கம்பர்

குசையின் தீவினில் உறைபவர் கூற்றுக்கும் விதிக்கும்
வசையும் வன்மையும் வளர்ப்பவர். வான நாட்டு உறைவார்
இசையும் செல்வமும் இருக்கையும் இழந்தது இங்கு, இவரால்
விசையம்தாம் என நிற்பவர் இவர் - நெடுவிறலோய்

(படைக்காட்சிப் படலம் 11)

என்னும் பாடலில் குசைத் தீவின் வீரர்கள் பற்றிக் குறிப்பிடுகிறார் கம்பர். இப்பாடலில் குசைத்தீவு வீரர்தம் வீரச்சிறப்பு

இந்திரனையும் நடுங்க வைக்கும் அளவிற்குச் சிறப்புடையது என்கிறார்.

இலவத்தீவு

இலுப்பை மரங்கள் அடர்ந்த தீவு இலவந்தீவு என அழைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் அமைந்துள்ள இத்தீவு எழுவைத் தீவு என்றும், சான்மலித்தீவு என்றும் அழைக்கப்ப டுகிறது. இலங்கைக்கு வருபவர்கள் காணும் நிலையில் முதன் முதலாக எழும் தீவு இது என்பதால் எழுவைத்தீவு என இத்தீவு பெயர் பெற்றுள்ளது. ஒன்றரை மைல் நீளம் கொண்ட இத்தீவில் உள்ள முத்தன் காடு என்ற இடத்தில் உள்ள முருகன் ஆலயம் இலங்கையின் திருச்செந்தூர் என்று பெருமைபட உரைக்கப்படுகிறது. இத்தீவில் உள்ள வீரர்கள் பற்றிக் கம்பர்

இலவத்தீவினில் உறைபவர் இவர்கள் பண்டு இமையாப்
புலவர்க்கு இந்திரன் பொன்னகர் அழிதரப் பொருதார்
நிலவைச் செஞ்சடை வைத்தவன் வரம் தர நிமிர்ந்தார்.
உலவைக் காட்டு உறுதீ என வெகுளி பெற்றுடையார்

(படைக்காட்சிப் படலம் 12)

என்று இலவத்தீவு வீரர்கள் குறித்துப் பாடுகிறார். உலர்ந்த மரங்கள் அடர்ந்து காட்டில் ஏற்பட்ட தீ போன்ற வீரத்தன்மை உடையவர்கள் இலவத்தீவு வீரர்கள் என்கிறார் கம்பர். மேலும் இவர்கள் சிவனிடம் வரம் பெற்றவர்கள் என்றும் இந்திரனை வென்றவர்கள் என்றும் கம்பர் குறிப்பிடுகிறார்.

அன்றில் தீவு

அன்றில் பறவைகள் அதிகம் வாழும் தீவு அன்றில் தீவு எனப்படுகிறது. இதனைக் கிரௌஞ்சத் தீவு என்றும் அழைப்பர். கந்தபுராணத்தில் முருகன், கிரௌஞ்ச மலையை இரு கூறு ஆக்கிய புராணக் கருத்து இத்தீவுக்கு உரியது என்பதால் இது கிரௌஞ்சத்தீவு எனப்படுகின்றது. தற்போது இத்தீவு புங்குடு தீவு என்று அழைக்கப்படுகிறது. தமிழகத்தின் பூங்குடி என்ற கிராமத்தில் இருந்து வருகை தந்து குடியேறிய மக்கள் வாழ்ந்த பகுதி பூங்குடித் தீவு என்று அழைக்கப்பட்டு அதுவே மருவி

புங்குடு தீவு ஆகியிருக்க வேண்டும். புங்க மரங்கள் அதிக அளவில் இருந்த தீவு புங்குடு தீவு ஆனதாகவும் கொள்ளமுடிகின்றது.

இத்தீவில் தற்போது பதினாறுக்கும் மேற்பட்ட சிவலாயங்கள் உள்ளன. இத்தீவில் உள்ள வாணர் பாலம் மிக முக்கியமான போக்குவரத்து சாலையாக விளங்குகிறது. இத்தீவு குறித்துக் கம்பர்,

அன்றில் தீவினில் உறைபவர் இவர் பண்டை அமரர்க்கு
என்றைக்கும் இருந்து உறைவிடம் என்றிட மேருக்
குன்றைக் கொண்டுபோய் குரை கடல் இட அறக் குலைத்தோர்
சென்று இத்தன்மையைத் தவிரும் என்று இரந்திடத் தீர்ந்தோர்

(படைக்காட்சிப் படலம் 13)

என்று குறிக்கிறார். இத்தீவில் உள்ள வீரர்கள் மேருமலையை மறைத்த பெருமைக்கு உரியவர்கள். அதே நேரத்தில் அதனை மறைக்காது தர வேண்டும் என்று கேட்டபோது தந்த கருணை உடையவர்கள் என்று குறிப்பிடுகிறார் கம்பர்.

புக்கரப் பெருந்தீவு

இலங்கையில் இன்று உள்ள நெடுந்தீவு என்பது புக்கரப் பெருந்தீவு ஆகும். கம்பன் பெருந்தீவு எனச் சொல்ல இத்தீவு நெடுந்தீவு என்று இன்று அழைக்கப்படுவது மிகப்பொருத்தமுடையதாக உள்ளது. இதனைத் தாமரைத்தீவு என்றும் அழைப்பர். இது யாழ்ப்பாணத்தில் இருந்து நெடுந்தொலைவில் இருப்பதாலும் நெடுந்தீவு எனப்பட்டுள்ளது. கம்பர்

முக்கரக் கையர் மூவிலை வேலினர் முசுண்டி
சக்கரத்தினர், சாபத்தார் இந்திரன் தலைவர்
நக்கரக் கடல் நால் ஒரு மூன்றுக்கும் நாதர்
புக்கரப் பெருந்தீவிடை உறைபவர் இவர்கள்

(படைக்காட்சிப் படலம் 18)

என்று இத்தீவின் வீரர்கள் குறித்துப் பாடுகிறார். இத்தீவின் தலைவன் பெயர் வன்னி என்றும் கம்பராமாயணம் குறிப்பிடு கிறது.

இறலித் தீவு

இத்தி மரங்கள் நிறைந்திருக்கும் தீவு இறலித் தீவு என அழைக்கப்பெற்றுள்ளது. இலங்கையில் உள்ள தீவுகளில் இப்பெயருடன் தொடர்புடைய தீவு இல்லை எனினும், கோமேதக் தீவு என அழைக்கப்படும் அனலைத் தீவாக இது இருக்க வாய்ப்பு உள்ளது. இலங்கை தீவு வரிசைப்படி பார்க்கையில் இத்தீவு அனலைத் தீவாக இருக்க வாய்ப்புள்ளது. இத்தீவில் கற்கள் அணைகளாக விளங்குகின்றன. இக்கற்களின் இடையில் விளையக் கூடியவை இத்தி மரங்கள் ஆகும். இப்பொருத்தம் கருதியும் இத்தீவு இறலித் தீவு எனப்படுவதாகக் கொள்ளலாம்.

இத்தீவு குறித்து,

மறலியை பண்டு தம் பெருந்தாய் சொல் வலியால்
புறநிலை பெருஞ்சக்கரமால் வரைப் பொருப்பின்
விறல் கெடச் சிறையிட்டு அயன் இரந்திட விட்டோர்
இறலி அப்பெருந்தீவிடை உறைபவர் இவர்கள்

(படைக்காட்சிப் படலம் 18)

என்ற கம்பன் குறிக்கிறார். எமனைச் சிறையில் அடைத்த வீரமுடையவர்கள் இவர்கள் என்பது இவர்களின் வீரத்தைக் குறிக்கும் பகுதியாக உள்ளது.

சாகரத் தீவு

கம்பர் ஏழாவது தீவாக சாகரத்தில் அமைந்த தீவு ஒன்றில் மலை இருந்த நிலையையும் குறிப்பிடுகிறார். இத்தீவு சம்புத் தீவு எனப்படும் நாவலந்தீவாகக் கொள்ளத்தக்கது. பொதிய மலை சார்ந்தவர்கள் அங்கு இருக்க இயலாது, தென் திசைக்கு வந்து குடியேறிய தீவு ஒன்று உண்டு என்று கம்பர் குறிப்பது இங்குக் கவனிக்கத்தக்கது.

மலயம் என்பது பொதிய மாமலை. அதில் மறவோர்
நிலயம் அன்னது சாகரத் தீவிடை நிற்கும்
குலையும் இல் உலகு எனக் கொண்டு நான்முகன் கூறி
உலைவிலீர் இதில் உறையும் என்று இரந்திட உறைந்தார்

(படைக்காட்சிப் படலம்16)

என்ற பாடலில் நான்முகன் வழிகாட்டலின் படி பொதிய

மாமலை உள்ளோர் இலங்கைக்கு அருகில் உள்ள சாகரத் தில் (கடலில்) உள்ள தீவில் குடியேறினர் என்று கம்பர் காட்டுவது இங்கு கவனிக்க வேண்டிய செய்தியாகும். பிற்காலத்தில் லெமுரியா கண்டம் தமிழர்தம் ஆதி நிலம் என்ற கொள்கை தோன்றிய நிலையில் பொதிய மலையில் உள்ள தமிழர்க்கும் இலங்கைக்கு அருகில் உள்ள தீவிற்கும் தொடர்பு படுத்தும் கம்பரின் சிந்தனை லெமுரியா கண்டக் கொள்கை சார்ந்தது என்று கொள்வதில் தவறில்லை.

இவ்வகையில் கம்பரின் காப்பியம் முழுமையும் நில இயல்புகள், நில அமைவிடங்கள் போன்றன பற்றிய பல செய்திகள் கொண்டுள்ளன என்பதை உணரமுடிகின்றது. இச்சிறு கட்டுரை அவ்வறிவின் ஒரு சிறு பகுதியை மட்டுமே எடுத்துரைக்கிறது. தொடர்ந்து இத்துறை சார்ந்த சிந்திக்கப் பல்வேறு இடங்கள் உண்டு.

இலக்குவன் சமைத்த இரு தவச்சாலைகள்

முனைவர் சொ.சேதுபதி
தமிழ்த்துறைத் தலைவர்,
பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி, புதுச்சேரி.

தண்டமிழ்க்காப்பியமான கம்பராமாயணம், சிலைஏந்திய இராமனின் ஆற்றலையும் சிறையிருந்த சீதையின் மாண்பையும் போற்றுவதுபோலவே, உடன்வரும் பாத்திரங்களின் பண்புநலன்களையும், அப்பாத்திரங்கள் காப்பிய வளர்ச்சிக்கு உதவும் பாங்கினையும் தொடர்ந்து சித்திரப்படுத்துவதைப் பார்க்கலாம். அவற்றுள் தனித்துக் குறிப்பிடத்தக்க பாத்திரமாக இலக்குவன் திகழ்கிறான். அறம் படுத்த இடந்தோறும் திறம் எடுத்துமொழிவதும், மறம் எடுத்துக் காப்பதும் இலக்குவனின் இன்றியமையாத்திறமாகக் காப்பியம் நெடுகிலும் வெளிப்படக் காணலாம்.

இலக்குவன் அமைத்த இரு தவச்சாலைகள்

கொலைவில் ஏந்திய இலக்குவனின் பேராற்றலை, ஒல்லும்வாயெல்லாம் நல்லவண்ணம் காட்டிய கம்பன், இலக்கு வனின் கலைவல்ல திறத்தையும் காட்டத் தவறவில்லை. அயோத்தியை விட்டகன்று, வனம்புகுந்த மூவரும் சித்திரக்கூட மலை ஏகுகிறார்கள். தவம்புரிதற்கு ஏற்றவாறு அமைதிநிறை இடமாகவும், அருந்தவ முனிவர்கள் பலர் வேள்வி புரியும் புனிதப்பகுதியாகவும் சித்திரகூடமலைப்பகுதி திகழ்கிறது. அங்கே, இயற்கை எழிலின் இயல்புகளையெல்லாம் சீதைக்கு இராமன் எடுத்துவிளக்கிக் காட்டிக் கொண்டிருக்கும்போதே, கலையில் வல்ல இலக்குவன், இராமனுக்கும் சீதைக்கும் தனித்தனிச்சிறப்புக்களுடன் தவக்குடில்கள் அமைத்துவிடுகிறான்.

அந்தக் கட்டுமானச் செயல் நேர்த்தியையும், இலக்குவனின் கலைநுட்பத்திறத்தையும் நான்கு பாடல்களில் கம்பன் சித்திரப்பாங்கோடு பதிவிட்டிருக்கிறான். அதன்பின்னர், பஞ்சவடிக்கு அவர்கள் சென்று தங்கும்போதும் இலக்குவனே, தவச்சாலை சமைக்கிறான். அதுவே, பின்னர் இராவணனால்

இலங்கைக்குப் பெயர்த்தெடுக்கப்பட்டு, இலங்கையில் கொண்டுபோய் வைக்கப்படுகிறது. இவைகுறித்த செய்திகளை இனி விரிவுறக் காணலாம்.

இலக்குவன் தேர்ந்த கட்டுமானப்பொருள்கள்

பாடம் பயிலுகிற இடம் பாடசாலையென்றும், தொழில் புரிகின்ற இடம் தொழிற்சாலையென்றும், வேள்வி புரியும் இடம் வேள்விச்சாலையென்றும் பெயர் பெறுகின்றன. அதுபோல், தவம் புரிதற்காக அமைத்த இடம் தவச்சாலை ஆகின்றது. கம்பன், இராமன் தவம் புரிதற்காக இலக்குவன் அமைத்த குடிலைப் பொதுவாக, 'சாலை' என்றே குறிப்பிடுகின்றான்.

கானகப்பகுதியில் மூங்கில்கள் அடர்ந்து செறிந்து வளர்ந்திருந்தன என்பதால்தான், "வேய் உயர் கானம்" (கம்ப. அயோத்தியா, தைலம் ஆட்டுபடலம் - 1898) என்று சுமந்திரன் வாயிலாகச் சொல்கிறான்

மூங்கில்களைப் பயன்படுத்தும் முறையைத் தானே கற்றுச் செயற்படுத்திப் பார்த்தவன் இலக்குவன் என்பதற்குச் சான்றாய், அவன் யமுனை ஆற்றைக் கடப்பதற்குச் செய்த தெப்பத்தைக் குறிக்கலாம். மூங்கில் கழைகளைத் துணித்து, மாணைக்கொடி கொண்டு அவற்றைப் பிணைத்துக் கட்டி அமைத்த தெப்பத்தில், இராமனையும் சீதையையும் இருத்தி, தன் இருகைகளாலும் அதனை இழுத்தபடி நீந்திக் கரைசேர்ந்த இலக்குவன் அவர்களையும் கரைசேர்த்துவிடுகிறான். இதனை,

வாங்கு வேய்ங்கழை துணித்தனன்; மாணையின் கொடியால்,
ஓங்கு தெப்பம்ஒன்று அமைத்து, அதன் உம்பரின், உலம்போல்
வீங்குதோள் அண்ணல் தேவியோடு இனிது வீற்றிருப்ப,
நீங்கினான், அந்த நெடுநதி, இரு கையால் நீந்தி
(கம்ப.அயோத்தியா., வனம்புகு படலம்- *2034*).

என்ற கம்பன் பாடல் இனிது விளக்கும்.

இராமனுக்கான தவச்சாலை அமைப்பதற்கு இலக்குவன் பயன்படுத்திய கட்டுமானப் பொருள்கள், நெடிது வளர்ந்த மூங்கில்கள், முடங்கல் இல்லாத வரிச்சுகள், தேக்க இலைகள், நாணற்புல், மண், புனல் ஆகியவையாகும்.

கம்பன். தொடர்ந்து, சீதைக்கான இருப்பிடத்தினை அமைக்க இலக்குவன் தேடிக்கொண்ட கட்டுமானப் பொருள்கள், மேற்சுட்டிய பொருள்களோடு, இளைய மூங்கில்கள், ஆற்றிலிருந்து கிடைத்த மணிக்கற்கள் மற்றும் முத்துகள், மயில் தோகைகள், புதிய மலர்கள் ஆகியனவாகும்.

இலக்குவன் இழைத்த இராமனின் தவக்குடில்

சித்திரகூட மலைப்பகுதியில், இராமனுக்கான தவக்குடில் உருவாக்குகிறான் இலக்குவன். வளைவு இல்லாமல் நீண்ட நேரான மூங்கில்களை நிறுத்தி, அவற்றின்மீது நீண்ட மூங்கில்களைச் சிறிய துண்டுகளாகத் தெரிவு செய்து அமைக்கிறான். அவற்றுக்கேற்ப, பக்கக்கழிகளைப் பொருத்தி மேல் ஏற்றி நன்கு இறுக்கிக் கட்டுகிறான். அதன் மேல் வளைதல் இல்லாத மூங்கில் வரிச்சுக்களை வைத்துக் குறுக்குக் கழிகளையும் சேர்த்துக் கட்டுகிறான். இவ்வாறாக, அடிப்படைக் கட்டுமானப்பணிகளை முடித்துக்கொண்ட பின்னர், அதற்கு மேற்கூரை அமைக்கும் பணியினைத் தொடங்குகின்றான்.

முதலில், தேக்க இலைகளைக் கொண்டு மேற்கூரையைச் செறிவாக்கி மூடுகிறான். அதன்பிறகு, பூத்து விளங்குகிற நாணற்புல்லை மேற்பரப்பி நிறைக்கிறான். தேக்க இலைகள் வலுவாக மேற்கூரையை நிறைக்கத்தக்கவை; அவற்றின் மேல் பரப்பிவைக்கப்பெறும் நாணற்புல்லினை வீழாது காக்கக்கூடியவை. இவ்வாறு, நிழல் தரும் கூரையை அமைத்த பிறகு, பக்கச்சுவர்களை அமைக்கிறான். கீழே நிறுத்தப்பெற்ற மூங்கில் கழிகளைக் கொண்டு, சுற்றுச் சுவர் அமைத்த இலக்குவன், அதன்மேல் நன்கு குழைத்த மண்ணை வீசியெறிந்து, நீர் கொண்டு மெழுகுகிறான். இவ்வாறு ஆக்கம்பெற்ற சாலையானது, வெக்கை இல்லாது குளிர்நிழல் தருகிற கூரையும் பாதுகாப்பான பக்கச்சுவர்களும் இயற்கை எழிலும் இனிய நலமும் கொண்டதாக அமைந்துவிடுகின்றது.

இவற்றையெல்லாம் ஒரு செய்தியாக மட்டும் கம்பன் குறித்தான் இலன்; கானகக்குடில் ஒன்றை எழுப்புகிற நேர்த்தியை அருகிருந்து கண்டு அவ்வண்ணமே கவிச்சித்திரமாகக் காட்டுகிறான்.

நாற்புறமும் ஊன்றப்பெற்ற நெடுங்கழிகளாகிய மூங்கில்களின்மேல் எழுப்பப்பெறும் முகட்டு மேற்பரப்பை,

நெடுங்கழைக் குறுந்துணி நிறுவி, மேல் நிரைத்து,
ஒடுங்கல்இல் நெடுமுகடு ஒழுக்கி
(கம்ப.அயோத்தியா., சித்திரகூடப் படலம்- 2089)

என்று குறிக்கிறான் கம்பன். மழைவிழுங்காலத்து ஒழுகுதல் இல்லாத வண்ணம் கரவு பார்த்து நாற்புறமும் மேல்நோக்கியவாறு இணைக்கப்படுகிற மூங்கில்கழிகள் ஒடுங்குதல் இல்லாது இருக்க வேண்டும். இவ்வாறு, முகட்டுக் கைகளைச் சேர்த்து மேல்நோக்கி இடைவெளிவிட்டு அமைக்கப்பட்ட கழிகளில், குறுக்கு வரிசையாக முடங்கல் இல்லாத வரிச்சுகள் வைத்துக் கட்டப்படும். இதனை,

...ஊழுற
இடுங்கல்இல் கைவிசித்து ஏற்றி, எங்கணும்
முடங்கல்இல் வரிச்சு மேல் விரிச்சு மூட்டியே (மேலது)

என்று அழகுற வருணிக்கிறான் கம்பன். அதன்பின்னர், கூரைப்பகுதி கட்டப்பெறுகிறது. இன்றைக்குத் தமிழகச் சிற்றூர்களில், பனையோலை அல்லது வனையப்பட்ட தென்னோலை கொண்டு கூரைகள் வேயப்பெறுகின்றன. வைக்கோல்கள், கரும்புத்தோகைகள், நாணற்புல் போன்றன பரப்பப்பெறுகின்றன. மலைப்பிரதேசங்களில், காட்டுமர இலைபரப்பி, மேலே நாணற்புல் வேயப்பெறுகின்றது.

காப்பியப்பதிவில், இலக்குவன் பரப்பியவை, தேக்குஇலைகள். ஏனையவற்றைவிடவும் தேக்குமர இலைகள் உறுதித்தன்மை உடையதாகவும், பரப்பளவில் பெரிதாகவும் (சுமாராக, நீளம் 18 அங்குலம், அகலம் 9 அங்குலம் கொண்டவையாக) இருப்பதால் அவற்றை, இலக்குவன் தெரிவு செய்தது பொருத்தமானதே. அவற்றை அடர்த்தியாக நிரல்படப் பரப்புவது, 'படலை'. இடைவெளியின்றிப் பரப்பப்பெற்றமையால், 'செறிவுசெய்து' என்று குறிக்கிறான் கம்பன். அதன்பின் வேயப்பட்டது நாணற்புல். அதையும், பூக்கிளர்நாணலின் புல்லாகத் தெரிவு செய்திருக்கிறான், இலக்குவன். பூத்து விளங்குகின்ற நாணல்தான் கூரைக்குப் பொருத்தமானதாகும்போலும்.

இவையனைத்தும் முடித்தபின்னர், கீழ்த் தூக்கியவாறு அமைக்கப்பெற்ற வேய்களால் சுற்றிலும் அமைக்கப் பெறுவது சுவர். அதன்மேல், சரிசமமாக மூடுதற்கு ஏற்ப, நன்கு குழைத்த மண்ணை இறுகிப் பிடித்துக்கொள்ளும் வண்ணம் எறிந்து, இடைவெளியின்றிச் சமப்படுத்தி, நீர் கொண்டு மெழுகுகிறான் இலக்குவன். இதனைத் 'தீற்றுதல்' என்று கம்பன் குறிக்கிறான்.

தேக்குஅடைப் படலையின் செறிவு செய்து,பின்,
பூக்கிளர் நாணலின் புல்லு வேய்ந்து,கீழ்த்
தூக்கிய வேய்களின் சுவரும் சுற்றுறப்
போக்கி, மண்எறிந்து, அவைபுனலின் தீற்றியே. (மேலது- 2090)

என்பது கம்பன் பதிவு. இன்றைக்கும் பண்டிகைக்காலங்களில் மண்சுவர்களின் மேடுபள்ளங்களைச் சரிசெய்ய மண் எறிந்து மெழுகுதலை,'தீற்றுதல்'என்று குறிப்பிடுதல் வழக்கம். இது, கம்பன் காலத்தில் இருந்து இன்றுவரை கடைப்பிடிக்கப்பெறுகிற செய்முறையாகவே விளங்குதலைக் காண முடிகிறது.

மிதிலைப்பிராட்டிக்கு இலக்குவன் இழைத்த எழிற்சாலை

இராமனுக்குத் தனித்தவக்குடில் அமைத்த இலக்குவன், சீதாப்பிராட்டிக்கும் அதன் அருகே தனித்துவமிக்கதோர் இருப்பிடம் அமைக்கிறான். அது இராமபிரானின் இருப்பிடத்தில் இருந்து வேறுஇடத்தில் வேறுவிதமாக அமைக்கப்படுவதால், 'வேறு இடம் இயற்றினான் மிதிலை நாடிக்கும்' என்கிறான் கம்பன்.

இலக்குவன், இராமனுக்காக அமைத்த குடிலுக்கும் சீதாதேவிக்கென அமைத்த குடிலுக்கும் அடிப்படைக் கட்டுமானம் ஒன்றே. ஆனால், அதன் மேல் அமைத்த விதானமும் பக்கச்சுவர்களின் பான்மையும் சீதையின் குடிலுக்கெனத் தனித்துவமாக அமைக்கப்பெற்றிருக்கின்றன.

அடிப்படைக்கட்டுமானப்பணிகளை முன்னைப்போலவே, இம்மனைக்கும் இயற்றிய இலக்குவன், நாற்புறச் சுவருக்குக் குங்குமச்சேறு கொண்டு பூசுகிறான். வலிமை வாய்ந்த அச்சுவரிலே, ஆற்றிலிருந்து கிட்டிய மணிக்கற்களையும் முத்துக்களையும் பொருத்தி அழகுபடுத்துகிறான். அக்கூரையின் மேல்

விதானமானது, மயிற்பீலிகளால் ஒழுங்குசெய்யப்பெற்றிருக்கிறது. கூரிய வாளால் ஒழுங்குற அறுத்து மாலைத் தொங்கல்கள் அமைக்கப்படுகின்றன. இளைய மூங்கில் கழிகளைக் கொண்டு எழிலுற மதில் அமைத்து நல்ல புதிய மலர்களை அழகுற ஆங்காங்கே சிதறி, வனப்புமிக்க மனையை வடிவமைக்கிறான் இலக்குவன். இதனை,

கூறின நெறிமுறை குயிற்றி, குங்குமச்
சேறுகொண்டு அழகுறத் திருத்தி, திண்சுவர்
ஆறுஇடு மணியடு தரளம் அப்பியே (மேலது, 2091)

'மிதிலை நாடிக்கும், வேறு இடம் இயற்றினன்' என்று விளக்கமாய்ச் சித்திரப்படுத்துகிறான் கம்பன். இதற்கு மேலும் மெருகூட்டச் சிறப்பான கட்டுமானப் பணியையும் செய்கிறான் இலக்குவன். அதனை,

மயிலுடைப் பீலியின் விதானம் மேல் வகுத்து,
அயிலுடைச் சுரிகையால் அருகு தூக்கு அறுத்து,
எயில்இளங் கழைகளால் இயற்றி, ஆறுஇடு
செயலுடைப் புதுமலர் பொற்பச் சிந்தியே. (மேலது, 2092)

என்ற பாடல் கொண்டு விளக்குகிறான் கம்பன். இவ்வாறெல்லாம் இருவருக்கும் தனித்தனிச் சாலைகள் அமைத்த இலக்குவன் தனக்கென ஏதும் அமைத்துக்கொள்ளாதது, அவனது அடியவனாதல் தன்மையினைச் சொல்லாமல் உணர்த்திநிற்கிறது.

கம்பனில் இழைத்தலும் குழைத்தலும்

இலக்குவன் அமைத்த சாலைகள் இரண்டும், இருப்பன கொண்டு இயல்புற எழுப்பியவை அல்ல; பார்த்துப் பார்த்துத் திட்பமும் நுட்பமும் தெரிதர உழைத்து அமைத்தவை. அதனால்தான், 'இளையவன் இழைத்த சாலை'என்று கம்பன் புகல்கிறான்.

இல்லம் அமைப்போர் செய்யும் இன்றியமையாத் தொழில்கள், இழைத்தலும் குழைத்தலும் ஆம். மண்ணைக் குழைத்தும் மரத்தை இழைத்தும் வேண்டிய வண்ணம் ஆக்கிக்கொண்டு எழுப்புகிற மனைகளே தமிழர்தம் வாழ்வியல் நிலையங்கள் ஆகின்றன. அகத்தே உணர்வுகளால் தன்னைக்

குழைத்துத் தான் மேற்கொள்ளும் செயல்களுக்கு ஏற்பப் புறத்தே தனது செயல்களால் தன்னை இழைத்தும் பக்குவப்படுத்திக் கொள்ளுகிற பண்புநலமே, பாத்திர வலிமைக்குக் காத்திரமாகத் துணைநிற்கிறது. அந்தவகையில், கம்பன் இயற்றிய இராமாயணக் காப்பியமே, அவன் உழைத்து இழைத்துக் கொடுத்த உன்னதக் காப்பியம்தான்.

அகத்தில் தகுதிசால் பண்புகளை இருத்திக்கொண்ட பாத்திரங்களைக் கொண்டு, புறத்தில் கதையமைத்துக் காப்பியம் ஆக்குகிறான் கம்பன். அவன் தனது காப்பியத்தொடக்கத்தில், நாடாள வேண்டிய இராமனைக் காடேகச் செய்வதற்காய் மந்தரை என்னும் பெயருடைக் கூனி வருவதை,

இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள்

(கம்ப. அயோத்தியா., மந்தரை சூழ்ச்சிப்படலம் - *1445*)

என்று காட்டுகிறான். பின்னர், கூனி சதியினால் மனந்திரிந்த கைகேயி, 'மன்னன் ஆணை'யென்று தன்னிடம் உரைத்ததை, இன்முகத்துடன் ஏற்றுத் தனியனாய்த் தன் தாய் கோசலை கோயில் நோக்கித் திரும்பும் இராமனைக் காட்சிப்படுத்துகிறபோது,

குழைக்கின்ற கவரியின்றி கொற்றவெண் குடையும் இன்றி
இழைக்கின்ற விதிமுன் செல்லத் தருமம் பின் இரங்கியேக
மழைக்குன்றம் அனையான் மௌலி கவித்தனன் வரும்' என்று என்று
தழைக்கின்ற உள்ளத்து அன்னாள்முன் ஒரு தமியன் சென்றான்

(கம்ப.அயோத்தியா., நகர் நீங்கு படலம்- *1695*)

என்று காட்டுகிறான்.

இப்பாடலில் இடம்பெறும் 'குழைக்கின்ற, இழைக்கின்ற' ஆகிய இரு சொற்களில் கம்பனின் அறிவியல் தொடர்பான அனுபவம் புலப்படுவதைப் பார்க்கலாம். திடவடிவத்தில் இருந்து திடம் குறைந்த திரவ வடிவத்திற்கு மாற்றுவது, 'குழைத்தல்' என்னும் இயற்பியல் பாங்கினதாகும். அதே, திரவநிலைப்பாடு காய்ந்தபின்னர், திடவடிவத்திற்கு வந்துவிடுதலும் இயல்பு. இந்த அறிவியல் உண்மையோடு தொடர்புடையவை, 'சந்தனம் குழைத்தல்', 'மண் குழைத்தல்' என்ற நடைமுறைச்செயற்பாடுகள்.

மனை அமைக்கப் பயன்படும் மண்ணைத் திடநிலையில் இருந்து குழைத்துத் திரவநிலைக்குக் கொணர்ந்து வேண்டியவண்ணம் பயன்படுத்திக்கொள்வது இயல்பு. அதுவே, பின்னர் இயற்கைவெப்பத்தால் காய்ந்து திடநிலை எய்துகிறபோது வலிமையுடைய சுவராக நிலைபெறும். கவரியானது இயக்கப்படும்போதும் இத்தகு மாற்றம் ஏற்படுதலால், 'குழைக்கின்ற கவரி' என்று கம்பன் சொல்கிறான்.

'குழைக்கின்ற' எனும் சொல்லுக்கு இணையாகக் கம்பன் பயன்படுத்தும் இன்னொரு சொல், 'இழைக்கின்ற' என்பதாகும். தச்சுத்தொழிலில் (*Corpentary*) 'இழைப்பு'க்கு, இன்றியமையாத இடமுண்டு. வேண்டிய அளவுக்குச் செதுக்கிக் கைக்கொண்ட மரத்தைத் தமக்கான வடிவங்களில் ஒழுங்குபடுத்திக் கொண்டபின், வழுவழுப்பாக்கி மெருகேற்ற அதனை இழைப்பது தச்சர்களின் வழக்கம். அதற்கான கருவியை, 'இழைப்புளி' (இழைப்பு+உளி) என்றே பெயர் கொண்டழைப்பர். அதனைக்கொண்டு மரத்தை இழைக்க இழைக்கச் சுருள் சுருளாக, மரத்திண்மை வெளிவரும்; இழைத்த பகுதி வழுவழுப்பேறும். ஆனால், இழைப்புளியில் இருந்து வெளிப்பட்ட மரச்சுருள்கள் மீண்டும் முந்தைய நிலை எய்த இயலாது. "விதிக்குக் கம்பன் போடும் 'இழைக்கின்ற' எனும் அடைமொழி விதியின் வலிமையைச் சுட்டும். எப்படி, இழைக்கப்பட்ட பொருள் மீட்டும் தன் பழைய வடிவைப் பெறாதோ, அப்படியே, வாழ்க்கையில் விதி புகுந்து வாழ்க்கையின் போக்கை மாற்றிய பிறகு, மீண்டும் பழைய வாழ்வுறவு வராது. இப்போது முடிசூட வேண்டிய தருணத்தில், இராமனின் வாழ்வில் விதி விளையாடி, அதை மாற்றிச் செதுக்கி இழைத்து, காட்டிற்குக் கொண்டு செல்வதால், 'இழைக்கின்ற விதி' என்ற தொடரின் பொருள் முற்றிலும் புலப்படக் காரணமாயது" என்பார் கம்பன் அடிசூடி. (துறைதோறும் கம்பன், ப.27) அதுபோல்தான், இராவணன் இழைத்த தீமையின் தன்மையும்.

ஆக, காப்பியப்போக்கில், இராவணன் இழைத்த தீமை கூனி வடிவில் தோன்றி இராமனைக் காடேகச் செய்கிறது. அரசனின் ஆணையென்ற கைகேயி வாய்மொழி கொண்டு, தன் தாய் கோசலையிடம் விடைபெறச் செல்லும்போது, இழைக்கின்ற விதி முன்னோக்கிச் செல்கிறது. இங்கே, தீமை, விதி ஆகிய

இரண்டுக்கும் கட்புலனாகும் தன்மையில்லை என்பதையும் கவனத்திற்கொள்ளவேண்டும்.

அண்ணல் இராமனுக்கு இழைக்கப்பட்ட அநீதி இதுவென்று வெகுண்ட இலக்குவன் போர்க்கோலம் பூண்டு நிற்கிறபோது, 'விதியின் பிழை' என்று அவனை அமைதிப்படுத்துகிறான் இராமன். அதற்குப் பதிலாக,

"மதிக்கு மதிஆய், முதல் வானவர்க்கும் வலிஇதுஆம்
விதிக்கு விதிஆகும்என் வில்தொழில் காண்டி" என்றான்

(கம்ப.அயோத்தியா., நகர்நீங்கு படலம் - *1735*)

இலக்குவன். ஆயினும் காப்பியப் பாங்கின்படி, அவன் எண்ணிய வண்ணம் வில் தொழிலுக்கு இன்னும் வேளை வரவில்லை.

தீமையும் விதியும் அடுத்தடுத்து இழைத்துக் கொணர்ந்து இவர்களைக் கானகத்தில் நிறுத்திய வேளையில், வில்தொழில் புரிய வழியின்றி, நல்தவம் மேற்கொள்ளத் தவச்சாலை அமைக்கிறான் இலக்குவன். கொலைவில் தொழில் விடுத்து, கலைஇல் சமைக்கிற இலக்குவனின் தன்மை,'குழைத்தல்' பக்குவமாகிறது. அதன்வழி அவன், இழைக்கின்ற விதியை வெல்ல இயற்றிய சாலையோ கம்பன் வாக்கில், 'இழைத்த சாலை' ஆகிவிடுகிறது.

இன்னணம் இளையவன் இழைத்த சாலையில்,
பொன்நிறத் திருவொடும் குடி புக்கான் அரோ!

(கம்ப. அயோத்தியா., சித்திரகூடப்படலம்-*2093*)

என்கிறான் கம்பன். இதனுள் சீதையுடன் இராமன் குடிபோகிறான். ('குடிபுகுதல்' என்ற சொல், இன்றைக்கும் புதுமனை புகுநிகழ்வைச் சுட்டுவதாக நடைமுறையில் இருக்கின்றது.) இத் தவக்குடிலில் இருந்து அவர்கள் செய்யப்போகிற நோன்புதான், பின்னர் விதிக்கு விதியாகும் வில்தொழில் புரியத் துணைசெய்யப் போகிறது. இதற்கெல்லாம் காரணமாய இழைத்தல் ஆகிய உழைத்தல் என்பதை நுட்பமாக உணர்த்துகிறது கம்ப காவியம். இதனோடு, 'சமைத்தல்' என்ற சொல்லையும் இணைத்துச் சிந்திக்க வைக்கிறான் கம்பன்.

இலக்குவன் சமைத்த சாலை

"தாஇல் எம்பி கை சாலை சமைத்தன" (கம்ப. அயோத்தியா, சித்திரகூடப்படலம்- 2095) என்று சித்திரகூட மலைப்பகுதியில் இலக்குவன் அமைத்த சாலையைப் பார்த்த இராமனின் மனவோட்டத்தைப் பதிவிடுகிற கம்பன், பஞ்சவடி எனும் பருவச்சோலையில் தனியிடத்தில், 'தம்பியால் சமைக்கப்பட்ட இனிய பூஞ்சாலை எய்தி இருந்துவிடுகிறான்' என்பதைப் பின்வருமாறு காட்டுகிறான்:

..............அருவிநீர் ஆற்றின் பாங்கர்,
பனிதரு தெய்வப் 'பஞ்சவடி' எனும், பருவச் சோலைத்
தனிஇடம் அதனை நண்ணி, தம்பியால் சமைக்கப்பட்ட
இனியபூஞ் சாலைஎய்தி இருந்தனன் இராமன். இப்பால்

(கம்ப. அயோத்தியா., சூர்ப்பணகைப்படலம்- 2738)

இங்கே, இராமனின் தம்பியால் சமைக்கப்பட்ட இந்தப் பூஞ்சாலைதான், பொய்த்துறவியாய் வந்த இராவணன், சீதையை மண்ணொடு பெயர்த்துக்கொண்டுபோய் இலங்கையில் அமைத்துக்கொண்ட சிறைச்சாலையாக ஆகிவிடுகிறது.

சீதையைத் தீண்டாது, அவள் குடியிருந்த சாலையுடன் கொண்டு போக விரைந்த இராவணன், ஒரு யோசனை அளவுக்குப் பூமியின் கீழேயும் பக்கங்களிலும் தோண்டி, இலக்குவன் அமைத்த சாலையைப் பெயர்த்தெடுத்துக் கொண்டு போனதாகக் கம்பன் பாடுகிறான்:

தூண்தான் எனல்ஆம் உயர்தோள் வலியால்
கீண்டான் நிலம், யோசனை கீழொடு மேல்.

(கம்ப.,ஆரண்ய., இராவணன் சூழ்ச்சிப்படலம்- 3390)

என்று. இன்றைக்கு, இதுபோல் 'கண்டெய்னர் (Container) வீடுகள்' கட்டப்பெற்றுத் தூக்கி வைப்பதைப் பார்க்கலாம்.

யோசனை என்பது, ஒரு காதம் அளவுடையது. அதாவது பத்துமைல் என்பர். 'சுமார், 15 கி.மீ. அல்லது ஒன்பது மைல் அளவு' என்பது காளைராசன் தரும் ஆய்வுமுடிவு. *(https://kalairajan26.blogspot.com/2014/12/blog-post.html)*

சிதைவு இல்லாமல் இந்தச் சாலையைப் பெயர்த்தெடுக்க இராவணன் அகழ்ந்த அளவு, 15 கி.மீ. என்று கொண்டால், காற்று, மழை , வெயில் உள்ளிட்ட இயற்கைத் தாக்கங்களால் பழுது ஏதும் ஏற்படாவண்ணம், இலக்குவன் அமைத்த பர்ணசாலையின் பரப்பளவு இது என்றும் உய்த்துணர முடியும். இதே சாலைதான் பின்னர் இலங்கையின் அசோகவனத்திலும் நிறுவப்படுகிறது. அதனை நேருறக் கண்ட அனுமன்,

வேலையுள் இலங்கை என்னும் விரிநகர் ஒருசார், விண்தோய்,
காலையும் மாலைதானும் இல்லது ஓர் கனகக் கற்பச்
சோலை அங்குஅதனில் உம்பி புல்லினால் தொடுத்த தூய
சாலையில் இருந்தாள் -ஐய!-தவம் செய்த தவம் ஆம் தையல்.

(கம்ப.சுந்தர., திருவடி தொழுத படலம்- 6037)

என்று இராமனிடம் எடுத்துரைக்கின்றான். இங்கே இலக்குவன் சமைத்த சாலை, 'புல்லினால் தொடுத்த தூய சாலை'யாகப் பொலிகின்றது.

ஆக, தனது காவியத்துள் இரண்டு இடங்களில் இலக்குவனால் அமைக்கப்பெற்ற சாலைகளை, 'சமைத்த சாலை' என்று கம்பன் காட்டினாலும், சித்திரக்கூடமலையில் அமைத்த சாலையை, 'இழைத்த சாலை' என்று தனித்துக்காட்டுகிறான். இரு வேறு இடங்களில் இலக்குவன் சமைத்த சாலைகளுள் மிகுந்த கவனம் கொண்டு அழகியல் பாங்கில் இழைத்த சாலையாக, சித்திரகூடமலைப்பகுதியில் அமைத்த சாலை விளங்குகின்றது. அந்த அனுபவத்தின் பின்னர் விளைந்ததே, பஞ்சவடிச்சாலை. அதில் மலர்களின் பயன்பாடு மிகுதி என்பதால், 'பூஞ்சோலை'யாகத் திகழ்ந்திருக்கிறது. அச்சாலையானது இராவணனால் இலங்கைக்குப் பெயர்த்தெடுத்துக் கொண்டுபோய் நிறுவப்பெற்ற பிறகு, 'புல்லினால் தொடுத்த சாலையாக, தூய்மை குறையாது' அமைகிறது. சீதையின் தவமும் இலக்குவனின் செய்நேர்த்தியும் புல்லினால் தொடுத்த இந்தச்சாலைக்குப் புனிதத்துவம் தந்து தூய்மை ஆக்கிவிடுகின்றன. ஈங்கு, 'சமைத்தல்' என்னும் சொல், தனித்துச் சிந்திக்கத்தக்கது.

சமைத்தல்' என்ற சொல்லுக்கு, 'படைத்தல், செய்தல், சித்தம் செய்தல், அழித்தல், உணவு ஆக்குதல் எனப் பல்பொருள்

தருகின்றது, தமிழ் விக்சனரி. (*https://ta.wiktionary.org/wiki/*) மனத்துக்குள் வரையறை செய்துகொண்ட சாலையை அமைக்கத் தேவையான பொருள்களைத் தேர்ந்து, அவற்றின் இயல்பான வடிவை அழித்துத் தனக்குத் தேவையான வடிவிற்கேற்பச் செய்து படைக்கப்பெற்ற சாலை என்பதால், 'சமைத்த சாலை' என்று கம்பன் சொல்லிக் காட்டுகிறான். தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்ட தொண்டுளம் ஒன்று, அதே பக்குவத்தோடு அமைத்த சாலை ஆனதால், அது 'சமைத்த சாலை'யாக முகிழ்த்திருக்கிறது. இந்தச் சொல்லைக் கொண்டு ஒரு நுண்ணிய செய்தியைக் கம்பன் உணர்த்துவதைக் காணலாம்.

உண்ணும் தன்மைக்கேற்ப, உணவுப்பொருளை ஆக்கும் முறைமையைச் சமைத்தல் என்று சொல்லுதல் வழக்கம். சமைப்பதற்கு முன்னால், வெவ்வேறு வடிவமும் சுவையும் கொண்டு அமைகிற உணவுப் பொருள்கள், சமைத்த பிறகு, தம்முள் குழைந்து, இழைந்து, தனிச்சுவை இழந்து பொதுச்சுவை பெற்று புதுச்சுவை தருகிற உணவாக விளங்குகிறது. இவ்வாறு சமைக்கப்பெற்ற உணவானது, மீளவும் முந்தைய தனித்த வடிவத்தையும் சுவையையும் கொண்ட உணவுப் பொருள்களாக ஆக இயலாது. விதியால் இழைக்கப்பெறும் வாழ்க்கையும் அப்படித்தான். விதியின் இழுப்புக்கு உடன்பட்டதுபோல் இழைந்து, அதனிடம் இருந்து விடுபட வேண்டிய வேளைகளில் குழைந்து தன்னை நிலைநிறுத்திக் கொள்வதன் வாயிலாகத் தன்னை நன்றாகத் தானே சமைத்துக் கொள்ள முடியும் என்பதை, இழைத்தல், குழைத்தல் என்ற சொற்களை முன்னிறுத்திச் சமைத்தலை உணர்த்திக் காட்டுகிறது கம்ப காவியம்.

நிறைவாக...

தன்னிழல் போல, எப்பொழுதும் உடனுறைந்த இலக்குவன், இவ்வளவு சிறப்புடன் சாலை அமைத்த பாங்கைக் கண்டு வியந்து, 'என்று கற்றனை நீ இதுபோல்' (கம்ப. அயோத்தியா., சித்திரகூடப்படலம்-2096) என்று கேட்கிறான். இது இராமனுக்கே தெரியாமல் இலக்குவனுக்குள் இருந்த தனித்துவத்திறன் என்பதை நுட்பமாகப் பதிவிடுகிறான் கம்பன்.

இயற்கையில் கிட்டும் பொருள்களைக் கொண்டு, இவ்வாறு

இழைத்துக் கட்டுகிற செய்நேர்த்தி, கம்பன் காலத்தில் இனிது விளங்கியதோடு, இன்றளவும் தமிழர்தம் வாழ்வில் ஓரளவு நிலைபெற்றுள்ளது என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது. தவமேற்கொள்ளும் தலைவனுடன் உடன் வரும் தலைவிக்கும் தனித்தனிச் சிறப்புடன் சாலைகள் அமைத்த இலக்குவன், இருவருக்கும் காவலனாய் இருந்து தொண்டு செய்தமையால், தனக்கெனத் தனி வசிப்பிடம் அமைத்துக் கொள்ளாமையும் இப்பதிவில் புலப்படக் காணலாம்.

குழைத்த பொருள் திரவநிலையில் இருந்து பின்னர் திடப்படும். ஆனால், இழைத்த பொருள் மீளவும் தன்னுருவெய்த இயலாது. இந்த உண்மையைக் கொண்டு கம்பன் உணர்த்தும் நுண்மைப் பொருள் இதுதான்: தீமையும் விதியும் கட்புலனாகாக் கருத்தாக்கங்கள். ஆனால், வினையூக்கியாகச் செயற்படக்கூடியவை. அதற்கு இலக்காவன, பாத்திரங்கள். தன்னியல்பு அழியாமல், சூழலுக்கேற்பக் குழைந்து தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்டால், தீமையைப் போக்கி நன்மை யாக்கி, விதியையும் மதியால் வெல்ல இயலும். இந்த வாய்மை யை இலக்குவன் சமைத்த சாலைகளைக் கொண்டு உணர்த்திக் காட்டுகிறது கம்பகாவியம்.

காவியப்போக்கில், தீவினைக்கு எதிரான நல்வினையும் விதிக்கு விதி செய்ய எடுக்கும் முயற்சியும் இணைந்து இழைத்து உருவாக்கப்பெறும் ஒரு பாத்திரம், வாழ்வியல் போக்கில் பல ஆளுமைகளை உருவாக்கும் ஆற்றல் கொண்டமையும் என்பதற்குக் கம்பன் முன்னிறுத்தும் பாத்திரங்களில் ஒன்று இலக்குவன் எனும் இளைய பாத்திரம் என்பது உணர்ந்து உள்வாங்கிக்கொள்ள வேண்டிய செய்தி எனலாம்.

சுருக்க விளக்கம்

1. கம்ப- கம்பராமாயணம்.
2. அயோத்தியா- அயோத்தியா காண்டம்.
3. ஆரண்ய- ஆரண்ய காண்டம்.
4. சுந்தர- சுந்தர காண்டம்.

துணைநூற் பட்டியல்

1. கம்பன், கம்பராமாயணம் (இராமவதாரம்) கம்பன் கழகம், சென்னை, 4ஆம் பதிப்பு, 1984.

2. கம்பன், கம்பராமாயணம் (8 தொகுதிகள்) கம்பன் அறநிலை, கோவை, மு.ப.1996.

3. ஞானசம்பந்தன். அ.ச.பேராசிரியர்., கம்பன் எடுத்த முத்துக்கள், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, மு.ப.1996.

4. பழனியப்பன்.பழ.(கம்பன் அடிசூடி), கம்பநிதி, உமா பதிப்பகம், சென்னை, மு.ப.2010.

5. பழனியப்பன்.பழ.,....... (ப.ஆ.) துறைதோறும் கம்பன், கபிலன் பதிப்பகம், புதுச்சேரி, மு.ப.2014.

இணைய தளங்கள்

1. http://www.tamilvu.org/ta/library-l3700-html-l3700001-133876

2. https://ta.wiktionary.org/wiki/

3. https://kalairajan26.blogspot.com/2014/12/blog-post.html

கம்பன் என்னும் இசை ஆழி

முனைவர் தெய்வ.சுமதி

திருப்பத்தூர் மாவட்டம்.

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழில் இடைநின்ற இசை என்னும் சொல் இசைவிப்பது, தன்வயப்படுத்துவது எனப் பொருள்படும்.

ஏழிசையாய் இசைப்பயனாய் - சுந்தரர்

ஏழுகொலாம் இசையாக்கின தாமே - அப்பர்

அன்பைப் பெருக்கி ஆருயிர் உருக்கி கல்லையும் கரைந்து உருகச்செய்ய வல்லது இசை. இறைவனையே இசைமயமாகக் கண்டவர்கள் பண்டைத்தமிழர். பண்ணோடு கூடிய பக்திப் பாடல்கள் தமிழ்மொழியில் எண்ணிலடங்கா. தேவாரம், திருவாசகம், நாலாயிரத்திவ்ய பிரபந்தம், திருப்புகழ் முதலியவை குறிப்பிடத்தக்கன.

பழந்தமிழரின் வாழ்வோடு இணைந்தது இசை. பிறந்தால் தாலாட்டு. இறந்தால் ஒப்பாரி. பாலூட்ட, சோறூட்ட, உடுக்க, உறங்க,விழிக்க, நாற்று நட, களை பறிக்க, கதிரறுக்க, போரடிக்க, கட்டுசுமக்க, வண்டியோட்ட, நெல்லுக்குத்த, தண்ணீர் இறைக்க எனத் தமிழனின் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் இரண்டறக் கலந்தது இசை. தமிழகத்தில் தடுக்கி விழுந்தால் கூட இசை. இயற்கையின் அத்தனை ஓசைகளும் தமிழனின் பாட்டுக்குத் தாளங்கள் தான். இசையின் கூறுகளை நிறைவாக, செறிவாக சிலம்பிலே இளங்கோவடிகள் பதிவு செய்ய, அடியார்க்கு நல்லார் அழகாக விளக்கமளித்துள்ளார். இதைத்தாண்டி கம்பன் என்னும் இசை ஆழியில் மூழ்கி முக்குளிக்க இயலவில்லையென்றாலும், அலைச்சாரலில் விழுந்த துளிகளை உள்ளங்கையில் சேகரிப்பது போல் எழுந்தது இக்கட்டுரை.

ஏழிசையும் வடமொழியிசையும்

இசை என்னும் சொல் ஒலி அணுத்திரளின் நீட்சியைக் குறிப்பதாகும். அத்தகைய ஒலிநீட்சி இயல்பாகவே கேட்போர் உள்ளத்தை இசைய வைக்கும். இதையே தொல்காப்பியர்,

இசைப்பு இசையாகும்

என்கிறார். அதாவது, செவிப்புலனால் அறியப்படும் இசைவான ஒலியின் நீட்சி இசையாகும்.

"தமிழ் இசை வேறு: கருநாடக இசை வேறு எனச் சிலர் கருதுகின்றனர். அது தவறு. தமிழ் இசை என்பது தான் கருநாடக இசை என்றானது. சோழமண்டலக் கடற்கரை, சேரமண்டலக் கடற்கரை, பாண்டி மண்டலக்கடற்கரை என மூன்றுபக்கமும் கடற்கரைகளைக் கொண்டதால் தமிழகம் கரைநாடு. கரைநாட்டில் இசைக்கப்பட்ட இசை கரைநாட்டிசை, பின்னர் கர்நாட்டிக் இசை என்றானது. எனவே கருநாடக இசை என்பது தமிழிசையே."

-முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.

தமிழில் இசை என்பது சுரம், பண் என இருபொருளிலும் வழங்கும். வடமொழியில் சுருதி என்று சொல்லப்படுவது தமிழில் அலகு என்றும், மாத்திரை என்றும் வழங்கும். சுரம் என்பதற்கு நரம்பு என்றும், பண் என்பதற்கு யாழ் என்ற பெயரும் தமிழில் வழங்குகின்றன. குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற ஏழிசையே தமிழிசை.

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ வெனும்
இவ்வே ழெழுத்தும் ஏழிசைக் குரிய - (திவாகரம்)

ஆ முதல் நெட்டுயிர் ஏழினையும் கருவியாகக் கொண்டு பண்டைத்தமிழர் இசை பாடினர். ஏழிசையின் அடிப்படையில் பிறந்ததே பண். பருந்தும் அதன் நிழலும் போல பாட்டும் பண்ணும் இயைந்து செல்ல வேண்டும். பண்ணுக்குரிய அடிப்படையைச் சுரம் என்றும், கோவை என்றும் கூறுவர். உலகிலேயே தாளத்தோடும் பண்ணோடும் ஆழ்ந்த பொருள் பொதிந்த இசைப் பாடல்களாய், காலத்தால் முற்பட்டு உள்ளது தமிழிசையில் தேவாரப் பாடல்களே. கி.பி 7-9 நூற்றாண்டுகளில் அப்பர், சுந்தரர், சம்பந்தர் மட்டுமே பண்ணமைத்துப் பாடிய பாடல்கள் 9295. உலகில் வேறு எந்த மொழியிலும் இசைத்தமிழ் இத்தனை வளமானதாக இருந்ததாகத் தெரியவில்லை. கி.மு 200 - கி.பி.200 ல் தோன்றிய சங்க இலக்கியங்களில் பண் பற்றிய குறிப்புகள் உள்ளன. பண்கள் மொத்தம் 103. தேவாரத்தில் 24 பண்கள் அமைந்துள்ளன. அவற்றில் சரிபாதி பண்களை,

அப்பண்களுக்குரிய சூழலை அமைத்து மிக எளிதாகக் கம்பர் தமது கம்பராமாயணத்தில் கையாண்டிருக்கும் போது, அவரை இசை ஆழி என்பதில் மிகையில்லையே. கம்பரின் இசைப்புலமை எண்ணுந்தோறும் வியப்புக்குரியது.

கம்பரும் ஏழிசையும்

அமுத ஏழ் இசை பாடினர் கின்னரர் *(286)*

புத்திரகாமேஷ்டி யாகத்திற்குப் பின் அயோத்தி மன்னன் தசரதனுக்கும் கோசலைக்கும் மகனாக இராமன் பிறந்த நிகழ்வைப் குறிப்பிடும் போது கம்பர், கின்னரர்கள் ஏழிசை பாடியதாகக் குறிப்பிடுகிறார். கின்னரர்கள் என்போர் ஏழிசை பாடுவதில் வல்லவர்கள். இவர்கள் இசைக்கும் கருவி கின்னரி இன்றளவும் பயன்பாட்டில் உள்ளது.

பாலகாண்டத்தில் தயரதனின் தானையைப் பற்றி பெருமிதமாகக் கூறும் போது,தயரதனின் கொடியிலா, முடியிலா, தேர்ப்படியிலா, மடியிலா, கொடையிலா, படையிலா திருமகள் எங்கிருக்கிறாள் என திருமகளின் கூந்தலைத் தேடும் வண்டுகளின் ரீங்கார இசை ஏழிசையாக ஒலிப்பதாக கம்பர் குறிப்பிடுகிறார்.

வார்முகம் கெழுவுகொங் கையர்கருங் குழலின் வண்டு
ஏர்முழங்கு அரவம் ஏழ்இசை முழங்கி அரவமே *(1037)*

அதுமட்டுமன்று. நர்மதை நதி பாய்ந்தோடி வருகிறது. அதன் நீர்ப்பெருக்கிலே பலவகையான மலர்கள் அடித்துக்கொண்டு வருகின்றன. அத்தகைய மலர்களில் இருக்கும் தேனைப் பருகுவதற்காக வரும் வண்டுகள் ஏழிசைகளில் ஒன்றான ஐந்தாவது இசையாக விளங்கும் இளி என்ற இசையை இசைக்கின்றன என்று கூறுகிறார். பஞ்சமம் அல்லது இளி என்ற இசையை வண்டுகளே தேர்ந்து பாடும் அளவிற்கு கம்பர் காலத்தில் இசை வளமாக இருந்திருக்கிறது.

அறுபதம் ஐந்தினைப் பாடுகின்றது|

இசை,கீதம்,பாடல்,பண்,பாணி எனப்பல பெயர்களில் ஏழிசை பற்றிய குறிப்புகள் நிறைய உள்ளன.

இலக்கண மரபிற்கு ஏற்ற எழுவகை நரம்பின் நல்யாழ்,
அலத்தகத் தளிர்க்கை நோவ, அளந்து எடுத்து அமைத்த (4939)

கம்பரும் பண்களும்:

தொல்காப்பியர் ஐவகை நிலங்களையும் அதற்குரிய பண், யாழ் என இசைக்கூறுகள் அனைத்தையும் கருப்பொருளாகக் கூறியுள்ளார். கம்பரும் நிலத்தின் அடிப்படையில் அமையும் பண்களாக முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற நால்வகைப் பண்களையும் சுந்தரகாண்டம் ஊர்தேடு படலத்தில், இராவணன் சிவபெருமானின் புகழைப் பாடும்பொழுது, தன் உள்ளங்கை நரம்புகளையே வீணைக்கு நரம்புகளாகப் பொருத்தி, நால்வகைப் பண்களையும் நயமுறப் பாடியதாகக் கூறியுள்ளார்.

கூடி நான்குயர் வேலையும் கோக்க நின்
றாடி னான்புக ழங்கை நரம்பினால்
நாடி நாற்பெரும் பண்ணு நயப்புறப்
பாடி னான்புகழ் பாடுகின் றார்சிலர் (793)

காமரம் என்ற பண்வகை :

சூர்ப்பணகை தனது அண்ணன் இராவணனிடம் அவனுக்கு விருப்பம் ஏற்படும் விதமாக சீதாபிராட்டியை வருணிக்கும் இடத்தில் பண் காமரம் பற்றிய குறிப்பு வருகிறது.

காமரம் முரலும் பாடல் கள்ளெனக் கனிந்த இன்சொல்- 3135

காமரப்பண் என்பது மருதநிலத்திற்குரிய பண். இப்பண்ணுக்குரிய உணர்வு இன்பம். சூர்ப்பணகை சீதையின் அழகைப் பற்றிச் சொல்லச் சொல்ல இராவணன் இன்பச்சுவையில் திளைக்கிறான். இத்தகைய சூழலுக்கு ஏற்ற விதமாக காமரப்பண்ணைக் கையாண்டிருக்கிறார் கம்பர். சீகாமரம் என்றும் ஓதுவார்களால் குறிப்பிடப்படுகின்றது. திருஞானசம்பந்தர் இயற்றிய "மட்டிட்ட புன்னையங் கானல் " என்ற தேவாரத்தை சீகாமரப் பண்ணில் அமைந்தது.

காமரம் மட்டுமல்லாது இளி, உழை, கந்தாரம்,கிளை, குச்சரி,சிந்து, தாரம், பஞ்சமம், செவ்வழி, நைவளம் போன்ற பிறபண்களையும், அப்பண்களுக்குரிய சூழலமைத்துப் பாடுவதில் வல்லவர் கம்பர்.

துயில் எழத் தூம்பி காலைச் செவ்வழி முரல்வ சோலை (45)

நைவள நவிற்றுமொழி நண்ணவர லோடும் (1150)

செவ்வழி என்பது நெய்தல் நிலத்திற்குரிய பண். செவ்வழிப்பண்ணில் பல தேவாரப் பாடல்கள் இன்றும் பாடப்படுகின்றன. நைவளம் என்ற பண் நட்டபாடைப் பண்ணோடு ஒத்ததாகும். பாலைக்குரிய பண்வகை. பகற்பொழுதில் இசைக்க வேண்டியது. இன்பச்சுவை தரவல்லது. இது தேவாரப் பாடல்களில் அதிகமாகக் காணப்படுகிறது. நட்டபாடைப் பண்ணில் தான் ~~தோடுடைய செவியன் || என்ற தமது முதல் பதிகத்தை திருஞானசம்பந்தர் பாடினார். இது போன்று பல பண்களை கம்பர் தமது இராமகாதையில் அமைத்துப் பாடியுள்ளார்.

குழலும் யாழும்:

குழல் இனிது யாழ் இனிது - திருக்குறள்

குழல்வழி நின்றதி யாழே - சிலப்பதிகாரம்

குழலும் யாழுமே ஆதி இசைக்கருவிகள். இதன் வளர்ச்சியே துளைக்கருவிகள், நரம்புக்கருவிகள், தோற்கருவிகள், கஞ்சக்கருவிகள் என்பதாகும்.

அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்
தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப

இவ்விரு தொல்காப்பிய நூற்பாக்களும் தமிழிசையில் யாழின் சிறப்பினை உணர்த்துகின்றன. பேரியாழ் 21நரம்புகள், மகர யாழ் 17 நரம்புகள், சகோட யாழ் 16 நரம்புகள், செங்கோட்டி யாழ் 7 நரம்புகள். நால்வகை யாழ்களுள் சிறந்ததான செங்கோட்டியாழே பின்னர் வீணை என்னும் சிறப்புப்பெயர் பெற்றது. எல்லா நரம்புக்கருவிகளும் யாழின்

வடிவமே. திருஞானசம்பந்தர் தமது பதிகங்களுக்கு திருநீலகண்ட யாழ்ப்பாணரைக் கொண்டு பண்ணமைத்துள்ளார்.

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால் - திருவாசகம்

நாரதன் வீணை நயந்தெரி பாடலும் - சிலம்பு

மாசில் வீணையும் மாலை மதியமும் - அப்பர் தேவாரம்

கம்பர் காட்டும் இசைக்கருவிகள்

கம்பர் தமது இராமகாதையில் நரம்புக்கருவிகள், தோற்கருவிகள், துளைக்கருவிகள், கஞ்சக் கருவிகள், மிடற்றுக்கருவி என பல்வேறு இசைக்கருவிகளைக் குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் சில, இயம், பம்பு, அம்புலி, ஆகுளி, ஆனகம், உறுமை, ஊமை, காசு, கடுவை, கண்டை, கணுவை, கம்பலி, கரடிகை, காளம், கின்னரம், குடம், கும்பிகை, குழல், துளை, குறுடு, கொம்பு, கொல்லி, கோடு, சகடை, சங்கு, சச்சரி, சில்லரி, சின்னம், செண்டை, தக்கை, தண்ணுமை, தாளம், தாரம், திமிலை, துடி, துந்துமி, துந்தரி, தூரி, படகம், பணவம், பணை, பம்பை, பறை, பாண்டில், பாரி, பீலி, பேரி, முரசு, முருகு, முழவம், முழா, யாழ், வங்கியம், வீணை, இணைவு இன்னும் பல. சான்றாக,

யுத்த காண்டத்தில் பிரமாத்திரப்படலத்தில் தந்தை இராவணனைத் தேற்றி மகன் இந்திரசித்தன் போர்க்களம் செல்லும் போது,

கும்பிகை, திமிலை,செண்டை, குறடு, மாப்பேரி கொட்டி
பம்பை தார் முரசம் சங்கம் பாண்டில் போர்ப் பணவம், தூரி
கம்பலி, உறுமை, தக்கை, கரடிகை, துடி, வேய்,கண்டை
அம்பலி, கணுவை, ஊமை, சகடையோடு ஆர்த்த அன்றே *(8445)*

என்று கம்பர் காலத்தில் வழக்கத்தில் இருந்த பல இசைக்கருவிகளைக் குறிப்பிட்டுள்ளார். இது போன்று பல இசைக்கருவிகள் ஒன்றாக முழங்கக் கூடிய பல பாடல்கள் உள்ளன.

இறந்த, இருக்கின்ற இசைநூல்கள்

இசைப்பாடல்களாக பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, சிற்றிசை, பேரிசை என்னும் இசைநூல்கள் இருந்ததாக

இறையனார் அகப்பொருள் உரை குறிப்பிடுகிறது. சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார், "இசைத்தமிழ் நூல்களாகிய பெருநாரை, பெருங்குருகு, தேவ மிருடி நாரதன் செய்த பஞ்சாபரதீயம் முதலாகவுள்ள தொன்னூல்களுமிருந்தன" என எழுதியுள்ளார். இசைநுணுக்கம், இசைநூல், இசைவிளக்கம், இந்திரகாளியம், பதினாறுபடலம், பண்ணமைதி, பண்வரி விளக்கம், பாட்டும் பண்ணும் குலோத்துங்கன் இசைநூல், தாளசமுத்திரம், தாளவகையோத்து, கருவியிலக்கணம், ஆளத்தி அமைப்பு எனப் பலவகை இசைநூல்கள் வழக்கில் இருந்து மறைந்துள்ளன.

எஞ்சியுள்ளது இசைநூலாக முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரம் மட்டுமே. நிசங்க சார்ங்க தேவர் தமிழகம் வந்து தமிழ் இசைகளை ஆராய்ந்து, கி.பி 1237ல் சங்கீத ரத்னாகரம் என்னும் இசைத்தமிழ் நூலை எழுதியுள்ளார். இந்நூலில் தேவாரப்பண்கள் சிலவும் அமைந்துள்ளன. தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் கருணாமிர்த சாகரம் என்ற நூலை எழுதியுள்ளார். விபுலானந்த அடிகள் எழுதிய யாழ்நூல், தேவநேயப்பாவாணர் எழுதிய இசைத்தமிழ்க்கலம்பகம், எஸ். இராமநாதனின் சிலப்பதிகாரத்து இசைநுணுக்க விளக்கம், ஏழிசை, நாள் பெரும்பண்புகள், வட்டப்பாலை, ஆய்ச்சியர் குரவை, கூத்துப்படுதல், அனுபந்த வகைகள் போன்ற இன்னும் பிற இசை பற்றிய ஆய்வுநூல்கள் தமிழில் தோன்றிய வண்ணம் உள்ளன. கீர்த்தனைகள் என்று கூறப்படுகின்ற இசைப்பாடல்கள் மிகவும் பிற்காலத்தில் தோன்றியவை. முத்துத்தாண்டவர், அருணாசலக்கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதியார் ஆகியோர் தமிழில் இயற்றியுள்ள கீர்த்தனைகள் குறிப்பிடத்தக்கவை. கருணாமிர்த சாகரம், யாழ்நூல் ஆகியவற்றுக்குப் பின் இசைத்தமிழ் வித்தகர் வீ.ப.கா.சுந்தரம் எழுதிய தமிழிசைக்களஞ்சியம் தமிழுக்குக் கிடைத்த மிகப்பெரிய புதையலாகும்.

முடிவுரை

பல இசைநூல்கள் காலவோட்டத்தில் மறைந்து போனாலும் தமிழும் அதனோடு ஒட்டிப் பிறந்த தமிழிசையும் என்றும் அழியாது. கிடைத்திருக்கின்ற இலக்கியங்களை

பல்வேறு கோணத்தில் ஆய்வு செய்தாலே கிடைக்கின்ற இசைக்குறிப்புகள் நம்மை மலைக்க வைத்துவிடும். அந்த அளவிற்கு நம் முன்னோர்களான பண்டைத்தமிழர் பாடல்கள் வழி அனைத்தையும் தாள ஓசையோடு பண்ணமைத்து மிக அருமையாகப் பதிவுசெய்துள்ளனர். எனவே இழந்ததைப் பற்றிப் பேசி மலைப்பதைவிட இருப்பதை வைத்து ஆய்வுகள் செய்து ஒவ்வொரு இலக்கியங்களிலும் பொதிந்துள்ள இசைக்கூறுகளை வெளிக்கொண்டு வந்து உலகறியச் செய்வதே நமது கடமை. அந்தவகையில் கம்பராமாயணத்தில் வைப்புநிதியாக கம்பர் கொடுத்துள்ள இசைக்குறிப்புகளை பல ஆய்வுநூல்களாக வெளிக்கொணர்ந்தால் அது இசைத்தமிழுக்கு கிடைக்கப் போகும் அருங்கொடையாக அமையும் என்பதில் ஐயமில்லை.

கம்பனில் அணி

சு. தொண்டியம்மாள்
கௌரவ விரிவுரையாளர்,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவாடானை.

ஓர் இலக்கியம் காலத்தை வென்று வாழ்வதற்குக் கவிதைப் பண்புகள் தலைமைக் காரணங்களாக அமைகின்றன. கவிதைப்பண்பு சிறப்பாக அமைவதற்குத் சொல்லாட்சி, இனிய ஓசை நயம்,வளமான கற்பனை, கற்பனை விரியும் வருணனைகள், உவமைகள், உணர்ச்சிகள் கவிதையைச் சிறக்கச் செய்யும்,செய்யுளுக்கு உரிய அணிநலன்கள் கவிதைக்கு மெருகு சேர்க்கும் இவையாவும் கம்பரின் கவிதையில் உண்டு எனவே தான் கம்பர் கவித்திறன் கற்றவரால் பாராட்டப்பெறுகிறது. கம்பர் என்றொரு மானுடன் வாழ்ந்ததும் எனத் தன்னுடைய சுயசரிதையில் மகாகவி பாரதியார் குறிப்பிட்டடுள்ளார். அத்துடன் தன்னுடைய பாடலில் "கல்வி சிறந்த தமிழ்நாடு புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு" எனப் பாடியுள்ளார்.

கம்பரின் கவித்திறன் அவரது இராமயணக் காவியம் முழுவதிலுமே காணக் கிடைக்கிறது. யுத்தகாண்டத்தில் சேதுபந்தனப் படலத்தில் அணி இலக்கண நயங்களை இக்கட்டுரையில் காண்போம்.

உவமை அணி

கவிஞன் உள்ளத்து நிகழ்வுகளை உள்ளத்தில் எழுந்தவாறு உலகிற்கு உணர்த்த உதவுவன உவமைகள் எனலாம். உவமையே அணிகளின் தாயாகும்.கூறக் கருதிய பொருளை நன்கு தெரிந்த ஒன்றைக் காட்டி விளக்குவது.ஒரு பொருளை இன்னொரு பொருளுடன் ஒப்பிட்டு அழகுபடுத்திக் கூறுவது உவமை அணியாகும்.

மஞ்சினில் திகழ் தரும் மலையை மாக்குரங்கு
எஞ்சுறக் கடிது எடுத்து எறியவே நளன்
விஞ்சையில் தாங்கினன் - சடையன் வெண்ணெயில்
தஞ்சோம்! என்றோர்களைத் தாங்கும் தன்மை போல் (6682)

என்ற பாடலடிகளில் கம்பர் மேக மண்டலம் வரை உயர்ந்து நிற்கும் மலைகளைப் பெரிய குரங்குகள் தன் வலிமையால் எடுத்தெறிந்ததை நளன் தான் கற்ற வித்தைகளின் வலிமையால் தாங்கிப் பிடித்தான் என்பதை தஞ்சம் என்று தன்னை நாடி வந்தவர்களை ஆதரிக்கும் சடையப்ப வள்ளலின் தன்மையைப் போல் இருந்தது என ஒப்புமைப்படுத்திக் கூறியதால் இப்பாடலடிகள் உவமை அணி என அறிய முடிகிறது.மேலும்,

அசும்பு பாய் தேனும் பூவும் ஆரமும் அகிலும் மற்றும்
விசும்பு எலாம் உலவும் தெய்வ வேரியின் மிடைந்து விம்மத்
தசும்பு எலாம் வாசம் ஊட்டிச் சார்த்திய தண்ணீர் என்ன
பசும்புலால் நாறும் வேலை பரிமளம் கமழ்ந்தது அன்றே (6690)

என்ற அடிகளில் வானர வீரர்கள் அணைகட்டுவதற்காக மலையைப் பெயர்த்துக் கடலில் போடும் பொழுது மலையில் உள்ள தேன், பூ, சந்தனம், அகில் முதலிய வாசனைப் பொருள்களும் கடலில் கலந்ததால் புலால் நாற்றம் வீசும் கடலானது வாசனைத் திரவியம் தெளித்த தண்ணீர் போல நறுமணம் கமழ்ந்ததாகக் கம்பர் உரைத்ததால் இப்பாடலில் உவமை அணி பயின்று வந்துள்ளதை அறியமுடிகிறது.

முழுக்க நீரில் புகா முழுகிச் செலா,
குழுக்களோடு அணை கோள் அரி யாளிகள்
இழுக்கு இல் பேர் அணையின் இரு பக்கமும்
ஒழுக்கின் மாலை வகுத்தன ஒத்தவே

கடலில் வீசப்பட்ட சிங்கம், யாளி முதலிய விலங்குகள் தம்மை மூழ்கடிக்கும் நீரின் ஆழத்தைக் கண்டும் ,நீரில் வாழும் மீன் போன்ற உயிரினங்களுக்கு அஞ்சியும் நீரின் ஆழமான பகுதிக்குச் செல்லாமல் பாதியளவு மூழ்கிப் பாதி வெளியில் தெரியும்படி அணையின் இருப்பக்கமும் தத்தம் இனங்களோடு செல்வது பார்ப்பதற்கு மலர்களால் வரிசையாக தொடுக்கப்பட்ட பூமாலையை ஒத்திருந்ததாகக் கவிஞர் எடுத்துரைத்துள்ளார் .

ஏய்ந்த தம் உடம்பு இட்ட உயிர்க்கு இடம்
ஆய்ந்து கொள்ளும் அறிஞரின் ஆழ்கடல்
பாய்ந்த பண்டு உறையும் மலைப் பாந்தள்கள்
போந்த மா மலையின் முழை புக்கவே (6709)

வானர வீரர்கள் மலையினைப் பெயர்த்துக் கடலில் வீசிய போது மலைக் குகைகளிலிருந்து கடலில் நழுவி விழுந்த பாம்புகள் மீண்டும் தமக்குரிய இடமான குகைகளுக்குள் சென்று புகுந்து கொண்ட தன்மையைக் கம்பர் கூடு விட்டுக் கூடு பாயும் சித்தர்கள் தம் உடம்பை ஆராய்ந்து மீண்டும் தன் உடம்பை அடைதல் போன்றது என உவமைப்படுத்தியுள்ளார்.

எண்இல் எண்கு இனம் இட்ட கிரிக்குலம்
உன்ன உன்னச் சென்று ஒன்றினொடு ஒன்று உற
சுண்ண நுண்பொடி ஆகித் தொலைந்தன
புண்ணியம் பொருந்தாத முயற்சி போல (6718)

என்ற பாடலடிகளில் எண்ணற்ற கரடிக் கூட்டங்கள் கடலில் தூக்கி எறிந்த மலைகள் ஒன்றன்மேல் ஒன்றாக அடுத்தடுத்து வீழ்ந்ததால் நொருங்கி அம்மலைகள் அணைக்கட்ட உதவாமல் போயின.இதனை கம்பர் புண்ணியம் இல்லாத நல்ல முயற்சியானது பயனளிக்காது என கூறுவதால் உவமை அணி என அறியமுடிகிறது.

தற்குறிப்பேற்ற அணி

இயல்பாக நிகழும் நிகழ்ச்சி ஒன்றின் மேல் கவிஞன் தான் கூறக்கருதிய பொருளை ஏற்றிச் சுவைபட உரைப்பது தற்குறிப்பேற்ற அணியாகும்.

கருவரை காதங்கள் கணக்கு இலாதன
இருகையில் தோள்களில் சென்னி ஏந்தின
ஒரு கடல் அடைக்க மற்று ஒழிந்த வேலைகள்
வருவன ஆம் என வந்த வானரம் (6678)

வானரங்கள் அணை கட்டுவதற்காக இரு கைகள், தோள்கள், தலையில் கரிய மலைகளை தூக்கி வருவதை, கம்பர் தனது கற்பனை திறத்தை ஏற்றி பிற ஆறு கடல்கள் எல்லாம் பெயர்ந்து வருவது போல் காட்சி அளிப்பதாக அமைத்திருப்பதால் இப்பாடலடிகள் தற்குறிப்பேற்ற அணி என அறியமுடிகிறது. மேலும் ,

பாரினாள் முதுகும் நெடும் பாழ்பட
மூரி வானரம் வாங்கிய மொய்ம் மலை

வேரின் ஆம் என வெம் முழையின் உழை
சோரும் நாகம் நிலன் உறத் தூங்குமால் (6707)

இப்பாடலடிகளில் வானரங்கள் அணைக்கட்டுவதற்காக மலைகளை பெயர்த்து எடுப்பதால் பூமாதேவியின் முதுகானது மிகவும் பாழ்பட்டதாகவும் மலைகளை பெயர்த்து எடுக்கும் போது அதில் வாழும் பாம்புகள் வெளிவரும் காட்சியானது மலைகளின் வேர்கள் போல் தோற்றமளித்தாக கவிஞர் தன் குறிப்பை ஏற்றி கூறுவதால் இது தற்குறிப்பேற்ற அணி என அறிய முடிகிறது.

மேலும் சேது அணையின் தோற்றத்தை கவிஞர் தன் குறிப்பை ஏற்றி கூறியிருக்கும் நயத்தை பின்வரும் பாடல்களில் அறியலாம்.

நாடுகின்றது என் வேறு ஒன்று நாயகன்
தோடுசேர் குழலாள் துயர் நீக்குவான்
ஓடும் என் முதுகிட்டு என ஓங்கிய
சேடன் என்னப் பொலிந்தது சேதுவே (6740)

என்ற பாடலில் ஆதிசேடன் போல சேது கிடந்ததாம். கம்பர் கட்டிய கடலணை திருமாலின் பாம்பணைக்கு நேரானது என்று ஒப்புவைக்கப்படுகிறது. ஆதி சேடனாகிய தான் அணையாக இருக்க இராமன் ஏன் மற்றொரு அணையை நாடுவது என ஆதிசேடனே சேது அணையாகக் கிடந்தான் என கம்பர் தனது கற்பனையை ஏற்றிக் கூறுகிறார்.

மெய்யின் ஈட்டத்து இலங்கை ஆம் மென்மகள்
பொய்யன் ஈட்டிய தீமை பொறுக்கலாது
ஐயன் ஈட்டிய சேனை கண்டு அன்பினால்
கையை நீட்டிய தன்மையும் காட்டுமால் (6741)

வானர வீரர்கள் கட்டிய அணையின் தோற்றமானது, இராவணன் செய்த தீமைகளைப் பொறுக்க முடியாத இலங்கையாகிய பெண் இராமனின் சேனைகளை அன்பினால் கையை நீட்டி அழைப்பது போல் காட்சியளிப்பதாகக் கம்பர் தனது குறிப்பை ஏற்றிக் காட்சிப்படுத்தியுள்ளார்.

கான்யாறு பரந்த கருங்கடல்
ஞான நாயகன் சேனை நடத்தலால்
ஏனை யாறு இனி யான் அலது ஆர்? எனா
வான யாறு இம்பர் வந்தது மானுமால் (6742)

இராமனுடைய சேனைகள் கடலைக் கடப்பதற்கு என்னையல்லாமல் தகுதியுடைய வேறு ஆறுகள் எவை உள்ளன எனக் கூறி ஆகாய கங்கையே வந்து கிடந்தது போல் சேது அணையின் தோற்றம் இருந்ததாகக் காட்சிப்படுத்தியுள்ளார் கம்பர்.

கம்பனின் சூழ்ச்சி

முனைவர் சொ. அருணன்
முனைவர் பட்ட மேலாய்வாளர்,
தமிழ்ப் பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி.

உலக மொழிகளில் தோன்றிய பல இலக்கியங்களில் இறவாத புகழுடைய இலக்கியமாக விளங்குவது கம்பர் இயற்றிய கம்பராமாயணம் ஆகும். இந்நூல் வழிநூல் என்று மொழியப்பட்டாலும், கம்பர் தன்னுடைய கவித் திறத்தால் அதனை முதல் நூலாகவே படைத்துத் தந்திருக்கிறார். காப்பியத்தின் போக்கை மாற்றும் வல்லமையுடைய கதாபாத்திரங்களின் உளமாற்றம் வியப்பிற்குரியதாகக் கம்பராமாயணத்தில் படைக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பாகச் சில பாத்திரங்கள் அடையும் மாற்றமும் பிற பாத்திரங்களைத் தன்வசப்படுத்துவதற்காக அவை மேற்கொள்ளும் சூழ்ச்சிகளும் அற்புதமானவை. இதனைக் கம்பனின் (கவிச்) சூழ்ச்சியாகவே கருதமுடிகிறது. இலக்கியச் சுவையோடு கூடிய அந்தச் சூழ்ச்சி எத்தனை இனிமையானது என்பதனை இக்கட்டுரை காட்டுகிறது.

சூழ்ச்சியும் பொருளும்

சூழ்ச்சியைக் குறித்துப் பலவாறான விளக்கங்கள் அகராதிகளில் தரப்பட்டுள்ளன. அதைப்போலவே, சூழ்ச்சியில் சொல்லைப் பல இலக்கியங்களும் எடுத்து ஆண்டு இருக்கின்றன.

1. *Pervasion,spreading;* வியாத்தி சூழ்ச்சி ஞானச் சுடரொளியாகி (திவ். திருவாய். 3, 2, 4).
2. *Deliberation, counsel,consultation;* ஆலோசனை போற்றார்ப் பொறுத்தலுஞ் சூழ்ச்சிய தகலமும் (புறநா. 2, 7).
3. *Wisdom;* நுண்ணறிவு. கருமக் கிடக்கையுங் கலங்காச் சூழ்ச்சியும் (பெருங். உஞ்சைக். 46, 117).

4. *Plan, means, expedient;* உபாயம் சொல்லா யானுன்னைச் சார்வதோர் சூழ்ச்சியே (திவ். திருவாய். *3, 2, 3).*

5. *Mental disturbance, distress;* மனத்தடுமாற்றம். கைம்மிக ஞலிதல் சூழ்ச்சி (தொல். பொ *260)*

என்பன போன்ற பல தொடர்கள் சூழ்ச்சியின் விரிவை விளக்குவனவாக அமைகின்றன. சூழ்ச்சி என்பது அரசர்களுக்கு உரிய இராஜதந்திரம் என்பதைக் கம்பன் தசரதன் வாயிலாக உணர்த்திக் காட்டுகிறான்.

மண்ணுறு முரசுஇனம் மழையின் ஆர்ப்புற,
பண்ணுறு படர் சினப் பரும யானையான்,
கண்ணுறு கவரியின் கற்றை சுற்றுற,
எண்ணுறு சூழ்ச்சியின் இருக்கை எய்தினான் *(1314)*

என்று காட்டுகிற வேளையில் தசரதன் தன்னுடைய சுற்றத்து மந்திரிமார்களோடு மேற்கொண்ட அரச ஆலோசனையைக் கம்பன் சூழ்ச்சி என்னும் சொல்லால் சுட்டுவதை உணர்ந்து கொள்ளலாம். ஆனால், ஏனைய மாந்தர்கள் மேற்கொள்கிற வஞ்சக முயற்சியும் சூழ்ச்சி என்கிற பெயரிலேயே இடம்பெறுவது குறிப்பிடத்தகுந்தது. எனவே, மாந்தர்களைப் பொறுத்தும் அவர்கள் மேற்கொள்ளும் செயலின் தன்மையைப் பொறுத்தும், அந்தச் செயல் நிகழ்வுறும் சூழலைப் பொறுத்தும் சூழ்ச்சியின் பொருளை நாம் உணர்ந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும் *(குறள்-511)*

என்னும் திருக்குறளின் வாக்கிற்கு ஏற்பவே கம்பனும் சூழ்ச்சியை இடத்திற்குத் தகுந்தவாறு பயன்படுத்திக் கொண்டிருக்கிறான். இதனை, திருவள்ளுவரின் அதே சொல்லால்

நல்லவும் தீயவும் நாடி, நாயகற்கு,
எல்லை இல் மருத்துவன் இயல்பின் எண்ணுவார் ;
ஒல்லை வந்து உறுவன உற்ற பெற்றியின்,
தொல்லை நல்வினை என உதவும் சூழ்ச்சியார் *(1322)*

என்று அமைச்சர்களைச் சூழ்ச்சியார் எனும் சொல்லால் குறிப்பிடுவதோடு அவர்களை நோயின் தன்மையை அறியும் வல்லமை பொருந்திய மருத்துவர்களோடும் ஒப்பிட்டு இருப்பது இங்கு நோக்கத்தக்கது.

அதைப்போலவே தசரதனின் மனைவியர் அறுபதினாயிரம் பேர் இந்த வரிசையில் அமைச்சர்களும் அறுபதினாயிரம் பேர் விளங்கினார்கள் என்று குறிப்பிடும் இடத்தும் அவர்களைச் சூழ்ச்சியார் என்றே கம்பன்

அறுபதினாயிரர் எனினும், ஆண்தகைக்கு
உறுதியில் ஒன்று இவர்க்கு உணர்வு என்று உன்னலாம்
பெறல் அருஞ் சூழ்ச்சியர்; திருவின் பெட்பினர்
மறி திரைக் கடல் என வந்து சுற்றினார் *(1323)*

என்று காட்டுவதும் எண்ணத் தகுந்தது. மேலும் திருவள்ளுவர் சூழ்ச்சியினை,

சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது (குறள்-671)

என்றும் விளக்கியுரைத்து இருப்பதனை இங்கு எண்ணிப் பார்த்தல் பொருந்தும்.

மூன்று சூழ்ச்சிகள்

கம்ப காவியத்தில் கதைப் போக்கைச் சரியான திசையில் செலுத்துவதற்காகச் சில பாத்திரங்கள் தன்னுடைய நிலையிலிருந்து மாற்றம் பெறுகின்றன. அத்தகைய மாற்றம் சூழ்ச்சிகளுக்கு வழிவகுக்கிறது. அதிலும் மூன்று பாத்திரங்கள் செய்கிற சூழ்ச்சிகள் குறிப்பிடத் தகுந்தவை. முதலாவதாக இராமனைக் காட்டுக்கு அனுப்புவதற்காகக் கைகேயியை மனம் திரியச் செய்ய, கூனியாகிய மந்தரை செய்கிற சூழ்ச்சி, இரண்டாவதாகச் சீதையின் அழகை வியந்து கூறி, (இலக்குவன் பால் தான் கொண்ட முகத்தை மறைத்து) இராவணனை அவள்பால் மையல் கொள்ளத் தூண்டுகிற சூர்ப்பணகையின் சூழ்ச்சி, எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல இராவணன் மேற்கொள்கிற இராஜரீகமான சூழ்ச்சி என்று இம்மூவகைச்

சூழ்ச்சிகளும் கம்ப காவியத்திற்கு அழகு சேர்க்கின்றன.

இயல்பாக உள்ள ஒரு கதாபாத்திரம் அத்தனை எளிதாக மனமாற்றம் அடைந்து விடுதல் என்பது இலக்கிய இயல்பு ஆகாது. ஆதலால், கம்பன் தன்னுடைய காப்பிய உத்திகளின் மூலமாக அந்தக் கதா கதாபாத்திரங்களை மனமாற்றம் செய்யத் தனியே (கவிச்) சூழ்ச்சி செய்கிறான். அந்தச் சூழ்ச்சிகள் எவ்வாறு வென்று காப்பியத்திற்குச் சுவை சேர்க்கின்றன என்பதைப் பின்வருமாறு காணலாம்.

மந்தரையின் சூழ்ச்சி

ஒரு பரந்த பேரரசின் பட்டத்து இளவரசனான இராமபிரானை ஒரு சாதாரண பணிக் கிழத்தி தன்னுடைய சூழ்ச்சித் திறத்தால் காட்டுக்கு ஏகும்படி செய்தது இராம காதையில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்திய நிகழ்வாகும்.

அத்தனை எளிதாகப் பணியாள் ஒருத்தி தான் விரும்பியதை நிறைவேற்றி விட முடியுமா என்னும் வினாவிற்கு, முடியாது என்பதே சரியான விடையாகும். ஆனால் கம்பன் தன் கவித் திறத்தால் காப்பியப் போக்கைச் சரியான திசையில் செலுத்துவதற்கு அந்தப் பாத்திரங்களில் ஊடாகத் தானே சூழ்ச்சியை வலிமைப்படுத்தி இருக்கிறான் என்பதை உணரலாம். ஆதலால் அந்தப் படலத்திற்கே மந்தரை சூழ்ச்சிப் படலம் என்று பெயர் சூட்டுகிறான் கம்பன். இராமனுக்கு முடிசூட்டுவிழா நடக்க இருப்பதை அறிந்த கைகேயியின் தோழி மந்தரை என்பாள் அவ்விழா நடைபெறாதவாறு செய்த சூழ்ச்சியைச் சொல்லும் படலம் என்பது பொருள். இவள் கைகேயின் தோழியாக அரண்மனையில் வலம் வந்தவள். உடல் கூனல் இருப்பதனால் இவளுக்குக் கூனி என்ற பெயரும் உண்டு. மந்தரை என்பது மந்தரா என்னும் வடமொழிச் சொல்லிலிருந்து தோன்றியது. மந்தரா என்னும் பெயர் மனத்தைக் கலங்கச் செய்பவள் என்று பொருள் தருவதாகும்.

இராமன் முடி சூட்டும் வைபவத்தை எவ்வாறு தவிர்க்கலாம் என்றும் அவனைத் தண்டித்துக் கானகத்திற்கு எவ்வாறு அனுப்பலாம் என்றும் முன்கூட்டியே தன் மனத்திற்குள் சூழ்ச்சி

வலையைப் பின்னிக்கொண்டு மிக வேகமாகக் கைகேயியின் அந்தப்புரத்திற்குள் நுழைந்த மந்தரையை ஒர் அஃறிணைப் பொருளாகவே 'மண்டினாள் வெகுளியின் மடித்த வாயினாள்' என்று கம்பன் சுட்டிக் காட்டுகிறான். இதன் மூலமாக மந்தரையின் சூழ்ச்சி எத்தனை கீழ்த்தரமானது என்பதை அறியலாம்.

'என் மகன்' என்று கருதிப் பெரிதும் போற்றி மகிழ்கிற கைகேயியின் மனத்தைத் திரியச் செய்தால் தன்னுடைய சூழ்ச்சி தந்திரமாக நிறைவேறும் என்பது அவளுடைய தீர்க்கமான நம்பிக்கையாய் விளங்குகிறது. அந்தச் சூழ்ச்சியையும் படிப்படியாக அவள் கைகேயியின்பால் வலைப்பின்னலைப் போலப் பின்னி விடுகிறாள்.

இராகு, கேது என்னும் இரு விட கிரகங்களை ஒத்தவளாகிய அந்தக் கூனி தன்னுடைய கரங்களால் கைகேயின் சிவந்த பொன்னடிகளைத் தீண்டி உறங்கிக் கொண்டிருந்த அவளை எழுப்பினாள் என்னும்போதே சூழ்ச்சியின் விடத்தன்மை எத்தனை ஆழமானது என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம். இவ்வாறு ஒவ்வொரு சொல்லிலும் கம்பன் தனது கவித்திறத்தால் சூழ்ச்சிக்கு வலிமை சேர்த்து வருகிறான் என்பதையும் உணரலாம்.

'வெவ்விடம் அனையவள்' என்று மீண்டும் குறிக்கும் கம்பன் கூனியின் சூழ்ச்சி வகைகளை அடுக்கிக் கூறுகிறான். அவள் விரிக்கிற முதல் சூழ்ச்சி வலை கோசலையை நோக்கி வீசப்பட்டது.

வீழ்ந்தது நின்நலம் திருவும் வீழ்ந்தது
வாழ்ந்தனள் கோசலை மதியினால் என்றாள் *(1454)*

என்று 'கோசலையின் வயிற்றில் உதித்தவனாக இராமனைச் சுட்டி அவள் மதியினால் பெரும்பேற்றினைப் பெற்றுவிட்டாள். ஆதலால் நின்நலம் வீழ்ந்தது' என்று பேதப்படுத்திப் பார்க்கிறாள். ஆனால் அதற்குக் கைகேயி மயங்கவில்லை. உடனே அடுத்த வலையை இராமனை நோக்கி எறிகிறாள்.

ஆடவர் நகைஉற ஆண்மை மாசுற
தாடகை எனும் பெயர்த் தையலாள்பட

கோடிய வரிசிலை இராமன் கோமுடி
சூடுவன் நாளை வாழ்விது எனச்சொல்லினாள் *(1456)*

என்று இராமனுக்கு மாசுடையதாகத் தாடகையைக் கொன்ற விதத்தைக் குத்திக் காட்டிப் பகை வளர்க்கப் பார்க்கிறாள். போரில் பெண்களை எதிர்த்துக் கொல்லுதல் சுத்த வீரர்களுக்கு அழகன்று. ஆதலால் வீர ஆடவர் பரிகசிப்பர். எனவே இராமன் ஆண்மை மாசுற்றது என்று அவள் சூழ்ச்சியை விரித்தாள் என்பது பொருளாகும். தையல் ஆள் என்றலின் அவள் பெண்ணுருவில் உள்ள ஆண் என்பதுபோலத் தோன்றக் கூறியது கம்பன் சொற்றிறனுக்கு உரைகல்லாக அமைகிறது. ஆனால், கைகேயியோ இதற்காக மனமகிழ்ந்து அவளுக்கு மாலையைப் பரிசாக அளிக்கிறாள். தனது சூழ்ச்சி வலை சரியாகப் பயன்படவில்லை என்னும் காரணத்தினால் மந்தரை மிகவும் சினமுறுகிறாள். சூழ்ச்சியை மேற்கொள்பவர்கள் என்னென்ன வழிமுறைகளையெல்லாம் பின்பற்றுவார்கள் என்பதற்கு மந்தரையையே சான்று காட்டி விளக்குகிறான் கம்பன்.

தெழித்தனள் உரப்பினள் சிறுகண் தீஉக
விழித்தனள் வைதனள் வெய்துஉயிர்த் தனள்
அழித்தனள் அழுதனள் அம்பொன் மாலையால்
குழித்தனள் நிலத்தைஅக் கொடிய கூனியே *(1459)*

என்று சூழ்ச்சியாளர்களின் படிநிலையைக் கூனியைக் கொண்டு பட்டியலிடுகிறான் கம்பன். அவளுடைய சிந்தையைத் திரியச் செய்யும் முயற்சியாக 'நீ துயர்ப்படுக. நான் நெடிது உன் மாற்றவள் தாதியர்க்கு ஆட்செயத் தரிக்கிலேன்' என்றாள். 'தன்னையறியாமல் தனக்கு வரும் கேட்டினை வரவேற்கிறாள் கைகேயி' என்று இடித்துக் கூறி அவளைப் 'பேதை' என்றும் 'பித்தி' என்றும் இகழ்கிறாள். இதுவும் ஒருவிதமான சூழ்ச்சியின் வடிவமாகவே தோன்றுகிறது. தனது சூழச்சிவலை மேலும் இறுகுவதை உறுதி செய்து கொண்ட அவள்,

சிவந்தவாய்ச் சீதையும் கரிய செம்மலும்
நிவந்த ஆசனத்து இனிதுஇருப்ப நின்மகன்
அவந்தனாய் வெறுநிலத்து இருக்கல் ஆனபோது
உவந்தவாறு என்இதற்கு உறுதியாது என்றாள் *(1461)*

என்று கம்பன் தானே கைகேயியிடம் கேட்பது போல அந்தச் சூழ்ச்சி வலையை மேலும் இறுக்கச் செய்கிறான். இப்போது வலை பரதனையும், சீதையையும் இணைத்துப் பற்றிக் கொள்கிறது. மேலும், 'இறந்திலன் இருந்தனன் என்செய்து ஆற்றுவான்? பிறந்திலன் பரதன் நீ பெற்றதால்' என்று மேலும் கூனியின் வாயிலாக அந்த வலையை இறுக்குகிறான் கம்பன்.

அதுமட்டுமல்லாது, 'பரதனும் இளவலும் பதியின் நீங்கிப் போய் விரத மாதவம் செய விடுதல் நன்று' என்று சத்ருக்கனனையும் இந்த வலைக்குள் இழுத்துக் கொள்வது சூழ்ச்சியின் ஆழத்தையும் அகலத்தையும் புலப்படுத்துவதாக அமைகிறது. மேலும் இத்தகைய இழிநிலையில் இருந்து கொண்டு பரதன் உயிர்வாழ்வதினும், 'எண்ணுறப் பிறந்திலன் இறத்தல் நன்று' என்று தீயனைய கொடுமொழி கூறுகிறாள். இவ்வாறு படிப்படியாக விரிக்கிற இந்தச் சூழ்ச்சி வலை மெல்லக் கைகேயி அறியாமலேயே அவளைச் சூழ்ந்து கொள்வதை நாமும் கம்பனின் கவித்திறத்தின் வாயிலாக அறிந்து கொள்கிறோம்.

சூழ்ச்சியை மேற்கொள்வோர் தான் மனந்திரியச் செய்வோரின் தன்மையறிந்து ஒவ்வொரு சொல்லையும் சரியாகப் பயன்படுத்தி வெற்றி கொள்வார் என்பதற்கேற்பக் கூனி சான்றாகவே திகழ்கிறாள். இந்தச் சமயத்தில் மிகச்சரியான மற்றொரு வலையையும் பொருத்தமாக விரிக்கிறாள். இராமனுக்குப் பட்டம் என்று முடிவு செய்யும் இந்த நேரத்தில் எதற்காகத் தசரதன் பரதனைக் கேகய நாட்டிற்கு அனுப்பினான்? என்னும் வினாவே அது.

பாக்கியம் புரிந்திலாப் பரதன்தன்னை பண்டு
ஆக்கிய பொலங்கழல் அரசன் ஆணையால்
தேக்கு உயர்கல்அதர் கடிது சேணிடைப்
போக்கிய பொருள் எனக்கு இன்று போந்ததால் *(1465)*

என்று வினவுகிற வேளையில் கைகேயியின் உள்ளம் தடுமாற்றத்திற்கு உள்ளாகி விடும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது. மேலும் முந்தைய நிகழ்வுகளையும் கோவையாக்கிப் பார்க்கிற வேளையில், தசரதன் பரதனை இராமனுக்குப் போட்டியாகக் கருதும் சூழலைத்

தவிர்ப்பதற்காகவே கேகய நாட்டிற்கு அனுப்பினானோ? என்ற எண்ணத்தையும் கம்பன் நமக்குள் ஏற்படுத்திவிட முயல்கிறான் என்பதையும் உணர்ந்து கொள்ளலாம்.

இப்போது வலை முற்றிலும் பரதனை நோக்கியே பின்னப்பட்டு விடுகிறது. 'மந்தரை பின்னரும் வகைந்து கூறுவாள்' என்று கம்பன் முன்மொழிந்தபின்னரே,

அந்தரம் தீர்ந்து உலகு அளிக்கும் நீரினால்
தந்தையும் கொடியன் நற்றாயும் தீயளால்
எந்தையே பரதனே என்செய்வாய்? *(1466)*

என்று பரதனை நோக்கிக் கூவுவதாகக் கூனி புலம்புவது சூழ்ச்சியின் உச்சம் எனலாம். கிராமப்புறங்களில் சொல்லப்படுகிற ஆடு நனைவதாக ஓநாய் அழுத கதை என்னும் சொல்லாடல் இங்கு நமக்கு நினைவுக்கு வருவதைத் தவிர்த்து விட முடியாது.

இப்படியாகப் பரதனையே முதற்பொருளாக்கி மேலும் தனது வலையை இறுக்குகிறாள் கூனி. இதற்குக் கம்பனும் கவியமைத்துக் கொடுக்கிறான். அவள் திறம் வெல்லும் நிலையை எய்துகிறது. இராமன் அடையப் போகும் நன்மைகளை விடவும் பரதன் அடையப் போகும் துயரங்களைப் பட்டியலிடுவதில் முனைப்புக் காட்டுகிறாள் மந்தரையாகிய கூனி. அவளுடைய சூழ்ச்சித்திறம் எவ்வாறு இருந்தது என்பதையும் கம்பன் நமக்கு (மிகவும் இரகசியமாக) உணர்த்தத் தவறவில்லை.

வாய்கயப்புற மந்தரை வழங்கிய வெஞ்சொல்
காய் கனல்தலை நெய்சொரிந்தென கதம் கனற்ற
கேகயர்க்கு இறை திருமகள் கிளர்இள வரிகள்
தோய் கயல்கண்கள் சிவப்புற நோக்கினள் *(1469)*

என்னும்போது சூழ்ச்சி வலையில் சிக்கிக் கொண்ட கைகேயி அடைந்த மாற்றத்தையும் கம்பன் நமக்கு உணர்த்திக் காட்டி விடுகிறான்.

ஆனபோதும் கைகேயிக்கு கூனியின் சொல்லைக் கேட்டுத் தான் தசரதனின் முடிவினை மாற்றம் செய்துவிட முடியுமா என்கிற ஐயம் தோன்றுகிறது. இந்த ஐயத்தைத் தோன்றச் செய்ததே கூனியின் சூழ்ச்சியின் முதல் வெற்றியாகத்தான் தோன்றுகிறது.

அவளை மனந்திரியச் செய்வதுதானே முதற்குறிக்கோள். அதிலே அவள் ஏறக்குறைய வெற்றியை அடைந்து விட்டாள் என்றால், அதனைத் தொடர்ந்த சூழ்ச்சிகளையும் அவள் முன்பே திட்டமிட்டுத்தானே தொடங்கியிருக்க வேண்டும் என்று நமக்குத் தோன்றுகிறது.

கைகேயி மயில்முறை குலத்து உரிமையையும் மனுமுதல் மரபினையும் பற்றிக் கேட்கிற வேளையில் கூனி மேலும் தனது சூழ்ச்சி வலையை இறுக்கிக் கொள்கிறாள். அங்கே அவளது சொற்கள் சுடுசரமாகவே பாய்கின்றன. கம்பன் அடியெடுத்துக் கொடுக்கிறானே.

எனக்கு நல்லையும் அல்லைநீ என்மகன் பரதன்
தனக்கு நல்லை அல்லையும் அத்தருமமே நோக்கின்
உனக்கு நல்லையும் அல்லை வந்து ஊழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லினை மதிஇலா மனத்தோய் *(1471)*

என்று கைகேயி கூனியின் மதியிலா மனத்தைச் சினந்து, 'அறிவுஇலி அடங்குதி' என்று தன் தோழி என்பதற்காக உயிரைப் பறிக்காமல் இருக்கிறேன் என்று உயிர்ப்பயம் ஊட்டியும் தன்னுடைய கடைசி முயற்சியாக அறத்தொடு நிற்க முயல்கிற வேளையில் இது சரியான தருணம் என்று கருதிக் கொள்கிறாள் கூனி. சூழ்ச்சியாளர்கள் தம் உயிரையும் துச்சமாக மதித்தவர்கள் அல்லரோ? தான் கருதியதைக் கைப்பற்றும் வரையிலும் அகலாது அணுகாது செயல் வெற்றி அடைவதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பவர்களாயிற்றே. கூனி சளைத்தவளா என்ன?

அஞ்சி மந்தரை அகன்றிலள் அம்மொழி கேட்டும்
நஞ்சு தீர்க்கினும் தீர்கிலாது அதுநலிந் தென்ன
தஞ்சமே உனக்கு உறுபொள் உணர்த்துகை தவிரேன்
வஞ்சி போலி என்று அடிமிசை வீழ்ந்து *(1474)*

என்று தொடர்ந்து உரைசொல்லும் கூனியின் பின்னே கம்பனும் நின்று கவியெடுத்துத் தருகிறானே.

இப்போது சூழ்ச்சிவலையை அரசுரிமையாக மாற்றி வீசுகிறாள் கூனி. எல்லாப் பதவிகளும் சுகங்களும் கோசலைக்கும் இராமனுக்குமே என்றால், உனக்கும் உனது புதல்வனுக்கும்

உரியது யாது? என்று புதுக்குழப்பத்தினை ஏற்படுத்துகிறாள். மேலும் வந்து இரப்பவர்க்கு வரையாது வழங்கும் நின் கொடைத்திறம் பின்னாளில் மாறிப்போய் விடுமே என்று உடைமையிழப்பினையும் சுட்டிக் காட்டுகிறாள். மற்றவர் மதியாத நிலையில் எவ்வாறு வாழ்வாய் என்று புகழிழந்த நிலையினையும் காட்டி அச்சமூட்டுகிறாள். எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல, சீதையின் தந்தைக்கும் கைகேயியின் தந்தைக்கும் உள்ள அரசப் பிணக்கையும் இந்த இடத்தில் சரியான முறையில் பொருத்திப் பெருங்கலகத்தைக் கைகேயியின் நெஞ்சில் விதைத்து விடுகிறாள் கூனியாகிய மந்தரை. எங்கு சுற்றியும் இறுதியில் பரதனையும் தன் சூழ்ச்சி வலைக்குள் அவள் இழுக்கத் தவறவில்லை.

கெடுத்து ஒழிந்தனை உனக்குஅரும் புதல்வனை கிளர்நீர்
உடுத்த பாரகம் உடையவன் ஒருமகற்கு எனவே
கொடுத்த பேர்அரசு அவன்குலக் கோமைந்தர் தமக்கும்
அடுத்த தம்பிக்கும் ஆம் பிறர்க்கு ஆமோ *(1482)*

என்று வெற்றிகரமாகத் தனது சூழ்ச்சி வலையில் தூய மனத்தவளாக விளங்கிய கைகேயினை வீழ்த்தி விட்டாள். இதனைக் கம்பன்,

தீயமந்தரை இவ்உரை செப்பலும் தேவி
தூய சிந்தையும் திரிந்தது சூழ்ச்சியின் இமையோர்
மாயையும் அவர்பெற்ற நல்வரம் உண்மையாலும்
ஆய அந்தணர் இயற்றிய அருந்தவத் தாலும் *(1483)*

என்று உரைக்கிற வேளையில் இந்தச் சூழ்ச்சி தேவர்கள் பெற்ற வரம் என்றும் அறவோர் ஆகிய வேதியர் செய்த அருந்தவம் என்றும் சூழ்ச்சியின் பின்னே இருக்கிற பெருஞ்சூழ்ச்சியை நமக்குக் காட்டி விடுகிறான்.

இராமகாதையைக் கதையாகப் படிக்கிறவர்களுக்கு இது இராமனுக்கு ஏற்பட்ட துன்பம் என்றுதான் தோன்றும். ஆனால், உலகியல் நோக்கோடு தத்துவப் பின்னணியோடு அணுகுகிறவர்களுக்கு இந்தத் திருப்பம் எத்தனை பெரிய நன்மையைக் கொண்டு வந்து தரப்போகிறது என்பது புரியும். .

சூர்ப்பணகையின் சூழ்ச்சி

பட்டமேற்று முடிசூட்டிக் கொள்ளத் தயாராக இருந்த இராமனைக் காட்டுக்குத் துரத்தியடித்தது மந்தரையின் சூழ்ச்சி என்றால், காட்டிலாவது நிம்மதியாக இருக்கலாம் என்று பர்ணகசாலை குடிபுகுந்த அவனைத் துரத்திவிட்டுச் சீதையைக் கவர்ந்து செல்ல இராவணனைத் தூண்ட வைத்தது சூர்ப்பணகை செய்த சூழ்ச்சியாகும்.

இராவணன் தங்கையாகிய இவள் தன்னுடைய குற்றத்தை மறைத்து இராம இலக்குவர்களைப் பழிதீர்க்க நினைத்து அச்சூழ்ச்சிக்கு இராவணனை உடன்படுத்தும் முயற்சியே சூர்ப்பணகைச் சூழ்ச்சிப் படலம் என்ற பெயரில் கம்பனால் இராமகாதையில் அமைக்கப்பெற்றுள்ளது.

இராம இலக்குவர்கள்பால் கொண்ட மையலால் தன்னுடைய அவயங்களில் பங்கமேற்படுத்திக் கொண்ட சூர்ப்பணகை தன் தம்பியர்களிடம் முறையிட்டும் பலனில்லாத காரணத்தினால், இராவணனைத் தஞ்சமென நம்பிப் புகுகிறாள். பழிவாங்கும் சிந்தையும் இராம இலக்குவர்களை அடைய வேண்டிய சூழ்ச்சியுமே அவளுக்கு முதலாவதாகத் தெரிகிறது. ஆதலால் இராவணனிடம் சீதை பற்றிய ஆசையை மூட்டுவதில் முனைகிறாள்.

சூர்ப்பணகை இலங்கை மாநகருக்குள் நுழைகிறபோதே,

திரைப்பரவைப் பேர்அகழித் திண்நகரில் கடிது ஓடிச் சீதை தன்மை
உரைப்பென் எனச் சூர்ப்பணகை வர இருந்தான் இருந்த பரிசு
உரைத்தும் மன்னோ (3067)

என்று கம்பன் சூர்ப்பணகைக்கு முன்னரே இலங்கை புகுந்து அவள் சூழ்ச்சித் திறத்தின் கட்டியம் கூறிவிடுகிறான். இராமனுடைய அழகில் தன்னை இழந்த காமப் பெருக்கினால் எண்ணற்ற வீரர்கள் இறந்து போன செய்தியையும்கூடக் கூறாது மறந்து, தனக்கு இனியவனாகிய இராமனை அடைவதற்குச் சீதையே தடையாக இருக்கிறாள் எனக் கருதி அவளையே முன்மொழிந்தாள் என்பது சூர்ப்பணகையின் சூழ்ச்சித் திறத்தின் வெளிப்பாடேயாகும்.

பெரும்புகழோடு கொலுவீற்றிருக்கிற இராவணனின் அவைக்கு கொங்கை, மூக்கு, காது ஆகிய உறுப்புகளை இலக்குவனால் இழந்த நிலையில் இரத்தம் சோரும் கோலத்தோடு சூர்ப்பணகை தன் முடை நாறும் வாயினால் அலறியபடி வந்து சேர்ந்தாள். இவளும் கூனியைப் போலவே தான் மேற்கொள்ளப் போகிற சூழ்ச்சித் திறத்தினை மனத்துக்குள்ளே அமைத்தபடிதான் வந்திருக்கிறாள் என்பதைக் கம்பன் தனது கவித்திறமையால் வெளிப்படையாகவே காட்டித் தருகிறான். சூர்ப்பணகையின் அலங்கோலத்தை மட்டும் பத்தொன்பது பாடல்களால் அறிமுகப்படுத்துவது அவளுடைய சூழ்ச்சித் திறனை வெளிப்படுத்தத்தானே.

எத்திசையிலும் அரக்கர்க்கு எதிரிகள் இல்லாத நிலையில் சூர்ப்பணகைக்கு இத்தகைய இடுக்கண்ணை மூட்டியவர் யாராக இருக்க முடியும்? என்கிற ஐயம் எல்லார்க்கும் எழுகிறது. இராவணன் தங்கை என்று தெரிந்தபின்னால் அவளை அணுகுவார் யார்? என்று ஐயுற்று ஒருவேளை சூர்ப்பணகையே இவ்வாறு தன்னைச் சேதித்துக் கொண்டாள் போலும் என்று சிலர் கருதுவது இதுபோன்ற சூழ்ச்சித் திறத்தில் அவள் கைதேர்ந்தவள் என்பதை ஊகித்துக் கொள்வதற்குக் கம்பன் தருகிற இடமாகவே தோற்றம் தருகிறது. மேலும் இவளது ஒழுக்கக் கேட்டினைக் கருதித்தான் கரனே இவளைத் தண்டித்தானோ என்று சிலர் பேசுவது சூர்ப்பணகையின் காமமிகுதிச் செய்கைகளின் வெளிப்பாட்டை அவர்கள் முன்னரே ஊகித்திருந்திருக்கிறார்கள் என்பதையும் காட்டுகிறது.

இவ்வாறு பலரும் பலவிதமாகக் கருதும்படியான நிலையை உடைய சூர்ப்பணகை தனது அண்ணனாகிய இராவணனின் பாதங்களில் வந்து புரண்டு அழுதாள். இங்கிருந்து சூர்ப்பணகையின் சூழ்ச்சி தொடங்குகிறது. இத்தகைய நிலையில் தனது தங்கையைக் கண்டால் இராவணன் எத்தகைய சினம் கொள்வான் என்று அஞ்சி இயற்கையே தன் இயல்பினை இழந்து தன்னை மறைத்துக் கொண்டதாகவும் தேவர்கள் தமக்கு இறுதி வந்து விட்டதாகவும் கருதினர் என்று கம்பன் வருணனை செய்கிறான். பெருங்குரலெடுத்து இராவணன் இது யாவர் செயல்? என்று கேட்டான். அதற்குச் சூர்ப்பணகை

பதிலளிக்கத் தொடங்குகிறாள். இயல்பாக இராவணன்பால் கொண்ட அச்சத்தின் காரணமாக அவளையறியாமலேயே உண்மை பேசுகிறாள்.

கானிடை அடைந்து புவி காவல் புரிகின்றார்
மீனுடை நெடுங் கொடியினோன் அனையர் மேல்கீழ்
ஊனுடை உடம்புடைமை ஓர் உவமை இல்லார்
மானிடர் தடிந்தனர்கள் வாள் உருவி *(3116)*

என்றாள் சூர்ப்பணகை. இங்கு தன்னையும் மீறி அவள் மனத்துக்குள் குடிகொண்டிருந்த இராம-இலக்குவ மையல் வெளிப்பட்டது என்பதைக் கம்பன் காட்டத் தவறவில்லை. இத்தனை இன்னல் தனக்குச் செய்தவர்களின் மேனியழகை இப்படி எவளாவது உரைப்பாளா என்ன? கம்பன் கவி அவளுக்குக் கை கொடுக்கிறது போலும். அவளுடைய சொல் நம்பத்தகுந்ததாக இல்லை என்பதனை இராவணன் உணர்ந்து, பொய் தவிர் பயத்தை ஒழி புக்க புகல் என்றான். *(3117)* அவளுடைய சூழ்ச்சியின் தன்மையை ஒருவாறு அவனும் உணர்ந்திருக்க வேண்டுமல்லவா? ஆனால் சூர்ப்பணகையின் உள்ளம் காமத்திலிருந்து மீளவில்லை என்பதனை அவள் மறுமொழி உணர்த்தி விடுகிறது.

மன்மதனை ஒப்பர் மணிமேனி வடமேருத்
தன்எழில் அழிப்பர் திரள்தோளின் வலிதன்னால்
என்அதனை இப்பொழுது இசைப்பது? உலகு ஏழின்
நல்மதம் அழிப்பர் ஓர் இமைப்பின் நனி வில்லால் *(3116)*

என்று இராம இலக்குவரின் அழகினையே பெரிதும் போற்றி உரைத்துக் கொண்டிருந்தாளாம். சூழ்ச்சியை மறந்த சூழ்ச்சியாக இது விளங்குகிறது. தொடர்ந்து இராம இலக்குவரின் பெருமைகளையே மொழிந்து வந்த சூர்ப்பணகை மெதுவாக இராவணனின் உள்ளமறிந்து தனது சூழ்ச்சித் திறத்தை வெளிப்படுத்தத் தொடங்குகிறாள். அந்தச் சூழ்ச்சி அரக்கர்களின் எதிரிகளாக இராம இலக்குவரைச் சித்திரித்ததுதான்.

.... நுங்கள் குலம் வேரொடும் அடங்கக்
கோறும் என முந்தை ஒரு சூளுறவு கொண்டார் *(3122)*

என்று திரியவைத்தாள். இராவணனுக்கு எப்படிச் சொன்னால் சினம் மிகும் என்று அறிந்தவளல்லவா சூர்ப்பணகை. ஆதலால் அவ்வாறு கூறினால் போலும். மேலும்,

தராவலய நேமி உழவன், தயரதப் பேர்ப்
பராவ அரு நலத்து ஒருவன், மைந்தர்; பழி இல்லார்;
விராவ அரு வனத்து, அவன் விளம்ப, உறைகின்றார்;
இராமனும் இலக்குவனும் என்பர், பெயர்' என்றாள் *(3123)*

என்று பெயர்சுட்டி அவர்களை இராவணனிடம் அடையாளப்படுத்தினாள். மேலும் அவர்கள் ஆரண்யத்திற்குள் வந்த வரலாற்றையும் கூறத் தொடங்கவே இராவணன் மனம் வேறுநிலையில் மாறி, 'இத்தகைய துன்பத்தை உனக்கு இழைத்த அவர்களை இன்னும் உயிரோடு விட்டு வைத்திருக்கிறேனே' என்று தன்னைத் தானே நொந்து கொள்ளும் நிலைக்கு ஏகியது. இதனை உணர்ந்து சற்றுத் தெளிவடைந்த சூர்ப்பணகை தனது சூழ்ச்சி வலையை வேறுதிசைக்கு நகர்த்துகிறாள். இப்போது அவளுக்கு அழுகையும் துயரமும் கைகொடுக்கிறது. இராம இலக்குவர்களால் அழிக்கப்பட்ட வீரர்களின் இழப்பினைப் பற்றி இந்த இடத்தில் இராவணனுக்கு நினைவூட்டி மேலும் அவனது சினத்தை மூட்ட முயல்கிறாள். ஆனால் அவ்வேளையிலும் அவர்தம் வீரத்தையும் எழிலையும் அவளால் மறைக்காமல் கூற முடியவில்லை என்பதைக் கம்பன் கவிகள் காட்டித் தருகின்றன.

இராவணன் சற்றுச் சிந்தை தெளிந்து அவளுடைய சூழ்ச்சித் திறனறிந்தவன் போல,

ஆயிடை எழுந்த சீற்றத்து அழுந்திய துன்பம் மாறி,
தீயிடை உகுத்த நெய்யின் ஊற்றம் செய்ய,
நீ இடை இழைத்த குற்றம் என்னைகொல் நின்னை, இன்னே,
வாயிடை இதழும் மூக்கும் வலிந்து அவர் கொய்ய?' என்றான்
(3132)

இந்த வினா சூர்ப்பணகையைத் துடிக்க வைத்து விட்டது. செய்வதறியாது தான் விரித்த சூழ்ச்சி வலையிலே தானே சிக்கிக் கொள்வோமோ என அவள் அஞ்சினாள் போலும். ஆதலால் தக்க சமயத்தில் சீதையைக் குறித்து இராவணன் மனத்தில் அழியாத ஆசையைத் தூண்டி விட்டாள்.

'என்வயின் உற்ற குற்றம் யாவர்க்கும் எழுத ஒண்ணாத்
தன்மையன் இராமனோடும் தாமரை தவிரப்போந்தாள்,
மின்வயின் மருங்குல் கொண்டாள், வேய்வயின் மென் தோள் கொண்டாள்,
பொன்வயின் மேனி கொண்டாள், பொருட்டினால் புகுந்தது' என்றாள்
(3133)

சூர்ப்பணகை மிகச் சாதுர்யமாகத் தனது சூழ்ச்சி வலையின் முதல் சுழியை இட்டு வைத்தாள். முன்பு இராம இலக்குவர்களுக்குக் கூறிய வருணனைகளை விடவும் சீதைக்குத் தரப்படும் வருணனையின் திறம் உயர்ந்து நிற்பதற்குக் கம்பனும் உதவியிருக்கிறான் என்பதைக் கூறாமலேயே நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது.

ஆர் அவள்?' என்னலோடும், அரக்கியும், 'ஐய! ஆழித்
தேர், அவள் அல்குல்; கொங்கை, செம் பொன் செய் குலிகச் செப்பு;
பார் அவள் பாதம் தீண்டப் பாக்கியம் படைத்தது அம்மா!
பேர் அவள், சீதை' என்று வடிவு எலாம் பேசலுற்றாள் *(3134)*

என்பது தொடங்கி மேலும் அவள் சீதையின் அழகினை மேலும் வருணிப்பதற்குக் கம்பனும் தன் கவித்திறத்தால் பாடல்களை படைத்துத் தருகிறான்.

'இந்திரன் சசியைப் பெற்றான்; இரு-மூன்று வதனத்தோன் தன்
தந்தையும் உமையைப் பெற்றான்; தாமரைச் செங்கணானும்
செந் திருமகளைப் பெற்றான்; சீதையைப் பெற்றாய் நீயும்;
அந்தரம் பார்க்கின் நன்மை அவர்க்கு இலை உனக்கே; ஐயா!
(3141)

என்று சூழ்ச்சிக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போலச் சீதையை இராவணனுக்குரிய பொருளாகவே அடைக்கலப்படுத்தி விடுகிறாள். கூனி பணிக்கிழத்தி என்பதாலும், தன்னுடைய அரசியாக விளங்கிய கைகேயியின் மனத்தை மாற்ற வேண்டிய வர்க்க நெருக்கடிக்கு உள்ளான காரணத்தினாலும் படிப்படியாகச் சூழ்ச்சியைக் கைக்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால், சூர்ப்பணகைக்கு அவ்வித நிர்ப்பந்தம் ஏதுமில்லை. அவள் அரக்கர் குலத்தின் செல்லப் பெண் என்பதும் இராவணனின் தனித்த அன்புக்குப் பாத்திரமானவள் என்பதும் எல்லாவற்றுக்கும் மேலாக எல்லாரும் அஞ்சிப் பணிகிற

இராவணனின் பலவீனங்களை அறிந்தவள் என்பதனாலும் மிக இயல்பாகத் தனது சூழ்ச்சியை நேரடியாகவே வீச முடிந்தது போலும். மேலும் இராவணனின் காமத்தைத் தூண்டும் விதமாக,

பாகத்தில் ஒருவன் வைத்தான்; பங்கயத்து இருந்த பொன்னை
ஆகத்தில் ஒருவன் வைத்தான்; அந்தணன் நாவில் வைத்தான்;
மேகத்தில் பிறந்த மின்னை வென்ற நுண் இடையினாளை
மாகத் தோள் வீர!-பெற்றால், எங்ஙனம் வைத்து வாழ்தி! *(3142)*

என்று சீதையைச் சுற்றியே தனது சூழ்ச்சிவலையைக் காமவலையாகப் பின்னி எறிந்தாள். அவளுடைய சூழ்ச்சியின் பின்னே சீதையை இராவணன் அடைந்த பின்னர், தான் எவ்வாறாயினும் இராம இலக்குவரை அடைந்து விடலாம் என்பதும் மறைந்திருப்பதைக் கம்பன் உணர்த்துகிறான். ஆக, ஒரு சூழ்ச்சி பல சூழ்ச்சிகளுக்குப் பின்னலாய் அமைவதைக் கம்பகாதையின் வழியாக உணர முடிகிறது. இதனைக் கம்பனும்,

மீன் கொண்டு ஊடாடும் வேலை மேகலை உலகம் ஏத்தத்
தேன் கொண்டு ஊடாடும் கூந்தல் சிற்றிடைச் சீதை என்னும்
மான் கொண்டு ஊடாடு நீ; உன் வாள் வலி உலகம் காண
யான் கொண்டு ஊடாடும் வண்ணம் இராமனைத் தருதி என்பால்!
(3145)

என்று சூர்ப்பணகையின் கூற்றினாலேயே உறுதிப்படுத்தி விடுகிறான்.

இவ்வாறு சூர்ப்பணகை மேற்கொண்ட சூழ்ச்சி வெற்றியை அடைந்தது என்பதனை, தாபமும் காமநோயும் ஆர்உயிர் கலந்தவனாக இராவணன் சிந்தை திரிந்து போக,

கரனையும் மறந்தான்; தங்கை மூக்கினைக் கடிந்து நின்றான்
உரனையும் மறந்தான்; உற்ற பழியையும் மறந்தான்; வெற்றி
அரனையும் கொண்ட காமன் அன்பினால், முன்னைப் பெற்ற
வரனையும் மறந்தான்; கேட்ட மங்கையை மறந்திலாதான் *(3149)*

என்று கம்பன் சூர்ப்பணகைக்கு உதவியாக இருந்து இராவணனது மனந்திரிந்ததை எடுத்துக் காட்டுகிறான்.

சிற்றிடைச் சீதைஎன்னும் நாமமும் சிந்தை தானும்
உற்று இரண்டு ஒன்றுஆய் நின்றால் ஒன்று ஒழித்து ஒன்றை உன்ன
மற்றொரு மனமும் உண்டோ? *(3150)*

என்று கம்பன் இராவணனை எள்ளி நகையாடுகிறபோது கம்பனின் கவிச்சூழ்ச்சியும் உதவியதனால்தான் சூர்ப்பணகையால் சீதையை இராவணன் மனத்தில் இருத்த முடிந்தது என்பதை உணரலாம்.

ஆதலால் எல்லாவற்றையும் மறந்து விட்டு இராவணன்,

மயிலுடைச் சாயலாளை வஞ்சியா முன்னம், நீண்ட
எயிலுடை இலங்கை நாதன், இதயம் ஆம் சிறையில் வைத்தான்;
அயிலுடை அரக்கன் உள்ளம், அவ்வழி, மெல்ல மெல்ல,
வெயிலுடை நாளில் உற்ற வெண்ணெய்போல், வெதும்பிற்று அன்றே
(3151)

என்று கம்பன் காட்டுகிறான்.

ஆக, காப்பியத்தின் நோக்கநத்தில் கம்பன் தான் கருதிய இரண்டாவது சூழ்ச்சியும் வெற்றி பெற்று விட்டது. இராமனைக் கானகத்துக்கு நகர்த்தி முதல் சூழ்ச்சியைப் போல, இரண்டாவது சூழ்ச்சி சீதையை நோக்கிப் பின்னப் பெற்று வெற்றியும் அடைந்து விட்டது.

இராவணனின் சூழ்ச்சி

கம்பர் காதையில் நிறைவான சூழ்ச்சியாக விளங்குவது இராவணனின் சூழ்ச்சியே ஆகும். இராவணன் மேற்கொண்ட சூழ்ச்சித் திறத்தாலே சீதை இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு அசோகவனத்தில் சிறை வைக்கப்படுகிறாள். இராவணன் தனக்குரிய அழிவைத் தானே தேடிக் கொள்ளுகிற சூழ்ச்சியாக இது அமைந்து விடுகிறது. அரக்கர் குலம் அழியவும் தேவர்கள், முனிவர்கள் செய்த தவம் பலிக்கவும் இந்தச் சூழ்ச்சியே காரணமாக அமைந்துவிடுகிறது. காமத்தினால் ஏற்பட்ட இழிவு காரணமாக ஐம்பொறி உணர்வுகளும் நிலைகுலைந்து போக ஆற்றல்மிக்க இராவணன் மற்றொரு பிறவி எடுத்தவன் போல வலிமையிழந்து சோர்ந்து போனான். தன்னுடைய

இந்தத் துயரத்திலிருந்து விடுபடுவதற்கு ஒரோவழி உதவுபவன் மாரீசனே என்று தேர்ந்து கொண்டு அவன் ஆலோசனையைக் கேட்பதற்குத் தயாரானான்.

மாரீசன் இராவணனுக்கு தாய்வழி மாமன் ஆவான். விசுவாமித்திரர் செய்த வேள்வியை காக்கச் சென்ற ராமபிரானது கணைக்குத் தப்பி ஒடிப் பிழைத்தவன் இவன். இராம பாண தீட்சையால் பழி நெறி மாறித் தவநெறி மேற்கொண்டவன். அதனால் கம்பன் இவனை, 'இந்திரியம் அடக்கி நின்ற மாரீசன்' என்று குறிப்பிடுவான். தன்னுடைய பேராசையாகிய சீதையை அடையும் விருப்பத்தை மாரீசனிடம் இராவணன் எடுத்துரைக்கிறான். ஆனால், தவநெறியே மேற்கொண்ட மாரீசன் பலவாறு அறிவுரை புகட்டுகிறான். ஆனால், அவனுடைய அறிவுரைகள் ஏதும் இராவணனுக்குச் செவியில் ஏறுவதாக இல்லை. இதனை நன்கு உணர்ந்து கொண்ட மாரீசன் இராவணனின் சினத்திற்கு அஞ்சி அவன் வேண்டிக் கொண்டபடி சூழ்ச்சிக்கு இசைகிறான்

கூனியைப் போலவோ, சூர்ப்பணகையைப் போலவோ கடுமையான சூழ்ச்சி செய்யவேண்டிய அவசியம் இராவணனுக்கு இல்லை. ஏனென்றால் அவன் சூழ்ச்சியைக் கருதிய விதத்திலேயே அது வெற்றிகரமாக நிறைவேறிக் கொள்கிறது. இராவணனுடைய சூழ்ச்சிக்கு முதல்பலியானது மாரீசனே ஆவான்.

என்றலும், எழுந்து புல்லி, ஏறிய வெகுளி நீங்கி,
'குன்று எனக் குவிந்த தோளாய்! மாரவேள் கொதிக்கும் அம்பால்
பொன்றலின் இராமன் அம்பால் பொன்றலே புகழ் உண்டு அன்றோ?
தென்றலைப் பகையைச் செய்த சீதையைத் தருதி' என்றான்
(3269)

என்று இராவணன் மாரீசனிடம் காமன் கணைகளால் மாளாது இராமன் கணைகளால் மாண்டு சீதையைத் தனக்குத் தருக எனச் சூழ்ச்சி வலையை முதலில் வீசினான்.முன்பே ஒருமுறை இராமன் கணைகளுக்குத் தப்பிவிட்ட மாரீசன் இப்போது இராவணனின் சூழ்ச்சியினால் மடிவது உறுதி என்று நம்பி அங்கிருந்து புறப்படுகிறான். இதனை உறுதிப்படுத்தும் விதமாக இராவணன் பல இடங்களில்,

மாயையால் வஞ்சித்து அன்றோ வவ்வுதல் அவளை' *(3271)*

என்றும்,

ஆதலாலே மாயையின் வலித்தும்' *(3273)*

என்றும் சீதையை அடைவதற்குச் சரியான வழி சூழ்ச்சியே என்று உறுதிபடக் கருதுகிறான். இதனை உணர்ந்து கொண்டே மாரீசன் இராவணனிடம் சூழ்ச்சியின் தன்மை குறித்து

என்னமா மாயம் யான் மற்று இயற்றுவது இயம்புக' *(3275)*

என்று விரிவாகக் கேட்கிறான். அவனுக்கு இராவணனின் சூழ்ச்சித் திறம் தெரியாதா என்ன? இருந்தாலும் அவன் வாக்கிலேயே அறிவதற்காக அவ்வாறு கேட்கிறான் போலும். இராவணனின் சூழ்ச்சிக்குத் தக்கவாறு எல்லோரும் வசப்படுவது கம்பனையும்கடந்து காப்பியம் செய்கிற அற்புதம் போலும். சீதை இராவணனின் சூழ்ச்சிக்குப் பலியான விதத்தைக் கம்பன் காட்டும்போது,

காணா இது கைதவம் என்று உணராள்
பேணாத உளம்-கொடு பேணினளால்
வாழ்நாள் அவ்இராவணன் மாளுதலால்
வீழ் நாள் இல் அறம் புவி மேவுதலால் *(3283)*

என்று இராவணன் செய்த தீமைகளின் உருவமாகவே மாயமான் வடிவில் மாரீசன் தோன்றினான் என்பதும், முதல் சூழ்ச்சிக்குக் காரணமாகிய கூனி கைகேயியின் மாளிகைக்குள் தோன்றியபோது,

இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்' என்று கம்பன் குறித்ததையும் இங்கு பொருத்திக் கண்டால் சூழ்ச்சியின் தொடர்ச்சியும் புரிகிறது.

கைகேயி எவ்வாறு கூனியின் சூழ்ச்சித் திறம் அறியாது மயங்கினாளோ, இராவணன் எவ்வாறு சூர்ப்பணகையின் சூழ்ச்சிக்கு வசப்பட்டானோ, அதைப்போலவே சீதையும் பொன்மானின் மையலால் மயக்குற்றுத் திரிந்தாள்.

இராவணன் மேற்கொண்ட சூழ்ச்சியின் வடிவமாக மாரீசன் மாய மானானான். சூழ்ச்சியை அறியாத சீதை அந்த மாய மானைப் பிடித்துத் தரும்படி இராமனிடம் வேண்டுகிறாள்.

ஆணிப் பொனின் ஆகியது; ஆய் கதிரால்
சேணில் சுடர்கின்றது; திண் செவி, கால்,
மாணிக்க மயத்து ஒரு மான் உளதால்;
காணத் தகும்' என்றனள், கை தொழுவாள் *(3285)*

என்று சீதையின் உள மாறுபாட்டைக் கம்பன் விளக்கிக் காட்டுகிறான்.

மேலும், இதுபோன்ற ஒர் அழகிய மானை எந்த உலகத்திலும் இதுவரை நான் கண்டதில்லை என்று இராமபிரானும் மயங்கி அந்த மாயமானின் பின்னே விரைந்து சென்றான்.

இந்த இடத்தில் சிந்தை திரியாது இருந்தவன் இலக்குவன் மட்டுமே. அவன் தெளிவாக உணர்ந்து 'இது இயற்கை வடிவுடைய மான் அன்று. ஆதலால் இதன்பால் மையல் ஒழிக' என்று எச்சரிக்கிறான். ஆனால், விதியும் இராவணன் சதியும் சீதையை எளிதில் விட்டுவிடவில்லை. இங்கும் கம்பனின் சூழ்ச்சி காப்பியத்திற்குக் கரம் கொடுக்கிறது.

நோக்கிய மானை நோக்கி, நுதி உடை மதியின் ஒன்றும்
தூக்கிலன், 'நன்று இது 'என்றான்; அதன் பொருள் சொல்லல் ஆகும்;
சேக்கையின் அரவு நீங்கிப் பிறந்தது, தேவர் செய்த
பாக்கியம் உடைமை அன்றோ! அன்னது பழுது போமோ *(3293)*

என்று தன் சூழ்ச்சிக்குத் தேவர்களின் தவத்தையும் துணை சேர்த்துக் கொள்கிறான் கம்பன். இலக்குவன் எத்தனை தடுத்தும் கேளாமல் சீதை விடாப்பிடியாய் மாயமானை வேண்டுவதும், அதனை அடைவதற்கு இராமன் முயல்வதும் இராவணனின் சூழ்ச்சி வெற்றியடைவதற்கு வழிகோலுகின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக அந்த மாய மானைத் தானே கொண்டும் அல்லது கொன்றும் வருவதாக இலக்குவன் கூறிய போதும், சீதை தன் மயக்கில் அதை மறுதலித்தபோது இராமனும் அதனை ஏற்றுக் கொண்டான் என்பதைக் கம்பனும் ஒத்துக் கொண்டிருக்கிறான்.

மந்திரத்து இளையோன் சொன்ன வாய்மொழி மனத்துக் கொள்ளான்
சந்திரற்கு உவமை சான்ற வதனத்தாள் சலத்தை நோக்கிச்
சிந்துரப் பவளச் செவ்வாய் முறுவலன், சிகரச் செவ்விச்
சுந்தரத் தோளினான் அம் மானினைத் தொடரலுற்றான் *(3306)*

என்று கம்பன் இதனைப் பதிவு செய்கிறான்.

மாயமானைத் தொடர்ந்தது இராமனின் விதியா அல்லது இராவணன் செய்த சதியா இருவருக்கும் பொதுவாக நின்று கம்பன் சமைத்த காப்பியப் பாதையா என்பது ஆய்வுக்குரியது. இதனைக் கம்பன் தன் கவி வாக்கில்,

நின்றதே போல நீங்கும் நிதிவழி நேயம் நீட்டும்
மன்றல்அம் கோதை மாதர் மனம்எனப் போயிற்று அம்மா *(3309)*

என்றும்

ஆயுமேல் உறுதல் செல்லாம் ஆதலால் அரக்கர் செய்த
மாயமே ஆயதே நான் வருந்தியது என்றான் வள்ளல் *(3310)*

என்றும் பதிவு செய்வது நோக்கத்தக்கது. எவ்வாறாயினும் சீதையிடமிருந்து இராமனைப் பிரிக்கும் முதல் சூழ்ச்சியில் இராவணன் வெற்றி அடைந்து விட்டான். தொடர்ந்து இலக்குவனை அப்புறப்படுத்த வேண்டும். அதற்குக் கம்பன் எவ்வாறு சூழ்ச்சி உதவி செய்தான் என்பதனையும் தொடர்ந்து காணலாம்.

மாரீசன் இராமபாணத்தால் வீழ்ந்தபோது இலக்குவனின் பெருமையை இராமன் உணர்ந்து கொண்டான். அப்போதுதான் மாரீசனின் சூழ்ச்சியை அவன் அறிந்தான்.

'மாள்வதே பொருள் ஆக வந்தான் அலன்;
சூழ்வது ஓர் பொருள் உண்டு; இவன் சொல்லினால்
மூள்வது ஏதம்; அது முடியாமுனம்
மீள்வதே நலன்' என்று, அவன் மீண்டனன் *(3318)*

என்றாலும் காலம் கடந்ததைக் கம்பன் நமக்கு அறிவுறுத்துகிறான்.

இராமனின் அம்பால் பொய்மான் வேடம் கொண்டு வீழ்ந்த மாரீசன் இராமனின் குரலில் கதறுகிறான். அதனை அரக்கனின்

வஞ்சனை என உணராத சீதையின் அவசரச் செயலால் காப்பியத்தில் பெரியமாற்றம் ஏற்படுகிறது. இராவணனின் சூழ்ச்சி அங்கே வலிமையாக அவர்களைப் பற்றிக்கொள்கிறது. தான் செய்த தவறை சீதை உணர்ந்துகொண்டாள் என்பதைக் கம்பன்,

பிடித்து நல்கு, இவ் உழை என, பேதையேன்
முடித்தனென், முதல் வாழ்வு என, மொய் அழல்
கொடிப் படித்தது என, நெடுங் கோள் அரா,
இடிக்கு உடைந்தது என, புரண்டு ஏங்கினாள் *(3321)*

என்று இடித்துக் கூறுகிறான். இராவணன் சூழ்ச்சி மிகவும் வலியது. அதனாலேயே சீதை இலக்குவனையும் ஐயுற நேரிடுகிறது. இலக்குவன் எத்தனையோ தெளிந்த மொழிகளால் சீதையை ஆற்றுப்படுத்த முனைந்தும் அது பயனற்றுப் போகிறது.

ஒருபகல் பழகினார் உயிரை ஈவரால்;
பெருமகன் உலைவுறு பெற்றி கேட்டும்நீ
வெருவலை நின்றனை; வேறுஎன்? யான்.இனி,
எரியிடைக் கடிது வீழ்ந்து இறப்பென் *(3331)*

என்று பின்னால் தனக்கு வரப்போகிற கேட்டினை முன்னமே தன் வாயால் உரைப்பாள் போல, கம்பனும் கவிச் சாபம் விடுகிறான். தன் மதியினும் வலியது விதி என்று கருதி இலக்குவன் கூறுவதாக,

துஞ்சுவது என்னை? நீர் சொன்ன சொல்லை யான்
அஞ்சுவென்; மறுக்கிலென்; அவலம் தீர்ந்து இனி,
இஞ்சு இரும்; அடியனேன் ஏகுகின்றனென்;
வெஞ் சின விதியினை வெல்ல வல்லமோ? *(3333)*

கம்பனும் உரைப்பது விதிக்கு வலிமை சேர்ப்பதாகவும் இராவணன் சூழ்ச்சிக்கு துணையமைவதாகவும் விளங்குகிறது.

இவ்வாறு இலக்குவன் சீதையை விடுத்து இராமனைத் தேடி ஏகிய வேளையில் இராவணன் தவக்கோலத்தில் சீதையை தன் சூழ்ச்சித் திட்டத்திற்கு ஏற்ப நெருங்குகிறான்.

இளையவன் ஏகலும், இறவு பார்க்கின்ற
வளை எயிற்று இராவணன், வஞ்சம் முற்றுவான்,

முளை வரித் தண்டு ஒரு மூன்றும், முப் பகைத்
தளை அரி தவத்தர் வடிவம், தாங்கினான் (3338)

என்று கம்பன் இராவணன் சூழ்ச்சி வடிவத்தைக் காட்டுகிறான். வஞ்சத்திலும் சூழ்ச்சியிலும் கைதேர்ந்தவனாகிய இராவணன் கொண்ட வேடத்தை தேவர்களும் அறியமுடியவில்லை ஆதலால் சூழ்ச்சியால் மயக்கமுற்று இருக்கிற சீதை மட்டும் எவ்வாறு அறிவாள்? என்பதைக் கம்பன் நமக்கு அறியத் தருகிறான்.

வெற்பிடை மதம் என வியர்க்கும் மேனியன்
அற்பின்நல் திரைபுரள் ஆசை வேலையன்
பொற்பினுக்கு அணியினைப் புகழின் சேக்கையைக்
கற்பினுக்கு அரசியைக் கண்ணில் நோக்கினான் (3344)

என்று கம்பன் இராவணனின் காம நோக்கையும் சூழ்ச்சி நோக்கையும் ஒருசேரக் காட்டுகிறான். எவ்விதக் களங்கமும் இல்லாத சீதை இயல்பாகத் தவமுனிவன் இவன் எனக்கருதி ஈண்டு எழுந்தருளும் என்று வேண்டி வேத்திரத்து ஆசனம் விதியின் நல்கினாள். இராவணனின் சூழ்ச்சி முற்றுப் பெறுகிற வேளை இது என்பதனைக் காட்டுவதற்குக் கம்பன்,

நடுங்கின, மலைகளும் மரனும்; நாஅவிந்து,
அடங்கின, பறவையும்; விலங்கும் அஞ்சின;
படம் குறைந்து ஒதுங்கின, பாம்பும்; -பாதகக்
கடுந் தொழில் அரக்கனைக் காணும் கண்ணினே (3353)

என்று இயற்கையே நடுங்கிய நடுக்கத்தை நமக்கு உணர்த்திக் காட்டுகிறான்.

தான் எண்ணிவந்த சூழ்ச்சி கைகூடுவதற்காகச் சீதையிடம் சற்று உரையாடுவது போல் நடிக்கிறான். அப்பழுக்கில்லாத சீதையும் அவனிடம் தன்னைப்பற்றி,

அனக மாநெறி படர்அடிகள்; நும்அலால்
நினைவது ஓர்தெய்வம் வேறுஇலாத நெஞ்சினாள்
சனகன் மாமகள்; பெயர்சனகி; காகுத்தன்
மனைவி யான்என்றனள், மறுஇல் கற்பினாள் (3357)

என்று கம்பன் தன்பால் குற்றம் இல்லாதவள் என்று உயர்த்திக் கூறுகிறான். யாவும் இராவணனின் சூழ்ச்சித் திறமன்றோ? தான் கருதியது முடிப்பதை நோக்கி,

ஆண்டையான் அரசு வீற்றிருந்த அந்நகர்
வேண்டியான் சில பகல் உறைதல் மேயினேன்
நீண்டனென் இருந்து அவற் பிரியும் நெஞ்சு இலேன்
மீண்டனென்" என்றனன் வினையம் உன்னுவான் *(3366)*

என்று கம்பன் இராவணன் சூழ்ச்சியை நினைவூட்டுகிறான். தன் நிலை உணர்ந்த சீதை அவனோடு வாதம் செய்கிறாள். அவளுக்கு முனிவராகிய இராவணன் மீது ஐயம் எழுகிறது. அவ்வாறு ஐயம் எழுந்தால் தன் சூழ்ச்சி கைகூடாது என்று கருதிய இராவணன் போலிச் சொற்களால் சூழ்ச்சி வலையை மேலும் இறுக்குகிறான். ஆனால், அவையும் பயனற்றுப் போகின்றன. எனவே சீதையின் பால் இரந்து நிற்கின்றான். அவ்வாறு இரப்பதற்கு கம்பனும் தன் கவிகளால் துணை செய்கின்றான். இவ்வாறாக ஒருவழியாக இராவணன் வேடம் களைந்து விடுகிறான்.

என்று அவள் உரைத்தலோடும் எரிந்தன நயனம்; திக்கில்
சென்றன திறள் தோள்; வானம் தீண்டின மகுடம்; திண் கை
ஒன்றொடு ஒன்று அடித்த, மேகத்து உரும் என எயிற்றின் ஒளி
மென்றன; வெகுளி பொங்க விட்டது மாய வேடம் *(3380)*

என்று கம்பனும் இராவணனின் தவ வேடத்தைக் கலைத்துக் காட்டுகிறான். வந்தவன் தீயவன் என்பதை அறிந்த சீதை வெகுண்டு அவனோடு வாதம் செய்கிறாள். இதுவரை வீர உரைகள் சொல்லி வந்த இராவணன் தன் சூழ்ச்சித் திறத்தை மாற்றி இப்போது கெஞ்சுவது போலப் பேசலுற்றான். இதனை,

அணங்கினுக்கு அணங்கனாளே! ஆசை நோய் அகத்துப் பொங்க,
உணங்கிய உடம்பினேனுக்கு உயிரினை உதவி, உம்பர்க்
கணம் குழை மகளிர்க்கு எல்லாம் பெரும் பதம் கைக்கொள்' என்னா,
வணங்கினன்-உலகம் தாங்கும் மலையினும் வலிய தோளான் *(3388)*

என்று கம்பனும் இகழ்ந்து பேசுகிறான்.

சூழ்ச்சியின் திறன் முற்றிய தன்மையாய் இராவணன்

ஆண்டு ஆயிடை கீயவன் ஆயிழையைத்
தீண்டான்; அயன் மேல் உரை சிந்தை செயாத்
தூண் தான் எனல் ஆம் உயர் தோள் வலியால்
நீண்டான் நிலம்; யோசனை கீழொடுமேல் *(3390)*

என்று அவன் எண்ணி வந்த சூழ்ச்சி முடித்ததைக் கம்பன் தன் கவிகளால் குறியிட்டுக் காட்டுகிறான்.

நிறைவுரை

கம்பகாதை தங்குதடையின்றி மேற்செல்லவும், காகுத்தன் தான் கருதி வந்த பூவுலகப் பணி முடிக்கவும் இம்மூவர் செய்த சூழ்ச்சிகள் மிக முக்கியமானவையாகக் கம்பனால் காட்டடப்படுகிறது. ஆதலால், இச்சூழ்ச்சிகளுக்குப் பின்புலமாகக் கம்பன் தன் கவிச் சூழ்ச்சியினால் கை கொடுக்கிறான் என்பதையும் விரிவாக உணரமுடிகிறது.

சூழ்ச்சி என்பது சூழ்ந்தார் வன்திறம் என்பதும் சூழலுக்கேற்ப அது நன்மையும் தீமையும் நல்கும் என்பதும் கம்ப காவியத்தின்வழி பெறப்படுகிற உண்மையாக விளங்குகிறது.

கதையாகக் கற்பவர்களுக்கு இராம காதையில் ஏற்படும் இந்தச் சூழ்ச்சிகள் வஞ்சகமாகத் தோன்றினாலும் அரக்கர் குலம் அழிவதற்கு இராமன் எடுத்துவந்த அவதார நோக்கம் நிறைவேறுவதற்கான சூழல்களே என்பதனை நன்கு கற்றோர் உணர்வார். சூழ்ச்சி என்பது அத்தனை எளிதானதன்று என்பதனால் அதனை மேலும் வலிவாக்குதற்குக் கம்பன் தன் கவித்திறத்தைக் காட்டி அந்தச் சூழ்ச்சி மாந்தர்களுக்கு உதவி புரிந்திருக்கிறான் என்பதும் இக்கட்டுரையின் மூலம் புலப்படுத்தப் பெற்றுள்ளது.

கம்பரில் சத்தியாக்ரஹம்

திருமிகு. எஸ். ஜெயலட்சுமி

திருநெல்வேலி

முன்னுரை:

சில வருடங்களுக்கு முன் நாம் உப்புச் சத்தியாகிரஹத்தின் நூற்றாண்டுவிழாவைக் கொண்டாடினோம். கத்தியின்றி ரத்தமின்றி நடத்திய போராட்டம் அது! சத்தியத்தின் நித்தியத்தை நம்பியவர்கள் நடத்திய சத்தியாகிரஹப் போர் அது! சத்தியாகிரஹம் நான்கு கருத்துகளை அடிப்படையாகக் கொண்டது.

1. ஆன்மபலம்
2. ஆள்பலம் ஆயுதபலத்தைத் தவிர்ப்பது.
3. தன்னையே வருத்திக் கொண்டு எதிராளியிடம் மன மாற்றத்தை ஏற்படுத்துவது.
4. சத்தியாக்கிரஹம் என்பது ஒரு சொல் அல்ல, அது ஒரு தத்துவம்.

சத்தியாக்கிரஹம் செய்யும் இவர்களுக்கு இந்தச் சக்தியும், குணமும் எங்கிருந்து கிடைத்தது? காலம் காலமாக நமது இதிஹாஸ புராணங்களிலிருந்து இதைப் பற்றிக் கேட் டும் படித்தும் அறிந்திருந்தார்கள். முதல் சத்தியாக்கிரஹியாகக் காட்சி தருபவன் கருவிலே திருவுடைய சிறுவன் பிரகலாதன்!

இந்த முதல் சத்தியாக்கிரஹியான பிரகலாதனின் பக்தியும் அசைக்க முடியாத இறை நம்பிக்கையும் கம்பனை மிகவும் ஈர்த்திருக்க வேண்டும். அதை உலக மக்களுக்குக் கொண்டு சேர்க்க வேண்டும் என்பதில் அவன் உறுதியாக இருந்திருக்கிறான். இராமாவதாரத்துக்கு முன்பாக நிகழ்ந்த நரசிம்ம அவதாரத்தைத் தன் இராமகாதையில் தகுந்த இடத்தில் சேர்த்திருக்கிறான். மூல நூலாகிய வால்மீகி இராமாயணத்தில் சொல்லப்படா விட்டாலும் கம்பன் தன் நூலில் இரணியனின் ஆணவம் பற்றிய இக்கதையை (பிரகலாத சரித்திரம்) மேதாவிகட் கெல்லாம் மேதாவியான வீடணன் வாயிலாகச் சொல்கிறான்.

பள்ளி சென்ற சிறுவன்

ஐந்து வயதான பிரகலாதனைப் பள்ளிக்கனுப்புகிறார்கள். இரணியன் ஆட்சியில் எல்லா இடங்களிலும் முதலில் இரணியாய நம: என்று சொல்லி விட்டுத்தான் எந்த வேலையயும் செய்ய வேண்டும். ஆனால் பிரகலாதனோஓம் நமோ நாராயணாய என்று தொடங்குகிறான். இதைக் கண்ட ஆசிரியர் நடுங்குகிறார். மன்னனிடம் அவ்வளவு பயம்! இரணியன் என்ன சாமானியமானவனா?

இரணியன் பெற்ற வரங்கள்

தேவர்களாலோ, மூவர்களாலோ இவனை வெல்ல முடியாது. இரணியன்,

நீரில் சாகிலன், நெருப்பினும் சாகிலன், நிமிர்ந்த
மாருதத்திலும் மண்ணின் மற்று எவற்றிலும் மாளான்.
ஒரும் தேவரும் முனிவரும் பிறர்களும் உரைப்பச்
சாரும் சாபமும் அன்னவன் தனைச் சென்று சாரா *[6204]*

இது மட்டுமா?

உள்ளில் சாகிலன், புறத்தினும் உலக்கிலன், உலவாக்
கொள்ளைத் தெய்வ வான் படைக்கலம் யாவையும்கொல்லா
நள்ளில் சாகிலன், பகலிடைச் சாகிலன் நமனார்
கொள்ளச் சாகிலன் ஆர் இனி அவன் உயிர் கொள்வார்?
[6205]

ஆசிரியர் எவ்வளவோ சொல்லியும்

ஆதிநாயகன் பெயர் அன்றி யான் பிறிது அறியேன் (6215)

என்று உறுதியாக, தான் கொண்ட கொள்கையிலிருந்து பின் வாங்க மறுக்கிறான் பிரஹலாதன். "மைந்தா! ஆசிரியர் உன்னைப் பற்றி ஏதேதோ சொல்கிறாரே, என்ன சொன்னாய்? என்று இரணியன் கேட்க, பிரகலாதன் சொல்கிறான்

காமம் யாவையும் தருவதும் அப்பதம் கடந்தால்
சேம வீடுறச் செய்வதும் செந்தழல் முகந்த
ஓம வேள்வியின் உறுபதம் உய்ப்பதும் ஒருவன்
நாமம் அன்னது கேள் நமோ நாராயணாய *[6230]*

நீ யாரிடமிருந்து இந்தப் பெயரைத் தெரிந்து கொண்டாய்? இது என் பகைவன் பெயர். ஆசிரியர் என்ன கற்றுத் தருகிறாரோ அதையே கற்றுக் கொள்ள வேண்டும் என்று அறிவுரை சொல்கிறான். ஆனால் பிரகலாதன் இறைவன் திருநாமத்தை வாழ்த்திக் கொண்டேயிருக்கிறான்.

இரணியன் சீற்றம்

இதைக் கண்ட இரணியன் கண்களில் இரத்தச் சிவப்பு ஏறி புகையும் தோன்றுகிறது! பிரகலாதனைக் கொல்ல ஆணையிட கொலைகாரர்கள் மழுக்களையும் கூரிய வாள்களையும் சிறுவன் மேல் வீசுகிறார்கள். ஆனால் அவனோ பரமன் நாமம் ஜபிப்பதை நிறுத்தவில்லை. பின் நெருப்பிலிட உத்தரவு வந்ததும் பாலன் அரி! அரி! என்று தொழ தீ அவிகிறது! சிறுவன் தன் கொள்கையை விடவில்லை. இரணியன் சீற்றம் அதிகரிக்கிறது. அஷ்ட நாகங் கள் வருகின்றன சிறுவனைக் கடிக்க!

நாகங்களைக் கண்டு பிரகலாதன் கொஞ்சமும் நடுங்கவில்லை. பரமனின் படுக்கையல்லவா ஆதி சேடன்! வந்த நாகங்கள் பாலனைக் கடித்தும் அவற்றின் பற்கள் தாம் உதிர்ந்தன! கடித்த வாயிலிருந்து அமுதம் அல்லவா ஊறியது! நாகங்கள் சென்றபின் ஐராவதம் வருகிறது. பையனின் கைகால்களைக் கட்டி யானை முன் இட்டு இடறச் செய்கிறார்கள். பாலனோ கண்களை மூடி

எந்தாய்! பண்டுஒர் இடங்கர் விழுங்க
முந்தாய் நின்ற முதல் பொருளே! என்று
உந்தாய் தந்தை இனத்தவன் ஒத
வந்தான் எந்தன் மனத்தினன்' என்றான் [6281]

முதலை விழுங்க வந்தபோது கஜேந்திரனைக் காத்த அப்பெருமான் தன்னையும் காப்பான் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையோடு அசையாமல் இருக்கிறான் பிரகலாதன். காப்பவனுக்குத் தானே கவலை? அத்தனை கொடுமைகளையும் பொறுத்துக் கொண்டு தன் கொள்கையினின்றும் விலகாமல் சத்தியாக்கிரஹம் செய்கிறான்! யானை பிரகலாதனை வலம் வந்து வணங்கிச் செல்கிறது. இதன் பின் ஆலகால விஷம் போன்ற கொடிய நஞ்சை ஊட்டுகிறார்கள். சிறுவன் அமுதம் உண்டவன் போல் விளங்குகிறான்!

தன் கையே தனக்குதவி

இனிமேலும் மற்றவர்களை நம்பாமல் தானே அச்சிறுவனைக் கொல்லத் தீர்மானிக்கிறான். 'தந்தையே! என் உயிர் கிங்கரர்களாலோ, ஏன் உங்களாலோ கவரத்தக்கதல்ல. பரந்தாமன் ஒருவனால் மட்டுமே அது முடியும் என்று சொல்ல, உன்னால் அந்தப் பரமனைக் காட்ட முடியுமா என்று சவால் விடுகிறான். என் உடன் பிறந்தவனைக் கொன்ற அந்த வஞ்சகன் இந்தத் தூணில் இருந்தால் காட்டு பார்க்கலாம் என்று ஆணவத் தோடு கேட்க மகனோ கொஞ்சமும் தயங்காமல்,

சாணிலும் உளன்; ஓர்தன்மை அணுவினைச் சத கூறிட்ட
கோணினும் உளன்; மாமேருக் குன்றினும் உளன் இந்நின்ற
தூணிலும் உளன்; நீ சொன்ன அச் சொல்லினும் உளன் இத்தன்மை
காணுதி விரைவின் என்றான் *[6312]*

இதைக்கேட்ட இரணியன் ஆணவத்தோடு இத்தூணில் காட்டவில்லையென்றால் உன்னைக் கொன்று உன் குருதியைக் குடித்து உடலையும் தின்பேன் என்கிறான். சிறுவன் சிறிதும் அஞ்சாமல்

என் உயிர் நின்னால் கோறற்கு எளியது ஒன்றுஅன்று; யான்முன்
சொன்னவன் தொட்ட தொட்ட இடந்தொறும் தோன்றான் ஆயின்
என் உயிர் யானே மாய்ப்பல் (6314)

என்கிறான். என்ன ஒரு அசைக்க முடியாத நம்பிக்கை!

சிரித்தது சிங்கச் சீயம்

ஆணவத்தோடு அருகிலிருந்த தூணை இரணியன் ஓங்கி அறைய தூணிலிருந்து சிங்கம் கர்ஜிக்கிறது!

'யாரடா சிரித்தாய்? தைரியமிருந்தால் என்னோடு போர் செய்யப் புறப்படு' என்று அறைகூவுகிறான். தன் வாக்கை மெய்யாக்கச் சிரித்துப் பதிலளித்த பெருமானின் கருணையை நினைந்து பக்தன் ஆடிப்பாடிக் களிக்கிறான். தொழுகிறான்.

பிளந்தது தூணும்; ஆங்கே பிறந்தது சீயம்; பின்னை
வளர்ந்தது, திசைகள் எட்டும்; பகிரண்டம் முதல மற்றும்

அளந்தது; அப்புறத்துச் செய்கை யார் அறிந்து அறையகிற்பார்?
கிளர்ந்தது; ககன முட்டை கிழிந்தது, கீழும் மேலும். *[6318]*

ஆணவத்தின் அழிவு

நரசிங்கமும் இரணியனும் வெகு உக்கிரமாகப் போர் செய்கிறார்கள். அவனுடைய வரத்தின்படி அந்தி நேரம் வரும் வரை காத்திருந்த பெருமான்

ஆயவன் தன்னை, மாயன், அந்தியின் அவன் பொன் கோயில்
வாயிலில் மாணிக்கவான் மேல், வயிரவாள் உகிரின்
வாயின் மீ எழு குருதி பொங்க, வெயில்விரி வயிரமார்பு
தீயெழப் பிளந்து நீக்கி தேவர்கள் இடுக்கண் தீர்த்தான், *[6341]*

பிரகலாதன் பெற்ற வரம்

சீற்றத்தோடு விளங்கும் நரசிங்கப் பெருமானைக் கண்டு தேவர்கள் அனைவரும் அஞ்சு, சிறுவன் பிரகலாதனோ சிறிதும் அச்சமின்றி பெருமானைத் தோத்திரம் செய்கிறான். பிராட்டி வந்ததும் பெருமானின் சீற்றம் தணியத் துவங்குகிறது. பெருமான் பிரகலாதனை நோக்கி

சிந்தை தளராது அறம் பிழையாச் செய்கையாய்!
அந்தமிலா அன்பு என்மேல் வைத்தாய் அளியத்தாய்!
எந்தை! இதற்குக் கைமாறு யாது? *[6354]*

என்று பரிவோடு கேட்கிறான். பிரகலாதன் என்ன கேட்கிறான்?

எந்தப் பிறவி எடுத்தாலும் உன் அன்பைப் பெற்று வாழும் பேற்றை அருள்வாய்' என்று வேண்டுகிறான்.பெருமான் வரத்தால் இன்றும் பிரகலாதன் சிரஞ்சீவியாய் விளங்குகிறான்.

தனக்கு இழைக்கப் பட்ட கொடுமைகளால் மனம் தளராமலும் கொண்ட கொள்கையை விடாமலும் அதே சமயம் தனக்குத்துன்பம் செய்தவர்களிடம் பகைமை பாராட்டா மலும் தன் துன்பம் பொறுத்து, மிகச்சிறந்த சத்தியாக்கிரஹியாக விளங்குகிறான். ஐந்தே வயதான பிரகலாதன் முதல் சத்தியாக் கிரஹியாகி நமக்கு வழிகாட்டுகிறான்

கம்பனும் தற்கால உளவியலும்

கண்ணன் மீனாட்சி சுந்தரம்

காரைக்குடி.

கம்பனின் கதாபாத்திரப் படைப்புகள், பேசுபொருள்கள், பேசும் தகைமைகள், கூர்மையானவை, அறிவு செறிந்தவை, ஆச்சரியப்பட வைப்பவை. கவிதை நடை, உவமை, நயங்கள் படிக்க படிக்க திகட்டாதவை. கம்பனின் காலம் ஆறாம் நூற்றாண்டு. நடப்பதோ இருபத்தோராம் நூற்றாண்டு. (2020) ஆறாம் நூற்றாண்டு கருத்துகள் 21ம் நூற்றாண்டிற்கு பொருந்துமா? பரிணாம வளர்ச்சியின் புதிய பரிணாமங்களை தன்னுள் கொண்டுள்ளதா? 1960 களில் பட்ட படிப்பு என்றால் வேதியியலும், கணிதமும்தான். இன்று 2020 ல் உளவியல், நிர்வாகவியல் என்று ஏராளமான பட்ட படிப்பகள். இதில் பயிற்றுவிக்க படிகின்ற, பேசு பொருள்கள் கம்பனில் தெரிகிறதா? கம்பனது பார்வை, ஆண்டுகள் தாண்டி செல்கின்ற பார்வையா? இன்றய புதிய பரிமாண பார்வையின் உளவியலையும், நிர்வாகவியலையும் கம்பன் எவ்வாறு தந்திருக்கிறான் என்று இப்போது பார்ப்போம்.

மனிதவள உளவியல் மேம்பாட்டு வல்லுனர்களும், நிர்வாக இயல் வல்லுனர்களும் விவரிக்கும் முக்கிய கருத்தாளங்களும், அவற்றில் அன்றாடம் உபயோகிக்கும் சொல்லாடல்கள், சிலவற்றையும் இங்கு நினைவு கொள்வோம்

Nonverbal Communication: உளவியலில் முக்கியமான ஒரு பகுதி, பேசுவது இன்றி, சொல் இன்றி வாய்மொழி இன்றி உடல் மொழி கொண்டு எதிராளியின் நிலை அறிவது.

Deep Dive Analysis: நுனிப்புல் மேயாமல் இருக்கும் எல்லா தகவல்களையும் ஆராய்ந்து அதன் உண்மைத் தன்மையை அறிந்து களையெடுத்து உபயோகமான தகவல்களை உபயோகமான வகையில் எளிமைப்படுத்திச் செய்ய வேண்டிய செயலைத் தீர்மானம் செய்வதாகும்.

Clarity of Thought: ஒரு செயலைச் செய்யும் முன் இந்தச் செயல் இவ்வாறு வந்தது, சிக்கல்கள் என்னென்ன அவற்றை வரும் காலங்களில் எப்படி மாற்றி செய்வது, முடிவு சிறப்பாக அமையுமா என்று மனதளவில் ஆராய்ந்து செயலுக்கு வடிவம் கொடுப்பது.

Team Work: குழுவாக செயலை செய்வது, குழுவாக அனைவரையும் அணைத்து செல்வது, அனைத்து கருத்தாளங்களுக்கு மதிப்பளிப்பது, ஒவ்வொரு கருத்தின் உண்மை தண்மை அறிவது, முடிவாக செயலை சிறப்பாக செயல்படுத்துவது. அரசாங்கத் திட்டங்கள் முதல், தொழில்நுட்ப மென்பொருள் திட்டங்கள் வரை, செயல் முறை அவ்வப்போது விவாதிக்கப்பட்டு அதில் காலத்திற்கு ஏற்ற பல மாறுதல்கள் செய்து புது வடிவம் கொடுக்கப்பட்டு வேண்டிய பலன் பெற குழுவாக முயற்சி செய்வது.

Confidence: கொஞ்சம் தகவல் இருந்தாலும் எவ்வளவு அனுபவம் இருந்தாலும் இதை நம்மால் சிறப்பாக செய்ய முடியும் என்ற உத்வேகத்தோடு, சிறிதும் பயமோ, அச்சமோ இல்லாமல், செயலை செய்வது.

ராம காதையில் ராவணன் வதத்திற்குப் பெரிதும் துணை நின்றது ராம-விபீடணன் நட்பு. ராமன், விபீடணன் நட்பின் முதல் சந்திப்பு எவ்வாறு நடந்தது எவ்வாறு செயல் வடிவம் பெற்றது அதில் கம்பன் கூறும் உளவியல் கருத்துகள் என்னென்ன, அவை புதிய பரிமாண உளவியல் கருத்துகளுடன் எவ்வாறு பொருந்துகிறது என்று விரிவாக இங்கு பார்க்கலாம்.

அதற்கு ராம-ராவண முதல் சந்திப்பான விபீடணன் அடைக்கலப் படலத்தின் பாடல்களை எடுத்துக் கொள்வோம்

செயல்: ராம விபீடணன் நட்பு, அடைக்கலம் மூலமாக புதிய பரிணாம உளவியல் கருத்தில் முக்கியமானது தனி மனித முடிவுகளை விட குழு முடிவு எப்போதும் மேம்பட்டதாக இருக்கும். இதுபோலவே இராவணனுடன் விபீடணனக்கு ஏற்பட்ட கருத்து மோதல்களுக்கு பின் தனியாக முடிவு எடுக்காமல் தன் குழு அமைச்சர்களுடன் கலந்து ஆராய்ந்து

விவாதித்து எதிரியான ராமனிடம் அடைக்கலம் தேடுவதே சிறந்த முடிவு என்ற முடிவுக்கு விபீடணன் வருவதாக கம்பன் காட்டுகிறான்.

பிறந்த என் உறுதி நீ பிடிக்கலாய் எனாத்
துறந்தனென்; இனிச் செயல் சொல்லுவீர் என்றான் - *(6381)*

குழு விவாதத்தில் பங்கு பெறுபவர்கள் சூழ்நிலையை நன்கு அறிந்துவர்களாவும், அறிவு சார்ந்தவர்களாகவும், விவாதிக்கப்படும் செயல் முடிவு சிறப்பாக அமையக் கூடிய கருத்துகளை சொல்வதாகவும் இருத்தல் அவசியம். அவ்வாறு விபீடணனது அமைச்சர்களும், பின்னர் ராமனது மந்திராலோசனையில் பங்கு பெறும் குழு உறுப்பினர்களும் மிகுந்த அறிவுப்பூர்வமாக விபிஷண ராம நட்பை அணுகுகிறார்கள் என்று கம்பன் மிக மிக தெளிவாக காட்டுகின்றான்

காட்சியே இனிக் கடன் 'என்று கல்வி சால்
சூட்சியின் கிழவரும் துணிந்து சொல்லினார் (6382)

தற்போதைய உளவியல் சார்ந்த நிர்வாகத் திறனாய்வாளர்கள் சொல்லுவார்கள், கருத்துகளைக் கேட்டு அறிந்த பின் குழுத்தலைவர், குழு உறுப்பினர்களை அணைத்துச் செல்லுவது நல்லது, அவர்கள் மூலமே அந்தச் செயலை செவ்வனே செய்ய வேண்டும் என்பதாகும். அதுபோலவே இங்கும் கருத்துகளை கேட்ட பின் விபீடணன் குழு உறுப்பினர்களை, பாராட்டி சொல்லப்பட்ட கருத்தை ஆமோதித்துச் செயல்படுகின்றான்.

'நல்லது சொல்லினீர்; நாமும் வேறு இனி
அல்லது செய்துமேல் அரக்கர் ஆதுமால்; (6381)

பின்னர் சுக்ரீவன் மாறுபட்ட கருத்துக் கூறிய போதும் ராமன் அவனுக்குச் சரியான பதில் கூறிய பின் அவன் மூலமாகவே விபீடணனை அழைத்துவர இயம்புகின்றான்.

கோது இலாதவனை நீயே
என்வயின் கொணர்தி 'என்றான். (6481)

இவை எவ்வாறு தற்காலக் குழு ஒருங்கிணைந்து செயல்படுகிறதோ, அது போலவே அன்றும் விபீடணன் குழுமம்

மற்றும் இராமனது குழுவும் செயல்பட்டது என்பதல்லாமல் அத்தாட்சி என்று வேறு என்ன?

ராமனைச் சந்திப்பது என்று முடிவு செய்தாகிவிட்டது முதல் சந்திப்பு இருட்டில் இருக்கலாமா? ஆகாது ஆகாது - நல்ல உளவியல், காலையில் சந்திப்போம் என்று விபீடணன் நினைக்கின்றான்

இருளிடை எய்துவது இயல்பு அன்றாம் 'என
பொருள் உற உணர்ந்த அப் புலன்கொள் கேள்வியார் (6515)

எந்தவொரு செயலையும் சந்தேகமின்றி அச்சமின்றி முழு மன தைரியத்தோடு செய்ய வேண்டும் என்கின்றது நிர்வாகவியல். விபீடணன் அவ்வாறே செய்தான் என்கிறான் கம்பன்

முறைபடு தானையின் மருங்கு முற்றினான்
அறைகழல் வீடணன் அயிர்ப்பு இல் சிந்தையான் (6397)

நாம் முன்னர்க் கூறிய உளவியலின் தன்மையில், ராம காவலர்கள் வந்திருக்கும் விபீடணக் குழுவின் பண்பை உடல் மொழி கொண்டு அறிந்து கொள்வதாகக் கம்பன் அழகாகக் காட்டுகின்றான்

சலக்குறி இலர் 'என அருகு சார்ந்தனர்
புலக்குறி அறநெறி பொருந்த நோக்கினார். (6404)

நட்புக்கொண்ட இருவரிடத்தில், நட்பு ஆழமாக வேண்டுமெனில் ஒருவரை மற்றவர் நன்கு அறிந்து இருக்க வேண்டும். அவர்களது பண்பு நலன்கள் அடுத்தவர்களுக்கு தெரியவேண்டும். தற்கால சமூக ஊடகங்கள் இதை Profile என்று வெளிப்படுத்துகின்றது இங்கு விபீடணனின் பண்பு நலன்கள் ராமனுக்குச் சேருமாறு பட்டியலிடப்படுகின்றது

தகவு உறு சிந்தையன் தரும நீதியன்
மகன் மகன் மைந்தன் நான்முகற்கு வாய்மையான் (6406)

நாயகன் தர நெடுந் தவத்து நண்ணினான்
தூயவன் என்பது ஓர் பொருளும் சொல்லினான் (6416)

தற்போதைய தகவல் தொழில்நுட்ப யுகத்தில் எல்லா வகையான

தகவல்களையும் சேகரித்து அதன் உண்மை தன்மையை அறிந்து, யாணையின் காலையோ, தும்பிக்கையோ தனியா பார்க்காமல் யாணையின் முழு வடிவத்தை பார்ப்பதுபோல (*Complete Picture)* ஒரு தகவல் முழுமையாக கிடைத்தால் அதிலிருந்தே செயல்களைச் செய்வது எளிமையானதாக இருக்கும். இந்த வகையிலேயே கண்டதை மட்டும் சொல்லாமல் நீயும் என்னிடம் கண்டதையும் கேட்டதையும் சொல்லு என்று ராமன் கூறுவதாக அமைந்துள்ளது இந்தப் பாடல்

மண்டலச் சடைமுடி துளக்க 'வாய்மையால்
கண்டதும் கேட்டதும் கழறல் மேயினான்.

தற்காலங்களில் எந்த ஒரு செயலையும் திட்டமிடும் போது அந்தச் செயல் எவ்வளவு காலத்திற்குள் முடிக்க வேண்டும் என்பதையும் சேர்ந்து திட்டமிட்டு அது அந்தந்த செயலுக்கு அருகே குறிக்கப்படுகின்றது. இதே மாதிரியான வழக்கத்தை அன்று ராவணனும் கடைபிடித்தான் என்று படிக்கும்போது நாம் ஆச்சரியத்தில் மூழ்கி கம்ப பாத்திர படைப்பை என்னி வியக்கின்றோம். ராவணன் விபீஷணனை இங்கிருந்து செல் என்பது என்று கூறும் போது அவன் கூறிய கால அளவு, தினை அளவு என்னொவொறு உவமை கம்பனிடம்மிருந்து

சாம் தொழிற்கு உரியை; என் சார்பு நிற்றியேல்;
ஆம் தினைப் பொழுதினில் அகறியால் எனப்
போந்தனன் என்றனன் (6418)

உளவியல் கூற்றுப்படி இடம் பொருள் ஏவல் அறிந்து பேசுவது நல்லது கம்பன் அதையே இங்கு காட்டுகின்றான்

தடமலர்க் கண்ணனைத் தடக்கை கூப்பி நின்று
இடன் இது; காலம் ஈது 'என்ன எண்ணுவான் (6420)

ஒருவன் ஒரு செயலுக்குத் தீர்வு காணும்போது அவன் வாழ்க்கையில் அனுபவித்த, பார்த்த, கேட்ட தகவல்கள் வைத்து அவனால் தீர்வு சொல்ல முயலுவான். இது உளவியல் விஞ்ஞானம். சுக்ரீவனை, வாலி கொல்லுமளவுக்கு புறப்பட்டபோது ராமனிடம் நட்புப் பாராட்டித் தொடர்கின்றான். இதைப்போல விபீஷணனுக்கு எந்த நிகழ்வுகளும் இல்லை அவன் இராவணனால்

கொல்லப்படும் அளவு விரட்டப்படவில்லை எனவே இவனைச் சேர்க்க வேண்டாம் என்று அவனது கண்ணோட்டத்தில் வாதிடுகின்றான்

வெம் முனை விளைதலின் அன்று; வேறு ஒரு
சும்மையான் உயிர் கொளத் துணிதலால் அன்று;
தம் முனைத் துறந்தது தரும நீதியோ? *(6423)*

உலகத்தில் விஞ்ஞான வளர்ச்சி, வளர்ந்து பரவ முதல் காரணம் கேள்விகள் கேட்பது,ஏன்? எதற்கு? எப்படி? இதன் தாக்கமோ, சுக்ரீவன் ராமனைப் பார்த்து கேள்விகள் கேட்கின்றான். ராமனும் அதை அனுமதிக்கிறான் இது ஒரு நல்ல நிர்வாக திறமைக்குச் சான்று அல்லவா

பகை உற வருதலும் துறந்த பண்பு இது
நகை உறல் அன்றியும் நயக்கற் பாலதோ? (6552.)

எந்த ஒரு தீய செயலில் கூட நல்லதையே காண்பார்கள் நல்லவர்கள் இது ஒரு உளவியல் உண்மை இதுபோன்று இராவணன் தன்னை விரட்டுகின்ற தீய செய்கையின் விளைவாக விஷ்ணுவின் வடிவமான ராமனுடன் நட்பு கிடைக்க ஏதுவாக அமைந்தது என்று எண்ணி பார்த்து விபீஷணன் மகிழ்வதாக கம்பன் காட்டுகின்றான்

என்முனார் எனக்குச் செய்த
உதவி என்று ஏம்பல் உற்றான் (6499)

நட்பு மலர ஒருவருக்கு மற்றொருவர் அவர்கள் விரும்புவதை செய்து கொண்டே இருக்க வேண்டும். மிகுதியான நேரங்களில் ஒருவர் நேரடியாக விரும்புவதை சொல்வதில்லை. இதே போன்று தருணம் இங்கே காண்பிக்கப்படுகின்றது. விபீடணன் நேரிடையாக எனக்கு இலங்கை வேண்டும் என்று எங்கும் கூறவில்லை; மறைமுகமாகவும் குறிக்கவில்லை. அனுமன் அனுபவ அறிவினால் யூகித்து ராமனிடம் கூறுகின்றான். ஆமோதிக்கும் வகையில் ராமனும் அதை ஏற்று லட்சுமணன் மூலமாக இலங்கை கிரீடத்தை விபீடணனுக்கு அணிவிக்கின்றான். என்ன ஒரு உளவியல் சிந்தனை. வேறு என்ன உளவியல் சிந்தனை புதிய பரிமாணங்களில் இருக்கக்கூடும்?

வாழும்நாள் அன்று காறும்,
வளை எயிற்று அரக்கர் வைகும்
தாழ்கடல் இலங்கைச் செல்வம்
நின்னதே தந்தேன் 'என்றான். (6503)

அடைக்கலம் என்று வந்தவனுக்கு நாடும் கொடுத்து நின்னோடு எழுவரானோம் என்று உறவும் கொடுத்து, நட்புப் பாராட்டும் ராமனது மனது உளவியலுக்கு உட்பட்டதா? அப்பாற்பட்டதா? எந்த ஒரு உளவியல் அறிஞராலும் ஒருநாளும் கோடிட்டுக் காட்ட முடியாத அளவுக்கு மனச் சிந்தனை கொண்ட மானுடனாக எப்படித்தான் படைத்தான் கம்பன், ராமனை?

'குகனொடும் ஐவர் ஆனேம் முன்பு; பின், குன்று சூழ்வான்
மகனொடும், அறுவர் ஆனேம்; எம் உழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனேம்;
(6507)

தற்காலத்தில் நேர்காணலுக்குச் செல்லும் வேலை தேடுபவர்கள் இந்த வேலை கிடைக்குமோ? இல்லையோ? என்ற மன உளைச்சலில் செல்வார்கள் அதேபோல் விபீடணன் இராமனிடம் அடைக்கலம் தேடி வரும் போது இது கிடைக்குமோ கிடைக்காதோ என்ற எண்ணத்துடனேயே வந்திருப்பான் போலும். சாப்பாடு தேடி வந்தவனுக்கு விருந்து கிடைத்ததைப் போல அடைக்கலம் தேடி வந்தவனுக்கு மணிமுடி கிடைத்த போது அவனது அச்சம் நீங்கியதாகக் கம்பன் சொல்வான். பிறரின் உணர்வுகளை புரிந்த உளவியல் அறிஞனாகக் காட்சி தருகின்றான்

அடிமையில் சிறந்தேன்'என்னா அமிர்ப்பொடும் அச்சம் நீங்கித்
தொடுகழல் செம்பொன் மோலி சென்னியில் சூட்டிக் கொண்டான்
(6508)

நல்ல நண்பர்கள் ஒத்த சிந்தனை உடையவர்களாக பெரும்பாலும் ஒரே கருத்தைக் கொண்டவர்களாக இருப்பார்கள் அதேபோல் பல நேரங்களில் அவர்கள் சிந்தனையில் ஒரே மாதிரி இருக்கின்றார்கள். பின்னர் வருவதை முன்னர் அறிவதில்

விபீடணன் வல்லவனாக இருக்கின்றான். பின்னால் நடப்பதை முன்னரே அறியும் ஆற்றல் ராமனுக்கு இருந்தது என்று சொல்லவும் வேண்டுமோ?

விளைவினை அறியும் மேன்மை வீடணன், என்றும் வீயா
அளவு அறு பெருமைச் செல்வம் அளித்தனை ஆயின் ஐய!
(6506)

ராமனின் வடிவழகை வர்ணிக்கும்போது கம்பன் ஐயோ இவன் வடிவழகை என்னென்பது என்று சொல்லுவான். நாமும் சொல்லுவோம் ஐயகோ இத்தனை வண்ணங்களா? பரிமாணங்களா? எப்படித்தான் படைத்தானோ கம்பன் இந்த காவியத்தை என்றே முடிப்போம்

கவியமுதக் கடல்

கம்பன் படைத்த இராமாவதாரம் ஒரு கவி அமுதக் கடல்; அது எல்லோருக்கும் எப்போதும் இனிய விருந்தளித்திடும் ஆரா அமுது. அமுதம், ஆரா அமுதம் எனும் எல்லாவற்றினும் மேலானது பரா அமுது என்பார் திருவாசகத்தில் மாணிக்கவாசகப் பெருமான். அங்கிருந்து அத்தொடராம் பரா அமுதை மோந்து கொண்டு வந்து நமக்குக் கம்பன் பரிமாறும் விருந்தே இராமாவதாரம். எல்லைகள் நீத்த, என்றும் அழியாத, இனிமை பயக்கும் பரா அமுது என்று பொருள் தரும் தொடர்தான் பரா அமுது. கம்பன் படைத்த புதிய பரிமாணங்களில் இதுவும் அனுபவித்து உணர வேண்டிய ஒன்றாகும். அதனால்தான் கம்பன் காவியம் இத்தனை நூற்றாண்டுகள் கடந்தும் நிலைத்து நிற்கின்றதோ?

'சுவர்க்க நீக்கம்' (Paradise Lost) என்ற உலகம் இன்றளவும் வியந்து போற்றும் இலக்கியத்தைப் பாடிய மில்ட்டன் (Milton) உலகம் விரும்பினாலும் சாக அடிக்க முடியாத ஓர் இலக்கியத்தைப் படைக்கப் போகிறேன் என்று கூறித்தான் அவ்விலக்கியத்தைப் படைத்தான் என்று ஒரு வழக்காறு உண்டு. கம்பனும், அப்படித்தான்; வெளிப்படையாகக் கூறாமலேயே சாகா வரம் பெற்ற ஒரு காப்பியமாக இராமாவதாரத்தைப் படைத்திருக்க வேண்டும். அவன் அப்படிச் சொல்லாவிட்டாலும் அந்த எண்ணத்தை உள்ளடக்கிய என்றும் இறவா இலக்கியமாக இராமாவதாரத்தைப் படைத்திருக்கின்றான் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. இல்லாவிட்டால் இத்தனை நூற்றாண்டுகள் கழிந்தும் கம்பனின் காப்பியம் இன்றும் பெரிதும் பேசப் பெறும், போற்றப் பெறும் காப்பியமாக நின்று நிலைத்திருக்க வாய்ப்பே இல்லை. காலங் கடந்தும் இக்காப்பியத்தை நாம் ஏற்றிப் போற்றுவதானாலேதான் கம்பன் கவிச்சக்கரவர்த்தியாக மிளிர்கின்றான்!

கம்பன் பதிப்பகம்
9 789384 428402